இரண்டாம் பதிப்பு
விலை: 30
பக்கங்கள்: 56

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 168 சித்திரை 30ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 13 மே 2018 வள்ளுவர் ஆண்டு 2049

துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Canada | -850/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்.
Hotline - 077 755 4528

# காணாமல் ஆக்கப்பட்டோரை ஒப்படைப்போமென எந்தவொரு உத்தரவாதமும் வழங்க முடியாது!

*காணாமல் ஆக்கப்பட்டோர் பணியக ஆணையாளர் சாலிய பீரிஸ் தெரிவிப்பு*

மன்னார், மே 13

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைக் கொண்டு வந்து உங்களிடம் நான் ஒப்படைப்பேன் என்று என்னால் எந்த உத்தரவாதமும் வழங்க முடியாது. இந்தப் பணிய கத்தின் ஊடாக உச்சபட்சமாக எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்வேன்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த காலத்தில் நடத்தப்பட்ட விதம் தொடர்பில் மன்னிப்புக் கோருகிறேன்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் ஆணையாளர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை நேற்று நேரில் சந்தித்து உரையாற்றியபோதே மேற்கண்ட >> 53

## 8 வருடங்களின் பின் கொள்ளைப் பேர்வழி வசமாக மாட்டினார்

யாழ்ப்பாணம், மே 13

கத்தி முனையில் 80 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் தேடப்பட்டவர், 8 வருடங்களின் பின்னர் கொள்ளை >> 53

## வாள்வெட்டில் ஈடுபட்டனரென இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 13

வாள்வெட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். >> 52

## கிழக்கு மக்களுக்கும் முதலமைச்சர் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கிழக்கு மாகாண மக்க >> 52

*முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்:*

## மாகாண சபை - மாணவர்கள் இணக்கப்பாடு எட்டப்படவில்லை

*முள்ளிவாய்க்கால் மண்ணில் இன்று மீண்டும் சந்திப்பு*

யாழ்ப்பாணம், மே 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவது தொடர்பில் வடக்கு மாகாண சபையினருக்கும், யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுக்களில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. இரண்டு தரப்பின >> 52

*காணாமற்போனோரே இல்லை*

## தலைவர்கள் கைவிரித்த நிலையில் யாரை ஏமாற்ற இந்தப் பணியகம்?

*காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று முற்றுகைப் போராட்டம்*

மன்னார், மே 13

இந்தநாட்டில்காணாமற்போனோர் யாருமே உயிருடன் இல்லை என்று கைவிரித்த நிலையில், யாரை ஏமாற்றுவதற்கு >> 53



## ரூ.ஒன்றரைக்கோடி பெறுமதியான வலம்புரிச் சங்குடன் இருவர் கைது



வவுனியா, மே 13

சுமார் ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான அரியவகையான வலம்புரிச் சங்கு மீட்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் இருந்து தம்புள்ளை நோக்கி விற்பனை நோக்குடன் காரினுள் >> 52

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செம்மணி, மிருசுவிலில் நேற்று



>> 52

*முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்*

## ஓரணியில் திரண்டு அஞ்சலிக்கவேண்டும்

*எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் அறைகூவல்*

கொழும்பு மே 13

முள்ளிவாய்க்கால் என்பது இறுதிப் போரில் பெருந்தொகையான தமிழ் உறவுகள் அரச படைகளின் கண்மூடித்தனமான தாக்குதல்களில் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்ட மண். தமிழ் உறவுகள் பலர் காணாமல் ஆக்கப்பட்ட மண். தமிழினத்தின் விடுதலைக்காக எமது உறவுகள் தீக்குளித்த மண். விடுதலைக் கனவுடன் >> 53

*இராணுவமயப்படுத்தப்பட்ட பகுதிகளில்*

## போரால் பாதித்த பெண்களின் தகவல்களைப் பெறமுடியவில்லை

*மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 13

வடக்கில் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் உண்மையான தகவல்களைப் பெறமுடியாத நிலையே இன்னும் நீடிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

பன்னாட்டுப் பெண்கள் மாநாட்டு ஒருங்கமைப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

பன்னாட்டுப் பெண்கள் மாநாட்டு முன்னேற் >> 53

*சுன்னாகம் குடிதண்ணீர் பிரச்சினை:*

## ரூ.20 லட்சம் மதிப்பில் கொண்டு வரப்பட்ட கருவியைப் பயன்படுத்த முடியாத நிலைமை

யாழ்ப்பாணம், மே 13

சுன்னாகம் குடிதண்ணீர் பிரச்சினை பூதாகரமாக எழுந்தபோது, புலம்பெயர் தமிழர்களின் நிதிப் பங்களிப்புடன் கொண்டு வரப்பட்ட ப்றொக் 4000 (FROG 4000) கருவி, தொண்டமனாறு நீரியல் ஆய்வு மையத்தில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக, வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுன்னாகம் குடி >> 53



(கோப்புப் படம்) ப்றொக் 4000 கருவியை அப்போதைய விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், விவசாய அமைச்சின் செயலராக இருந்த ம.பற்றிக் டிறஞ்சனிடம் கையளிக்கிறார்.

## கூட்டரசிலிருந்து சுதந்திரக் கட்சி விலகும் சாத்தியம்?

*நாடு திரும்பியதும் மைத்திரி முடிவு*

கொழும்பு, மே 13

தேசிய அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலகுவதா? இல்லையா? என்பது தொடர்பில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியவுடன் இறுதி முடிவு எடுப்பார் என்று மைத்திரியின் தரப்புத் தகவல்கள் தெரி >> 53

## இனப் பிரச்சினை தீரும்வரை இராணுவத்தில் இணையாதீர்

*தமிழர்களைக் கோருகிறார் சிவாஜி*

யாழ்ப்பாணம், மே 13

தமிழ் இளையோர்கள் இராணுவத்தில் இணையக் கூடாது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்ட பின்னரே அது தொடர்பில் பரிசீலிக்க முடியும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு இளையோர் >> 53



# நுண்கடனால் பலர் உயிரிழப்பு தடுக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,மே.13

**நுண்கடன் திட்டத்தைக் கட்டுப்படுத்துமாறு கோரி மட்டக்களப்பு வந்தாறு மூலையில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.**



வந்தாறுமூலை பொதுமக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பேரணி அம்பலத்தடி நீர்முகப்பிள்ளையார் ஆலய முன்றிலில் ஆரம்பமாகி சந்தை வரை ஊர்வலமாகச் சென்று மீண்டும் நீர்முகப் பிள்ளையார் ஆலய முன்றிலில் முடிவடைந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நுண்கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் இது வரை 17 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

இதனைத் தவிர குடும்பங்களில் விரிசல், சமூக சீர்கேடுகள் அத்தோடு நுண்கடன் பெற்ற பலர் மன உளைச்சலுக்கு உள்ளான சம்பவங்களும் பல உள்ளன என்று பேரணியில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

நுண்கடன் நிறுவனங்கள் கடன்வழங்கும்போது உரிய செயல்திட்டத்தை ஆராய்ந்த பின்னரே கடன்களை வழங்க வேண்டும்,

கடன்பரிந்துரைக்காக கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அனுமதி கையொப்பத்தை உறுதிப்படுத்திய பின்னர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடன் அறவிடுவோர் எந்தக் காரணம் கொண்டும் கிராமங்களுக்கோ, வீடுகளுக்கோ நேரடியாக வந்து கடன் பணத்தை அறவிடுவதை விடுத்து, நுண்கடன் வழங்கும் நிலையங்களில் அறவிட வேண்டும்,

ஆய்ந்தறிந்து ஒரு நபருக்கு ஒரு நுண்கடன் நிறுவனம் கடன் வழங்க வேண்டுமே தவிர பல நுண்கடன் நிறுவனங்கள் ஒரு நபருக்கு கடன் வழங்கக் கூடாது.

போன்ற கோரிக்கைகள் அடங்கியமனு ஒன்றும் அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் நிதியமைச்சர், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலர், பிரதேச செயலர் மற்றும் பிரதேச சபைத் தவிசாளர், பிரதேசசபை உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ற,ரி2)



## டெங்குத்தொற்றை கட்டுப்படுத்த சிரமதானப் பணி

மட்டக்களப்பு.மே.13

மட்டக்களப்பில் அதிகரித்துக்காணப்படுகின்ற டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் காத்தான்குடியிலுள்ள வடிகால்களை துப்புரவு செய்யும் பணி நேற்று இடம் பெற்றது.

இதில் மட்டக்களப்பு மாநகரசபைசுகாதார ஊழியர்கள், நாவற்குடா பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மாநகரசபை முதல்வர், மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் இணைந்து இந்தப்பணியைமுன்னெடுத்தனர். (ற,ரி4)

## வாகனவிபத்தில் இருவர்படுகாயம்

யாழ்ப்பாணம்மே13

கோப்பாயில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர். இந்தவிபத்துநேற்றுஇடம்பெற்றதுஎனப் பொலிஸார் தெரிவித்தனர். இரண்டு மோட்டார்சைக்கிள்கள் நேருக்குநேர்மோதியதிலேயேஇந்தவிபத்துஇடம்பெற்றதுஎனக் கூறப்பட்டது. கோப்பாய்பிரதேசசெயலகத்துக்கு முன்பாக இந்த விபத்துநடந்துள்ளது. விபத்தைஏற்படுத்தியவர்எனகூறப்படும் நபர்தலைக்கவசம்எதும்இன்றிஇரண்டுகைகளையும்விட்டபடி மோட்டார் சைக்கிளை செலுத்திவந்து எதிரே வந்த நபருடன் மோதினார் என்று சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்துள்ளனர். படுகாயமடைந்த இருவரும் கோப்பாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம்போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற,ரி4,114)



# யாழில் தாதியர் தின நிகழ்வு



யாழ்ப்பாணம்மே13

பன்னாட்டுத் தாதியர் தினம் யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிப்பாடசாலையில்நேற்றுக் கொண்டாடப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் நிலவும் தாதியர்களுக்கானஆளனிப் பற்றாக்குறை மற்றும் பயிற்றப்படும் தாதியர்களுக்கான விடுதிவசதிகள் சீரின்மை என்பன இதன்போது சுட்டிக் காட்டப்பட்டன.

தாதியர் தினத்தை முன்னிட்டுநடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய தாதியபயிற்சி மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இதில் முன்னாள் தாதியர் பயிற்சிப்பாடசாலை அதிபர் என்.விஸ்வநாதன், யாழ்ப்பாணபோதனாமருத்துவமனைப் பிரதிப்பணிப்பாளர்பி.கேதீஸ்வரன், தாதியர் பயிற்சி ப்பாடசாலை அதிபர்திருமதி சாந்திராஜகுலேசகரம் மற்றும் தாதிய போதனாசிரியர்கள், பயிலுநர்கள் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ்ப்பாணம், தெல்லிப்பழைஆதார மருத்துவமனையிலும்சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. சாவகச்சேரியில் இடம்பெற்றநிகழ்வில் மருத்துவமனைதாதியபரிபாலகர் செ.தர்மராஜா, மருத்துவமனைபொறுப்பதிகாரிமருத்துவர்ப.அச்சுதன், குழந்தை மருத்துவ நிபுணர் ப.தரணிதரன் மகப்பேற்று மருத்துவ நிபுணர்குழந்தைவடிவேல், பொது மருத்துவ நிபுணர் எஸ்.மகாதேவன் மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கப் பிரதிநிதி யோ.ஜெயக்குமார், மருத்துவமனையின் அனைத்து மருத்துவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ற-ரி4,9,114)




## ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு,மே.13

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இவர் நேற்றுக் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்பத்தரமுல்லயைச் சேர்ந்தவர் எனவும் அவரிடமிருந்து 20 கிராமும் 200 மில்லி கிராம்ஹெரோயின் போதைப் பொருள்மீட்கப்பட்டதுஎனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கானநடவடிக்கைகளைப்பொலிஸார் மேற்கொண்டனர். (ற,ரி4)

## பொலிஸ்பரிசோதகர்கொலை: குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை

திருகோணமலை, மே12

கிண்ணியா, ஆலங்கேணியில் உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஒருவரை சுட்டுக் கொன்றகுற்றச்சாட்டில்முதலாவது எதிரிக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதித்தார் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர்.

2001ஆம்ஆண்டுஜனவரி மாதம் 15ஆம் திகதி கிண்ணியா, ஆலங்கேணி பொலிஸ் காவலரணுக்கு அருகில் உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஒருவரை கொன்றமை தொடர்பில் கிண்ணியாவைச் சேர்ந்த இருவரும், புளியங்குளத்தைச்சேர்ந்த ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் இரு எதிரிகள் சமுமளிக்காத நிலையில் மூன்றாவது எதிரி மட்டும்சமுகமளித்தநிலையில் விளக்கம் இடம்பெற்றது.

வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கில் பெயர் குறிக்கப்பட்டமுதலாம்எதிரி குற்றவாளிஎன்றுஇனங்காணப்பட்டு ஆயுள் சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டது. ஏனைய இரு எதிரிகளும் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்யப்பட்டனர்.

தண்டனை விதிக்கப்பட்ட எதிரி தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைக் கைது செய்யவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ற-45)

# படகுகளின் கன்னிப் பயண நிகழ்வு

கிளிநொச்சிமே13

வடமராட்சி கிழக்கு ஆழியவளை மீனவர்களுக்கு வழங்கப்பட்ட 1 கோடி ரூபா பெறுமதியான படகுகளின் கன்னிப் பயணம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு ஆழியவளை மீனவர்சங்கத்துக்குசுவிஸர்லாந்துஎஸ்.ஏச். நிறுவனத்தால்ஒருகோடிபெறுமதியானஆழ்கடல்படகுவடமராட்சிபிரதேசசெயலகத்திடம் வழங்கப்பட்டது.

இந்தப்படகுகள் உரியவர்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன.

இதனை அடுத்தே மீனவர்கள் நேற்று முன்னதினம் கன்னிப் பயணத்தை ஆரம்பித்தனர். ஆழியவளை கடல் பகுதில் இருந்து அந்த படகு ஆழ்கடல் கன்னிப்பயணத்தை மேற்கொண்டது.

பயணம்ஆரம்பிக்கும்நிகழ்வில் வடமராட்சி பிரதேசசெயலகர்க.கனகேஸ்வரன்மற்றும் யாழ். மாவட்டகடல்வளமற்றும்நீர்வள உதவிப்பணிப்பாளர் சுதாகர் பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் பிரசாந்தன் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். (ற,ரி4,6)

# நல்லுறவை ஏற்படுத்தும் ஒன்றுகூடல் வவுனியாவில்

வவுனியா,மே.13

இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல் வவுனியா கோவில்குளத்தில்அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்றது.

பல இன மக்கள் வாழும் பிரதேசங்களில் அவர்களுக்கிடையில் நல் உறவை ஏற்படுத்தும் வகையில் சமூக ஆர்வலர் நிருசா தலைமையில் கலந்துரையாடல் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதேகலந்துரையாடலின்பிரதானமான நோக்கமாக காணப்பட்டது. கொழும்பிலும், வவுனியாவிலும் இந்தக் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. நிகழ்வில் பொது அமைப்புகள், ஊடக மாணவர்கள், கலைஞர்கள், மற்றும் தொண்டர் ஆசிரியர்கள்எனபலர்கலந்துகொண்டனர். (ற-ரி4,110)



# ஆசிரிய இடமாற்றலில் அதிகார முறைகேடு

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 13

**வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரத்தியேகச் செயலாளரால் இடமாற்றம் வழங்கப்பட்டமை மிகப்பெரிய அதிகார முறைகேடு என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் 7 வருடங்கள் பணியாற்றியோருக்கான உள்ளக இடமாற்றத்தில் யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. அங்கு சில மாதங்கள் அவர் கடமையாற்றினார். பின்னர் அவர் வடமாகாண கல்வியமைச்சரின் முறையற்ற தலையீட்டால் முன்னைய கல்வியமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரிக்கே இடமாற்றப்பட்டுள்ளார் என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

7 வருடங்கள் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாகப் பணியாற்றி. இடமாற்றம் வழங்கப்பட்ட ஒருவரை குறுகிய காலத்துள் அதே பாடசாலைக்கு இடமாற்றச் சபையின் தீர்மானத்தை மீறி வழங்கப்பட்ட இடமாற்றம் முறைகேடானது. இந்தவிடயத்தை முன்னைய வடமாகாண கல்வி செயலாளர் இ. இரவீந்திரனுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியது. அவர் இந்த இடமாற்றத்தை நிறுத்தியிருந்தார்.

தற்போது வடமாகாண கல்வியமைச்சரின் பிரத்தியேக செயலாளர் அனந்தராஜின் கையொப்பத்துடன் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்துடன் அந்த ஆசிரியர் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் மீண்டும் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

வடமாகாணக் கல்வியமைச்சரின் பிரத்தியேகசெயலாளர் ஒரு திணைக்களத் தலைவர் அல்ல. அவர் தனிப்பட்ட உத்தியோகத்தராவார். அவரது கடிதத்துடன் இடமாற்றம் வழங்கப்பட்டமை மிகப்பெரிய அதிகார முறைகேடாகும். இத்தகைய செயற்பாடு மிகமோசமானதாகும்.

அத்துடன் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்துடன் பாடசாலையில் கடமையைப் பொறுப்பேற்க அனுமதித்தமை பாடசாலை அதிபரின் முறைகேடான செயற்பாடாகும். வடக்குமாகாணகல்வியமைச்சரின் நெருங்கிய உறவுக்காரரான இந்தப் பாடசாலைஅதிபரும், வடமாகாண கல்வியமைச்சர் சர்வேஸ்வரனும் ஆசிரியருக்குச் சார்பாக நடந்து மிகப்பெரும் முறைகேட்டைப் புரிந்துள்ளனர்.

இவ்வாறானநிர்வாகமுறைகேடுகள் வடமாகாணக் கல்விப்புலத்தில் தோன்றியிருப்பது மிக ஆபத்தான செயற்பாடாகும். என்றுள்ளது. இதுதொடர்பாகவடக்குமாகாணகல்விஅமைச்சின் பிரத்தியேகச் செயலாளரை தொடர்பு கொண்டு வினவப்பட்டது.

“அந்த ஆசிரியைக்கு தற்காலிகமாகவே மீண்டும் அதே பாடசாலையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மருத்துவச் சான்றிதழுக்கு அமைய ஆறு மாதங்களுக்கு அவர் அதே பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் டிசெம்பர் மாதம் வழங்கப்படவுள்ள இடமாற்றத்தின் போது அவருக்கும் இடமாற்றம் வழங்கப்படும். அந்த ஆசிரியையின் இடமாற்றம் தொடர்பாக நானே கடிதம் அனுப்பியிருந்தேன்.” என்று அவர் தெரிவித்தார். (ற-ரி2.8)



# குடிவெறுப்பு சிகிச்சை நிபுணர்கள் குருந்தகத்துக்கு நேற்றுப் பயணம்

சாவகச்சேரி,மே.13

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இயங்கும் குடிவெறுப்பு சிகிச்சை நிலையத்தை (குருந்தம்) குடிவெறுப்பு சிகிச்சை தொடர்பில் இந்தியாவில் பயிற்சிபெற்ற மருத்துவ அதிகாரிகளும் சமூக சேவைகள் பணியாளர்களும் நேற்றுச்சென்று பார்வையிட்டனர்.

அங்கு சிகிச்சை பெறுவோர் மற்றும் அங்கு பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுடனும் அவர்கள் கலந்துரையாடினர்.

நாடளாவிய ரீதியில் பெருகிவரும் குடிபோதை பழக்கத்தால் பலர் பாதிக்கப்படுகின்றனர். இவர்களை விடுதியில் தங்கவைத்து. சிகிச்சை வழங்குவதற்காக நாட்டின் பல மருத்துவமனைகளில் குடிவெறுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு. தொடர் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

குடிவெறுப்புத் தொடர்பாக நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் மற்றும் சமூக சேவைகள் பணியாளர்களுக்கு இந்தியாவில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பயிற்சிபெற்றவர்கள் நாட்டில் உள்ள குடிவெறுப்புநிலையங்களில் தங்கியிருந்துசிகிச்சை பெறுபவர்களைச் சந்தித்து உரையாடி வருகின்றனர்.

இந்த நிலையில் அவர்கள் நேற்று சாவகச்சேரி மருத்துவமனையில் இயங்கும் குருந்தம்சிகிச்சைப்பிரிவுக்குவந்துபார்வையிட்டு: சிகிச்சைபெறுபவர்களுடன்கலந்துரையாடினர் என்று குழுவின் தலைவர் தெரிவித்தார். (ற,ரி2,9)

# சாவகச்சேரி விபத்தில் இருவர் படுகாயம்

சாவகச்சேரி,மே.13

சாவகச்சேரிநகரப்பகுதியில்நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம்நோக்கிசென்றுகொண்டிருந்த காருடன் மோட்டார் சைக்கிள் மோதியதிலையே விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி,பேரம்பலம்சாலையைச்சேர்ந்த சந்திரகுமார் கஜிபன் (வயது 23) என்பவர் மத்திய கிழக்கு நாட்டிலிருந்து கடந்த வாரம் நாட்டுக்கு வந்துள்ளார்.

இவர் உறவினர்களைப் பார்க்க சாவகச்சேரி சிவன் கோவிலடிக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து கிருஷ்ணகுமார்நிருஸன் (வயது 15) என்பவரை அழைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் திரும்பியபோதே விபத்து நடந்துள்ளது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில்சேர்ப்பிக்கப்பட்டு,ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குஅனுப்பிவைக்கப்பட்டார். பொலிஸார் சாரதியைக் கைதுசெய்ததுடன். அவரது காரையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். என்று தெரிவிக்கப்பட்டது. (ற,ரி2,9)




**அலுவலக வேலைவாய்ப்பு**

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்கு முகாமைத்துவ உதவியாளர் (ஆண்/ பெண்) தேவை.

தகைமை
- A/L சித்தி
- ஆங்கில மற்றும் சிங்கள அறிவு விரும்பத்தக்கது.
- வயது எல்லை 25 - 35

**076 459 4800**

**தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்கு கிளை உதவியாளர் (ஆண்) தேவை.

தகைமை
- A/L சித்தி
- ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
- வயது எல்லை 18 - 30

N/6730(11,17)

**076 376 0022, 076 690 8963**


அச்சுவேலிப் பகுதியில்

# மலசலகூடக் குழியில் துப்பாக்கி ரவைகள் மீட்பு

அச்சவேலி,மே.13

அச்வேலிப் பகுதியில் மலசலகூடக் குழி ஒன்றிலிருந்து பெருமளவான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

நீண்டகாலமாகபாவனைக்குட்படுத்தப்படாதவீடொன்றின் துப்புரவுப் பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

அதன் போது மலசலகூடக் குழியிலிருந்து பெருமளவான துப்பாக்கிரவைகள்கண்டுபிடிக்கப்பட்டன. இதனையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குவந்த சிறப்புஅதிரடிப்படையினர்ரவைகளைமீட்டதுடன். விசாரணைகளையும் முன்னெடுத்தனர்.

அந்த வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் வசிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீட்டுகக்கு அண்மையில் இராணுவமுகாம் ஒன்று உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம்தொடர்பில்அச்சுவேலிப்பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற,ரி2,26)



# குழியில் வீழ்ந்த குழந்தை சாவு

கொழும்பு, மே13

தங்கொடுவ மெடிகொடுவ பிரதேசத்தில் குழந்தை ஒன்று குழியில் வீழ்ந்து உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்தது.

வீட்டின்பின்புறமாகஉள்ள குழி ஒன்றில் வீழ்ந்தே குழந்தை உயிரிழந்தது எனத்தெரிவிக்கப்பட்டது.

இரண்டு வயதுக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பானமேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)


**பணிநிலை வேண்டுகை**

1. **கணினி வடிவமைப்பாளர்** (Computer Graphic Designer) (Adobe Photoshop, Indesign, CorelDRAW)
2. **கணினி தட்டெழுத்தாளர்** (Computer Typist - Tamil / English / Sinhala)

அச்சக அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

12,14.05.2018 (சனி, திங்கட் கிழமைகளில்) காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நேரில் வரவும்

**HARIKANAN (Pvt.) Ltd.**

**Printers of the North**

1st Floor, 681, K.K.S. Road, Jaffna.

* நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட நேரம் கவனத்திற் கொள்ளப்படும்.

# லட்சம்பேரைப் படுகொலை செய்து விட்டு நட்பு பாராட்டும் முயற்சியில் இராணுவம்

## வடக்கு அமைச்சர் அனந்தி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,மே.13**

**பல இலட்சம் மக்களைப் படுகொலை செய்து விட்டு மக்களோடு நட்பில் ஈடுபடுவதற்கு இராணுவம் பல முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. இது குறித்து மக்கள் அவதானமாக செயற்பட்டு இராணுவத்தின் சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும். இவ்வாறு வடக்கு மகாண சபையின் மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.**

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் ஆரம்ப நாள் நினைவு நிகழ்வுகள் மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையில், நேற்று செம்மணியில் இடம்பெற்றது.
இதில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,
விடுதலைக்காக பல தசாப்த காலமாகப் போராடிவந்த இனம், எந்தஒருவிலைக்கும் சலுகை போகாத இனம் எம் தழிழினம். எதற்கும் மண்டியிடாத இனத்தை பல நாடுகள் ஒன்று சேர்ந்து கொன்று விட்டனர். இந்த இனப்படுகொலைவார காலத்தை நினைத்து உலகம் வெட்கப்படவேண்டிய காலம் இது.
தமிழர்கள்என்பதால்பலஇலட்சம்தமிழ் மக்கள் இரக்கமின்றி இலங்கை அரசாலும் அதன் படைகளாலும் கொல்லப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளையும் இலங்கை அரசாலும் அதன் துணைப் படைகளாலும் கொல்லப்பட்ட மக்களின் நினைவு நாளாக மே மாதம் 12 ஆம் திகதியிலிருந்து மே மாதம் 18 ஆம்திகதிவரையானநாள்களை இனப்படுகொலை வாரமாகக்கடைப்பிடித்து வருகின்றோம். படுகொலைக்கான நீதியை உலகம் இன்னும் பெற்றுத்தரவில்லை. நடைபெற்ற படுகொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்படுதல்களுக்கு பொறுப்புக்கூறல் இல்லை.
ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கொன்று விட்டு "பனங்காட்டில் புத்திக்கூர்மை"என்றநிகழ்வைஇராணுவம்நடத்துகின்றது. இதற்குப்பாடசாலை மாணவர்களையும்அழைத்துவருகின்றது. பல ஆயிரம் மாணவர்களை இந்த இராணுவம் தான் கொன்றது. கிருசாந்தியையும்அவளது குடும்பத்தையும் இந்த இராணுவம் தான் கொன்று புதைத்தது. இதனை நாங்கள் ஒரு போதும் மறந்து விடக் கூடாது. தமிழ் பெற்றோர்கள் இதனை உணர வேண்டும். இன்றும் இந்த இன அழிப்புத் தொடர்ந்துகொண்டுதான்இருக்கின்றது. அன்று கிருசாந்தி நாளை வேறு யாருக்காக்கவும் இது நடக்கலாம். ஆகவே இராணுவத்தின்நட்புப்பாராட்டுகளுக்கு மக்கள் ஈடுபடக் கூடாது. இதனை உணர்ந்து எங்கள் மக்கள் செயற்பட வேண்டும் - என்றார். (ந.ரி2)

## குடும்பத்தலைவரின் பார்வை வாள்வெட்டில் பறிபோனது

முல்லைத்தீவு, மே 13
வாள்வெட்டுத்தாக்குதலுக்கு இலக்கான குடும்பத்தலைவர் ஒருவர் பார்வையை இழந்துள்ளார்.
கடந்த 5ஆம் திகதி இரவு ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மா. சிவரூபன் என்ற குடும்பத் தலைவரை புளியங்குளத்தில் வழிமறித்த குழு ஒன்று வாளால் வெட்டியது. அதில் படுகாயமடைந்த சிவரூபன் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
இந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவரின்மனைவிஒட்டுசுட்டான்பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வரும் நிலையில் இதுவரை சந்தேகபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரவிக்கப்பட்டது. (ற-ரி3)

## மாணவரது கோரிக்கை அரசு நிராகரித்துள்ளது

### குற்றஞ்சாட்டுகின்றார் லஹிரு

கொழும்பு, மே13
மாலபேதனியார்பல்கலைக்கழகமாணவர்கள்தொடர்பில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்வைத்த யோசனைகளைச் செயற்படுத்த அரசு தவறியுள்ளது.
இவ்வாறு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.
அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் லஹிரு வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
மாணவர்கள் முன்வைத்த யோசனைகளைச் செயற்படுத்த அரசு தவறியுள்ளது. அரசின் இந்த நடவடிக்கையின் மூலம்சைட்டம்மாணவர்களுக்குஅநீதி இழைக்கப்பட்டுள்ளது. இந்தவிடயம்தொடர்பானநியாயமானதீர்வொன்றை நோக்கிநகர முயற்சிக்க வேண்டும் - என்றார். (ற-ரி5)

## தொழிற்சாலையில் தீ விபத்து

கொழும்பு, மே13
இரத்மலானையிலுள்ள ஆடைத்தொழிற்சாலையில் நேற்றுத்தீவிபத்து ஏற்பட்டது.
இந்த ஆடை தொழிற்சாலையிலுள்ள களஞ்சியசாலையிலேயே இந்ததீவிபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸாரும் தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து தீயைக்கட்டுக்குள்கொண்டுவந்தனர். இந்தவிபத்துக்கான காரணம்தெரியாதநிலையில்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி5)

## ஈரானுக்குப் புறப்பட்டார் மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, மே13
இலங்கைக்கும் ஈரானுக்குமிடையிலானபொருளாதார, வர்த்தக உறவுகளை பலப்படுத்தும்நோக்குடன்இருநாள் அரச முறைப்பயணமொன்றை மேற்கொண்டு அரசதலைவர்மைத்திரிபால சிறிசேன நேற்று ஈரான் பயணமானார்.
ஈரானிய அரசதலைவர் ஹசன் ரூஹானியின் அழைப்பையேற்று ஈரான் சென்றஅரசதலைவர்இலங்கைக்கும் ஈரானுக்குமிடையிலான பொருளாதார, வர்த்தகஉறவுகளைமேம்படுத்துவது தொடர்பாகவும் இலங்கையில் ஈரானின் முதலீடுகளை பலப்படுத்துவதுதொடர்பாகவும் கவனம் செலுத்தவுள்ளார்.
இலங்கையின் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களுக்கு ஈரான் பங்களிப்பு வழங்குகின்றது. இலங்கையின் எண்ணெய் சுத்திகரிப்புத் துறையில் ஈரான் முதலீடுகளை செய்துள்ளது. இதன் மூலம்இலங்கையில்சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் உற்பத்தியை இரண்டுமடங்காக அதிகரிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமியமின்சக்தித்தேவையை நிறைவேற்று வதற்கு இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளில்ஒன்றாகஈரானும் உள்ளது.
மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஈரானிய அரசதலைவர் ஹசன் ரூஹானிக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்புஇன்றுஇடம்பெறவுள்ளது. இரண்டுநாடுகளுக்குமிடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகளை பலப்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் இந்தச்சந்திப்பின் போது கைச்சாத்திடப்படவுள்ளது. ஈரான்நாட்டின்வர்த்தக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்புமுதலீட்டு வர்த்தகமாநாட்டிலும்கலந்து கொள்ளவுள்ள அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஈரான் நாடாளுமன்றத்துக்கும் பயணம் செய்யவுள்ளார். (ற-ரி5)



## இளம்பெண் உயிரிழப்பு இளைஞனுக்கு விளக்கமறியல்

திருகோணமலை,மே.13
திருகோணமலை சம்பூர், கட்டைப்பறிச்சான் பகுதியில் இடம் பெற்ற விபத்தொன்றில் பெண் உயிரிழந்தார்.
அவரது நண்பரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறும் மூதூர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான் எம். பீ. அன்பார் நேற்றுஉத்தரவிட்டுள்ளார்.
வவுனியா, கிடாச்சூரி பகுதியைச்சேர்ந்ததெய்வலோகசிங்கம்விதூசிகா(வயது17) என்ற இளம் பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.
முல்லைதீவு அளம்பில் பகுதியைச் சேர்ந்த, 23 வயதுடைய இளைஞர் ஒருவரே விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளார்.
குறித்தஇளைஞனும்இளம் பெண்ணும்காதலித்து வந்துள்ளனர். இந்தநிலையில், வீட்டாருக்குத் தெரியாமல் இளைஞனின் வீட்டுக்கு இளம் பெண் வந்துள்ளார்.
இதனையடுத்து, முல்லைதீவு பொலிஸ் நிலையத்தில் வைத்து பெண் வீட்டாரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து, மீண்டும் இளைஞனைப் பிரித்து, சம்பூர் பகுதியிலுள்ள தனது உறவினர்களின்வீட்டுக்குஅழைத்துச் சென்றுள்ளனர்.
குறித்த இளம்பெண் காதலனுக்குதான்சம்பூரில் இருப்பதாகவும்தன்னைஅழைத்துச்செல்லுமாறும் கோரினார் என்று தெரிவிக்கப்படுகிறது.
அதனையடுத்து, காதலனான குறித்த இளைஞன் சம்பூர் பகுதிக்குச் சென்று, மோட்டார் சைக்கிளில் காதலியைஏற்றிவந்தவேளை, பெண்ணின்உறவினர்கள் மோட்டார் சைக்கிளில் துரத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது.
இதன்போது, குறித்த காதலர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள், வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடன்மோதிவிபத்துக்குள்ளானதில்காதலிஉயிரிழந்துள்ளார் என, பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.
உயிரிழந்த பெண்ணின் சடலத்தை சட்ட வைத்திய பரிசோதனையின்பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளதுடன் காயங்களுக்குள்ளான 23 வயதுடையகாதலன்திருகோணமலை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்என்றும்கூறப்பட்டது. (ந.ரி2,45)

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் 17 இல் போராட்டம்

கொழும்பு, மே13
எதிர்வரும் 17 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஒருநாள் பணிப் புறக்கணிப்பில்ஈடுபடப்போவதாகஅரசவைத்தியஅதிகாரிகளின் சங்கம்அறிவித்துள்ளது. அரசவைத்தியஅதிகாரிகள்சங்கத்தின் நிறைவேற்றுக்குழுக்கூட்டத்தில்இந்தத்தீர்மானம்எடுக்கப்பட்டது என அந்தச் சங்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நடைமுறைப் படுத்தப்படுவதை எதிர்த்தே நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் அறிவித்துள்ளது. (ற-ரி5)



## குழந்தையின் உயிரைப் பறித்தது பாரவூர்தி

பதுளை,மே 13
பதுளை முதுமாலயில் இரண்டுவயது குழந்தையொன்று பாரவூர்தி மோதி உயிரிழந்துள்ளது.
நேற்றுமுன்தினம் இந்த விபத்து நடந்தது.
குழந்தையின் தாய் தேயிலை கொழுந்து சேகரிக்கும் பாரவூர்திக்கு தேயிலை கொழுந்து வழங்குவதற்காக குழந்தையை தனிமையில் விட்டு விட்டுச் சென்ற வேளையேகுழந்தை பாரவூர்திச்சில்லுக்குள் அகப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்து தொடர்பில் பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டனர். (ற-ரி5)

## தேக்கு மரக்குற்றிகளுடன் சென்றவர் கைது

கொழும்பு,மே.13
அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் தேக்கு மரக் குற்றிகளை கொண்டுசென்ற சாரதி ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். 38 வயதுடைய ஒருவரே 22 தேக்குமரக் குற்றிகளுடன் கைதானார்.
ரஜஎல பகுதியிலிருந்து தொழிற்சாலையொன்றுக்கு தேக்குமரக்குற்றிகளைக்கொண்டுசெல்லும்போதேசந்தேகநபர்கைது செய்யப்பட்டதாக கந்தளாய் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிகவிசாரணைகளைப்பொலிஸார்முன்னெடுத்து வருகின்றனர். (ந.ரி2)

## உதவி பிரதேச செயலர் நியமனம்

சாவகச்சேரி மே.13

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு உதவிப் பிரதேச செயலர் நியமிக்கப்பட்டு கடந்த 2ஆம்திகதிதொடக்கம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

தென்மராட்சிஉதவிப்பிரதேச செயலராகக் கடமையாற்றிய றஞ்சனா நவரத்தினம் மாந்தைகிழக்குபிரதேசசெயலராகநியமிக்கப்பட்டபின்னர் வெற்றிடமாகக் காணப்பட்ட இடத்திற்கு புதிய உதவிப் பிரதேச செயலராக இலங்கை நிர்வாகசேவையைச்சேர்ந்த வினோஜிதா கணேசநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

## தமிழர் ஒருவரால் அமைக்கப்படும் விருந்தினர் விடுதிக்கு எதிர்ப்பு

### அஸ்மின், நிலாம் களத்தில் குதித்தனர்

யாழ்ப்பாணம், மே13

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அண்மையாக ஹலீமா வீதியில் தமிழர்ஒருவரால்அமைக்கப்பட்டுவந்த விருந்தினர் விடுதிக்கான கட்டடப் பணி முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள்சிலர்முன்னெடுத்தஎதிர்ப்பு நடவடிக்கையால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. பணியைஇடைநிறுத்துமாறுயாழ்ப்பாண மாநகர சபை பணித்துள்ளது.

தமிழர்ஒருவரால்கட்டப்பட்டுவந்தவிருந்தினர்விடுதிக்குஎதிராகநேற்று முஸ்லிம் அரசியல்வாதிகளும் அப்பகுதியைச் சேர்ந்த சிலரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் பகுதி மக்களின் எதிர்கால நலன்கருதியேபோராட்டம்இடம்பெறுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த யாழ்ப்பாண மாநகர பொறியலாளர்.போராட்டத்தில்ஈடுபட்டோருடன் கலந்துரையாடி, விடுதி அமைக்கும்பணியைஇடைநிறுத்தப்பணித்தார்.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் ஹலிமா வீதியைச் சேர்ந்த மக்கள் என குறிப்பிடப்பட்ட மனு ஒன்றும் யாழ்ப்பாணமாநகரசபைமுதல்வருக்குஅனுப்பிவைக்கப்பட்டது. அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம்ஹலிமாவீதியில்அமைக்கப்படும்விடுதியால்நெருக்கமாகவாழும் மக்கள் குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படும். பிற்காலத்தில் சீர்கேடான பழக்கவழக்கங்கள், மதுபோதைப் பாவனைகள் என்பன ஏற்பட்டு எமது சிறார்கள், இளைஞர்கள்வழிதவறிச்செல்லவாய்ப்புக்கள் உண்டு. அடிக்கடி நடைபெறும் களியாட்டங்களால் எழுப்பப்படும் ஒலிபெருக்கிச் சத்தத்தால், மாணவர்களின் கல்வி, குறிப்பாக பரீட்சைக்குத் தயாராகுவோர், சிறார்கள், குழந்தைகள், முதியோர், நோயாளர்களுக்கு இடைஞ்சல் ஏற்படும். பாடசாலைகள்,வணக்கஸ்தலங்கள்(பள்ளிவாசல்) மிக அருகாமையில் இருப்பதால்நற்கருமங்களுக்கு இடைஞ்சல்ஏற்பட்டு பிரச்சினைகள் உருவாகுவதற்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன. அந்தப் பகுதி வீதி சிறு வீதியாக இருப்பதனால் வாகன நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து தடை ஏற்பட்டு அதனால் பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே பிள்ளைகளையும் விபரீதங்களையும் கருத்திற்கொண்டு, மேற்படி விடுதிஅமைப்பதைநிறுத்திஉதவுமாறு கோருகின்றோம்என்றுள்ளது.

அரசியலில் கீரியும் பாம்பும் போன்று செயற்பட்ட அமைச்சர்ரிசாத் பதியுதீனின் கட்சியைச் சேர்ந்த யாழ். மாநகர சபை உறுப்பினர் கே.எம். நியாஸ் நிலாம், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மின்ஆகியஇருவரும்இந்தப்போராட்டத்தில்ஒன்று சேர்ந்திருந்தனர்.

வடக்குமாகாணசபைஉறுப்பினர்அயூப் அஸ்மின், தமிழ் தேசியக் கூட்டமைப்புடன்இணைந்துஇஸ்லாமுக்குஎதிராகச் செயலாற்றுகிறார் எனத் தெரிவித்து அவருக்கு எதிராக தனது ஆதரவாளர்களை ஒன்றிணைத்து அண்மையில் போராட்டம் நடத்தியிருந்தார் நிலாம். அத்துடன் அஸ்மினின் உருவப் பொம்மையை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் எரித்தது குறிப்பிடத்தக்கது. (21,113)

## புலனாய்வாளர்கள் அச்சுறுத்தல்

*மக்கள் முறைப்பாடு*

மன்னார், மே13

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணா மல் ஆக்கப்பட்டோர் பணியக ஆணையாளர்களுக்கு தமது

>> 53

## கூட்டுறவு சங்கக் கிளை முகாமையாளர் மீது தாக்குதல்

தென்மராட்சி. மே. 13

கூட்டுறவுச்சங்கக்கிளைக் கடையை மூடிவிட்டு வீடு திரும்பியகிளைமுகாமையாளரை வழிமறித்த கும்பல்அவரைத்தாக்கிவிட்டு அவரிடமிருந்தபணத்தை அபகரித்துச்சென்றது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமைநாவற்குழிப் பகுதியில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் தாக்கப்பட்ட கிளை முகாமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் அந்தப் பகுதியைச் சேர்ந்த இருவரைக் கைதுசெய்து நீதிமன்றப் பதில்நீதிவான் ப.குகனேஸ்வ ரன் முன்னிலையில் முற்படுத்தினர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கிளை முகாமையாளர் தன்னிடம் வாங்கிய பணத்தை நீண்ட நாள்களாக மீளத்தராமல் ஏமாற்றி வந்ததாகவும் வியாழக்கிழமை கடையை மூடிவிட்டு வரும் வழியில் பணத்தைக்கேட்டபோதுவாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியதெனவும் கைது செய்யப்பட்ட நபர்கள்தெரிவித்ததையடுத்து சந்தேக நபர்களை தலா ஒருலட்சம்ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல பதில் நீதிவான் அனுமதித்தார்எனத்தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## தேசிய இலக்கிய போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மே13

கலாசாரஅலுவல்கள்திணைக்களத்தால்தேசியகலை இலக்கியப் போட்டிகளுக்கான பிரதேச மட்டத்திலான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. கையெழுத்துப் போட்டி, கவிதை பாடல், கவிதை எழுதுதல், கட்டுரை, பாடல்நயத்தல், நாடகப் பிரதி எழுதுதல், பாடலாக்கம், நாட்டார் கலை கற்றல், இலக்கிய விவரணம், சிறுவர் கதைஆக்கம்மற்றும்சிறுகதைஆகியபோட்டிகளுக்கு ஆக்கங்களைதமிழ், சிங்களம், ஆங்கிலமொழிகளில் அனுப்பலாம். இதற்கமைவாகதெல்லிப்பழைபிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், கலை மன்றங்கள் மற்றும் திறந்த பிரிவுப் போட்டியாளர்களுக்கான விண்ணப்பங்கள் மற்றும் சுற்றறிக்கை என்பவை அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஆக்கங்களை விண்ணப்பப் படிவங்களுடன் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்கவும் அத்துடன் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் மற்றும்மேலதிகவிவரங்களைப்பெற்றுக்கொள்வதற்குப் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் தொடர்பு கொள்ளவும் என்று தெல்லிப்பழை பிரதேச செயலகர் ச.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார். (எ)

## காணிப்பிணக்குகளுக்கு 5 ரூபா முத்திரையுடன் தீர்வைப் பெறலாம்

### சிறப்பு மத்தியஸ்த சபையின் தலைவர் ரி. தேவதயாளன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே13

யாழ்.மாவட்டத்தில்பல்வேறுவிதமான காணிப்பிணக்குகளை எதிர்நோக்குவோர் மேற்படி பிணக்குகளுக்கான இணக்கத்தீர்வுகளை பெற்றுக் கொள்ளலாம்என யாழ்.மாவட்ட காணிசம்பந்தமான சிறப்புமத்தியஸ்தசபையின் தலைவர் ரி. தேவதயாளன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாண கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் சனிக்கிழமைகாலை9மணிதொடக்கம் எமது காணிப்பிணக்குகள் தொடர்பானசெயற்பாடுகள்இடம் பெறுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவில் வாழும் மக்கள் தங்களது அரச மற்றும் தனியார்காணிப்பிணக்குகள்தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் (எல்லை பிரச்சினை, பிரிவிடுதல், சொரியல், வெளிப்படுத்தல், பங்குப்பிரச்சினை) உள்ளவர்கள்எதிர்வரும்19ஆம்திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிணக்கு தொடர்பாக பிரச்சினையைகடிதம்மூலமாக எழுதி, 5 ரூபா முத்திரையுடன் சமர்ப்பிக்க வேண்டும்

அது தொடர்பில் ஒருவாரத்தில் இரு சாராரையும் அழைத்து இணக்கமான தீர்வுக்கு கொண்டுவரப்பட்டு பிணக்கு தீர்க்கப்பட்டவுடன் பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

மக்களின் பிணக்குகள் அதிகரிக்கும் பட்சத்தில் சுழிபுரம், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய மட்டத்திலும் காணி சம்பந்தமான சிறப்பு மத்தியஸ்த சபை விரிவுபடுத்தப்படும் எனவும் தெரிவித்தார். (50)

## காணவில்லையென பொலிஸில்முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே13

யாழ்ப்பாணத்தில் குடும்பத் தலைவர் காணாமற்போயுள்ளார்என்றுகூறிமுறையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் கடத்தப்பட்டார் என்று அவரது உறவினர்களால் கூறப்படுகிற போதும், விசாரணையின் பின்னரே உண்மை தெரியும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோண்டாவிலில் சேர்விஸ் நிலையம் ஒன்றை அவர் நடத்திவருகிறார் என்றும் அங்கு காரில் வந்தவர்களேகடத்தினர்என்றும்முறையிடப்பட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4,106)



யாழ் மாநகர சபை உறுப்பினர் கே.எம்.நிலாம் தனது முதல் மாதச் சம்பளத்தில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல்கைதியான ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளுக்கு பல்வேறு உதவிப் பொருள்களை நேற்று முன்தினம் வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## முறைசாராக்கல்விப்பிரிவு தொழிற் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரிவினால்2018ஆம்ஆண்டிற்கானதொழிற்பயிற்சி நெறிகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே இத் தொழிற் பயிற்சி நெறியில் பாடசாலைக் கல்வியை பெறத்தவறிய மாணவர்களும் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் அனைவரும் இணைந்து கற்கமுடியும்.

கணினி, மனை முகாமைத்துவம் ஆகிய பாடநெறிகளை கோப்பாய் முறைசாராக் கல்விப் பிரிவு தொழிற் பயிற்சி நிலையத்திலும், புத்தகம்கட்டுதல் இணுவில்பொதுநூலகம் சனசமூகநிலையத்திலும், சிரட்டைவேலை-யாழ்ப்பாணம் கைவினைப்பயிற்சிநிலையம்ஊரெழுவிலும், செப்புத்தகட்டு வேலைப்பாடுகள் - யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் அதற்கான அனுமதியைப்பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## வளன்புரம் பகுதிக்குக் குடிதண்ணீர் வசதி

யாழ்ப்பாணம், மே13

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை மேற்கு வளன்புரம் பகுதிக்கு மேலதிக குடிதண்ணீர் விநியோக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் போதிய நிலத்தடி குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோக குழாய் கள் ஏற்படுத்தப்படாமையால் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமப்பட்டு வந்தனர்.

தற்போது மேலதிகமாகவும் நிலத்தடிக் குழாய் மூலமாகவும் குடிதண்ணீர் விநியோக குழாய்கள் ஏற்படுத்தப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக யாழ்ப்பாண மாநகர பிரதி மேயர் து.ஈசன் தெரிவித்தார். அதனைவிட கரையோரப் பிரதேசத்துக்குக் குடிதண்ணீர் விநியோகங்களைச் சீராக மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிலத்தடி குழாய் மூலமான இந்தக் குடிதண்ணீர் வசதிகளை மக்கள்சிரமம்இன்றிபெற்றுக்கொள்வதற்கும்உரியஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## குருதிக்கொடை முகாம்

நாங்கள் செயல்பாட்டு வலை அமைப்பின் ஏற்பாட்டில் "முள்ளிவாய்க்கால் வரை உதிரம் சிந்தீயவர்களுக்காக" என்ற தலைப்பிலான குருதிக்கொடைமுகாம் சண்டிலிப்பாய்தமிழ்க்கலவன் பாடசாலையில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் 10.00 மணிவரை இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்களினால் தெரிவிக்கப்பட்டது. (63)

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 801

சீட்டிழுப்பு திகதி 2018.05.10 வியாழக்கிழமை

F 07 14 20 68

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 63,021,640/-

நீல நிற டிக்கட்டுகள் 2018.05.12ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## மரண அறிவித்தல்

### திருமதி குணவதி இராசகோபால்



துணவியைப் பிறப்பிடமாகவும் வட்டுத்தெற்கு. வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணவதி இராசகோபால் நேற்று (12.05.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் துணவியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் (இளைப்பாறிய P.W.D ஓவசியர்) - செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் துணவியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிராசா (இளைப்பாறிய உப தபாலதிபர் - அநுராதபுரம்) முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் இராசகோபாலின் அன்பு மனைவியும் குகன் (ஆசிரியர் - யாழ்ப்பாணக்கல்லூரி) இன் அன்புத் தாயாரும் சுஜீவாவின் (நூலகர் - சித்தமருத்துவ ஆயுள் வேதக் கல்லூரி, சுன்னாகம்) அன்பு மாமியும் சங்கீத்தின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தெற்கு.
வட்டுக்கோட்டை.

தகவல்:
இ.குகன் 077 912 3670

## ஆங்கில ஆசிரியர் தேவை

Elocution வகுப்புக்கள் நடத்துவதற்கு முன் அனுபவமுள்ள ஆங்கில ஆசிரியர் தேவை. மாதத்திற்கு 16 மணித்தியாலயங்கள் வகுப்புக்கள் நடைபெறும். 350 தொடக்கம் 500 ரூபா வரை மணித்தியாலயத்திற்கு கொடுப்பனவு வழுங்கப்படும்.

தொடர்பு - 077 386 7458

## கார் விற்பனை

FIAT uno (இத்தாலி) ரக 19-xxxx தொடரிலக்க (1995 Brand New ) கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 424 2327

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள குறுகிய காலப் பாவனையில் இருந்த லுமாலா மவுண்டன் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 8052 520

## காணி விற்பனைக்கு

பிறவுண் வீதிக்கு தனிப்பாதையுடன் கூடிய 02 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. மருத்துவபீடம், தொழில்நுட்பக்கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு அருகில் அமைந்துள்ளது.

தொடர்பு - 075 936 6108

## விற்பனைக்கு

யாழ். தட்டாதெரு சந்திக்கு அருகில் சீனியர் லேனில் 3 பரப்பும் 8 குளியுடன் கூடிய வீடும். யாழ். கோண்டாவில் C.T.P டிப்போக்கு முன்னொழுங்கையில் 2 பரப்பில் அமைந்த 2 வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 723 2535

## தவறவிடப்பட்டுள்ளது

புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு என்னும் முகவரியை உடைய அந்தோனிப்பிள்ளை மேரி மெல்கிறேன் செல்வராணி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல. 585250082V) புதுமாத்தளனுக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் தவறவிடப்பட்டு உள்ளது. கண்டெடுத்தவர்கள் அதனை ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். - 077 791 8373

## வேலையாள் தேவை

ஜிம் ஒன்றிற்கு உடற்பயிற்சி வழங்குவதற்கு பயிற்சி தெரிந்த பயிற்சியாளர் தேவை.

தொடர்பு - 077 025 0339

## இலவச உயர்க்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

**FREE Career Guidance & Study Abroud**

காலம்- 19 மே 2018 சனிக்கிழமை
நேரம் - காலை 9.00 - நண்பகல் 12.00
இடம் - முத்தையா மண்டபம் வவுனியா



- உள்நாட்டில், வெளிநாட்டில் உயர்கல்வி கற்பதற்கான புலமைப் பரிசு
- சகலவிதமான வீசா வழிகாட்டல்
- சரியான பல்கலைக்கழக மற்றும் பாடநெறித் தெரிவு
- நிரந்தர வதிவிடம், குடியுரிமைக்கான ஆலோசனை
- Spot Admissions

USA | UK | CANADA | JAPAN | AUSTRALIA
KOREA | NEWZEALAND | CHINA | EUROPE

தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் தவறவிடப்படுவது விநாடிகள் அல்ல : சந்தர்ப்பங்களே!

In Partnership With
**Infinity Centre and Global Academy**

மேலதிக விவரங்களுக்கு Off: 011 282 3286
024 222 7942 / 075 3143062/ 077 6267281

(00337)(10)

## ஏழாம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு
19.12.1929

இறப்பு
01.05.2011



அமரர்
### கதிரேசு கந்தையா


திதி - 13.05.2018 திரயோதசி

உள்ளமெனும் கோயிலிலே உமையிருத்தி வழிபட்டே
கண்ணிமைக்கும் பொழுதினிலே
கழிந்தன ஏழாண்டுகள் அப்பா !
உம் ஆத்ம சாந்திக்காக அனுதினமும் வேண்டுகின்றோம்.

கமலவாசா,
கந்தரோடை, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### அப்பாக்குட்டி செல்வரத்தினம்

யாழ்ப்பாணம், நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி செல்வரத்தினம் கடந்த (11.05.2018) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம்-அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தினி (UK), சுகந்தினி (நியூசிலாந்து), பாலமுரளி, காலஞ்சென்ற றோசினி மற்றும் யாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நவகுமார் மற்றும் ஸ்ரீபாஸ்கரன், அனுஷா, சத்தியேந்திரா ஆகியோரின் பாசமிகு மாமனும் நவதீசன், மகிந்தன், கண்ணா, பிரசோத், அஸ்வின், அக்சஜா, இமிழிசை, யனுசன், குலறஞ்சினி, றோசினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், குமாரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசமலர், யோகேஸ்வரி, சிவராசா, நாகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (11.05.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சித்திவிநாயகர் வீதி,
நாவற்குழி மேற்கு, கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1293/15)

## 6ஆம் ஆண்டு நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலி

### சேதுகாவலர் சங்கரப்பிள்ளை



(முன்னாள் உரிமையாளர்
சிறிகாந்த ஸ்ரோர்ஸ், கைதடி)

திதி : திரயோதசி

தோற்றம்
05.02.1931

மறைவு
19.04.2012

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் – எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம் – உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
கண்ணின் இமை போல் எமைக் காத்த அப்பா – உங்கள்
கனவுகள் யாவும் நிறைவேறும்.

கைதடி வடக்கு, கைதடி. ——— குடும்பத்தினர்.

(CS 16584/15/17)

## மரண அறிவித்தல்



### மாணிக்கம் இராசலிங்கம்

யாழ்ப்பாணம் நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இராசலிங்கம் நேற்று (12.05.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் அன்னம்மா தம்பதியரின் அன்புப்புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்துரை மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமணியின் அன்புக்கணவரும் தவசீலன் (உதயன் - ரியோ ஐஸ்கிறீம்), குணசீலன் (குணா), தேவப்பிருந்தா (கனடா), வினோதினி (மட்டுவில்), கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிஷாந்தினி (மேனகா), ஷர்மிளா, கேசவன் (கனடா), சிவகாந்தன் (ஆசிரியர், கிளி/ பூநகரி நல்லூர் ம.வி ,இயக்குநர் மட்டுவில் மாதுமை கல்வி நிலையம்) ஆகியோரின் அன்புமாமனாரும் பூர்விகன், அப்சரா, ஆதனா (கனடா), ஆதவி ஆகியோரின் அன்புப்பேரனும் கனகராஜா, சிவசுப்பிரமணியம், விமலாதேவி காலஞ்சென்ற பரமலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன் - இ. தவசீலன் (உதயன் - ரியோ ஐஸ்கிறீம் உரிமையாளர் )

மருத்துவர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பான

# நிதிப் பிரமாணங்கள் தெரிந்தால் பணிப்புறக்கணிப்பு நடைபெறாது

## மாகாண சபை அதிகாரிகள் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், மே 13

அதிகரித்த மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குவது தொடர்பான நிதிப் பிரமாணங்கள் தொடர்பில் வடக்கு மாகாண மருத்துவர்களும் வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்பு அறிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு தெரிவிக்கின்றனர் மாகாண அதிகாரிகள்.

அவர்கள்இதுதொடர்பில்மேலும்தெரிவித்ததாவது:

மாகாண சபையின் சகல தர உத்தியோகத்தர்களுக்கும்வழங்குவதற்குத்தேவையான சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகள் உட்பட அனைத்துக் கொடுப்பனவுகளுக்குமான நிதி மாகாண சபையால் கணிப்பீடு செய்யப்பட்டு நிதி ஆணைக்குழுவின் சிபார்சுடன்பொதுத்திறைசேரிக்குஅனுப்பிவைக்கப்படுவதனூடாக வருடாந்த வரவு செலவுத் திட்டதின் மூலம் மாகாண சபைக்குரியநிதிஒதுக்கப்படுகின்றது. இது வழமையாக இடம்பெற்றுவருகின்றது.

அதனடிப்படையில் மருத்துவத் துறையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கும் இதே போன்றே2018ஆம்ஆண்டுக்கானநிதித்தேவைப்பாட்டுக்கான சகல ஒதுக்கீடுகளும் பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட நிதியின் அடிப்படையில் மேலதிக நேரக்கொடுப்பனவுக்காக 975.6 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் வரையில் 405 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. மீதித் தொகை இந்த வருடம் மருத்துவத் துறையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குவதற்கே போதுமானதாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் சுகாதார அமைச்சால் 26.02.2018இல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்பிரகாரம்மணித்தியாலத்துக்குரியமேலதிகநேரககொடுப்பனவுவீதம் மருத்துவர்களின் வகுதிக்கேற்ப அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகரிப்பு மூலம் 2018ஆம் ஆண்டு மருத்துவர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குவதற்கு வடக்குமாகாணசபைக்குமுன்னர்ஒதுக்கப்பட்ட தொகைக்கும் மேலதிகமாக 283.5 மில்லியன் தேவைப்படுகின்றது. இந்தத் பணத்துக்காக பொதுத் திறைசேரிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்தமேலதிகநிதிஏற்பாடுபொதுத்திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் மாகாணசுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விடயம் சம்பந்தமாக ஏற்கனவே மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மருத்துவத் துறை சார்ந்த உத்தியோகத்தர்களுக்கு பழைய மேலதிக நேர வீதப்படி மேலதிக நேக்க கொடுப்பனவுகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றமையும்குறிப்பிடத்தக்கதாகும். ஆகவேஇந்தவிடயத்தில்வடக்குமாகாண சபை, மாகாணத் திறைசேரி என்பன உரிய நடவடிக்கையினை எடுத்திருப்பதனால் பொதுமக்களுக்கு சிரமத்தை தரக்கூடியவாறு வட மாகாண மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது தவிர்க்கப்படலாம் எனத் தெரிவித்துக்கொள்கின்றோம்-என்றனர். நாளைதிங்கட்கிழமை முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-105)

## கஞ்சா வியாபாரிபோல் பாசாங்கு செய்து கேரளக் கஞ்சாவை மீட்டனர் பொலிஸார்

### சந்தேக நபரும் கைது

வவுனியா, மே 13

கஞ்சா வியாபாரிகள் போன்று பாசாங்கு செய்த பொலிஸாரால் 3கிலோ 400கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வவுனியா மகாறம்பைக்குளம் ஸ்ரீராமபுரம் பகுதியில் இடம்பெற்றது.

அந்தப் பகுதியில் கஞ்சா வியாபார நடவடிக்கையில் நபரோருவர் ஈடுபட்டு வருகிறார் என்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அதை உறுதிப்படுத்திச் சந்தேக நபரைக் கைது செய்வதற்கு பொலிஸார் கஞ்சா வியாபாரம் செய்பவர்கள் போல் பாசாங்கு செய்து கஞ்சா வியாபாரி என்று கூறப்படுபவருடையவீட்டுக்குச் சென்றனர். அந்த நபருடன் தொடர்புகளை ஏற்படுத்தினர். வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்த நபர் முனைந்த போதேஅவர்கைதுசெய்யப்பட்டார். வீட்டில் வைத்திருந்த 3கிலோ 400கிராம் கேரளக்கஞ்சாவும்கைப்பற்றப்பட்டது. கைதுசெய்யப்பட்டவர் 25 வயதுடையவர். மேலதிகவிசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும்தெரிவித்தனர்.

(எ-21,110)

## ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

### 1கிராம் 700 மில்லிக்கிராம் மீட்பு

வவுனியா, மே 13

வவுனியாவில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில்வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தோனிக்கல் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் சம்பவம் இடம்பெற்றது.

ரோந்துக்கடமையில்ஈடுபட்டிருந்தவவுனியாப்பொலிஸ் நிலையப்போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் குறித்த நபரைக் கைது செய்தனர். 1கிராம் 700 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப் பொருள் அவரிடம் இருந்து மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்அதேஇடத்தைச் சேர்ந்த 35வயதுடையவர். அவர் வவுனியா நீதிமன்றில்முன்னிலைப்படுத்தப்பட்டுதற்போதுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-21,110)

## மூளாய்க்குடியேற்றத்திட்டத்துக்கு 27 ஆண்டுகளின் பின்னர் ஒளி

### மகிழ்ச்சியில் மக்கள்

யாழ்ப்பாணம், மே 13

27 ஆண்டுகளின் பின்னர் மீள்குடியமர்ந்த பொன்னாலைமூளாய்க்குடியேற்றக் கிராம மக்களுக்கு நேற்று இலவச மின் இணைப்பு வழங்கிவைக்கப்பட்டது. மீள் குடியமர்ந்து கடந்த 10 மாதங்களுக்கும் மேலாக இருளில் வாழ்ந்து வந்த நிலையில் வீதியின் கரையோரம் குடியமர்ந்துள்ளகுடும்பங்களுக்கே இவ்வாறு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொன்னாலை, மூளாய் குடியேற்றத்திட்டம் 1980ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன்போது 65குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து 1990ஆம் ஆண்டுவரை அந்தக் காணிகளிலேயே மக்கள் வாழ்ந்தனர். 1990ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இடம்பெற்ற போர்ச்சூழல்காரணமாகஅங்கிருந்த மக்களும் இடம்பெயர்ந்து சென்றனர். அவர்களது வீடுகள் உடைக்கப்பட்டன. பின்னர்சமாதானகாலத்தின் போது மீண்டும் அரசால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அதன் பின்னர் ஏற்பட்ட இறுதிக்கட்ட போராலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும் அங்கு மக்கள் வாழ முடியாது இடம்பெயர்ந்தனர். கடந்தபல வருடங்களாக அவர்கள் திக்குத் திக்காகச் சென்று குடியமர்ந்தனர். தற்போது அந்தக் காணிகளில் தேசிய வீடமைப்பு அதிகார சபின் நிதி ஒதுக்கீட்டில் வீடுகள் அமைக்கப்பட்டன. குடிதண்ணீர், மின்சாரம் உள்ளிட்ட எந்த வித அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்படாதநிலையிலும்குழந்தைகளுடனாக குடும்பத்தினரும், முதியவர்களும்அங்குகுடியமர்ந்தனர். கடற்கரைக் காற்றின் வேகத்தால் விளக்குக் கூட ஏற்ற முடியாத நிலையில் அவர்கள் பெரும் துன்பப்பட்டனர். திருடர்களின்அட்டகாசமும்அவர்களைவிட்டுவைக்கவில்லை இருளைச் சாதகமாகப் பயன்படுத்தும் திருடர்கள் அங்கு வாழ்வாதாரத்துக்காகவளர்க்கபட்ட கோழிகளைக் கூட திருடிச் சென்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் தமக்கான குடிண்ணீர், மின்சாரத்தைப் பெற்றுத் தருமாறு அங்கு குடியமர்ந்த சுமார் 8க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் பிரதேச செயலகம், பிரதேச சபைகளுக்கு கோரிக்கை விடுத்தனர். எனினும் அவர்களுடைய கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்குபோன்றே இருந்தது.

இந்த நிலையிலேயே நேற்று அங்கு குடியமர்ந்துள்ள மக்களுக்குமின்இணைப்புவழங்கப்பட்டுள்ளது. பிரதேசசெயலகம், தேசிய வீடமைப்பு அதிகார சபை, மின்சார சபையினர் இணைந்து மக்களுக்கான மின்னிணைப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். எனினும்குடிதண்ணீருரைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்தும் பெரும் கஸ்ரங்களை எதிர்கொள்வதாகவும் தண்ணீரைப் பெறுவதற்கு தேவையான உதவிகளை செய்துதருமாறும்அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-21)

## ஏழைகளின்அப்பிளுக்கு மயங்கிய குரங்கு

### வவுனியாவில் சம்பவம்



வவுனியா, மே 13

வவுனியாசிறைச்சாலையில் கடமையாற்றும் பெண் உத்தியோகத்தருடைய தொடுபேசியைப் பறித்துச் சென்ற குரங்கு ஏழைகளின் அப்பிள் என்று வர்ணிக்கப்படும் வாழைப்பழத்துக்கு ஆசைப்பட்டு தொடுபேசியை கீழே போட்டதால் அது பாவனை செய்யமுடியாதவாறுசேதமானது.

சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. வவுனியாச்சிறைச்சாலைக்குவரும்பொதுமக்களின்விவரங்களைப்பதிவு மேற்கொள்ளும் உத்தியோகத்தர்ஒருவருடைய தொடுபேசியே இவ்வாறு குரங்கால் பறிக்கப்பட்டது.

கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தஅவரிடமிருந்து தொடுபேசியைப் பறித்த குரங்கு அதைக் கொண்டு அங்குள்ள மரம் ஒன்றில் ஏறியது. குரங்கிடமிருந்துஅதைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த உத்தியோகத்தர் கல்ஒன்றினைகுரங்கை நோக்கி எறிந்தார். பதிலுக்கு மரத்தில் இருந்த குரங்கு தொடுபேசியின் உறையை கீழே போட்டது. மீண்டும் ஒரு கல்; குரங்கை நோக்கி எறியப்பட்டபோது குரங்கு தொடுபேசியின் பற்றியைக் கழற்றி எறிந்துள்ளது. இந்தநிலையில் உத்தியோகத்தர்வாழைப் பழம் ஒன்றை குரங்கை நோக்கிவீசியுள்ளார். உடனேயே தொடுபேசியை கீழே போட்ட குரங்கு வாழைப்பழத்தைப்பெற்றுக்கொண்டு சென்றது என்று தெரிவிக்கப்பட்டது.

மரத்திலிருந்து கீழே வீழ்ந்த தொடுபேசியானதுகடுமையாகச்சேதமடைந்துள்ளதுடன் பாவனைசெய்யமுடியாத நிலையிலுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு குரங்குகளின் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தவதற்குபலநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் நடைமுறைப்படுத்த முடிவதில்லை இதனால் மக்கள் முதல் அரச உத்தியோகத்தர்கள் வரை பல இழப்புக்களையும் சந்திக்க நேர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-21)

### தற்காலிகக் கொட்டில்கள் வேய

## இரணைதீவு மக்களுக்கு கிடுகுகள் வழங்கிவைப்பு



கிளிநொச்சி, மே 13

சொந்த இடத்தில் இருந்து போராடும் இரணைதீவு மக்களுக்கு 10 ஆயிரம் கிடுகுகள் மற்றும் 10 ஆயிரம் கிடுகுகள் பின்னக்கூடிய ஓலைகளும் வழங்கப்பட்டன.

தற்காலிகக் கொட்டில்கள் அமைத்துப்பேராட்டத்தில்ஈடுபடும் இரணைதீவு மக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனின்வழிகாட்டலில் நேற்றுமுன்தினம் கிடுகுகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கடற்படையின் ஆக்கிரமிப்பைஎதிர்த்து சொந்த இடத்துக்குச் சென்று குடியேறிய இரணைதீவு மக்களை அரசியல் தலைவர்கள் சென்று சந்தித்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து வருகின்றனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் அண்மையில் இரணைதீவு சென்றிருந்தார. அவர் அந்த மக்களுக்கு புலம்பெயர்ந்த மக்களின்உதவியுடன்உலருணவுப் பொருள்களை வழங்கியிருந்தார். இதன்போது மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே நேற்றுமுன்தினம்கிடுகுகள்வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

புலம்பெயர் தமிழ் அமைப்பான 'உறவுகளுக்கு கைகொடுப்போம்' அமைப்பு இதற்கான அனுசரணையை வழங்கியதுஎன்றும்தெரிவிக்கப்பட்டது. (எ-21, 35)

தவறவிடப்பட்ட

## தொண்டராசிரியர்களுக்கு மீண்டும்நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், மே13

தொண்டராசிரியர் நேர்முகத் தேர்வில் தவற விடப்பட்டவர்களுக்கு இரண்டாம் கட்டமாக நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின்அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் குறித்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் தற்போது தொண்டராசிரியர்களாகப் பணியாற்றுபவர்களைநிரந்தரமாக்கும்நோக்கில்கடந்தகாலங்களில்நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றன. அவற்றில் தவறவிடப்பட்டவர்களுக்கு கடந்த மாதம்29ஆம்திகதிகொழும்பில் நேர்முகத் தேர்வு இடம் பெற்றது. இதன்போதும்பலர் தவறவிடப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து தவறவிடப்பட்டவர்களின்விவரங்கள்திரட்டப்பட்டன.

இவ்வாறு திரட்டப்பட்டதன் அடிப்படையில் குறித்த பட்டதாரிகளுக்கு இந்த மாதம் இறுதிப்பகுதியில்மற்றுமோர் நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது. இவ்வாறு இரண்டாவது தடவையாகவும் இடம்பெறும்நேர்முகத்தேர்வின் பின்னரே தேர்வானவர்களின் பட்டியல் வெளிவரும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-105)

## சிகரெட்இறக்குமதியைதடைசெய்யும்வரை புகையிலையை கட்டுப்படுத்தக்கூடாது

*நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், மே13

பன்னாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சிகரெட் வகைகளை தடை செய்யும் வரைபுகையிலைச்செய்கையைகட்டுப்படுத்தக்கூடாது என நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச சபையின் அமர்வுநேற்றுமுன்தினம்சபைமணடபத்தில் இடம்பெற்றது. இந்த அமர்வில்சபை உறுப்பினர் மதிசுணன் குறித்த தீர்மானத்தை சபையில் முன்மொழிந்தார்.

அவர்தனதுதீர்மானத்தில்தெரிவித்ததாவது:

இலங்கையில்புகையிலையைதடைசெய்ய வேண்டும் என தென்னிலங்கை அரசு பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. ஆனால் வெளிநாடுகளில்இருந்துஇறக்குமதிசெய்யப்படும்சிகரெட்வகைகளைதடைசெய்ய அரசு எந்தமுயற்சியும்எடுத்ததாக அறியவில்லை. புகையிலையை விட அதிக பக்கவிளைவுகளை கொண்ட அவற்றை தடை செய்யாது அதிலிருந்து வருமானங்களை பெற்றுக் கொண்டு உள்ளூர் உற்பத்தியாளர்களாக புகையிலைவிவசாயிகளின்வயிற்றில்அடிக்கும்செயலைகொழும்புஅரசுமேற்கொள்கின்றது. இதனைநாம்ஏற்றுக்கொள்ளமுடியாது. எனவேவெளிநாடுகளில்இருந்துஇறக்குமதி செய்யப்படும் சிகரெட்டைத் தடை செய்யும் வரைபுகையிலையைதடைசெய்யக்கூடாது என தீர்மானிப்போம் - என்றார்.

இந்ததீர்மானத்துக்குஅனைத்துஉறுப்பினர்களும் ஆதரவினை வழங்க ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (எ-8)

## கலந்துரையாடலும் உறுப்பினர்கள் வரவேற்பும்

கைதடிபிரதேசஅபிவிருத்தி தொடர்பானகலந்துரையாடலும் சாவகச்சேரி பிரதேச சபையின் புதிய உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வும் கைதடி மேற்கு சரஸ்வதிசனசமூகநிலைய மாநாட்டு மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கைதடி சனசமூக நிலையங்களின்ஒன்றியத்தலைவரும் அகில இலங்கைச் சமாதான நீதவானுமாகிய இ.கந்தசாமி தலைமையில்நிகழ்வுநடைபெறவுள்ளது. (288)

# கள்ளுத் தவறணைகளின் நேரக் கட்டுப்பாடு தளர்வு

*சார்ல்ஸ் எம்.பி தெரிவிப்பு*

**மன்னார். மே 13**

**மதுபானச்சாலைகள்காலை9மணிமுதல்இரவு9மணிவரைதிறந்திருக்கும் நிலையில் உள்ளூர் சீவல் தொழிலாளர்களைப் பாதிக்கும் வகையிலான கள்ளுத் தவறணைகள் தொடர்பான நேரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் மாவை.சேனாதிராசா ஆகியோரின் கோரிக்கைக்கு அமைய நேரமாற்றத்துடன் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி சமர்ப்பித்த அவசர பிரேரணையில்,

அரசசட்டத்துக்கமையதற்பொழுதுவடக்குகள்ளுத்தவறணைகள் காலை 11 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரையும், பின் பிற்பகல்5மணியிலிருந்துஇரவு8மணிவரையுமேதிறக்கப்பட்டு வருகின்றன.

கள்ளுத் தவறணைகள் காலை 11 மணிக்கு திறக்கும் அதேவேளையில் சாராயக் கடைகள் காலை 9 மணிக்கு திறக்கப்படுகின்றன. இதனால் கள் அருந்துவோர் மதுபான சாலைகளில் விற்கப்படும் போத்தல் கள்ளில் அதிக நாட்டம் கொண்டு அவற்றை வாங்குகின்றனர். இதனால் உள்ளூர் கள் உற்பத்தியாளர்கள் பாதிப்படைகின்றனர்.

எனவே உடனடியாக உள்ளூர் தொழிலாளர்களும் கூட்டுறவாளர்களும் நன்மை ஈட்டும் வகையில் கள்ளுத் தவறணைகள் திறக்கும் நேரத்தில் மாற்றம் செய்து திறப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ்நிர்மலநாதன் கோரிக்கை விடுத்தார்.

குறித்த விவாதத்தில் இணைந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா,

குறித்த செயல்பாட்டின் மூலம் உள்ளூர் கள் உற்பத்தியாளர்களை வேண்டுமென்றே நசுக்குவது புலப்படுகின்றது. கித்துள் மரத்துக்கு வரி இல்லை. எமது பகுதித் தொழிலாளர்கள் பயன்படுத்தும் பனை மற்றும் தென்னைக்கு மட்டுமே வரி அறவீடும் இடம்பெறுகின்றது. தென்னிலங்கையில்இருந்துசெயற்கைகள் வடக்குக்கு எடுத்து வரப்படுகின்றது. ஆனால் வடக்கில் பெறப்படும் அதிக உற்பத்திகளை அவர்கள் போத்தலில் அடைத்து சேமித்து விற்பனையில் ஈடுபடும் செயல்பாட்டுக்கு அதிகரித்த வரி அறவிடப்படுகின்றது.

இதற்கும் அப்பால் சில வகை மதுசார உற்பத்திகளை வடக்கில். மேற்கொள்ள முயன்றால் வடக்கு மாகாண தொழிலாளர்கள் மீளமுடியாததொகைகளில்வரிவிதிப்புஇடம்பெறுகின்றது. இதில் சில வகைகள் தென்னிலங்கையில் விற்பனை செய்யும் விலையை ஒத்தவகையில் வரிப்பணம் அறவிடுவது பலத்த சந்தேகங்களையும் எழுப்புகின்றது. எனவே உள்ளூர் கள்ளு இறக்கும்தொழிலாளர்களுக்கு விதிக்கும் வரியையும்நீக்கி கள்ளுத்தவறணைகளும்மதுபானசாலைகள்திறக்கும்நேரமான 9 மணிக்கே திறப்பதற்கு அனுமதித்து 2 மணிவரையும் இயங்கவும் அதேபோன்று மாலை 4 மணிக்கு திறக்கும் நேரத்தினையும் 3 மணிக்கே திறப்பதற்கு ஏற்ப அனுமதிக்க வேண்டும். குறித்த விடயம் நிதி அமைச்சின் கீழ் வருவதனால் இது தொடர்பில் உடன் கவனம்செலுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

'இவற்றின் அடிப்படையில் நாட்டில் உள்ள அனைத்து கள்ளுத் தவறணைகளும் மதுபானசாலைகள் திறக்கும் நேரம் முதல் மதுபான சாலைகள் மூடப்படும் நேரம் வரையில் திறப்பதற்கு அனுமதிக்கப்படுவதாக எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு உடன் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதோடு உள்ளூர்உற்பத்தியை ஊக்குவிக்கும்நோக்குடன் வடமாகாண தெங்கு பனம் பொருள் உற்பத்தியினரின் கோரிக்கைக்குஅமைவாகமன்னார்மாவட்டத்தில்நானாட்டான் பிரதேசத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொடிகாமத்திலும் உள்ளதெங்குபனம்பொருள்உற்பத்திமையங்களில்போத்தல்கள் அடைப்பதற்கான அனுமதியும் வழங்கப்படுவதாக நிதி அமைச்சால்அறிவிக்கப்பட்டுள்ளது' என்றுநாடாளுமன்றஉறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

(எ-60,105)

## மீண்டும் திரும்பிச் செல்கிறது வன்னேரிக்குளம் நெல் காய்தளம்

*அரசியல் தலையீடே காரணம் என்கின்றார்விவசாய அமைச்சர்சிவநேசன்*

கிளிநொச்சி, மே13

வன்னேரிக்குளம் பிரதேசத்துக்கான நெல் காய்தளம் மீண்டும்திரும்பிச்செல்கிறது. இந்தமுறை அரசியல் தலையீடு காரணமாகவே அமைக்கப்படாது திரும்புகிறது என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

கிளிநொச்சிவன்னேரிக்குளம் கிராமத்துக்குவடக்குமாகாண குறித்தொதுக்கப்பட்டநிதியின் மூலம் நெல் காய்தளம் அமைப்பதற்கு 2017ஆம் ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டது. அப்போது தளம் அமைப்பதற்கான பொருத்தமான நிலம் இல்லாதிருந்ததால்நெல்காய்தளம் அமைக்காமல் திரும்பிச்சென்றது.

இதனைதொடர்ந்துநெல்காய்தளம் அமைப்பதற்கு பிரதேச கமக்கார அமைப்பான குஞ்சுக்குளம் கமக்கார அமைப்பு கோரிக்கைவிடுத்து கமக்கார அமைப்பின் தலைவர் தனது சொந்தக் காணியின் ஒரு பரப்பை உரிய முறைப்படி பொதுத்தேவைக்குவழங்கியிருந்தார். இதுவும் கடந்த வருடம் இடம்பெற்றது.

இந்த நிலையில் மீண்டும் இந்தவருடம்நிதிஒதுக்கப்பட்டு. குறித்த காணியில் நெல் காய தளம் அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கல், மணல் இறக்கப்பட்டு அத்திபாரம் வெட்டிய நிலையில் மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் ஒருவரின் தலையீடு காரணமாகவும்அவர்விவசாயத் திணைக்கள அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அச்சுறுத்தும்வகையில்நடந்துகொண்டமையாலும் குறித்த நெல் காய்தளம் அமைக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ளது என்று திணைக்களஅதிகாரிகள்தெரிவித்தனர்.


இது தொடர்பில் வடக்கு மாகாணவிவசாயஅமைச்சர் சிவநேசனை தொடர்பு கொண்டு வினவியபோது,

'குறித்த நெல் காய்தளம் அமைக்கும் பணி இரண்டாவது. தடவையாக உரிய முறைப்படிமேற்கொள்ளப்பட்டது இருந்தும் காணியை இதற்காக வழங்கிய நபர் எனக்கெதிரானஅரசியல்தரப்பைச் சார்ந்தவர் என்ற காரணத்தால் மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலையிட்டு பணிகளுக்கு இடையூறு விளைவித்ததன்காரணமாக இரண்டாவது தட்வையாகவும் வன்னேரிக்குளத்துக்கானநெல்காய்தளம்அமைக்கும்பணிதிரும்பிச்செல்கிறது' எனத்தெரிவித்தார்.

கிராமத்துக்குவந்ததிட்டத்தை அரசியல்காரணங்களுக்காக மக்களின் நலனை கருத்தில் எடுக்காது திருப்பியமை பிரதேச கமக்காரர்கள் மத்தியில் கவலையும், வேதனையும் ஏற்படுத்தியுள்ளது. (எ-214)

## பேருந்து – மோ.சைக்கிள் விபத்து

*ஒருவர் காயம்*



பேருந்தும்மோட்டார்சைக்கிளும்மோதி விபத்திற்குள்ளானதில்ஒருவர்படுகாயமடைந்தார்.

சம்பவம் நேற்று முன்தினம் வவுனியா இறம்பைகுளம்பகுதியில்மாலை4மணியளவில் இடம்பெற்றது. நகரிலிருந்து கொறவபொத்தான வீதியால் சென்ற பேருந்துஇறம்பைகுளம்மயானவீதியில் திரும்ப முற்பட்ட போது அந்த வீதியில் இருந்து கொறவபொத்தான வீதி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனுடன் மோதியதிலேயே விபத்து இடம் பெற்றது. விபத்தில்மோட்டார்சைக்கிளில் சென்றசாருஜன்என்றஇளைஞர்காலில் காயம் ஏற்பட்டு படுகாயமடைந்தார்.

அவர் வவுனியா வைத்தியசாலை விபத்து பிரிவில்சேர்க்கப்பட்டார். மேலதிகவிசாரணைகளைவவுனியாப்போக்குவரத்துப் பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (21,110)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே13

வடக்குமாகாணபொதுச்சேவையின்அபிவிருத்திஉத்தியோகத்தர் தரம் 111 சேவைக்கு நடப்பு ஆண்டில் ஆண்டு உள்வாங்கப்பட்டவர்களது ஆட்சேர்ப்பு நிபந்தனைக்கும் நியமன நிபந்தனைக்கும் இடையில்காணப்படும்வேறுபாடுதொடர்பாககலந்துரையாடிதீர்வு காண்பதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என்று வடக்கு மாகாண அரச சேவை பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே இந்த ஆண்டு நியமனம் பெற்ற வடக்கு மாகாண பொதுச் சேவைக்குட்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

சகல அபான்ஸ் எலைட் காட்சியறைகள் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.

நீங்கள் இன்னும் பார்ப்பது பழைய தொலைக்காட்சியா?

# புதிய 4K தொழில்நுட்பத்தில் வரும் LG IPS UHD தொலைக்காட்சிக்கு இன்றே மாறுங்கள்!

LG Life's Good

மாற்றீடு சலுகையுடன் ரூ. 40,000/- வரை விசேட தள்ளுபடி

## LG UHD TV 4K

4K Resolution

8.3 மில்லியன் பிக்சலுடன் ஃபுல் HD தொலைக்காட்சியை விடவும் 4 மடங்குகளுக்கு மேலான துல்லியத்தைக் கொண்டுள்ளதனால் பிரம்மாண்ட திரையிலும் தெட்டத் தெளிவாகவும், துல்லியமாகவும் பார்த்து ரசிக்க முடியும்.

## IPS 4K

எந்தவொரு கோணத்திலிருந்து பார்த்தாலும் அசல் வர்ணம் மற்றும் அசல் காட்சிகள்.

தொலைக்காட்சியை எந்தவொரு கோணத்தில் மற்றும் திசையிலிருந்து பார்த்தாலும் அசல் காட்சிகள் மற்றும் அசல் வர்ணம் தெட்டத் தெளிவாக தெரியும்.

## HDR PRO

கறுப்பு நிறத்தை இருண்டதாகவும் — வர்ணங்களை மேம்படுத்தி பிரகாசமாகவும் திரையில் காண்பிக்கின்றது.

## webOS

ஸ்மார்ட்டான, எளிமையான மற்றும் விரைவான ஸ்மார்ட் இன்டர்ஃபேஸ்

மிகச்சிறந்த கொரியன் தொழில்நுட்பம்



43" | 49" | 55" | 65" | 79" ஆகிய அளவுகளில் கிடைக்கும்

ரூ. 119,999 இலிருந்து

3 வருட உத்தரவாதம் இலவசம்!

011 5 999 000

கடனட்டைகளுக்கு வட்டி இல்லை

அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அபான்ஸ் அங்கீகாரம் கொண்ட முகவர்களிடம் பெறலாம்.

Abans

# சிறந்த விலையில், உயர்ந்த உத்தரவாதத்தில் உலகத் தரமான கணினிகளை நம்பகமான இடத்தில் வாங்குங்கள், நாளைய உலகை வெல்லுங்கள்!

acer | Lenovo | DELL | hp

**HP DUAL CORE**
HPPCL15BS519DC
- Intel Celeron
- 4GB RAM
- 500GB HDD
- Intel Graphics
- 15.6" Display
- Windows 10
- 1 Year Warranty

ரூ.59,990
விசேட விலை ரூ.49,990
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

**ACER AMD A6-A3**
ACPCLA315A613
FREE PRINTER
- A6-9220 Processor
- 4GB RAM
- 1TB HDD
- 15.6" HD Display
- Linux
- 1 Year Warranty

ரூ.69,990
விசேட விலை ரூ.59,990
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

**HP PAV 15 i7**
HPPCLP15OC141I78
- Intel Core i7 8th Gen
- 8GB RAM
- 1TB HDD
- 15.6" Display
- Windows 10
- 4GB VGA
- 1 Year Warranty

ரூ.163,990
விசேட விலை ரூ.137,990
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

**ACER QUAD CORE**
ACPCL5330C
- Celeron N3450
- Quad Core
- 4GB RAM
- 1TB HDD
- 15.6" Display
- Linux

ரூ.63,990
விசேட விலை ரூ.52,990
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

**ACER E5-576 CORE i5**
ACPCL576I52VGA2W
FREE 2 YEAR WARRANTY
- Intel Core i5 8th Gen
- 4GB RAM
- 1TB HDD
- 15.6" Display
- Linux
- 2GB VGA

ரூ.110,990
விசேட விலை ரூ.95,900
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

**IP 310 i3**
LVPCLIP310I3
FREE 3 YEAR WARRANTY
- Intel i3-7100
- 4GB RAM
- 1TB HDD
- Intel Graphics
- Full HD 15.6" Display

ரூ.79,900
விசேட விலை ரூ.69,900
மாதாந்தம் ரூ.3,500 இலிருந்து

**HP AMD A9 - 9420 - 7th Gen**
- A9-9420
- 8GB RAM
- 1TB HDD
- 2GB VGA
- Windows 10
- 1 Year Warranty

ரூ.75,000

ரூ.91,400
விசேட விலை ரூ.79,990
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

**ACER E5-575 CORE i7**
ACPCL575I7BK/GRY
FREE 3 YEAR WARRANTY
- Intel Core i7
- 7th Gen
- 8GB RAM
- 1TB HDD
- 15.6" Display
- Linux
- 2GB VGA

ரூ.139,990
விசேட விலை ரூ.119,990
வட்டியில்லா 12 மாத கொடுப்பனவு

IT HOTLINE 5886655 (MON-SAT) | Buy Abans.com | us at www.facebook.com/abansit

நாடளாவிய அபான்ஸ் எலைட் மற்றும் அபான்ஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

Abans

# இராணுவப் புலனாய்வு அதிகாரி கொலை வழக்கின் சந்தேகநபரே சுட்டுக் கொலை

கொழும்பு, மே 13
இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரியான லெப். கேணல் துவான் றிஸ்லி மீடின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான வணிகர் ஒருவரே திருகோணமலையில் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

திருகோணமலையில் கொல்லப்பட்ட தெல் குமார, 2005ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி கொழும்பு கிரிபத்கொடவில், இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியான துவான் றிஸ்லி மீடின், சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபராவார்.
மேற்படி கொலையுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்பட்ட, ஐஸ் மஞ்சுவுடன் தெல்குமார மிக நெருக்கமானவர்.
ஐஸ் மஞ்சு, விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள், வெடிபொருள்களை கொழும்புக்குக் கடத்திச் செல்வதற்கு உதவினார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார். 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் ஐஸ் மஞ்சு காணாமல் போயிருந்தார். இந்த நிலையில் அவரது நண்பரான தெல் குமார சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். (5)



## சந்தேகநபரின் ஒளிப்படத்தை வெளியிட்ட ஊடகவியலாளர் கைது

கொழும்பு, மே13
ஊடகவியலாளர் உபாலிதென்னக்கோன் கடத்தல் வழக்கின் சந்தேகநபரின் ஒளிப்படத்தை பிரசுரித்தமை தொடர்பாக, திவயினசிங்களநாளிதழின் ஊடகவியலாளர் சமன்கமகேகைதுசெய்யப்பட்டுப்பிணையில் விடுவிக்கப்பட்டார்.
மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் ரிவிர இதழின் ஆசிரியர் உபாலி தென்னக்கோன் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை அடையாளஅணிவகுப்புக்குஉட்படுத்திய ஒளிப்படம்திவயின மற்றும் இணையத்தளங்களில் வெளியானமை குறித்து விசாரிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு, கம்பகா நீதிமன்ற நீதிவானாக இருந்த கவீந்திர நாணயக்கார உத்தரவிட்டிருந்தார்.
2016ஆம்ஆண்டுசெப்ரெம்பர்9ஆம்திகதி திவயின ஊடகவியலாளர் சமன் கமகே விசாரணைக்கு முன்னிலையாகியிருந்தார். அதற்குப்பின்னர்அவர்விசாரணைகளுக்கு முன்னிலையாகவில்லை.
சமன்கமகேவிசாரணைக்குமுன்னிலையாகாத நிலையில் அதுபற்றி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.
இதையடுத்து, கடந்த வெள்ளிக்கிழமை இரவு அவரைக் கைது செய்த குற்றப் புலனாய்வுப்பிரிவினர்,கம்பகாநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நிறுத்தினர்.
அவரைப்பிணையில்செல்லஅனுமதித்த நீதிவான், ஜூன் 29ஆம் நாள் மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவிட்டார். (5)



யாழ்ப்பாணம், மே 13
ஐயனார் கோயிலடி (ஜே/97) மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்திய முதியோர் மதிப்புறுத்தல் மற்றும் மகளிர் தின விழாவில், முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் இ. ஆனோல்ட், அவரது பாரியார் திருமதி நளாயினி ஆனோல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். முதியோர் மதிப்பளிக்கப்பட்டதுடன், மகளிருக்கான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசளிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் கூடிய புள்ளியைப் பெற்ற செல்வி. த. சுரேஷ¬ம் மதிப்பளிக்கப்பட்டார்.




## அவன்ட் கார்ட் தலைவரிடம் கையூட்டு பெற்ற 300 பொலிஸ் உயர் அதிகாரிகள்

கொழும்பு, மே 13
அவன்ட்கார்ட்பாதுகாப்புச்சேவைநிறுவனத்தின் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதியிடம்300இற்கும்அதிகமானபொலிஸ்அதிகாரிகள், பணம் பெற்று வந்துள்ளனர் என்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டது.
முன்னைய ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட அவன்ட்கார்ட்நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி, தம்மிடம் பணம் பெற்ற 300 இற்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகளின்பட்டியலைக்குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கியுள்ளனர்.
குற்றப் புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட பல்வேறுபிரிவுகளைச்சேர்ந்த உயர் அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.
நிசங்க சேனாதிபதியிடம் பணம் பெற்ற பொலிஸ் அதிகாரிகள் தொடர்பாக விசாரணைகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவர்களிடம் வாக்குமூலங்கள் பெறும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

## பெண் பணியாளர்களுக்கு 84 நாள்கள் பிரசவ விடுமுறை

கொழும்பு, மே 13
பெண்பணியாளர்களுக்கானபிரசவவிடுமுறையை 84 நாள்களுக்கு நீடிப்பதற்கான இரண்டுசட்டத்திருத்தப் பிரேரணைகளை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.
தற்போதுள்ள சட்டங்களின் படி, பெண்கள் இரண்டு அல்லது அதற்குமேற்பட்டகுழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, 42 நாள்கள் விடுமுறையை மாத்திரம் பெற்றுக் கொள்ள முடியும்.
முதல் இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம், 84 நாள்கள் பிரசவ விடுமுறையைப் பெற்றுக் கொள்ளலாம்.
நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, இரண்டு திருத்தச் சட்ட பிரேரணைகளின் படி,

> *இந்த 12 வார விடுமுறையில், இரண்டு வாரங்கள் பிரசவத்துக்கு முன்னரே எடுத்துக் கொள்ளலாம்.*

உயிருடன் உள்ள ஒவ்வொரு குழந்தைக்குமாக, 84நாள்களைபிரசவவிடுமுறையாக, எடுத்துக் கொள்ளலாம்.
இந்த 12 வார விடுமுறையில், இரண்டு வாரங்கள்பிரசவத்துக்குமுன்னரேஎடுத்துக் கொள்ளலாம். பிரவசத்துக்கு முந்திய இரண்டுவாரங்களும்அவர்பணியாற்றியிருந்தால், பிரசவத்துக்குப்பிந்திய10வாரங்களுக்கு பின்னர் அந்த விடுமுறையை எடுத்துக் கொள்ளலாம்.
பிரசவத்தின் பின்னர் குழந்தை உயிருடன் இல்லாத சந்தர்ப்பத்தில், 42 நாள்கள் விடுமுறையை எடுத்துக் கொள்ளலாம்.
இந்தப் பிரசவ விடுமுறை ஊதியத்துடன் வழங்கப்படும். விடுமுறைநாள்கள் மற்றும் ஏனைய ஆண்டு விடுமுறைகளுக்கு மேலதிகமாக இது வழங்கப்படும். (5)


டபிள் நந்தி
SLS
சான்றிதழ் பெற்ற
TWO NANDHI BRAND
கூரை ஓடுகள்
சான்றிதழ் பெற்ற
உயர் தரத்தில் உருவாக்கப்பட்டது
10வருடத்திற்கும் மேற்பட்ட உத்தரவாதம்
Ransalamba Tile Factory 077 640 5622
Sandhalankava. Jaffna-077 717 4445




## நல்லிணக்க முயற்சிகளால் பயனில்லை! மகிந்த

கொழும்பு, மே 13
நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அரசு முன்னெடுக்கின்ற சில செயற்பாடுகள் பயனற்றவை என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார்.
இதனூடாக இனங்களுக்கு இடையில் மேலும் பிரிவினை ஏற்படுவதாக அவர் தெரிவித்தார். (5)




# ஒப்பற்ற பொறியியல்நுட்பத்துக்கு நிகரற்ற விலைகள்




Hyundai இன் நவீன முதல் தர வாகனமொன்றின் உரிமையாளராவது தற்போது மேலும் இலகுவாக்கப்பட்டுள்ளது. உங்கள் தேவைக்கு பொருத்தமான பல்வேறு வாகனத்தெரிவுகளிலிருந்து, உங்களுக்கு பொருத்தமானதை தெரிவு செய்யுங்கள். இதில் சிறிய EON மற்றும் Grand i10 முதல் புரட்சிகரமான Ioniq Hybrid அல்லது அதிகளவு சக்தி வாய்ந்த SUV ஆன Creta ஆகியன அடங்கியுள்ளன.

**விசேட லீசிங் கட்டணங்கள்**
உங்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு பொருத்தமான மாற்றியமைக்கப்பட்ட லீசிங் கட்டணங்களை அனுபவியுங்கள்.

**விசேட குறைந்த விலை**
குறித்த மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்கு விசேட குறைந்த விலையில் உங்கள் Hyundai வாகனத்தை கொள்வனவு செய்யுங்கள்.

**விசேட வாகன பரிமாற்றல் கட்டணங்கள்**
உங்கள் பழைய வாகனத்தை எம்மிடம் ஒப்படைத்து, புதிய வாகனத்தின் மீது விசேட லீசிங் கட்டணத்தை பெறுங்கள்.

**விநியோக வலையமைப்பு:**
கம்பஹா - கண்டி - குருநாகல் - அம்பாறை - மட்டக்களப்பு - நீர்கொழும்பு - இரத்தினபுரி - மாத்தறை - காலி
அனுராதபுரம் - யாழ்ப்பாணம் - கொழும்பு (யூனியன் பிளேஸ்)

**Hyundai லங்கா (பிரைவட்) லிமிட்டெட்,**
1035, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல, இலங்கை
மின்னஞ்சல்: hyundaiauto@hyundailanka.lk

எமது தலைமையகம் அல்லது அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்களிடம் விஜயம் செய்து பிரத்தியேகமான டெஸ்ட் டிரைவ் அனுபவத்தை பெறுங்கள்.

வாரநாட்களில் : மு.ப. 8:30 - பி.ப. 5:30
சனிக்கிழமைகளில்: மு.ப. 8:30 - பி.ப. 1:30

HYUNDAI | COMMERCIAL BANK

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**விற்பனை ஹொட்லைன்: 0715 866 866**

எம்மை பின்தொடர்வதற்கு:
www.facebook.com/HyundaiLanka
www.twitter.com/hyundai_lanka
www.instagram.com/hyundailanka

Hyundai Lanka Foundation
விற்பனையாகும் ஒவ்வொரு Hyundai வாகனத்துக்கும், Hyundai லங்கா மையத்தினூடாக, SOS சிறுவர் கிராமத்துக்கு ரூ. 10,000 நன்கொடையாக வழங்கப்படுகிறது.




Singer Fashion Academy வழங்கும்
பெறுமதிமிக்க இலவச தையல் கருத்தரங்கு



இடம் - சிங்கர் பிளஸ் காட்சியறை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
திகதி - 15 வைகாசி (செவ்வாய்)
நேரம் - காலை 9 மணி முதல்

சாறி ப்ளவுஸ் வெட்டி தைப்பது பற்றிய விவரம் தெளிவுபடுத்தப்படும்
சாறி ப்ளவுஸ் நேரம் - மாலை 3.00 முதல் 5.00 வரை

- நீடில் பெயின்டிங்
- றிப்பன் எம்பிராய்டரி
- தையல் இயந்திர எம்பிராய்டரி
- கை எம்பிராய்டரி
- பட்ச் வார்க்
- இத்துடன் மேலும் பல

இந் நாளில் இப் பாடநெறிகளை பதிவு செய்யும் ஒவ்வொருவருக்கும் தள்ளுபடிகள் உண்டு
(பதிவு செய்யும் மாதத்திற்கு மட்டுமே இக்கழிவு செல்லுபடியாகும்)

DISCOUNT 10% கழிவு

VISIT US : SINGER Plus, Hospital Road, Jaffna
தொடர்பு கொள்ள : 077 929 5904 021 221 3620





CAMBRIDGE INTERNATIONAL SCHOOL

அனுமதிகள் நடைபெறுகின்றன
உயர்தரம்
மாணவிகள் மாத்திரம்

CIS ஆனது கற்றலுக்குப் பொருத்தமான ஒரு இனிமையான சூழலில் மிக உயர்தரம் மிக்க கல்வியை வழங்குகின்றது. மேலும் குழந்தைகளுக்கான தகவல் பரிமாற்றம், சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் பகுத்தறிவுத் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதில் நாம் அதிக கவனம் செலுத்துகின்றோம்.

உள்ளடகப்பட்ட விடயங்கள்

வர்த்தகப் பிரிவு
- கணக்கியல் - பொருளாதாரம் - வணிகக் கல்வி

கணிதப் பிரிவு
- இரசாயனவியல் - இயற்பியல் - இணைந்த கணிதம்

கட்டாய கல்வி
- பொது அறிவு - பொது ஆங்கிலம் - பொது தகவல் தொழில்நுட்பம்

கல்வி வலிமை
- தொடர் கற்றல் மற்றும் மதிப்பீட்டு நுட்பங்கள்.
- மிகவும் அனுபவம் வாய்ந்த மற்றும் தகுதியான ஆசிரியர்கள்.
- முழுமையான உபகரணங்கள் பொருத்தப்பட்ட விஞ்ஞான மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள்.
- கடுமையான ஒழுக்கம்.

தங்குமிட வசதிகள் உண்டு

விடுதி வசதிகள்
- உயர்தர பாதுகாப்பு.
- பெண் அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பள்ளி மேலாண்மை நிர்வாகிக்கப்படுகிறது.
- அனைத்து வசதிகளையும் கொண்ட வசதியான தங்குமிட அறைகள்.
- பள்ளி வளாகத்திலிருந்து 200 மீட்டர் தூரத்திற்குள்.

மேலதிக தகவல்கள்
TEL : 011 2423162 / 011 4618705
ADDRESS : 148 ALUTHMAWATHA RD, COLOMBO 15



இப்போது விற்பனையில்...

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்
புதுவிதி PUTHU VITHI







மற்றும் பல்சுவை அம்சங்களுடன் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது...

தொடர்புகளுக்கு
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111




## உதயங்கவின் மனு தள்ளுபடி

கொழும்பு, மே13 ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவைக் கைது செய்யப் பிடியாணை பிறப்பித்தமை அவரது வங்கிக் கணக்குகளை முடக்கியமை தொடர்பிலான நீதிமன்ற உத்தரவுகள் ஊடாகத் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உதயங்க வீரதுங்கவால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான சிசிர டி ஆப்ரூ, நளின் பெரேரா மற்றும் புவனேக அலுவிஹார ஆகிய மூவர் கொண்ட நீதியரசர்கள் குழு இந்த மனுவை தள்ளுபடி செய்தது.

உதயங்க வீரதுங்க சார்பாக அவரது உறவினர் ஒருவர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள சட்டரீதியிலான அடிப்படை ஒன்று இல்லை என்று சுட்டிக்காட்டி மனு நீதியரசர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது. (5)

## பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

Educational Technologies Pvt Ltd
இலங்கையில் தனது 21 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

(Jaffna Branch)

- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

G.C.E.A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.

After Training Rs.60,000

→ Over seas travel
→ Vehicle Allowance

Training Period Rs. 30, 000

ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.



G.Anthany- Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100,2nd Floor,Manipay Road.Jaffna.

## OPPORTUNITY TO JOIN AS ASSIGNMENT BASIS EXTERNAL CONSULTANTS - NORTHERN & EASTERN PROVINCES

ISB

### INDUSTRIAL SERVICES BUREAU (ISB) NORTH WESTERN PROVINCE

Industrial Services Bureau (ISB, web :www.isb.lk) was established as a Statutory Body under the North Western (Wayamba) Provincial Council with the objective of accelerating the industrial development of the Province. ISB has diversified its activities and now functionally as an autonomous industrial and business services delivery institution, based in Kurunegala, operating island wide and internationally. ISB now provides Consultancies on Agriculture & Dairy Development Projects, Business Planning Services, Project Management & Consultancies for NGOs and Development Corporations (Field Surveys, Project Evaluation, Training, Enterprise Development and Mentoring) and Engineering related services.

We are seeking for Engineers & Technical Officers from Irrigation, Agricultural Engineering, Electrical & Mechanical and other disciplines, Experts in Agriculture, Dairy& Animal Husbandry, Business & Entrepreneurship Development, Project Management Specialists of NGO and Donor Funded Projects, Gender Specialists, Lawyers & Legal Specialists, Sociologists, Economists, Finance & Business Analysts,Area Coordinators,Field Coordinators and Data Collection Enumerators for our future projects in Northern and Eastern Provinces.

Interested experts from above disciplines who are willing to work in Jaffna, Kilinochchi, Mullaitheevu, Vavuniya, Mannar, Trincomalee, Batticoloa and Ampara Districts can apply.

Applications giving full details of educational qualifications and experience supported by copies of certificates, contact telephone number together with names and addresses of two non-related referees should be forwarded to the following address either by e mail or regular post within 10 days of this advertisement. We encourage to apply as early as possible. The applicants will be considered first-come first-serve basis.

Canvassing in any form will be a disqualification.

**Executive Director**
**Industrial Services Bureau, 141, Kandy Road, Kurunegala**
**Tel : 037-2223721-3, Fax : 037-2223562, E-mail : info@isb.lk**

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

தடுப்பூசி ஏற்றப்பட்ட " டாஷோன் " நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
ஒரு நாய்க்குட்டி 7000 ரூபா
தொடர்பு - 077 297 6255

### வேலைக்கு ஆள்கள் தேவை

நேரில் வரவும்
யோகு றேடிங்கோ (CS 16504)(04.17)
310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியில் உள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு. (7 அறைகளுடன் பெரிய வீடு)
077 187 7754 (CS/15715)(11.17)

### கடை வாடகைக்குண்டு

பலாலி வீதி,
உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோயில் அருகில் கடை வாடகைக்குண்டு. (CS 16327)(03.17)
077 415 7062

### கார் விற்பனைக்கு

K.T - XXXX இலக்கமுடைய
மாருதி சுசுக்கி
LXI - ALTO கார் விற்பனைக்குண்டு
077 610 3558

### அறை வாடகைக்கு

வவுனியா நகரில் அமைதியான சூழலில் இணைந்த குளியலறையுடனான அறை வாடகைக்கு உண்டு.
(பெண்கள் மட்டும்)
024 205 0585/ 077 969 0610

### திருமண சேவை

ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் மற்றும் கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியாவில் உள்ள மணமகன் மணமகளுக்கு இலங்கையிலுள்ள படித்த மணமகன் மணமகளுக்கு எல்லா இனத்தவர்களுக்கும் பார்த்துக்கொடுக்கப்படும்.
077 882 8689
076 725 0144 (வைபர் மட்டும்)

### மணமகன் தேவை

யாழ். கிறிஸ்தவம் (றோ.க) 1986 இல் பிறந்த உத்தரட்டாதி 2 ஆம் பாதம். B.Sc பட்டதாரி மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு - 076 395 3101

### நாவற்குழியில் காணி விற்பனைக்கு

25 பரப்புக் காணி, வீடுகள், பண்ணைகள், தொழிற்சாலை, தென்னந்தோப்பு அமைக்கக் கூடிய, நன்னீர் உள்ள வளமான காணி விற்பனைக்கு உண்டு. நேரடியாகத் தொடர்புகொள்ளவும்
077 347 2022
மின்னஞ்சல்
bksivasubramaniam@gmail.com

### தவறிவிட்டது

உரும்பிராய் வடக்கில் வசிக்கும் தம்பிப்பிள்ளை சத்தியசீலன் ஆகிய எனது அடையாளஅட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், இன்சூரன்ஸ் ஆகியவை உரும்பிராய்க்கும் மருதனார் மடத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழுள்ள தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
021 224 1798, 075 853 9986

### விற்பனை

Lanka Ashok LeLand லொறி (LJ-XXXX)Cargo Single Gap விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். (C/16538)(11.17)
077 045 2528, 077 946 7501

### Guilloting Knife Sharpening Service

(புதிய தொழில்நுட்பத்துக்க அமைவானது)
Steel Blades ( Standard) - தரமான கூர்மை
Hi - Speed Steel Blades (H.S)- துரித கதியில் கூர்மை
Tungsten Carbide tipped (TCT) Blades - பலதரங்களில் கூர்மைக்கு
நாடுங்கள்....
Royal 20 (pvt) Ltd,
No.870, K.K.S.Road, Jaffna.
076 862 7327, 021 492 7499

### மணமகள் தேவை

23.10.1985 இல் பிறந்த, கும்பராசி, சதயம் நட்சத்திரம் கொண்ட, MBBS.MD டொக்டருக்கு யாழ் இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு மணமகள் தேவை. உயரம் 5'7" கிரகபாகம் 15½, பட்டதாரிகள், MBBS டொக்டர், BBS பல் வைத்தியர், எஞ்சினியர், எக்கவுண்டன்ட் விரும்பத்தக்கது
075 036 6366/ 076 973 7588

### வாடகை

அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து வல்லை றோட்டில் 100m தூரத்தில் அமைந்துள்ள 2000 சதுர அடி விஸ்தீரணமுள்ள நான்கு கடைகள் (குறுக்கு சுவர் கட்டாத) நீண்டகால வாடகைக்கு விடப்படும். அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு ஏற்றதாகும் வாகனத்தரிப்பிட வசதிகளுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது. (CS 16520)(04.17)
00393384750291/
076 859 8572/ 077 773 3532

### பதவி வெற்றிடம்

மரக்கறி வகைகள் மற்றும் பூங்கன்று விதை வகைகளை விநியோகம் செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள எமது நிறுவனத்தில் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- விற்பனை விருத்தி நிறைவேற்று அதிகாரி ( Sales Promotion Executive) க.பொ.த.உயர்தர (கமத்தொழில்) பெறுபேறு.
- சந்தைப்படுத்தல் அபிவிருத்தி நிறைவேற்று அதிகாரி

- வட, வடமத்திய, ஊவா மாகாணங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- உந்துருளி அனுமதிப்பத்திரம் உடையவராயிருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் படிகள்.
- வாரத்தில் ஐந்துநாள்கள் மட்டுமே வேலை.

சுப்பிரீம் மார்கெட்டிங் நிறுவனம்
163/2, ஹில் வீதி, தெஹிவளை.
Supreme Marketing Company
No.163/2, Hill Road, Dehiwala.
0112 731 924/ 0112 732 241 / 052 222 3254

## செலிங்கோ லை.:ப் இடமிருந்து



30 நாட்களுக்குள் 30 வருடங்களுக்கான ஆறுதல்


உங்கள் ஓய்வு கால வாழ்க்கையை நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் கழித்திட, 30 நாட்களில் 30 வருடங்களுக்கரன திட்டமொன்றை செலிங்கோ லை.:ப் ஓய்வுகால திட்டம் மூலம் வடிவமைத்துக்கொள்ளுங்கள்.

செலிங்கோ லை.:ப் ஓய்வு கால திட்டத்தை கொள்வனவு செய்யும் காப்புறுதிதாரர்களுக்கு வெளிநாட்டு சுற்றுலாக்கள், நட்சத்திர ஹோட்டலில் தங்கும் வசதிகள் மற்றும் சொகுசு கப்பல் சுற்றுலா ஆகிய நலன்களை அனுபவிப்பதற்கான வாய்ப்பை வெல்ல முடியும். இத்திட்டத்தைப் பெற்று 1ம் வருடத்திலேயே அதற்குரிய பணப்பெறுமதியை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஓய்வுக்கால திட்டம் இதுவாகும்.
நீங்களும் இன்றே செலிங்கோ லை.:ப் ஓய்வு கால திட்டத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.
அழையுங்கள் 0112 461 461 அல்லது பிரவேசியுங்கள் www.ceylincolife.com.

தொடர்ச்சியாக 12 வருடங்களாக மக்கள் அபிமானம் பெற்ற காப்புறுதி நிறுவனம்.
செலிங்கோ லை.:ப் காப்புறுதி நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. (PB5183)

CEYLINCO LIFE®
வாழ்க்கைக்கான நிரந்தர உறவு™

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 25 . 03 . 1945

இறப்பு 12 . 05 . 2018

### தர்மலிங்கம் பாலசிங்கம்

புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் பாலசிங்கம் நேற்று (12.05.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் புதல்வனும், தர்மலக்ஷ்மியின் அன்புக் கணவரும், மோகன், காலஞ்சென்ற சிவரூபன் மற்றும் பிரதீபா, டனிஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபத்திரா, நகுந்தினி, சிபாஸ்கரகுகமூர்த்தி (சுபாஸ்), சோதிநாதன் (அமுதன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், விஷாலாட்சி, பொன்னுத்துரை, ஏகாம்பரம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், ராஜேஸ்வரி, பராசக்தி, கனகம்மா, காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ராசலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனரும், உதயகுமாரின் தாய்மாமனாரும், லக்சனா, மனோபிரியன், மனோஜிகா, மனோஜினி, சுஜீபன், பிரசன்னா, சுடரினி, காலஞ்சென்ற மழவழகன் மற்றும் கண்ணாளன், மழவழகி, கோபிஷாயினி, அன்பினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2018) ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒருமணியளவில் புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/16550) (11,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



மண்ணில் 13 . 09 . 1937

விண்ணில் 11 . 05 . 2018

### திருமதி மகேஸ்வரி பஞ்சரத்தினம்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி பஞ்சரத்தினம் 11.05.2018 வெள்ளிக்கிழமை இரவு இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னம் தம்பதிகளின் அன்பு மக்ளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பஞ்சரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் விமலராணி, துரைவீரசிங்கம் (கரந்தன்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நவரத்தினம், கண்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மோகனராசா(மோகன்), சிறீநாதன்(கனடா), பத்பநாதன்(வவா, லண்டன்), ரகுநாதன்(கனடா), சாந்தினிதேவி (கோண்டாவில்) காலஞ்சென்ற வாசினி(பாமினி) மற்றும் சுபாசினி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் திலகவதி, வனிதா, மஞ்சுளா, சுமதி, செந்தில்நாதன், ஜீவராஜா, மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்தூரி - ரமிதன், திவ்யா - திஷோபன், பூஜா, சனோஜன் - அனீஷா, சொபின் - இந்துசன் - கிரிஷாந், றொபிஷன் - நிருஷிகா, பபிசன் - சாருகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் திலக்சி கிஷோபன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2018) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.86 ஞானவைரவர் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.**

(CS 16518) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 379 2238**



பிறப்பு 20 . 11 . 1934

இறப்பு 11 . 05 . 2018

### காசிப்பிள்ளை பொன்னுத்துரை

நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை பொன்னுத்துரை 11.05.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இரட்சணியதேவியின் அன்புக் கணவரும் ஜனார்த்தனன் (ஜனா), ஜெகதீசன் (ஜெகா), பகீரதி, சியாமளா(ராஜி), மஞ்சுளா(மஞ்சு), சிறிராகவன்(சிறி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**218/8, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 16554) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 427 2220 / 076 523 9123**



பிறப்பு 16 . 07 . 1933

இறப்பு 10 . 05 . 2018

### திருமதி செல்வமலர் மகாதேவன்

யாழ்ப்பாணம் காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், காரைநகர் கோவளம் மற்றும் கனடாவினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வமலர் மகாதேவன் 10.05.2018 வியாழக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மகாதேவனின் (ஓய்வுபெற்ற கணக்காளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற Dr. நவமலர் (இளைப்பாறிய யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர்), அவர்களின் அன்புச் சகோதரியும், குகராஜன் (கனடா), யோகராஜன் (கனடா), மகாலட்சுமி (ஆஸ்திரேலியா), புஸ்பராணி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும், பிரசாந்தி, தில்லைராணி, செல்வராஜா, ஸ்ரீ முத்துக்குமரன் ஆகியோரின் அன்புமாமியும், ஆரணி, பிரவீன், செந்தூரா, மதுரா, ஜெயேந்திரா, கோகுல், ராகுல், விதுரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கமலாம்பிகை மற்றும் கதிரவேலு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2018) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் (St John's Dixie Cemetery & Crematourium) இடம்பெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 16561)(13,17)

**குகராஜன்** (கனடா -001 647 388 7065)
**யோகராஜன்** (கனடா - 001 647 282 7353
001 905 794 4364)

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 801

சீட்டிழுப்பு திகதி 2018.05.10 வியாழக்கிழமை

F 07 14 20 68

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 63,021,640/-

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

நீல நிற டிக்கட்டுகள் 2018.05.12ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## VACANCY - TECHNICIAN WANTED

A Technician is wanted with the following requirements.

# Electrical Knowledge and Technical Backround
# Suitable qualifications
# Age below 50
# Should be able to work long hours if required.

Send your CV to *hr@thethinnai.com* or Via post. (IN/6733)(11,17)

**The Thinnai Hotel**
**86, Palaly Road, Thirunelvely, Jaffna. 021 203 0400**

## பிரிண்டர் REPAIR

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சியில் VASANTH Technology System அனைத்து வகையான பிரிண்டர்கள், மடிக்கணினிகள் திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் Net Working Solution மற்றும் CCTV CAMERA செய்து தரப்படும். (00332) (04,17)

**VASANTH TECHNOLOGY SYSTEM**
அண்ணா வீதி, தோணிக்கல், வவுனியா.
**077 977 6283 / 077 351 5283**
Email: vasanthtec@gmail.com Facebook: www.facebook.com/vasanthtec

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் வயது 30 நட்சத்திரம் அச்சுவினி பதவி பொறியியலா-ளர், சிங்கப்பூர் மேற்படி வரனுக்கு படித்த நற்பண்புள்ள வாழ்க்கைத் துணையை பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர். (CS 16482) (14,17)

**076 747 6112**



YOUR GUIDE TO CANADIAN PRE-UNIVERSITY

STUDY IN **Canada** WITH O/L
NO NEED IELTS
NO INTERVIEW

SCHOOL OF ENGLISH

**canada** செல்லவுள்ள மாணவர்களுக்கு **IELTS** இல்லாமலே **ENGLISH** ( 9 **month** ) பாடத்துடன் செல்வதற்கான வாய்ப்பு உடன் தொடர்பு கொள்ளவும். ( **1 year-visa (only O/L)**

**WITH IELTS**
MBBS-B.Eng-BSC
BD-BBA-BSc Qs
Civil-MP-BA-BCA
MT-MA-Msc

**CITY AIR TRAVELS**
NO : 276 ,BASELINE ROAD , DEMATAGODA , COLOMBO-09.
Tel : 0114 282 747 - 077 161 50 10
Dematagoda Signal Junction (100m)
Next To HNB Bank
Opposite Food City And The Petrol Shed

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes Best Wishes

**பயஸ் ஆனந்தகுமார் ஜூலியன்**

அவர்கள் யாழ் மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி **திரு. இளஞ்செழியன்** அவர்கள் முன்னிலையில் ***அகில இலங்கை சமாதான நீதிவானாக*** சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு பாராட்டி வாழ்த்துகிறோம். (CS 16519)(14,17)

Congratulations

**819, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.**

**சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

### ஆடு விற்பனைக்கு

ஒரு ஆட்டுக்கிடாயும், மறி ஆடு முதல் ஈன்ற 2 மாத கிடாய்க்குட்டியுடன் விற்பனைக்குண்டு. (CS/16575) (11,17)

**வேலணை - 077 613 8964**

### வீடு விற்பனைக்கு

பெரியவிளான் மெயின் றோட்டில் 3 அறைகள் கொண்ட வீடு 5 பரப்பு தோட்டக்காணியுடன் விற்பனைக்குண்டு.

**077 461 0783** (IN/9247) (11,17)

### தேவை

யாழ்.நகரில் அல்லது அண்டிய பகுதியில் வீடு முழுமையாகவோ/ பகுதியாகவோ வாடகைக்குத் தேவை.

**077 249 7292** (ACO/232) (11,17)

### விற்பனைக்கு

நகை கடை சோகேஸ் கவுண்டர் நல்ல நிலையில் யாழ்.நகரில் விற்பனைக்குண்டு. (CS/16579) (11,17)

**077 613 8964**

### நாய்கள் விற்பனைக்கு

டோர்மன் (Doberman),கிரேட்டேன் (Great Dane) ஆண் நாய்கள் விற்பனைக்குண்டு. (CS 16523) (14,17)

**077 558 6620/075 968 1973**

### சுவீட் மேக்கர் தேவை

தொதல், மஸ்கட், பால்கோவா போன்ற இனிப்பு பண்டங்கள் போடத் தெரிந்தவர்கள் தேவை. (CS 16560) (14,17)

**077 648 7264**

### வாடகைக்குண்டு

பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் அனெக்ஸ் (2 அறைகள்) வாடகைக்குண்டு.

**077 570 1963**

### விற்பனைக்கு

சுப்பர்கப் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. (CS/16495)(11,17)

**077 570 1963**

### காணி தேவை

இராஜவீதி, கோப்பாய், ஞானபாஸ்கரர் வீதி, கல்வியங்காடு மற்றும் பருத்தித்துறை வீதி, கோப்பாய் போன்ற இடங்களில் காணி தேவை. தரகர்கள் தேவையில்லை (CS 16567) (14,17)

**076 388 5812**

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1978, கிரகபாவம் 23, பூராட நட்சத்திரம், சொந்தமாக கடை நடத்தும் மணமகனுக்கு மணமகள் தேவை. (CS 16502) (14,17)

**077 383 4296**

### பணிப்பெண் தேவை

கொழும்பு, வெள்ளவத்தையில் தங்கி யிருந்து வீட்டுப்பணி செய்வதற்குப் பணிப்பெண் ஒருவர் தேவை. உணவும், கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும். (CS/16417)(11,17)

**077 321 9673, 077 528 6959**

### வாடகைக்குண்டு

யாழ்.பலாலி பிரதான வீதியில் (இலுப்பையடிச் சந்திக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையில்) வீட்டின் முன்பகுதி இரண்டு அறை, விறாந்தை அடங்கலாக வாடகைக்குண்டு. வணிகத் தேவைக்கு அல்லது மாணவர்கள் தொடர்பு கொள்ளவும். (CS/16558)(11,17)

**077 942 5822**

### வீடு உடனடி வாடகைக்கு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு (கந்தரோடை) அருகில் சகல வசதிகளுமுள்ள (இணைந்த குளியலறை, கழிவறை) கொண்ட வீடும் பயன்தரு மரங்களும் உள்ள வீடு வாடகைக்குண்டு. (CS/16563)(11,17)

**077 411 3309**

### வீடு வாடகைக்கு

புதிய அத்தியடி வீதியில் **4Rooms, 3Halls** மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு (CS 16521)(14,17)

**077 803 8226**

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ, 1988 சுவாதி நட்சத்திரம் கிரகபாவம் - 6, செவ்வாய் தோஷம் அற்ற (10 இல் செவ்வாய்) கொழும்பில் கணக்காளராக தொழில் புரியும் 6அடி உயரம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. (IN 6730)(14,17)

**077 764 0155**

### தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல உணவகத்திற்கு பெண் காசாளர், பில் போடுபவர்கள் தேவை. {பெண்கள் மட்டும்}

தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடம் வழங்கப்படும்.

அடிப்படைச் சம்பளம் 25000/= மற்றும் கொடுப்பனவுகள்

**தொடர்பு : 077-6844016**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## செய்து கொடுக்கப்படும்

பரம்பரை விஸ்வகர்மாக்களால் சிற்ப ஆகம சாஸ்த்திரப்படி உற்ஸவ மூர்த்திகளான பஞ்சமுக விநாயகர், ஆறுமுகசாமி, முறையான தியானப்படியும், சிலா விக்கிரகங்கள், துவாஜஸ் ஸதம்பம், கோபுரக் கலசங்கள் (வரகரிசு + தடியுடன்) தேர், யாகசாலை அலங்காரப் பொருள்கள், நவீன வேலைப்பாடுடைய குடைகள், பிரதிஸ்டாயந்திரங்கள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும்.

**குறிப்பு :- காற்புரவாய் அளவின்படி அனைத்து விக்கிரகங்களும் காசியப்ப சிற்ப சாஸ்த்திரப்படி அமையும்.**

**விஸ்வகர்மா சிற்பக் கூடம்**
208 P- 1/1, செட்டியார் தெரு, கொழும்பு 11,
**077 900 6584**
vkscentre @gmail.com
CS/16559)(11,17)

**விற்பனை ஒருங்கிணைப்பாளர் / விற்பனை பிரதிநிதி**

## வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்

**சிறந்த உற்பத்தி விநியோகக் கம்பனியுடனான FMCG இன் விற்பனைக் குழுவில் இணைவதற்கு தகுதி வாய்ந்த வேலையாள்கள் தேவை.**

**தகுதிகள்**

1. 35 வயதிற்குட்பட்டவர்கள்
2. நுகர்வுப்பொருள் விற்பனையில் குறைந்தது 3 வருட அனுபவம்
3. தகுதிவாய்ந்த வாகன அனுமதிப்பத்திரம்
4. சந்தைப்படுத்தல துறையில் ஏனைய ஏற்றுக்கொள்ளத் தக்க தகுதிகள்
5. வாடிக்கையாளர் நுகர்வு தொடர்பாக தொடர்ச்சியான சுற்றுப்பயணம் மேற்கொள்ளத் தயாராக இருத்தல்.

**ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.**

**077 359 8440**

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



**01. ஆண்/பெண் வசியம்**
**02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்யமுடியும்.**
**03. வியாபார முன்னேற்றம்.**
**04. வீட்டில் ஒற்றுமை உண்டாக**
**05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?**

ரகசியம் பேணப்படும்

**ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!**

Note: **(உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் பதிவு தபால் மூலம் செய்து கொள்ளலாம்)**

**றெங்கசாமி காளியம்மா**
**மாத்தளை - கண்டி வீதி, அம்பத்தன்ன.**
**077 327 2302/ 076 466 4153** (CS16480)(10)


## நுரையீரல் பாதிப்பிலிருந்து விடுபடுங்கள்

இருமல், இழுப்பு நோய், மார்பு இறுக்கம், சுவாசக்குறைபாடு ஆகியன சுவாசத்தொகுதியின் செயற்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும்.

நாட்பட்ட மூச்சுக்குழல் அழற்சி, இழுப்பு நோய், சயரோகம், நிமோனியா, நுரையீரல் புற்றுநோய் என்பன சுவாசம் இழப்பு தொடர்பான நோய்களுக்கு வழிவகுக்கும்.

எமது உன்னதமான ஆயுர்வேத மருந்தானது சுவாசப்பாதையின் சளியை அகற்றுவதன் மூலம் சுவாசத்தை இலகுபடுத்தும். வைரஸ் மற்றும் பக்டீரியா தொற்று நோய்களிலிருந்து குணப்படுத்துவதும் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

**Hotline: 0777555600**
**0777708310**
**0777708330**



**FAIR PHARMA (PVT) LTD**

செலிங்கோ ஹவுஸ்,10வது மாடி கிழக்கு,இல:69,ஜனாதிபதி மாவத்தை,கொழும்பு - 01.

**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**
Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

**ஆசிரியர் தேவை**

Year 9. Year 10 மாணவர்களுக்கு ICT and Science (English Medium) கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.

**077 852 0472** (CS 16494) (14.17)

**வேலையாள் தேவை**

வெல்டிங் வேலை தெரிந்த அனுபவம் உள்ள ஆண் தேவை.

**077 491 1993** (CS/16580) (11.17)

**வான் விற்பனைக்கு**

டொயோட்டா (Noah CR 40 G ஒரிஜினல்) 2001 மொடல் 2002 பதிவு செய்யப்பட்டது. ஜப்பான் ஒரிஜினல் வேன். Non-Essamble in Sri Lanka புல் ஒப்சன் ஓட்டோ 3C Turbo Inter cooler EFI Engine 4 Door பொடி கிட் Spoiler Originel noah two tone interial excellent engine நல்ல பொடி கண்டிசன் TV DVD R/Camera 159,000 km

தொடர்பு : **0777 854 009** (IN 9246) (10)

**வீடு வாடகைக்கு**

இல.70/20 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள மூன்று அறையும், 2கோலும், கார் விடக்கூடிய இடவசதியும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

**077 918 4391/076 485 1257** (CS 16582) (04.17)

**வீடு விற்பனைக்கு**

உரும்பிராயில் நான்கு பரப்புக் காணியில் மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமை 10 am பின் தொடர்பு கொள்ளவும்

**071 321 8883** (AC0233) (11.17)

**வீடு வாடகைக்கு விடப்படும்**

இல.383/148, கோயில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள மாடி வீடு முழுமையாகவோ, பகுதியாகவோ வாடகைக்கு விடப்படும்.

**077 350 1812** (CS/16581) (11.17)


## நீங்கா நினைவில்....

## 21 மாதங்கள் முதலாம் ஆண்டு





**வயிரமுத்து சிவலிங்கம்**
(ஓய்வுநிலை ஆசிரியர்)
பிறப்பு 12.05.1939 இறப்பு 10.08.2016
திதி: அட்டமி

**சிவலிங்கம் கனகமணி**
பிறப்பு 23.11.1950 இறப்பு 24.05.2017
திதி: திரயோதசி

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குல விளக்குகளாய் திகழ்ந்து எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
எம் உயிர்த் தெய்வங்களே!
விண்ணுலகம் சென்று எத்தனை ஆண்டுகளானாலும்
உங்கள் பிரிவுத்துயர் எங்கள் நெஞ்சை விட்டகலாது

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**குப்பிளான் தெற்கு, ஏழாலை.**

(cs.16555) (13.17)

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 20 . 11 . 1934

விண்ணில் 11 . 05 . 2018

### அமரர் காசிப்பிள்ளை பொன்னுத்துரை



எங்கள் அப்பாவின் அப்பா!
எங்கள் அம்மாவின் அப்பா!
எங்களின் அன்புத் தாத்தா ! இன்று
எங்களை விட்டு எங்கு சென்றீர்கள்

உங்கள் பேரப்பிள்ளைகள் நாம்!
தொலைவில் இருந்தும் தொலைபேசியில்
தாத்தாவின் கதைகளை இனியொருபோதும்
கேட்கமுடியாமல் போகுமோ!

பேரப்பிள்ளைகள் நாமின்று
உங்கள் பிரிவால் பேதலித்து நிற்கின்றோம்
நடப்பது அறியாமல் நலிவிழந்து நிற்கின்றோம்
எம் பிரிவுத் துயரில் பிணைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி
ஆண்டவனை அடிபணிந்து நிற்கின்றோம்

**உங்கள் அன்பு பேரப்பிள்ளைகள்**

(CS 16586) (10)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீ ரஞ்ஜினி செல்வராஜா

**(நீதிமன்ற வீதி, மல்லாகம்)**

**(இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்)**

திதி : திருதியை - 17.05.2018

தோற்றம் - 13.10.1948 மறைவு - 11.06.2013

ஆண்டுகள் ஐந்து ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்
ஐந்து ஆண்டுகள் என்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம் மனதை விட்டு நீங்காது

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் சகோதரர்கள்.

(IN 9213) (14.17)


**புதிய பௌதீகவியல் / இணைந்த கணிதம்**

பிரபல கல்லூரிகளில் மிகச் சிறப்பாக கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியரினால் தனிப்பட்ட முறையில் மேற்படி பாடங்கள் 2019,2020 A/L கற்பிக்கப்படுகிறது. - **077 242 3400, 077 887 1217**


## மரண அறிவித்தல்

### திருமதி எஸ்தர் ஜேக்கப்



சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி எஸ்தர் ஜேக்கப் 09.05.2018 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இயன்ஜேக்கப் இன் அன்பு மனைவியும் மேர்சி சாமுவேல் (இங்கிலாந்து), பாஸ்டர் ராஜன் ஜேக்கப் (இலங்கை பெந்தகொஸ்தே சபை), பாஸ்டர் அல்பிரட் ஜேக்கப் (The Eternal Church), பாஸ்டர் செல்வராஜ் ஜேக்கப் (இலங்கை பெந்தகொஸ்தே சபை), சோதி தர்மலிங்கம் (ஆஸ்திரேலியா), ரஞ்சி சிவகுமார்(ஆஸ்திரேலியா), ஜெகன் ஜேக்கப் (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), ஜெனிபர் கிறிஸ்தோபர் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பீற்றர் சாமுவேல், சத்தியா தர்மலிங்கம், சிவகுமார் கிருஸ்ணபிள்ளை, கிறிஸ்தோபர் அருள்ராஜ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜோனத்தான் சாமுவேல், ஜோயல் சாமுவேல், எஸ்றி சாமுவேல், விமல் சிவகுமார், சர்மிளா தர்மலிங்கம், சுரேஸ்தர்மலிங்கம், ஜப்ரீன் ஜேக்கப், ஜெஸ்ஸியா கிறிஸ்தோபர், ஜொனா கிறிஸ்தோபர், அஸிரா கிறிஸ்தோபர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (14.05.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல.111 கண்டி வீதியில் உள்ள இலங்கை பெந்தெக்கொஸ்தே சபையில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பீற்றர் சாமுவேல்(U.K)**


# மருத்துவர்களின் போராட்டமும் மாகாணசபையும்...

கட்டுரை

லோ. சோயாள்

வடக்குமாகாணத்தில்உள்ளவைத்தியசாலைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் நாளைய தினம் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர். ஜனவரி மாதத்தில் இருந்து அவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட மேலதிக நேரத்துக்கான கொடுப்பனவை இன்னும் வழங்கவில்லை. அதை உடனடியாக வழங்கவேண்டும் எனக் கோரிக்கையை முன்வைத்தே மருத்துவர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இருப்பினும் குறித்த மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குவதில் உள்ள நிதிப்பிரமாணங்கள் தொடர்பில் வடக்கு மாகாண மருத்துவர்கள் வேலைநிறுத்தம்செய்வதற்குமுன்புஅறிந்துகொள்ளவேண்டும் என மாகாண அதிகாரிகள் கருத்துக்கள் சிலவற்றை முன்வைக்கின்றனர்.



**நடப்பாண்டு நிதியளவு...**

மாகாணசபையின்சகலதரஉத்தியோகத்தர்களுக்கும் வழங்குவதற்குத் தேவையான சம்பளம், மேலதிக நேரக்கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகள் உட்பட அனைத்துக் கொடுப்பனவுகளுக்குமான நிதி மாகாண சபையால் கணிப்பீடு செய்யப்பட்டு நிதி ஆணைக்குழுவின் சிபார்சுடன் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படுவதனூடாகவே வருடாந்த வரவு செலவுத் திட்டதின் மூலம் மாகாணசபைக்குரியநிதிஒதுக்கப்படுவதுவழமை. வடக்கு மாகாணத்தில் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உட்பட 130வைத்தியசாலைகள் உள்ளன. இதில் 129 வைத்தியசாலைகள் நேரடியாகவே வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஆளுகைக்கு உட்பட்டவை. குறித்த 129வைத்தியசாலைகளிலும்89வைத்தியநிபுணர்களும் 579வைத்தியர்களும் பணியாற்றுகின்றனர். குறித்த வைத்தியர்களுக்கான 2018ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுக்காகப் பொதுத் திறைசேரியால் 975.6 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், நடப்பாண்டில் ஏப்ரல் மாதம் வரையில் 405மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. மீதித் தொகை மருத்துவத் துறைப்பணியாளர்கள்அனைவருக்குமுரித்தான இந்த வருடம் முழுவதுமான கொடுப்பனவுக்காக் கைவசமிருக்கிறது. இந்த நிலையில் சுகாதார அமைச்சால் கடந்த பெப்ரவரி மாதமளவில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம்; மருத்துவர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு வீதம் மருத்துவர்களின் வகுதிக்கேற்ப அதிகரிக்கப்பட்டுள்ளது. குறித்த அதிகரிப்புமூலம்வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்குவதற்குமுன்னர்ஒதுக்கப்பட்ட975.6மில்லியனுடன் மேலதிகமாக 283.5மில்லியன்ரூபா தேவைப்படுகின்றது. குறித்த பணத்தைபெறுவதற்கான நடவடிக்கைகள்எடுக்கப்பட்டு,பொதுத்திறைசேரிக்குவிண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மாகாணத் திறைசேரி கூறுகின்றது. அது கிடைக்கும் வரையில் மருத்துவர்களின் சம்பளமோஅல்லதுஅனுமதிக்கப்பட்டஅளவிலான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் தொடர்ந்தும் வழங்கப்படுவதோடு திறைசேரியிடம் கோரப்பட்டுள்ள பணம் கிடைத்தவுடன் முழுவதுமாக அவை வழங்கப்படும். இந்த நிலையில் இல்லாத ஒன்றுக்காகப் போராட்டம் நடத்துவது எவ்விதத்திலும் நியாயமானது அல்ல என்கின்றனர் அவர்கள்.



**பொருத்தமானதல்ல போராட்டம்!**

மருத்துவ பீடத்தில் இருந்து வெளியேறிப் பயிற்சியை நிறைவு செய்து 3 ஆண்டுகால அனுபம் கொண்டிருப்பாராயின் ஒரு மருத்துவர் மாதாந்தம் 80 ஆயிரம் ரூபா சம்பளத்தைப்பெற முடியும். அதற்கு மேலதிகமாக மேலதிக நேரக் கொடுப்பனவையும் பெற்றுக்கொள்வார். இதன் அடிப்படையில் சாதாரண மருத்துவர் ஒருவர் தற்போது மாதம் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் ஒரு லட்சம் ரூபாவுக்கும் குறையாமலே சம்பளத்தைப் பெற்றுக்கொள்கின்றார். அதேநேரம்வடக்குமாகாணத்தில்ஆயிரத்துக்கும்மேற்பட்டஆசிரியர்களுக்குரிய சம்பள நிலுவைப் பணம் கடந்த 2014ஆம் ஆண்டு முதல் வழங்கப்படாமலேயே உள்ளது. இதில் 250பேருக்கான நிலுவைப் பணத்துக்கான அனுமதி இந்த மாதமே கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதேநேரம்அனுபவம்வாய்ந்த வைத்தியர்கள், நிபுணர்களின் சம்பளம் இவர்களின் சம்பளத்தைவிடவும் அதிகமானவை. இலங்கையின் 25மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட செயலர்களில் மூத்தவர் ஒருவருக்குரிய சம்பளமாகக் கடந்த மாதம் சகல படிகளுடன் 81ஆயிரம் ரூபா மட்டுமேகிடைத்துள்ளது.இவர்களுடன்ஒப்பிடுகையில் மருத்துவர்களின் நிலை ஓரளவு விருத்தியையுடையது. அவர்களுக்கான தேவை, வேலைப் பளு, சிரமங்கள் போன்றவற்றின் அடிப்படையில் அவர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் அவை சில மாதங்கள் தாமதமடைவதைக் காரணம் காட்டி மக்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்துவது எவ்விதத்திலும் பொருத்தமானதல்ல.

மருத்துவர்கள் பலர் அதிகரித்த ஊதியத்தை நம்பியே கடன்களைப் பெற்று உறவுகளின் தேவை, வீட்டு வசதி அல்லது வாகனத் தேவையை பூர்த்தி செய்துள்ளனர். அந்தக் கடன்களைச் செலுத்த தவறினால் மேலதிக வட்டியைச் செலுத்தவேண்டிய நிலமை ஏற்படும். இதன்காரணமாகவே அவர்களுக்குஒதுக்கப்பட்டகுறித்ததொகையைக்கோரும் தேவையும் அநேகருக்கு எழுகின்றது. இதுபோன்றபலவிடயங்கள்அவர்கள்தரப்பில்சுட்டிக்காட்டப்படுவதுநியாயமானதே. எது எப்படியிருப்பினும் மருத்துவர்கள் முன்னெடுக்கவிருக்கின்ற போராட்டத்தால் மக்கள் பாதிக்கப்படுவது மாத்திரமன்றி மாகாணசபையும் ஒன்றும் செய்யவியலாது. ஆக, மருத்துவர்களின் போராட்டம் பொருத்தமற்றது என்பது மாத்திரம் உறுதி.

வடக்கு மாகாணத்தில் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உட்பட 130வைத்தியசாலைகள் உள்ளன. இதில் 129 வைத்தியசாலைகள் நேரடியாகவே வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஆளுகைக்கு உட்பட்டவை. குறித்த 129வைத்தியசாலைகளிலும் 89 வைத்திய நிபுணர்களும் 579வைத்தியர்களும் பணியாற்றுகின்றனர்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொறுத்தருள்க!

அடுத்தடுத்துப் பொருள்களின் விலைகள் உயர்கின்றன. எரிபொருளின் விலையையும் அதிகரித்தாயிற்று. சிறிய பொருள் முதல் பெரிய பொருள் வரை அனைத்தினது விலைகளும் இனிக்கிடுகிடுவென அதிகரிக்கும். அன்றாடப் பொருள்கள் முதல் ஆடம்பரப் பொருள்கள் வரையான இந்த விலை அதிகரிப்பால் பொதுமக்களே அதிகம் அழுத்தத்துக்கு உள்ளாகப் போகின்றார்கள். பொருள்களின் விலையேற்றத்துக்கு அமைய வருமான அதிகரிப்புச் சடுதியாக ஒருபோதும் கிடைக்காது என்கிற நிலையில் குடும்பங்களில் திண்டாட்டம் மேலும் அதிகரிக்கும்.

இந்த விலை அதிகரிப்பால் திண்டாடுவது மக்கள் மட்டுமல்ல உதயனும்தான். பத்திரிகைத் தாள் முதல் அச்சுப் பொருள்கள் எல்லாவற்றினது விலைகளும் சடுதியாக எகிறிவிட்டன. தாங்க முடியாத சுமையுடனேயே தொடர்ந்தும் பயணிக்க வேண்டியிருக்கிறது.

பன்னாட்டுச்சந்தையில் அச்சுத்தாளுக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் இருந்த விலை, இப்போது இரட்டிப்பாகிவிட்டது. டொலரின் விலையேற்றம் உள்ளூரில் அச்சுத்தாள் உள்ளிட்ட அச்சுப் பொருள்களின் விலைகளை நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

அதிகரித்திருக்கும் இந்தச் சுமையைத் தாங்க முடியவில்லை என்றாலும், அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் மீது மேலும் சுமையை ஏற்றுவதற்கு உதயன் விரும்பவில்லை. அதனால் தாங்க முடியாத அச்சுச் செலவு அதிகரிப்புக்கு மத்தியிலும் பத்திரிகையின் விலையைத் தொடர்ந்தும் அப்படியே பேணவேண்டிய நிலையில் நெருக்கடி இருக்கிறது.

ஒருபுறம் பத்திரிகை அச்சுச் செலவு கட்டுக்கடங்காமல் எகிறிச்செல்லும் நிலை, மறுபுறத்தில் வாசகர்களின் நலன் கருதி பத்திரிகையின் விலையை அதிகரிக்க முடியாத நிலை இவை இரண்டுக்கும் மத்தியில் ஒரு சமன்பாட்டைக் காண்பது மிக மிகக் கடினமானது என்றாலும் அதனை எப்படியும் சாத்தியமாக்கியேயாக வேண்டிய நிலையில் உதயன் உள்ளான். அந்த நெருக்கடியை வாசகர்களாகிய நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்கிற பெரும் எதிர்பார்ப்பு எம்மிடம் உள்ளது.

இந்த இக்கட்டு நிலையில் இருந்து தற்காலிகமாக மீள்வதற்காக உதயன் தனது வர்ணப் பக்கங்களின் எண்ணிக்கையைச் சடுதியாகக் குறைத்துக் கொண்டுள்ளான். செலவுகளைக் கட்டுப்படுத்தும் முகமாக இத்தகைய ஒரு தற்காலிக நடவடிக்கையை எடுப்பதற்கு உதயன் நிர்ப்பந்திக்கப் பட்டிருப்பதை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என்றே நாம் நம்புகின்றோம்.

பத்திரிகையின் தரத்தை அதிகரித்து, அதன் வடிவத்திலும் வர்ணத்திலும் செய்நேர்த்தியைக் கொண்டுவரவேண்டும் என்பதில் உதயன் கரிசனையாக இருக்கும் நிலையில், தவிர்க்க முடியாத இத்தகைய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

விரைவில் இந்த நெருக்கடியில் இருந்து மீண்டு மீளவும் பழைய நிலைக்குத் திரும்புவோம் என்கிற நம்பிக்கையோடு, அதுவரைக்கும் வர்ணப்பக்கங்களின் குறைப்பை வாசகர்கள் பொறுத்தருளவேண்டும் என்று உதயன் கேட்டுக்கொள்கின்றான்.

வர்ணப்பக்கங்கள் குறைக்கப்பட்டாலும், பத்திரிகையின் பக்க எண்ணிக்கையிலோ, உள்ளடக்கத்திலோ எந்தவிதமான மாற்றங்களும் இருக்காது என்று உதயன் உறுதி கூறுகின்றான்.


பல்வேறு நெருக்கடிகளின் போதும், கடும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டபோதும் உதயனுடன் கூடவே இருந்து, பயணித்து, அரவணைத்துக் கொண்ட தமிழ் பேசும் வாசகப் பெருமக்கள் இப்போது இந்தச் சிறிய மாற்றத்தையும் பொறுத்துக்கொண்டு தொடர்ந்து தமது ஆதரவை உதயனுக்கு வழங்கவேண்டும்.

காலமும் நேரமும் கூடிவரும்போது உதயன் இன்னும் அதிகமான வர்ணப்பக்கங்களுடன் புதிய வீச்சோடு உங்கள் கைகளில் தவழ்வான்.



# மொழியை முன்னிறுத்தி அரசியல் செய்யும் இலங்கை அரசியல்வாதிகள்

சிங்களமொழி மூலம்:-
காமினி பரண யாபா(லங்காதீப)
தமிழில்:- வீ.எஸ்.ரி



எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக

மொழி என்பது மக்களை ஒன்றிணைக்கும் முக்கிய ஊடகம் எனக் கொள்ளப்படும். இந்த உண்மை சகல இனத்தவர்களுக்கும் பொதுவான தொன்று. மனிதர்கள் எந்தவொரு மொழியைப் பேசுபவர்களாக இருப்பினும், அதன் மூலம் அவர்கள் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள முடிகிறது என்பதே யதார்த்தம். மொழி தொடர்பான சமூகத்தின் பொது நோக்கும் அதுவேயாகும். ஆனால் நாகரீகமடைந்த சமூகம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சமூகத்தில் மொழி தொடர்பான அந்தப் பொது மதிப்பை மாற்றியமைத்துப் பெரும் அழிவுகளுக்கு வழி வகுத்தவர்கள் மொழியை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திய அரசியல்வாதிகளே ஆவர்.

### ஒரு இனத்தின் மொழியை இனத்தின் அடையாளமாக ஆக்கி அரசியல் செய்தோர்

இத்தகைய அழிவுகள் உச்சநிலையடைந்த சம்பவமாக அமைந்தது, மொழியை இனத்தின் அடையாளமாக முன்னிலைப்படுத்திய அரசியல், நாட்டு மக்கள் மத்தியில் உருவானதை அடுத்தேயாகும். இதன் காரணமாகவே, விசேடமாக இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் முகம் கொடுக்க நேர்ந்துள்ள பலாபலன்களால் பாதிக்கப்படுவது, நாட்டின் இன்றைய தலைமுறையினரே. அதுமட்டுமன்றி, எதிர்காலப் பரம்பரையும் இந்தப் பயங்கர நிலையை அனுபவிக்க நேர்வதைத் தடுத்திட இயலாது போகும். இன்றைய காலகட்டத்தில், மொழிகளை இனவாத மோதல்களுக்கான குறியீடாகப் பயன்படுத்த சில தரப்பினர்கள் ஆர்வம் காட்டுவதற்குக் காரணம், முன்னைய காலம் தொட்டு இன்று வரை அரசியலும் மொழியும் அரசியலின் வலுவான துரும்புகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததனாலேயே ஆகும்.

இலங்கை அன்னியர் ஆட்சிக்கு உட்பட்டதன் பின்னர், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இலங்கையர்களை அவர்களது இன மற்றும் மத அடிப்படையில் மலைநாட்டு மற்றும் கரையோரப் பிரதேசத்தவர்கள் என்ற ரீதியில் வேறுபடுத்தி நிர்வகித்தமை, அத்தகைய நடைமுறை அவர்களது நிர்வாகச் செயற்பாடுகளை இலகுவாக்கியதன் அடிப்படையிலேயே ஆகும். இலங்கையர்கள் ஒன்றிணைந்து செயற்படும்வரை, தம்மால் இலங்கையை முறைப்படியாகவும், இலகுவாகவும் நிர்வகிக்க இயலாதென்பதை அந்த வேளைய ஆங்கிலேய நிர்வாகத் தரப்பினர் தெளிவாக உணர்ந்திருந்தனர். பிரித்தாளும் தந்திரம் அவர்களது நிர்வாக நடைமுறையின் முக்கிய அம்சமொன்றாக கடைக்கொள்ளப்பட்டு வந்தது. 1832ஆம் ஆண்டளவில் 'கோல்புறூக்' என்பவரது பரிந்துரைகளின்படி அந்த நடைமுறை மேலும் பலமிக்க நிலையை அடைந்தது.


ஜே.ஆர்.ஜெயவர்த்தன

### பிரித்தாளும் தந்திரத்துடன் அரசியல் செய்த ஆங்கிலேயர்கள்

ஆங்கிலேயர்களது நிர்வாகக் கட்டமைப்புக் குறித்துத் தெரிந்து கொண்டிருந்த சிங்கள, தமிழ், முஸ்லீம்கள், மலேயர்கள் மற்றும் பறங்கியர் ஆகிய இனத்தவர்களது கூட்டிணைவுடன் ஒரு அரசியல் அமைப்பு என்ற ரீதியில் 1918ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இலங்கை தேசிய சங்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. சாத்வீக வழியில் நாட்டுக்குச் சுதந்திரம் ஈட்டிக் கொள்வதே இந்த அமைப்பின் முக்கிய கொள்கையாக அமைந்தது. ஆனால் இந்த ஒன்றிணைவு நீண்ட காலத்துக்கு நிலைக்கவில்லை. 1921ஆம் ஆண்டில் பொன்னம்பலம் அருணாசலம், இலங்கை தேசிய சங்கத்திலிருந்து வெளியேறி, தமிழர் மகாசபை என்ற பெயரில் தமிழ் இனத்தவர்களுக்காக தனியான அமைப்பொன்றை நிறுவினார். அதே சமயம் இலங்கை தேசிய சங்கத்தின் இணைச் செயலாளர்களில் ஒருவராகச் செயற்பட்டு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயகாவும் இலங்கை தேசிய சங்கத்தினின்றும் வெளியேறி, 1934ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி சிங்கள மகாசபை என்ற பெயரில் அமைப்பொன்றை நிறுவினார். சிங்கள மக்களது ஆதரவை ஈட்டிக் கொள்ளும் நோக்கில் குறித்த சிங்கள மகாசபை அமைக்கப்பட்டது. அதே வேளை அந்தவேளையில் இலங்கையில் வாழ்ந்து வந்த கோர்ணல் டி.வை.றைற் என்ற ஐரோப்பிய இனத்தவரது தலைமையிலான ஐரோப்பிய சங்கத்தில் நாட்டின் ஐரோப்பிய இனத்தவர்கள் இணைந்து கொண்டனர். இலங்கையிலிருந்து மலாயர் மற்றும் முஸ்லீம் இனத்தவர்கள் ரி.பி.ஜயாவின் தலைமையில் ஒன்றிணைத்திருந்தனர். மேற்குறிப்பிட்ட அமைப்புக்களது அடிப்படைக் கொள்கை, ஒவ்வொரு இனத்தவர்களுக்கும் அந்தந்த இனங்களைச் சேர்ந்தவர்கள் தலைமை தாங்க வேண்டும் என்ற விதத்தில் அமைந்திருந்தது.

1943ஆம் ஆண்டில் அரச நிர்ணய சபையில் களனித்தொகுதி உறுப்பினர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சிங்கள மொழியை அரச கரும மொழியாக அறிவிக்கப்பட வேண்டுமெனப் பிரேரணையொன்றை முன்வைத்தார். அது நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் எனக்கருதி, பின்னர் தமிழ் மொழியையும் அதில் இணைத்துக் கொள்வதற்கான திருத்தமொன்றையும் ஜே.ஆர் அந்தப் பிரேரணையில் உள்ளடக்கியிருந்தார்.

### இனவாத அடிப்படையில் தோற்றம் பெற்ற அரசியல் கட்சிகள்

1944ஆம் ஆண்டளவில் இனவாதத்தை முன்னிலைப்படுத்திய அரசியல் கட்சிகள் குறிப்பாக, வட பகுதியை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெற்றன. ஈழத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்ப

டுத்திய அரசியல் தலைமைகளாக ஏற்கப்பட்ட ஜீ.ஜீ.பொன்னம்பலம் மற்றும் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஆகிய இருவரும் இணைந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை உருவாக்கினர். தாம் நாட்டின் வடபகுதித் தமிழ் மக்களுக்காகவே காங்கிரஸ் கட்சியை உருவாக்கியதாக சோல்பரி ஆணைக்குழுமுன் னிலையில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் சாட்சியளித்ததன் மூலம் இது வெளிப்படுத்தப்பட்டது.

அரசமைப்புப் புனரமைப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு ஐம்பதுக்கு ஐம்பது பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் முக்கிய கோரிக்கையாக ஆணைக்குழு முன்னிலையில் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதனைச் சோல்பரி ஆணைக்குழு நிராகரித்ததையடுத்து ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அந்த ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை செயலிழந்து போயிற்று. இதன்மூலம் தாம் பயனடையத் திட்டமிட்ட, அரசியல் சூட்சுமம் கைவரப்பெற்ற முதலாவது தலைமை அமைச்சரான டீ.எஸ்.சேனநாயக, ஏதோ வகையில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் நிலைப்பாட்டை மாற்றுவித்து, அவரைத் தமது அமைச்சரவையில் இணைத்துக் கொண்டதன் மூலம் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை சூட்சுமமான விதத்தில் கைவிடச் செய்வதில் வெற்றிகண்டார். மீண்டும் இலங்கை அரசியலில் மொழி என்பதை ஒரு ஆயுதமாக இணைத்தவர் எஸ்.ஜே.வி.செல்வநா


எஸ்.ஜே.வி.செல்வநாயகம்

யகம் ஆவார். தமிழ் மொழியையும் அரசகரும மொழியாக்கும் பிரச்சினையை முன்வைத்து தமிழர் மகாசபையிலிருந்து வெளியேறிய செல்வநாயகம், 1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதியன்று சமஷ்டிக்கட்சியை ஆரம்பித்ததன் பின்னர் அதனை மேலும் பலப்படுத்தும் விதத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற பெயரில் இனவாத அரசியல் கட்சியாக அதனை உருவாக்கினார். அதற்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ் மொழியை முன்னிலைப்படுத்தி நாட்டின் வடபகுதி முழுவதிலும் இனவாதப் பரப்புரைகளை அந்தக் கட்சி முன்னெடுத்தது. ஒரு சில அரசியல் விமர்சகர்களது கருத்துப்படி தமிழீழக் கோரிக்கையின் ஆரம்பகர்த்தாவாக செல்வநாயகமே விளங்கினார்.


ஜீ.ஜீ. பொன்னம்பலம்

### சிங்கள மொழியை முன்னிறுத்தி அரசியல் செய்த சிங்கள அரசியல் வாதிகள்

1956ஆம் ஆண்டில் சிங்கள மொழியே தென்பகுதி அரசியல்வாதிகளது அரசியல் பிரபல்யம் தேடிக்கொள்வதற்கான துருப்புச் சீட்டாக அமைந்தது. அந்த வேளையில் ஐ.தே.கட்சியினின்றும் வெளியேறியிருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக, தம்மால் உருவாக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் சிங்களமொழியே நாட்டின் அரசகரும மொழியென்ற பிரேரணையை நிறைவேற்றிக் கொண்டதுடன், ஐ.தே.கட்சியும் அதுவரை அரசகரும மொழி குறித்துத் தான் கொண்டிருந்த கொள்கை நிலைப்பாட்டுக்கு முரணான வகையில், சிங்களம் மட்டுமே அரசகருமமொழியென்ற கொள்கை நிலைப்பாட்டுக்குத் தன்னை மாற்றிக் கொண்டது. 1956ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமது சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஈட்டிய வெற்றியையடுத்து அரசை நிறுவிய பண்டாரநாயக, 1956ஆண்டு ஜீன்மாதம் 15ஆம் திகதியன்று சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகருமமொழி என்ற சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொண்டார். அதனையடுத்து நாட்டில் உருவான இனங்களுக்கு இடையேயான இனவாதக் குழப்பங்கள் நாட்டின் சகல இன மக்கள் மத்தியிலும் அமைதியின்மையைத் தோற்றுவித்தது. அதுமட்டுமன்றி, பண்டாரநாயகவின் அமைச்சரவையில் ஒரு தமிழராவது அமைச்சராக நிய மிக்கப்படாமை சிறுபான்மை இன மக்களது மனதில் சந்தேகத்தை உருவாக்கக்காரணமாகியது. சிங்களமொழியை அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தியதையொட்டி நாட்டில் தலைதூக்கிய குழப்பங்களுக்கு முகம்கொடுக்க இயலாத நிலையில் குறித்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை ஓராண்டு காலத்துக்குப் பின்போடுவதாக பண்டாரநாயக்க அறிவித்தார். அதேவேளை வாகனங்களுக்கு சிங்கள ஸ்ரீ எழுத்தைப் பொறிப்பது தொடர்பான அரசின் முடிவுக்கு எதிரான குழப்பங்கள் உச்சமடைந்த தமிழ்ப்பகுதிகளில் சிங்கள எழுத்துக்கள் மீது தார்பூசிச் சேதப்படுத்துவதும், சிங்களப் பிரதேசங்களில் தமிழ் எழுத்துக்கள் மீது தார்பூசிச் சேதப்படுத்துவதுமென குழப்பங்கள் மோதல்களாக உருமாறின.

### சிங்கள ஆட்சியாளர்களுடன் தமிழ்த் தலைமைகள் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பயனேதும் விளைவிக்கவில்லை

நாடளாவிய ரீதியில் தீவிரமாக நிலவிய மொழிப்பிரச்சினையை முன்னிட்டு இடம்பெற்ற மோதல்களுக்குத் தீர்வு காண்பதற்காக, தலைமை அமைச்சர் பண்டாரநாயக 1957 ஜீலை, ஆகஸ்ட் மாதங்களில் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்தார். அவற்றின் பலனாக இனங்கள் மத்தியில் புரிந்துணர்வையும், நட்புறவையும் பேணிக்காக்கும் விதத்தில் குறிப்பிட்ட இரு தலைவர்கள் மத்தியிலும் உடன்படிக்கையொன்று கைச்சாத்தானது. ஆயினும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த துறவிமாரும் சிங்களக் கடுங்கோட்பாட்டாளர்கள் தரப்பும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டதால், கடைசியில் தலைமை அமைச்சர் பண்டாரநாயக குறித்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து அதனைத் தாம் கைவிட்டுவிட்டதாக அறிவிக்கவேண்டி ஏற்பட்டது. அதன்மூலம் ஆரம்பத்திலேயே தீர்த்துவிடக் கூடியதாயிருந்த இனப்பிரச்சினைச் சிக்கலை மென்மேலும் வளர்ச்சியடைய அனுமதிக்கும் பின்னணியை உருவாக்கிக் கொள்ள நேர்ந்தது. அந்தச் சந்தர்ப்பத்தை வாய்ப்பாகக் கருதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன உள்ளிட்ட ஐ.தே.கட்சித் தலைவர்கள் பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டிக்குப் பாதையாத்திரையை மேற்கொள்ளும் திட்டத்தைச் செயற்படுத்தினர். உண்மையில் அது மொழியை அரசியல் ஆயுதமாகக் கொண்டு அரசியல் பிரபல்யம் தேடிக்கொள்ளும் குறுக்குவழி உபாயமாகக் கொள்ளத்தக்கதே. பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் தாம் மேற்கொண்ட அரசியல் செயற்பாடுகள் தவறானவை என்பதை ஜே.ஆர் உணர்ந்து கொண்டார். 1987ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னர் இடம்பெற்ற உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அவ்வேளைய அரச தலைவர் ஜே.ஆர், இலங்கையில் இனப்பிரச்சினை உருவாவதற்குத் தாமும் ஒரு காரணகர்த்தா என்பதை ஒப்புக்கொண்டிருந்தார்.

தொடர்ந்தும் இடம்பெற்ற இனப்பிரச்சினை தொடர்பான சிக்கல்கள், மோதல்களுக்கு ஒரு முடிவு காணும் நோக்கில் 1965ஆம் ஆண்டில் அவ்வேளையில் தலைமை அமைச்சர் டட்லி சேனநாயக மற்றும் செல்வநாயகம் ஆகியோருக்கிடையே மீண்டும் ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் அந்த வேளையில் எதிர்க்கட்சித் தலைவியாகவிருந்த சிறிமாவோ பண்டாரநாயக தலைமையில் பௌத்த துறவிகள் மற்றும் சிங்கள கடுங்கோட்பாட்டாளர்கள் என்போரும் இணைந்து டட்லி - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக மீண்டும் மொழிகள் அரசியலின் துருப்புச் சீட்டாக ஆகி, முடிவில்லாத பிரச்சினையொன்றை நாட்டு மக்கள் தலைமீது சுமத்தி வைத்தன.

1987ஆம் ஆண்டில் இந்த நாட்டின் மொழிப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தமென்ற இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை வழக்கம் போன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி போன்ற அரசியல் கட்சிகள் எதிர்க்க முயன்றன. குறித்த ஒப்பந்தத்தின் முக்கியமானதொரு அம்சமான மாகாணசபைகளை உருவாக்குவதைக் கடுமையாக எதிர்த்த அந்தத்தரப்பினர்கள், முதலாவதாக இடம்பெற்ற மாகாண சபைகளுக்கான தேர்தலைப் புறக்கணித்த னர். பின்னர் தமது அத்தகைய புறக்கணிப்பைக் கைவிட்டு, அதன் பின்னரான மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் அந்தத்தரப்பினர்கள் பங்கெடுத்துக் கொண்டனர்.

மொழியை அரசியலின் சும்மட்டியாக ஆக்கிக் கொண்ட எமது நாட்டின் அரசியல் வரலாற்றின் உள்ளீடு இவையேயாயினும், மொழியைத் தமது அரசியல் இருப்பை உறுதி செய்து கொள்ளவும், அரசியல் பிரபல்யம் தேடிக் கொள்ளவும் பயன்படுத்தும் அரசியல்வாதிகள் பலபேர் இன்றும் எம்மத்தியில் உள்ளனர். மொழியை முன்னிறுத்தி இனவாதத்தை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் அரசியலரங்கில் தத்தமது அதிகாரங்களை மென்மேலும் வலுப்படுத்திக் கொள்வதே இத்தகைய அரசியல்வாதிகளது எதிர்பார்ப்பாகும். ■

## ஆசிரியருக்கான கடிதம்

### மனச்சாட்சியுடன் செயற்பட்டால் சமூக மேம்பாடு சிறக்கும்

யாழ் மாநகரசபைப் பகுதியிலுள்ள, யாழ் மத்தியை அண்டிய நாவலர் வீதியுடன் கடையிற் சுவாமி ஒழுங்கை சந்திக்கும் சந்தியில், மிக அழகான பெரிய சிவபெருமான் படத்துடன் கூடிய பதாகை ஒன்று அண்மைக்காலமாக மதிலொன்றில் மிகத் தாழ்வாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 'இது ஆலயச் சூழல், இங்கு குப்பைகள் கொட்ட வேண்டாம்' என அதில் பொறிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் சில நாள்களாக அந்த இடம் குப்பை கூழமின்றி துப்புவராக இருந்தது.

அந்தப் பதாகை அதே இடத்தில், அதே விதத்தில் இருக்கும் நிலையிலேயே, மீண்டும் அவ்விடத்தில் குப்பை கூழங்கள் நிறையத் தொடங்கிவிட்டன. (மாநகரசபை அவ்வப்போது அதனை அகற்றியும் வருகின்றது) தமது தெருவில் அயலவர்களாலோ, அல்லது வேறு இடங்களில் இருந்து குப்பையைக் கொண்டு வந்து வீசி விட்டுச் செல்பவர்களையோ தடுக்கும் நோக்கில் பல்வேறு உத்திகள் கையாளப்பட்டு வருவது ஒன்றும் புதிதல்ல. கொஞ்சக் காலத்துக்கு முன்னர் கொக்குவில் சம்பியனின் லேனில் தமது வீடுகளில் சேரும் குப்பைகளைக் கொண்டு வந்து குறித்த ஒரு இடத்தில் வீசிவிட்டுச் செல்வோரைத் தடுத்து நிறுத்தும் உத்தியாக 'நாய்களே! இவ்விடத்தில் குப்பையைக் கொட்டுங்கள்' எனும் விளம்பரம் பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்ததும், அதன் பின்னர் குப்பை கூழங்களின்றி அவ்விடம் துப்பரவாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இங்கு பொதுத் பிரச்சினை ஒன்றுக்காக, சமயம் சார்ந்த சின்னங்களைப் பயன்படுத்துவது ஒருவகைக் கொச்சைப் படுத்தலாகி இருக்கின்றது. சிவனது உருவம் பொறித்த பதாகை முன்பாக குப்பைகொட்டு பவர்கள் வேறு சமயத்தவர்களாக இருக்கும் சந்தர்ப்பங்களில் வேண்டத் தகாத விளைவுகள் ஏற்படவும் இடமுண்டு.

வினைத்திறனாக செயற்படும் யாழ் மாநகரசபை இத்தகைய அனுமதியற்ற பதாகைகளை அகற்ற நடவடிக்கை எடுப்பதுடன், அவ்விடத்தில், பொருத்தமான சிவப்பு, நீல நிற குப்பை போடுவதற்கான கொள்கலன்களை வைத்து அப்பகுதிவாழ் மக்களையும் வழிப்படுத்த வேண்டும்.


*ஒரு சமூகநலன் விரும்பி*

### இதுவும் ஒரு விதத்தில் போர்ச் சூழல் காரணமான பாதிப்பே

தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சில் 140 பேருக்கான பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் 2018.04.27 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் கோரப்பட்டிருந்தது. விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயதெல்லை, 35 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. போர்ச் சூழலால் உரிய வயதில் கற்றலை மேற்கொள்ள இயலாது போனவர்கள், இத்தகைய தொழில் வாய்ப்பை எதிர் நோக்குகையில் அதற்கும் தடையாக வயது குறுக்கிடுகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு வாழ் இளைஞர் யுவதிகளின் நிரந்தர அரச தொழில் வாய்ப்புக்கான வயதெல்லை 40-45 ஆக அனுமதிக்கப்படவேண்டுமென, பல தடவைகள் கோரப்பட்டிருந்தது.

இந்தநிலையில், குறித்த விண்ணப்பத்துக்கான வயதெல்லை 35 என வரையறுக்கப்பட்டு உள்ளமை, போரினால் பாதிக்கப்பட்ட எம் போன்றவர்களுக்கு, ஏமாற்றம் அளிப்பதாகவே உள்ளது.

*எஸ். மைதிலி*



# தொழில்நுட்ப வளர்ச்சியும் நவீனங்களின் கிளர்ச்சியும்

## ஒவ்வாமையில் இருந்து உலக ஒழுங்கை சீர்ப்படுத்துவதற்கான வேண்டுதல்

சி.நற்குணலிங்கம்

மனிதர்கள். ஆறறிவுடைய மனிதங்களை விடவும் நவீன தொழில்நுட்ப சாதனங்களிடமே அதிகரித்த தேவைப்பாடுகளை உணர்கின்றனர். தேவைகளையும் எதிர்பார்த்து நிற்கின்றனர். ஆம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மனித அறிவை பயன்கொண்டு அதன் மீட்சியாய் மிதமிஞ்சிய வளர்ச்சியை கண்டடைந்துள்ளது.

மனிதர்களின் இயல்பான வாழ்க்கை நெறிமுறைகளோடு விளையாடுகின்றது. அவை ஆக்கத்துக்கு மட்டுமன்றி அழிவுக்கும் உதவிபுரிகின்றன. அளவுக்கு மீறிய தொழில்நுட்பத்தின் பயனுறுதியை மனிதன் கட்டுப்படுத்தி அதனை ஆக்கச் செயன்முறைகளுக்காக மாத்திரமே பயன்படுத்த வேண்டும்.

**தொழில்நுட்பத்தின் வளர்ச்சி**

இந்தநிலையிலே விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் முன்னேற்றகரமாக வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் 'ரோபோ' என்கின்ற செயலுறுதிகளின் புனைவுகளை விஞ்ஞானிகள் இயந்திரமாக உருவகித்துக்கொண்டனர். பின்னர் அவற்றிலிருந்து அறிவு நிலைப்பட்ட 'ரோபோ மனிதர்களை' உருவாக்கும் செயன்முறையில் வெற்றிகண்டனர். சாதாரண மனிதன் ஒருவன் செய்யக்கூடிய அனைத்து வேலைகளையும் ரோபோ மனிதர்களைக் கொண்டே செய்யுமளவுக்கு விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

**மனம் என்கிற செயலூக்கத்தை அறியும் புரட்சி**

மனிதனுடைய வளர்ச்சியிலும், அவனுடை முன்னேற்றத்திலும் மனம் என்கிற செயலூக்க ஆதாரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. மனதை தீய வழியில் வழிநடத்தாது நல்வழியில் பயணிக்க இடம் தர வேண்டும். இல்லையேல் மனதளவில் ஏற்படுகின்ற பிறழ்வுகள் ஒருவருடைய முழுமை யான வாழ்க்கைப் பயணத்தையே முடிவுறுத்தி விடலாம். ஒருவருடைய மனதை அறிந்து கொண்டால் அதன்படியே ஒழுகி, அவரோடான உறவை பலப்படுத்திக்கொள்ளலாம். இதனூடே உறவு களைப் பாதுகாக்கலாம்.

மன ஒருமைப்பாட்டில் திருப்திகரமான நிலை ஏற்படும் சந்தர்ப்பங்களிலேயே வாழ்வில் நிம்மதி என்கிற அடைவை கண்டுகொள்ள முடிகிறது. ஆக, மனதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதன்வழி மனதைப் புரிந்து கொள்ள முடியும். இங்கு மனதை அறிதல் என்ற காரியம் இலகுவான விடயமல்ல. ஆனாலும் முதன்முறையாக மனிதர்களின் மனங்களை அறியக்கூடிய ரோபோக்களை அமெரிக்காவின் உயிரியல் துறைப் பொறியியலாளர்கள் உருவாக்கியுள்ளனர். இது ஆறறிவின் திறனறிவுடைய ஒப்புமை இலக்கணமாக வெளிப்பட்டு நிற்கிறது.

**கடமை தவறாத இயந்திரங்கள்**

பாதுகாப்புக் கடமையில் உள்ள ஊழியர்கள் தமது கடமைகளை சரிவரச் செய்யாது விடின் பல பாதகவிளைவுகள் ஏற்படும். இது தாண்டி இலஞ்சம், ஊழலில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் அவர்கள் காணப்படின் பாதுகாப்புச் செயன்முறை இன்னமும் பாழடைந்து காணப்படும். அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பொறுத்த வரையில் சீனாவிலேயே முதன்முதலாக பாதுகாப்பு கடமையில் ரோபோக்கள் ஈடுபடுத்தப்பட்டன. 'ஸென்சென்' விமான நிலையத்தில் இவை தமது கடமையை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளன.

இவை பொலிஸ் ரோபோக்கள் என அழைக்கப்படுகின்றன. இவ்வகை ரோபோக்களின் நான்கு பக்கங்களிலும் டிஜிற்றல் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவை பொதுமக்களின் நடவடிக்கைகள் மற்றும் நடமாட்டங்களை கண்காணிக்கவும், முக அடையாளங்களைப் பகுத்தறியவும், புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபடவும் ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**முதுமையை கீழ்படியும் இயந்திர மனிதங்கள்**

இந்தச் சந்தர்ப்பத்திலே முதியோர் பராமரிப்பு என்ற காரியம் மிகப்பெரிய சவாலான விடயமாக காணப்படுகிறது. முதுமையில் தனிமை என்பது தாங்க முடியாத துயரமாக பரிணமிக்கிறது. உறவுகளுடன் வாழ்வதற்கு அல்லது தனிமையில் வாழ்வதற்கு இயலுமை இல்லையாயின், இறுதியியல் முடிவு என்பது இறப்பை நாடுவதாக அமைந்துவிடுகிறது. எனவே முதுமை என்ற ஓய்வை நாடும் குழந்தைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் ஜப்பான் முதன்மை இடம் வகிக்கின்றது. ஜப்பானில் 25 வீதமானோர் 65 வயதுக்கு மேற்பட்டவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் குறித்து இளையோர் அக்கறை காட்டுவதில்லை. முதியவர்களுடன் நேரத்தை செலவிடுவதற்கும், அவர்களின் கருத்துக்களை செவிமடுக்கவும் இளைய தலைமுறையினர் தயாராக இல்லை. இதனால் முதியவர்களை பொருத்தமான நடைமுறையின் கீழ் பராமரிப்பதற்கு உலக வரலாற்றிலேயே 'விஞ்ஞானத்தின் சுவர்க்கம்' என வர்ணிக்கப்படும் ஜப்பானில் ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**நேயமுடைய இயந்திரத் தாதியங்கள்**

நோயாளர்களைப் பராமரிப்பதற்கு ஆளணி வசதிகள் குறைவாக காணப்படுகின்ற இடங்களில் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். மருத்துவர்களும், பராமரிப்பாளர்களும் இல்லையாயின் நோயாளர்கள் அதிகம் சிர மப்படுகின்றனர். இதனை ஈடுசெய்யும் வகையில், சீனாவின் பெய்காங் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும், டென்மார்க் நாட்டின் அல்போர்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும் இணைந்து நோயாளர்களுக்கு உதவுக்கூடிய புதிய ரோபோக்களை தயாரித்துள்ளனர். இவ்வகை ரோபோக்கள் முழங்கால் மூட்டு இயங்காமை, பக்கவாதம், தண்டுவட நோயின் பாதிப்பால் அவதியுறும் நோயாளர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளன. இவை முழங்கா லில் அசைவுகளை ஏற்படுத்தி, நோயாளிகள் எழுந்து நிற்கவும், நடக்கவும் உதவிபுரிகின்றன.

**விண்வெளிப் பயணம் கொள்ளும் கனவான் இயந்திரங்கள்**

இவைதாண்டி தற்போது செவ்வாய்க் கிரகத்துக்கும் மனித குடியேற்றத்து க்குமான தொடர்பு எந்த வகையில் உள்ளதென்பது குறித்தும் விஞ்ஞானிகள் ஆய்வு செய்துவருகிறார்கள். இதன்படி ஒரு காலத்தில் மனிதன் செவ்வாய்க் கிரகத்தில் வாழ்வதற்கான சாத்தியங்கள் ஏற்படலாம். செவ்வாய்க் கிரகத்துக்கு 'ரோபர்' கருவியை நாசா அனுப்பியுள்ளது. அது மிக மெதுவாகவே நகர்ந்து ஆய்வினை மேற்கொள்கின்றது. இதனால் பூமிக்கு தகவல்கள் கிடைக்க அதிக காலம் தேவைப்படுகிறது. அத்துடன் எரிபொருள் தேவையும் அதிகமாகவுள்ளது. எனவே 'ரோபர்' கருவிக்குப் பதிலாக 'ரோபோத் தேனீக்களை' செவ்வாய்க் கிரக ஆய்வுச் செயற்பாடுகளுக்கு அனுப்புவதற்கு அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் திட்டமிட்டுள்ளது.

**ஆறறிவை ஒத்த இயந்திர மூளை**

குறிப்பாக ரோபோவும் மனிதர்களைப் போல் தன்னிச்சையாக செயற்படக் கூடிய வகையில் அதற்கான மூளையை அமெரிக்காவின் புகழ்பெற்ற இந்திய வம்சாவளித் தமிழ் விஞ்ஞானி ஜகன்நாதன் சாரங்கபாணி கண்டுபிடித்துள்ளார். பல வகையில் ரோபோக்களின் செயற்பாடுகளை கணக்கிட்டு அதற்கு தனிக்கட்டளைகளைப் பிறப்பித்து தானியங்கி முறையில் மட்டுமன்றி சுயமாக சிந்தித்து குறைந்தபட்ச செயற்பாடுகளை மேற்கொள்ள செய்ததில் இவர் வெற்றி கண்டுள்ளார்.

மனிதர்களுக்கு உள்ளதுபோலவே மூளையைக் கண்டுபிடித்து, அந்த மாதிரி மூலம் செயற்பாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தி செயலாற்றும் விதமாக ரோபோவின் செயற்பாட்டை மாற்றியமைத்துள்ளார். இதனை பாலம் கட்டுதல், மேம்பாலம் அமைத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு பயன்படுத்த முடியும். வேலைத்தளங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை அனுசரித்து செல்வதில் மனிதன் அதிக இடர்பாடுகளைச் சந்திக்கிறான். தவிர தொழிலாளிகளின் உளநலனில் பேண்தகைமை அற்ற தன்மை வேலைத்தளங்களில் காணப்படுகின்றன. இதற்குரிய தீர்வையும் ரோபோக்கள் கொண்டுள்ளன.

**விஞ்ஞானிகள் மெய்ஞானம் பெற வேண்டும்**

எனவே ரோபோக்களைப் படைக்கும் விஞ்ஞானிகள் அவற்றை அழிவு வேலைகளுக்கு பயன்படுத்தினால் பெரும் தீமைகளே ஏற்படும். அவற்றை அதிகமாகப் பயன் கொள்ளும் போதும் அதிகளவான பாதிப்புகள் ஏற்படும். இதனை விஞ்ஞானிகள் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ரோபோ மனிதர்கள் கண்டுபிடிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மனித வளங்களுக்கான தேவைப்பாடு குறைவடையும். வேலை வாய்ப்புகள் குறைவடையும். மனித உடல் உழைப்பு பாதிக்கப்படும், சோம்பேறித்தனம் அதிகரித்து ஆயுள் குறைவடையும். இந்தநிலை ஆபத்தானது. மனித இயல்நிலைக்கு அப்பாற்பட்டது. மனிதர்களின் அன்றாட இயங்கு நிலைக்கு குந்தகம் விளைவிப்பது. இதனை விஞ்ஞானிகள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உலக முழுமையை ரோபோக்களின் கைகளில் தாரை வார்க்காது, உலகத்தின் செயல் ஒழுங்கில் பிறழ்வுகளையும் ஒவ்வாத மாற்றங்களையும் ஏற்படுத்தாது பாதுகாத்துக் கொள்வதில் விஞ்ஞானிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ■

மனிதனுடைய வளர்ச்சியிலும், அவனுடை முன்னேற்றத்தி லும் மனம் என்கிற செயலூக்க ஆதாரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. மனதை தீய வழியில் வழிநடத்தாது நல்வழியில் பயணிக்க இடம் தர வேண்டும். இல்லையேல் மனதளவில் ஏற்படுகின்ற பிறழ்வுகள் ஒருவருடைய முழுமை யான வாழ்க்கைப் பயணத்தையே முடிவுறுத்தி விடலாம். ஒருவருடைய மனதை அறிந்து கொண்டால் அதன்படியே ஒழுகி அவரோடான உறவை பலப்படுத்திக் கொள்ளலாம். இதனூடே உறவுகளைப் பாதுகாக்கலாம்.

ஞாயிறு சிறப்பம்சம்

13.05.2017

சூரியகாந்தி

உதயன்





# நேற்று இன்று நாளை

கட்டுரை

மன்னவன் கணேசரத்தினம்

**1 நேற்று**

முப்பது ஆண்டுகள் தமிழ் மக்களை அடக்கி ஆண்டவர்கள், சித்திரவதை செய்தவர்கள், தமிழ்த் தலைவர்களைக் கொன்று புதைத்தவர்கள், பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் என்பவற்றை மறுத்தவர்கள், பாசிச ஆட்சி நடத்தியவர்கள் தொலைந்து அழிந்து ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன என முகநூலிலும், சமூக வலைத்தளங்களிலும் கொக்கரித்து ஆனந்தக்கூத்தாடுகிறார்கள் சிலர். அந்த அழிவை நடத்திய மகிந்த ராஜபக்ச அரசைப் போற்றித் துதிபாடுகிறார்கள்.



**இன்று**

சாதாரண தமிழ் மக்கள் அன்று இருந்த நிலையில்தான் தற்போதும் உள்ளனர். பொருண்மிய நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. அவர்களின் அடிப்படை 'வாழ்வியல் கஸ்ரங்கள் அப்படியேதான் உள்ளன. தமிழ் மக்களின் காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் போராட்டம், விடுதலை, அரசியல் தீர்வு எல்லாமே எட்டாக்கனிகளாகி எங்கேயோ போய் விட்டன.

இந்த மக்களுக்கு, என்ன பதில் சொல்ல இந்த முகநூல் வித்துவான்கள் நினைக்கிறார்கள்.

## 2 - நேற்று

புலிப் போராளிகளையோ, அவர்களது ஆதரவாளர்களையோ, அல்லது புலிவாசம் கொண்ட எந்த மனிதரையோ தங்கள் கட்சிப் பக்கம் சேர்த்தாலும் வேட்பாளர்களாகவோ, கட்சியின் முக்கிய பொறுப்புக்களிலேயோ அவர்களைச் சேர்க்க மாட்டார்கள், சேர்க்கக்கூடாத விச ஜந்துக்களாகவே அவர்களை வைத்திருக்க விரும்புகிறார்கள்.

**இன்று**

புலிப்போராளிகள் வேண்டாம், அவர்களின் ஆதரவாளர்களும் வேண்டாம், ஆனால், அரசியல்கூட்டங்கள் வந்தால், எழுச்சிப்பேரணிகள் நடந்தால், புலிகளின் பரப்புரைப் பாடல்கள் வேண்டும். அந்தப் பாடல்களை ஒலி பெருக்கிக் கொண்டு, கட்சி முக்கியஸ்தர்களும் தொண்டர்களும் தலை நிமிர்ந்து நடப்பார்களாம்!

தேர்தல் வந்தால், புலிகளின் தலைவரின் பெயர்வேண்டும். தலைவரின் பெயரைச் சொல்லிச் சொல்லியே ஆயிரத்தெட்டுப் பரப்புரைக்கூட்டங்களை முடித்துவிடுவார்கள்.

வசதியான பதவிகள், அவைதரும் சுகங்கள்போலவே இந்த அரசியல் தலைவர்களுக்குத் தேர்தலின்பின் வாக்களித்த மக்கள் எப்படி அந்நியப்பட்டுப்போகிறார்களோ புலிகளையும் அப்படியே பாவிக்கிறார்கள்.

## 3 நேற்று

போராட்ட ஆரம்ப காலத்தில் அதைச் சாட்டாக வைத்துப் புலம்பெயர்ந்த நாடுகளுக்கு ஓடி ஒளித்தவர்கள் ஏராளம். அன்று தொடக்கம் இன்றுவரை செய்வது புலி என்று பரப்புரை. புலிகளின் போராட்டம் முடிவடைந்த பின்னர் தாம் தோண்டி எடுத்த சில விடயங்களில் மயிர் பிடுங்கிக்கொண்டிருக்கிறார்கள். இலக்கியப் படைப்பாளிகளின் பங்கோ வேறுவிதம்.

நாடு நாடாய்ச் சுற்றுவதும், நவீன இலக்கியங்கள் படைப்பதாகப் பாவனை பண்ணுவதும் பெண் சகவாசங்களுடன் தண்ணியடித்துப்போதையில் மூழ்குவதும் எதை எழுதினால் பிரபல்யமடையலாம் என்று தெளிவாக முடிவெடுத்து புலி எதிர்ப்புக் கதைகளாகவும் நாவல்களாகவும் எழுதி புலம்பெயர் இலக்கியத்தில் பிதாமகர்களாகியிருக்கின்றனர்.

**இன்று**

சென்னையில் நடந்த விருது வழங்கும் விழா ஒன்றில் ஒட்டுமொத்த ஈழமக்கள் சார்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்குப் புலம்பெயர் இலக்கியப் படைப்பாளி ஒருவர் பின்வருமாறு பதில் கூறியுள்ளார், "ஈழத்துத் தமிழ் மக்கள் ஆயுதப் பக்கம் எதிர்காலத்தில் திரும்ப மாட்டார்கள்" என்றகருத்துப்பட அவர் உறுதியளித்தார்.

போராட்டம் உச்சமான காலத்திலும் அதற்குப் பின்னரும் போராட்டத்துக்கு எதிராகக் கொம்பு சீவிய இவர்போன்றவர்கள் எந்த அடிப்படையில் இவ்வாறான கருத்துக்களைக்கூற முடியும்...?

தமிழ் மண்ணில் குறிப்பாகப்போர் உச்சம்பெற்ற வன்னியில் சாதாரண தமிழ் மக்கள் அனுபவித்த எந்தத் துயரத்தையும் அனுபவித்துப்பார்க்காத இவர்கள் போன்ற புலம்பெயர் படைப்பாளிகள் எந்த உரிமையில் தமிழ்மக்களுக்கான கருத்தைக்கூற முடியும்? கேள்வி கேட்டவர்களும் முட்டாள்களா? பதில் சொன்னவர் முட்டாளா?



## 4 நேற்று

போராட்டம் உச்சமாக இருந்தபோது யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் புகழ்பாடி தமிழை வளர்க்க முடியாதவர்கள் போராட்ட கால வாழ்வுக்கஸ்ரங்களை அனுபவிக்கப் பயந்து கொழும்புக்கு ஓடியவர்கள், தங்கள் 'தமிழ்' வளர்ப்புக்குப் புலிகள் தடையாக உள்ளனர் என்று கதை பரப்பி கொழும்பில் தமது தமிழ்ச் சாம்ராஜ்ஜியத்தை அல்ல பொருளாதார சாம்ராஜ்ஜியத்தை நிறுவினார்கள்.

அரச தலைவர்களையும் அவர்தம் கையாள்களையும் அடக்குமுறையை மேற்கொண்ட அரச அதிகாரிகளையும் இதுபோன்ற விற்பன்னர்கள் தொழுது வணங்கித் தங்கள் தமிழ் விழாக்களுக்கு அழைத்துத் தமிழை வளர்த்தார்களோ இல்லையோ தம்மை வளர்த்துக்கொண்டார்கள்.

**இன்று**

இப்போதும் பணம் பெற்றுக்கொண்டே பிரமுகர்களைக் குத்து விளக்கேற்ற அனுமதிக்கிறார்கள். அல்லது வருடத்தில் எவ்வளவு பணம் தருவீர்கள் என்று பேரம் பேசுகிறார்கள். போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர், எல்லோரும் புலிக் கதைகள் கதைத்துப் பிரபலமடைவதப்போல தாங்களும் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது புலிகளுடன் இரண்டறக் கலந்திருந்ததாகவும் புலனாய்வுத் துறையுடன் உண்டு பசியாறி ஆனந்தப்பட்டதாகவும் கதையளந்து மகிழ்ந்து மகிழ்விக்கிறார்கள்.

## 5 நேற்று

விடுதலைப்போராட்ட காலத்தில் சஞ்சிகை நடத்தி, அரசியல் கதைக் கமாட்டோம் எனக் கறுத்த அட்டைப் படம் போட்டுக் கருத்து எழுதியவர் கொழும்பு சென்று பேராசியரின் புனைப்பெயரில் கவிஞர் புதுவை இரத்தினதுரை உட்பட போராட்டத்துக்குப் பின்னால் நின்ற இலக்கியப் படைப்பாளிகளை வறுத்தெடுத்து இன்பம் கண்டார்.

**இன்று**

திடுமென அந்த மாற்றம் நடந்தது. "யூனிபோம்" போடாத புலிப்போராளியாக மாறிய அவர் இப்போது புலிசார்ந்து பேசுவதும் எழுதுவதுமாகப் பொங்கிச் சரிகிறார். எல்லாவற்றுக்கும் உச்சமாக அவரடித்த 'கப்சா' ஒன்று மிகப் பிரபலமானது.

வன்னியில் பொதுமக்கள் பாவனையிலுமிருந்த "அந்திவானம்" பதிப்பகத்தில் அவருடைய நண்பரான கவிஞர் ஒருவரின் வடிவமைப்பில் வெளியிடப்பட்ட அவரது நூலை "கிளிநொச்சியில் மரங்கள் அடர்ந்த பகுதிக்குள் எதிரிகள் கண்ணுக்குப் படாமல் பிரபாகரனின் நேரடி மேற்பார்வையில் இரகசியமாக அச்சகம் இயங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். என் புத்தகங்கள் அச்சிட்டு அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்துப் புழகாங்கிதம் அடைந்தேன்" என்று தமிழக சஞ்சிகை ஒன்றுக்குப் பேட்டியளித்துக் கதைபண்ணியுள்ளார் அந்தப் படைப்பாளி.

புலிப் போராளிகள் வேண்டாம், அவர்களின் ஆதரவாளர்களும் வேண்டாம், ஆனால், அரசியல்கூட்டங்கள் வந்தால், எழுச்சிப்பேரணிகள் நடந்தால், புலிகளின் பரப்புரைப் பாடல்கள் வேண்டும். அந்தப் பாடல்களை ஒலிபெருக்கிக் கொண்டு, கட்சி முக்கியஸ்தர்களும் தொண்டர்களும் தலை நிமிர்ந்து நடப்பார்களாம்!

## 6 நேற்று

விடுதலைப்போராட்ட காலத்தில் இயக்கத்தில் பல அமைப்புக்களில் முன்னணிப் பதவிகளில் எப்போதெல்லாம் அமரவேண்டுமோ, யாரிடம் தயவைப் பெற்று அதைச் செய்யலாமோ, அந்த வேலையை ஒழுங்காகச் செய்த அவர், ஆள்களைச் சேர்த்து வைத்துக் கருத்துக்களையும் அள்ளி வீசுவார். போராட்ட இறுதிக்காலத்தில் கடைசியாக அவர் தேடிச்சென்ற இடம் 'சற்லைற் போன்' வசதி கொண்ட அந்தப் பிரிவுதான். சாதாரண தொலைபேசி வசதிகள் கேள்விக்குரிதான அந்தக் காலத்தில் 'சற்லைற் போன்' வசதி அவருக்கு எப்படி உதவி செய்திருக்கும்? என்று யோசித்துப் பாருங்கள்.

**இன்று**

இப்போதும் புதுப் புது அவதாரங்களை மாற்றி நிகழ்காலத்தைவிட புலிகளின் காலத்தில் நடந்த தவறுகளைச் சுட்டிக்காட்டி விமர்சிக்கும் மூன்றாம் தரப்பாக நின்று கருத்துமழை பொழியும் அவருடைய வல்லமையை என்னவென்று சொல்வது?

**நாளை**

நாளை எப்படி இருக்கும்? யாராவது யோசிப்பது உண்டா? தமிழ்ப் பகுதிகள் சிங்களக் குடியேற்றங்களால் சுருங்கி வருவதுபற்றியோ புதிது புதிதாகப் புத்தர் சிலைகள், இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதையோ கல்வி நடவடிக்கைகளில் முன்பள்ளிகளில் நடப்பதைப்போல இராணுவத் தலையீடுகள் ஏற்படுவதைப் பற்றியோ யாழ்.நகரங்கள் போன்ற இடங்கள் சிங்களக் கலாசாரங்களுக்கு மாறி அது ஒரு இயல்பான நடவடிக்கையாக மாற்றப்படுவது தொடர்பிலோ யார் கவலைப்படப் போகிறார்கள்?

பதவிகளுக்காகக் கட்சி அரசியலை நடத்தித் தேர்தலில் வென்று அதன் பின்னர் கிடைக்கும் பதவிச் சுகங்களுக்காகத் தேர்தல் காலத்தில் எதிர்த்த கட்சிகளின் தோளில் கைபோட்டுச் சனங்களைக் குழப்பும் இந்த அரசியல்வாதிகள்தான் நாளை தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வந்துவிடும் என்று நேற்றும் சொன்னார்கள். இன்றும் சொல்லுகிறார்கள். நாளையும் சொல்வார்கள். ஈழத்துத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை நாளை என்பது ஒரு கேள்விக்குறிதான்.



தொகுப்பு
பிரகாஸ்

ரவுண்ட் த வேள்ட்

# மத்திய கிழக்கின் வல்லரசாகிறது இஸ்ரேல்



இரண்டாம் உலகப்போரின் 73ஆவது வெற்றிவிழா ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் கடந்த புதன்கிழமை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.



எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று ஈரானை வலுவாகவே இலக்கு வைத்துள்ளது அமெரிக்கா. தருணம் பார்த்துக் கொண்டிருந்த இஸ்ரேலும் ஈரானைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது. ஆக, மத்திய கிழக்கின் வல்லரசு என்ற கனவு மெய்ப்படும் காலம் இஸ்ரேலுக்கு வெகு தொலைவில் இல்லை.

கடந்த 2014ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஈரான் அணுவாயுதச் சோதனைகளில் அதிகமாக ஈடுபட்டு வந்தது. ஈரானைக் கட்டுப்படுத்த எண்ணிய அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ஒபாமா, ஐக்கிய நாடுகள் சபையின் துணையுடனும் மேற்குலக நாடுகளின் ஆதரவுடனும் ஈரான் மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதித்தார். வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்காவின் தற்போதைய அதிபர் ட்ரம்ப் செய்ததைப் போன்று. அமெரிக்காவின் கழுகுப் பார்வையும் உடும்புப் பிடியிலும் சிக்கிவிட்டால் விமோசனம் இல்லை என்பதை ஈரானும் அப்போது உணர்ந்துகொண்டது. இதையடுத்து அமெரிக்காவின் வழிக்கு வருவதற்கு ஈரான் சம்மதித்தது. இத்தகைய பின்னணியிலேயே தற்போது பெரியளவில் பேசுபொருளாக உள்ள அணுவாயுதப் பரவல் தொடர்பான தடை ஒப்பந்தம் கைச்சாத்தானது.

அணுவாயுதம் என்ற கொள்ளையைக் கைவிட்டு நல்ல பிள்ளையாக இருக்கிறோம், நீயும் என் மீது வித்தித்த தடைகளை எடுத்து வாழ வழிவிடு என்றவாறாக அமைந்தது ஈரானின் கோரிக்கை. இதைச் சாதகமாகப் பரிசீலித்த அமெரிக்கா கூடுதலாக பிறிதொரு உத்தரவையும் (கட்டளை என்று சொன்னாலும் தவறில்லை) பிறப்பித்தது. ஈரானிடம் தற்போது கையிருப்பில் (2015ஆம் ஆண்டில்) உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தையும் அந்த நாடு அழிக்கவேண்டும். அல்லது வெளிநாடுகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது. இதற்கும் இணங்கிய ஈரான் ரஷ்யாவிடம் (ஈரானில் இருப்பதும் ரஷ்யாவில் இருப்பதும் கிட்டத்தட்ட ஒன்றுதானே என்று நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது) அதை ஒப்படைத்தது. ரஷ்யாவோ அமெரிக்காவுக்கு அட்டமத்துச் சனி. அமெரிக்காவை அடிக்கப்போகிறேன் யுரேனியத்தைத் தா என்று ஈரான் கேட்டால் ரஷ்யா, தான் பொறுப்பேற்றதை மட்டுமல்லாமல் தன்னிடம் உள்ளதையும் சேர்த்துக் கொடுக்கும். ஆக, ட்ரம்ப் குறிப்பிடுவதைப் போன்று இது வலுவற்ற ஒப்பந்தமும்தான். அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றது முதல் ஈரானுடனான ஒப்பந்தத்தைக் கைவிடுவது தொடர்பில் பரிசீலித்து வந்த ட்ரம்புக்கு, ஈரான் அணுவாயுதங்களைச் சோதிக்கிறது என்பதற்கான 54 ஆயிரம் ஆதாரங்களை எடுத்துக்கொடுத்தது இஸ்ரேல். இதையடுத்து ஒப்பந்தத்தை முறித்தது அமெரிக்கா. அமெரிக்கா ஒப்பந்தத்தை முறித்ததும் ரஷ்யாவுக்குப் பறந்தார் இஸ்ரேல் அதிபர் நெத்தன்யாகு. மத்திய கிழக்கில் இஸ்ரேல் வல்லரசாவதற்கான உச்சக்கட்டக் காய்நகர்வு என்பது இதுதான். அதாவது அமெரிக்கா ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தால் அதை ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இல்லாமல் செய்யும். அத்துடன் ரஷ்யா ஈரானுடன் இன்னும் நெருக்கமாகும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ள நிலையில் நெத்தன்யாகு ரஷ்யா பறந்தார். அமெரிக்காவுடன் மேற்கத்திய நாடுகளும் ஈரானை பொருளாதாரத்தில் இறுக்கினால் அது இஸ்ரேல் சர்வ வல்லாதிக்கத்துடன் மத்திய கிழக்கின் வல்லரசாக மிகப்பெரும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும். இஸ்ரேலின் அடுத்த கட்ட நகர்வுகள் ஈரானைச் சீண்டும் வகையிலும், ஈரான் ஏவுகணைச் சோதனைகளை மேற்கொள்ளத் தூண்டும் வகையிலும் அமையும் என்று எதிர்பார்க்கலாம். அமெரிக்காவின் தேவையும் அதுதானே.



## கிலியை ஏற்படுத்துகிறது கிலியோவா

கிலியோவா என்னும் எரிமலையால் பெரும் கிலியில் உள்ளது ஹவாய்.

உலகில் உள்ள சக்திமிகு எரிமலைகளில் ஒன்றே கிலியோவா. இந்த எரிமலை கடந்த சில வாரங்களாகக் கரும்புகையை வெளிப்படுத்தி வந்தது. வானில் சுமார் ஒரு கிலோ மீற்றர் அளவுக்கு கரும்புகை படர்ந்திருந்தது என்று குறிப்பிட்டன பன்னாட்டு ஊடகங்கள். எரிமலையின் சீற்றம் அதிகமானதை அடுத்து, அது எந்த நேரத்திலும் வெடித்துச் சிதறலாம் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டது. கிலியோவாவைச் சுற்றியிருந்த சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. கடந்த திடங்கள்கிழமை முதல் தொடர்ந்து வெடித்து வருகிறது கிலியோவா.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக உயிரிழப்புத் தவிர்க்கப்பட்டுள்ளது. எனினும், பெரும் பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது. பாடசாலைகள், வணிக வளாகங்கள், குடியிருப்புத் தொகுதிகளுக்குள்ளும் எரிமலையின் குழம்புகள் கரைபுரண்டோடி எதிர் வந்த அனைத்தையும் சாம்பராக்கியுள்ளன. கிலியோவாவின் நாசகாரச் செயலில் இருந்து மீண்டு வர பல பில்லியன் டொலர்கள் தேவை என்கின்றன பன்னாட்டு நிறுவனங்கள்.

"பெயரிலேயே உள்ளதே கிலி..."



## சிங்கப்பூரிலாம்



அமெரிக்க அதிபர் ட்ரம்ப் -வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான சந்திப்பு சிங்கப்பூரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தென்கொரியாவில் அண்மையில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் தொடரில் வடகொரியா பங்கேற்றதைத் தொடர்ந்து அந்த இரண்டு நாடுகளும் இணக்கமாகின. அணுவாயுதத்தைக் கைவிடுகிறோம் என்று வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் அறிவித்ததைத் தொடர்ந்து அவருக்கும் அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கும் இடையிலான சந்திப்பு நிகழ்வது தொடர்பில் ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் சந்திப்பு நடைபெறும் இடம், திகதி என்பன அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் அடுத்த மாதம் 12ஆம் திகதி சிங்கப்பூரில் இரண்டுதலைவர்களும் பேச்சு நடத்தவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"அப்பாடா ஒருமாதிரி செட் ஆகிட்டினம்..."

கட்டுரை



# திரைகடல் ஓடாமலும் திரவியம் தேடுகிறார்கள்...!

வி. அருணாசலம்

இறுதிப்போரின்போது முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உதவ வெளிநாட்டில் வாழும் தமிழர் ஒருவர் முன்வந்திருக்கிறார். பாதிக்கப்பட்டவர் தனது அன்றாடச் செயற்பாட்டைத் தானே செய்து கொள்ளக் கூடிய நவீன கட்டில் மற்றும் கதிரை. இலகுவாக வெளியில் போய் வரக்கூடிய வசதிகள் என எல்லாம் பொருந்திய ஒரு கருவியைப் பல இலட்சம் ரூபா செலவில் வாங்கிக் கொடுக்க முன்வந்துள்ளார். அந்த நவீன கட்டிலை அவர் தனது புகலிட நாட்டிலிருந்து கொள்வனவு செய்து உரியவருக்கு அனுப்பிவைப்பதாகக் கூறியுள்ளார். பணத்தை அனுப்பினால் போதும் தாம் அதைக் கொழும்பில் வாங்கி அவருக்குக் கொடுக்க முடியும் என ஊனமுற்றவருக்கான ஓர் உள்ளூர் அமைப்பினர் கூறியிருக்கின்றனர். அந்தக் கொடையாளி வழங்கிய பணத்தில் ஓர் உள்ளூர்க் கட்டிலையும், மெத்தையையும் வாங்கிக் கொடுத்து விட்டு மிகுதிப் பணத்தைச் சுருட்டி விட்டனர் அவர்கள்.

**முகவர்களுக்கு இலஞ்சம்...**

இறுதிப் போரில் ஊனமுற்றவர்கள் வெளிநாடுகளில் ஒரு பேசு பொருளாக மாறி விட்டனர். பாதிக்கப்பட்டவரையும் அவரது குடும்பத்தையும் நிற்க விட்டுப் பின்னணியில் ஒரு கொட்டில் வீடு அல்லது தறப்பாள் கூரை போட்ட வீடு தெரியுமாறு ஒளிப்படம் பிடித்து அனுப்பி வெளிநாட்டில் உள்ள தமிழரை ஏங்க வைக்கின்றனர். ஒரே நபரை வைத்து வெளிநாடுகளில் பல இலட்ச ரூபா பணம் சேர்க்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நபருக்கு 10பேர் பணம் வழங்கியிருந்தால், அதில் ஒருவரின் உதவி கூட பாதிக்கப்பட்டவருக்குக் கிடைப்பதில்லை. அல்லதுபோனால் பாதிக்கப்பட்டவர் இறந்து விட்ட சம்பவங்களும் அதன் பின்னர் அந்தக் குடும்பம் கவனிக்கப்படாது விட்ட சம்பவங்களும் தான் அதிகம். பொருட்கள், சேவைகளை விற்றுப் பணம் சம்பாதித்த தமிழர் தற்போது ஊனமுற்றோரைக் காட்டிப் பணம் சம்பாதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஊனமுற்றவர்களும், திக்கற்றவர்களும், கைவிடப்பட்டவர்களும் இவர்கள் மேலும் தமக்கு உதவுவார்கள் என்ற தவிப்பில் இவர்கள்மூலம் தமக்குக் கிடைக்கின்ற அவர்கள் பதுக்கியதுபோன மீதிப் பணத்தில் மீளவும் ஒரு பகுதியை இந்த உள்ளூர் முகவர்களுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் இலஞ்சம் கொடுக்கும் நிலையும் காணப்படுகின்றது.

**சோகம் காணாது இன்னும் கொஞ்சம் கூட்டி எழுதுங்கோ...**

ஊனமுற்றவர் முன்னாள் போராளியாக இருந்தால், அவரது ஊனத்தையும், அவர் இயக்கத்தில் இருக்கும்போது எடுத்த ஒளிப்படத்தையும் ஒப்பிட்டுக் காட்டி வெளிநாட்டிலிருக்கும் தமிழர்களிடமிருந்து பணத்தைப் பெறுவது இவர்களுக்கு இன்னும் இலகுவாகிறது.

ஒரு பாதிக்கப்பட்டவரின் படம் மட்டும் இதற்குப் போதுமானதல்ல அவரது தற்போதைய நிலை பற்றி எழுதப்படுகின்ற குறிப்பும் வாசிப்பவருக்குக் கண்ணீர் வருவதாக இருக்க வேண்டும் என்பதில் இவர்கள் வெற்றிகரமாகச் செயற்படுகிறார்கள்.

உதவி பெறுவதற்காக உள்நாட்டில் பாதிக்கப்பட்ட ஒருவரின் ஒளிப்படத்தையும் அவர் பற்றிய உண்மைச் செய்தியையும் எழுதி அனுப்பிய ஒருவர் கூறினார். தனக்கு வெளிநாட்டிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு "படம் சரி. அவர் பற்றிய செய்தியில் சோகம் காணாது சோகத்தைக் கூட்டினால் தான் இங்கு பணம் சேகரிக்க வசதியாக இருக்கும். ஒருக்காச் சோகத்தைக் கூட்டி எழுதித் திருப்பி அனுப்புங்கோ" என்று. குறிப்பை எழுதியவர் பொய்யைச் சோடித்து அதை எழுத விரும்பவில்லை.

**பம்மாத்துக்காரர்கள்...!**

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதான அமைப்புக்கள் பலவும் உள்நாட்டில் உள்ளவர்களோ, பாதிக்கப்பட்டவர்களோ தொடங்கியதாக இல்லை. வெளிநாட்டில் பணம் திரட்டக்கூடிய சிலர், தமக்கு விசுவசமாக உள்நாட்டில் செயற்படக்கூடிய சிலரை முன்னிறுத்தியே பல அமைப்புக்களை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த உள்நாட்டு நபரை ஏற்கனவே அந்த ஊரவர்கள் 'பம்மாத்துக்காரன், எம்டன், மாதா, சுழுத்தான், மண்டைக்காய், திருவன், உருளிக்காரன், கள்ளன், கள்ள உறுதிக்காரன், கோயில் பெருச்சாளி, அட்டை, பிலாப்பிசின், இறப்பர், நெருப்பன், தண்ணிக்குள்ளால நெருப்பைக் கொண்டு போறவன், நரியை நனையாமல் குளிக்க வார்ப்பவன், நச்சுக் குருத்து' என விளித்துக் களவில் கரைகண்டவர்கள் என்ற சிறப்புப் பெயர் கொண்டே சுட்டுகிறார்கள். இவ்வாறான அமைப்பொன்றை அந்த ஊரவர்களே உருவாக்குவதாக இருந்தால் இப்படியான நபர்களை ஊரவர்கள் ஒருபோதும் தலைவராகத் தெரிவு செய்ய மாட்டார்கள். 'அவன் சுருட்டிப் போடுவான்' என்று தவிர்த்து விடுவார்கள். ஆனால், வெளிநாட்டில் இருந்து இந்த உதவும் அமைப்பை நிறுவுவோருக்கு இவ்வாறானவர்களே தோதுப்படுகிறார்கள்.

**பணம் சுருட்டும் தந்திரம்**

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதாக காட்டிக் கொள்பவர்களில் பலர், தமது வேலைகளையும் உழைப்பையும் துறந்து தமிழ் மக்களுக்காகப் பாடுபடுவர்கள் அல்ல. ஒரு பாதிக்கப்பட்ட கிராமத்தையே முன்னேற்ற இருக்கிறோம். அதற்கு இத்தனை கோடி தேவைப்படும் என்று வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு மாயை காட்டி பணத்தை வசூலிக்கின்றனர். கிராமம் ஒன்றை அபிவிருத்தி செய்வதாயின் இலங்கை அரசின் அனுமதியைப்பெற வேண்டும். பணத்தைச் சேர்த்தபின்னர், "வேலையைத் தொடங்க சிங்கள அரசு தடையாக உள்ளது" எனக் கதை விடுவார்கள். இவர்கள் அந்தக் கிராமத்தைக் குறிப்பிட்ட அமைப்பு அபிவிருத்தி செய்வதற்கு ஆட்சேபனை இல்லை எனக் குறைந்தபட்சம் மாவட்ட செயலாளரால் உறுதிப்படுத்திய ஆவணங்களையாவது பெற முனைவதில்லை.

பாதிக்கப்பட்டவர்களில் 25 பேருக்கு வெளிநாட்டிலுள்ள தமிழர்கள் பணம் கொடுக்கிறார்கள் என்று வைத்தால், அதில் ஐந்து பேருக்கே அது கிடைக்கிறது. அதுவும் அதே தொகையில் அல்ல. சொற்பம். இருபது பேரின் பணமும் மீதியும் அங்கு பணிபுரிவோரின் சம்பளமாகவோ, நிர்வாகச் செலவாகவோ, போக்குவரத்துக்கான செலவுகளாகவோ, அடிக்கப்படுகின்றன.

**தாமாக முன்வந்து நேரடியாக உதவுதல்...**

வெளிநாட்டில் உள்ள சிலர் இந்த நிலைமைகள் சற்றுத் தெரிந்துவிட்டதால், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் விவரங்களைப் பெற்றுத் தாம் நேரடியாகவே அந்த குடும்பங்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தேவையான வாழ்வாதாரம், பிள்ளைகளின் படிப்புப் போன்ற விடயங்களில் தொடர்ச்சியாக உதவிவருகின்றனர்.

இங்குள்ள பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை வெளிநாடுகளில் பிரசுரிக்கின்ற பத்திரிகைகள் கூட பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகத் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கங்களை வெளியிடுவதில்லை. உதவி செய்ய விரும்புவர்கள் தமக்கூடாகவே உதவ முடியும் எனச் சண்டித்தனம் காட்டுகின்றன. இத்தகைய சிக்கலுக்குள் மாட்டிக் கொள்ளாமல் வெளிநாடுகளிலிருந்து உதவ விரும்புவர்கள் உள்நாட்டில் தமக்கு நன்கு தெரிந்தவர்களை வைத்து அவர்கள் மூலமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக உதவுவது சிறப்பான ஏற்பாடு ஆகும். அரசியல்வாதிகள் மற்றும் அமைப்புக்களைத்

> இறுதிப் போரில் ஊனமுற்றவர்கள் வெளிநாடுகளில் ஒரு பேசு பொருளாக மாறிவிட்டனர். பாதிக்கப்பட்டவரையும் அவரது குடும்பத்தையும் நிற்க விட்டுப் பின்னணியில் ஒரு கொட்டில் வீடு அல்லது தறப்பாள் கூரை போட்ட வீடு தெரியுமாறு ஒளிப்படம் பிடித்து அனுப்பி வெளிநாட்டில் உள்ள தமிழரை ஏங்க வைக்கின்றனர். ஒரே நபரை வைத்து வெளிநாடுகளில் பல இலட்ச ரூபா பணம் சேர்க்கப்படுகிறது.

தவிர்ப்பதன் மூலம் அந்த உதவி பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாகச் சென்றடைய வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு நேரடி உதவிகளைப் பெறுகின்ற பல குடும்பங்கள் கடந்த எட்டு ஆண்டுகளில் தமது பிள்ளைகளை பல்கலைகழகம் வரை அனுப்பியுள்ளனர். வாழ்வாதார நடவடிக்கைகளிலும் முன்னேறி உள்ளனர். இவர்கள் பற்றிய செய்திகள் வெளித்தெரிவதில்லை. இவர்களுக்குப் பல இலட்ச ரூபா உதவிகளைச் செய்த பலரும் குறித்த மக்களை நேரடியாக சந்தித்த போதிலும் அவர்களைப்படம் பிடித்து விளம்பரம் செய்வதில்லை.

**பொருத்தமற்ற உதவிகளால் பயனில்லை**

அரசு, தனியார், தனிநபர்கள் என வடக்குக் கிழக்கில் வாழ்வாதார உதவிகள் செய்வதாகக் கூறப்படும் பட்டியலைப் பரிசீலனை செய்தால் பாதிக்கப்பட்டவர்களுள்ள கிராம வீதிகளில் செல்ல முடியாத அளவுக்கு மாடுகளும், ஆடுகளும், கோழிகளும் பல்கிப்பெருகி இருக்க வேண்டும்.

மக்களுக்கு காசைக் கொடுத்ததைக் காட்டுவதற்காகச் சில குடும்பங்களுக்குச் சற்றும் பொருத்தமில்லாத தையல் இயந்திரம் போன்ற பொருட்களை வழங்குகின்றனர். அதை வைத்து வருமானம் பெறும் நிலையில் அவர்கள் இல்லை.

ஆனால், இவ்வாறாக உதவும் அமைப்புக்கள் பல இலட்ச ரூபாக்கள் செலவில் அலுவலகம் அமைத்துத் தமது செயற்பாட்டை மேற்கொள்கின்றன. அந்தப் பணம் எங்கிருந்து கிடைத்தது? என்று தேடிப்பார்த்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பணம் என்பது வெளிச்சமாகும்.

வடக்குக் கிழக்கில் பொரிய தொழிற்சாலைகளுக்கு முதலீடு செய்ததாக இல்லை. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களை முதலீடாக வைத்து இப்படிப் பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது பழமொழி. திரவியம் தேட வெளிநாடுகளுக்குச் சென்ற மக்கள் திரவியத்தை தேடிக்கொண்டு தமது சொந்த ஊருக்கு மீளவில்லை. அதேவேளை திரைகடல் ஓடாமல் திரவியம் தேடும் பலர் உள்நாட்டில் உருவாகி விட்டனர். அவர்களைப் பொறுத்தவரை திரைகடல் ஓடாமலும் திரவியம் தேடிவிடுகிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.



# கண்ணில் தெரியும் கனவுகள்

கவிதை

வேலணையூர் ரஜிந்தன்..

சிந்தனைச் சாறு பிழிந்து
கற்பனைச் சுவாலையில் எரித்து
கண்களில் கொஞ்சம்
இதயத்தில் மிச்சம் கனவுகள்
பதித்துத் தவித்திருக்கிறேன்!

ஏக்கத்தின் வெளிப்பாடுகள்
ஏகாந்த இரவுகள் தோறும்
எண்ணத்தின் தொழிற்பாடுகள்
விடியாத விடியலின்
காத்திருப்புக்கள்!
துயரங்கள் சுமந்த விழிகள்
துன்பங்கள் துளைத்த நெஞ்சம்
நிம்மதி தேடும் தூங்காத இரவுகள்
வாழ்வின் சாபங்கள் சுமந்து
நடை பயிலும் நாள்களின் முடிவிலிகள்!
போரின் சத்தங்கள் ஓய்ந்தாலும்
ஓய்ந்தாகவில்லை;
ஈழத்தில் இன்னல்களின் சீற்றங்கள்!
அக்கினி மேட்டிலும், முட்களின் புதரிலும்
கந்தகப் புகையில் வேகிய உடலம்!
எறிகணை ஓசைகளில் நடுங்கிய பயணம்
உயிருக்காய் ஓடிய கணப் பொழுதுகள்!

பிணங்கள் விதைக்கப்பட்ட தேசத்தில்
உதிரங்கள் ஆறாய் ஓடிய காட்சிகள்!
மீளாத துயரத்தில் மீட்சி தேடித் தவிக்கும்
தமிழன் கண்களின் ஓரத்தில்
மிஞ்சியதில் பனிக்கும்
ஒரு சில கண்ணீர்த் துளிகள்!





கப்ரன் மலரவன்



# போர் உலா

24

"இந்துக்கோயிலை இப்படியான ஒரு சூழலில் காணும்போது எனக்குள் ஒரு தாபம். முன்பு நான் சிறுவனாக இருக்கும் காலத்தில், சாதிப்பாகுபாடு காட்டி கோயிலுக்குள் செல்லும் ஒரு பகுதி மக்களை மற்றையவர்கள் தடுக்கும் வழக்கமும், பின் ஏதாவது சச்சரவு ஏற்பட்டு அவர்கள் சண்டையிட்டு வெட்டுப்படுவதும் எனக்குப் பழகிப்போன சிறுவயது நிகழ்வுகள். இன்று அந்நியன் கோயில் கர்ப்பக்கிரகம் வரை துவசமாடுகின்றான். எத்தனை அசூசைகள் செய்ய வேண்டுமோ அத்தனையையும் செயலில் காட்டியிருக்கின்றான். கோயிலின் மணிக்கூட்டுக் கோபுரத்தில் பெரிய காவலரண். இதைக் கேட்பதற்கு இன்று ஒரு சமய பக்தரும் இல்லை. இன்று கூடச் சாதிப் பிரிவினையால் கோயில் சண்டைகள் சிறிய அளவுக்கு மறைமுகமாக நடைபெறுகின்றன. பலர் மனதில் எதிர்ப்பைத் தேக்கியுள்ளனர். இவர்களெல்லாம் ஏன் ஏகாதிபத்திய தலைவிரித்தாடலின் முன் வாயடைத்துப் போகிறார்கள்? இவற்றைக் கேட்க மட்டும் போராளிகள் என்ற நிலையா தேவை?

ஒரு சுதந்திரச் சூழலில் முற்போக்கான தலைமுறையைத் தோற்றுவிக்கப் போராளிகள் உயிர்த்தியாகம் செய்கையில், நீங்கள் ஏன் பிற்போக்குத்தனத்தைக் கைவிடத் தயங்குகின்றீர்கள்? இவை என்றும் எம்முடன் ஒட்டிப் பிறவாது நாமாக வரித்துக் கொண்டவைதானே? எல்லையிலே எமது துப்பாக்கிகள் எதிரிகளுக்குச் சமாதி கட்டுகையில், நீங்கள் நாட்டினுள் சமுதாயச் சீர்கேட்டைக் குழி தோண்டிப் புதைத்து விடுங்கள். நாளை நாங்கள் அனைவருமாய்ப் புதியதோர் ஈழம் படைப்போம். கோயில் காவலரணைப் பார்வையிட்ட பின், பிக்கப் வாகனம் ஒன்றில் ஏறி, கனகராயன்குளம் நோக்கிப் பறந்து போனோம். கண்கள் வானத்தை வட்டமிட்ட வண்ணம் இருந்தன. இயந்திரக் கழுகுகள் காற்றினுள் இன்னமும் சுற்றிக் கொண்டு இரைதேடின.

இராணுவம் காட்டினுள் இறங்கிவிட்ட செய்தி மக்களிடையே காட்டுத்தீபோல பரவ ஆரம்பித்தது. எங்கும் கூட்டம் கூட்டமாகக் கூடி நின்று கதைத்தார்கள். இவர்களில் பலர் சொட்கண் துப்பாக்கிகளையும் இடியன் எனப்படும், கட்டுத் துவக்குகளையும் ஏந்திய வண்ணம் காட்டை நோட்டமிடுவது தெரிந்தது. நாம் நேராகப் புதுவிளான்குளம் எனும் சிறிய அழகான கிராமத்தில் தங்கினோம். சுமார் ஐந்து பொதுமக்களின் வீடுகளில் குழுக் குழுவாகத் தங்கி நின்றோம். இதில் நான், மாஸ்ரர், இதயன், அழகு ஆகியோரும் இன்னமும் ஆறுபேருமாக ஒரு வயோதிபர் வீட்டில் தங்கிக் கொண்டோம்.

சென்றவுடன் அவர்களது அன்பாக மதிய உணவை அருந்தி விட்டு நன்றாக நித்திரை செய்து, இரவு 7.30 மணியளவில்தான் விழித்துக்கொண்டோம். தேநீரை அருந்திய பின் இரவுப் போசனத்தின் முன்பாகத் தலைவாசலில் சென்று, ஐயாவுடன் அமர்ந்து கொண்டோம். உண்மையில் வயோதிபர்களுடன் உரையாடுவதோ அவர்களது கதைகளைக் கேட்பதென்பதோ எமக்கு மிகுந்த மகிழ்ச்சிதரும் விடயம். இவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் வேளைகளைத் தவறவிடுவதில்லை. நான்தான் உரையாடலைத் தொடக்கி வைத்தேன்.

"ஐயா இங்க வந்து குடியேறி கன வருடமோ?"

"எங்கட அப்பா, அம்மா கலியாணம் கட்டி இதிலதான் குடியேறியவை. அப்ப அவைகள் புதூர் நாகதம்பிரான் கோயிலுக்குப் பக்கத்திலதான் இருந்தவை. நானும் அதிலதான் பிறந்து வளர்ந்தனான். பிறகு எனக்கு ஒரு... இருபது இருபத்திரண்டு வயசிலதான் இந்தக் காணிகளெல்லாம் காடுவெட்டி 'பேமிட்' போட்டு உறுதியாக்கினனான். பிறகு கலியாணம் செய்தபிறகு இங்கதான் பிள்ளை குட்டியள் பிறக்க இருக்கிறன்"

"அப்ப ஐயாவுக்கு இப்ப எத்தனை வயது?"

"எனக்கோ? இப்ப... ஆ, எழுபத்தைஞ்சு ஆகுது. ஆ... 14ஆம் ஆண்டு பிறந்தனான் எண்டாப் பாருங்கோவன்"

"உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?"

"மூத்தது பெடிச்சி, இப்ப கனகராயன்குளத்தில் குடும்பத்தோடு இருக்கிறாள். அடுத்தவன் பெடியன். அவன் ஏதோ வியட்டோ புளட்டோ இயக்கத்தில் இருந்து பிறகு சுடுபட்டுச் செத்துப் போனான். இந்திய ஆமி இருக்கேக்கதான். மற்றவன் கடைக்குட்டிப் பொடியன். இப்ப புலவுக்குப் போட்டான். மருந்தடிக்க, இப்ப வந்திடுவான்"

"கன காணிபூமி கிடக்குதோ?" வாத்தியார் கிளறினார்.

"சீச்சி, என்ன இருப்பத்தைஞ்சு ஏக்கர் நிலம் கிடக்கு. அதிலதான் வயலுகள், தோட்டங்களும் இந்த ஒரு ஏக்கரில வீடும் கிடக்குது. இப்ப எல்லாம் போச்சு. உந்த கிளிச கெட்ட சனங்கள் வரத்தொடங்கினாப்பிறகு கைவிட்டுட்டன். ஏதோ வருசத்தில ஒருநாள் பெரிய படையல் செய்வன்; அவ்வளவுதான். இப்ப எங்கே? எல்லாச் சாதியும் இப்ப வெளிநாட்டுக்காரர். அந்தக் காசில எங்களை எங்கே மதிக்கினம்?"பெருமூச்செறிந்தார்.

"எல்லோரும் மனிசர்தானே? உதில என்ன சாதி பார்க்கிறது..."என இழுத்தேன்.

"என்னெண்டாலும் சாதிக்குரிய மதிப்பு வருமே?"அவருடன் மேலதிகமாகக் கதைப்பது அர்த்தமற்றது எனப் புரிந்து கொண்டேன்.

"ஐயா இளைய மகனை வெளிநாட்டுக்கு அனுப்பேல்லையோ? அங்கதானே எங்கட ஊர்ப் பொடியள் வாரிவாரி அள்ளி அனுப்புறாங்கள்?"

வாத்தியார் கூறினார்

"சா...அதுவும் ஒரு வேலையே, இஞ்ச எங்கட தேசத்திலை இத்தனை நிலம் சும்மா கிடக்க? குளம் நிறையத் தண்ணி கிடக்க. பொன் விளையிற பூமியை விட்டுட்டு அங்க போறதோ? எனக்கோ பொடிக்கோ கனவிலையும் உந்த எண்ணம் இல்லை. எங்கட ஊரில இருந்து கஞ்சி குடிச்சுக்கொண்டு உந்தக் குளத்தை, காட்டை, கோயிலை, முற்றத்தைப் பார்த்துக்கொண்டு சாகலாம்! உவங்களுக்குப் பயந்து ஒருநாளும் போகமாட்டம்."

அவருடனான உரையாடலில் ஒன்றைத் தெளிவாகப் புரியக் கூடியதாக இருந்தது. இந்த நேரத்தில் நடக்கும் விடுதலைப் போராட்டத்துக்கு எந்த வகையிலும் ஒத்துப்போகக் கூடிய மனப் பாங்கைப் பெற்றிருந்தார்.

எமது மண் அநாதையாவதோ, எமது வளங்கள் வீணாகிப் போகையில் வெளிநாடு செல்வதோ அவரது விருப்பத்துக்கு மாறானது. ஆயினும் சில பழைய சமுதாயக் கட்டமைப்பை மாற்றத் தயங்குகின்றார். இந்த வேளையில் தான் இளைய தலைமுறைகள் விழித்துக்கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் உங்கள் பெற்றோரை வழிகாட்ட வேண்டிய வரலாற்றுப் படியில் நிற்கின்றீர்கள். ஒரு சிலரால் அது முடியாதுவிடின் உங்களையாவது புதிய பிறப்புக்காக மாற்றிக்கொள்ள வேண்டும்.

இன்று ஒரு நாகரிக வாழ்வைப் பெற விழையும் நீங்கள், உங்களைப் பிணைத்திருக்கும் பழைமைவாதக் கோட்பாடுகளை உடைக்க வேண்டும். இறுக்கமான கொம்யூனிசம் நிலவிய சீனாவை, சோவியத் ரஷ்யாவைப் பாருங்கள். சீனாவில் பத்து இலட்சம் மாணவர், தியனன்-மென் சதுக்கத்தில் ஜனநாயக உரிமை கேட்கின்றார்களே என்றால், அது பெற்றோரின் அனுமதியுடனானது என்பது முற்றான தவறு.

அங்கு கொம்யூனிசப் படைகள் மத்தியில் அவர்கள் இவ்வாறான மாபெரும் ஒன்றுகூடலை நடாத்துகையில் நீங்கள் ஏன் உங்களுக்குக் காவல்செய்யும் போராளிகள் துணையாக இருக்கையில் முற்போக்கு நடவடிக்கையில் ஈடுபடாமல் வெறும் மனித பிண்டங்களாக வாழ்கின்றீர்கள்? ஈழத்தின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றுசேர்ந்து ஓர் இலட்சியத்துக்காக ஒரே தலைமையில் என்று வீதியில் இறங்கி அணிதிரள்கின்றனரோ, அன்றைய தினமே மாவீரரைக் கௌரவிக்கும் விடுதலைத் தினமாகும். இந்த நிலைக்கு வருமுன் மூட, சமுதாயக் கட்டுக்களை உடைத்து அனைத்துத் தேச மனித வளங்களையும் பொருளாதார சமூக மேம்பாட்டுக்காகப் பயன்படுத்துங்கள். இதுவே உலக பொருளாதார ஓட்டத்தில் எங்களையும் தக்க வைக்கும்.

"ஈழத்தின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றுசேர்ந்து ஓர் இலட்சியத்துக்காக ஒரே தலைமையில் என்று வீதியில் இறங்கி அணிதிரள்கின்றனரோ, அன்றைய தினமே மாவீரரைக் கௌரவிக்கும் விடு தலைத் தினமாகும். இந்த நிலைக்கு வருமுன் மூட, சமுதாயக் கட்டுக்களை உடைத்து அனைத்துத் தேச மனித வளங்களையும் பொருளாதார சமூக மேம்பாட்டுக்காகப் பயன்படுத்துங்கள்.

(தொடரும்)

கட்டுரை



முருகேசு சச்சிதானந்தம்

# 8 கோடித் தமிழகத் தமிழர்கள் பார்த்திருக்க..



1983ஆம் ஆண்டுக் கலவரத்தின்போது ஏராள மான தமிழர்கள் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்டார்கள். அதே நேரம் மனிதாபிமானம் உள்ள சிங்களவர்களால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் காப்பாற்றவும் பட்டார்கள். ஆனால் காப்பாற்றப்பட்ட தமிழர்கள் கூடத் தாம் காப்பாற்றப் பட்டதை முன்வந்து கூறவில்லை.

**1983** ஆம் ஆண்டின் பின்பான காலப்பகுதியில் ஈழத்தமிழ் இளைஞர்கள் பலர் தமிழ் நாட்டுக்குள் இறங்கி அங்குள்ள அரசியல்வாதிகளதும், தமிழ் நாட்டு மக்களதும் 'மண்டையைக் கழுவும்' முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். இந்த முயற்சியில் சிங்களவரை மிக மோசமாகக் காட்டுவதே அவர்களின் முதலீடாக இருந்தது. தமிழ்நாட்டின் பல ஊர்களில் பரப்புரை செய்த ஓர் இயக்கத்தின் உறுப்பினர்கள் மிகக் குறுகிய காலத்திலேயே இந்தியத் தமிழரின் பலவீனம் என்ன என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ப பரப்புரை உத்திகளை மாற்றிக் கொண்டார்கள். அதைக் கேட்ட இந்திய மக்கள் இறுதிப் போரின்போதும் தமது மனநிலைக்கு ஏற்பவே நடந்து கொண்டார்கள். முன்பு இயக்கங்களின் பரப்புரைக் காரர்கள் கூறிய கதைகளில் ஒன்று 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது தமிழர்கள் சிங்களக் காடையர்களார் கொல்லப்பட்டார்கள். சிறைக்குள் அடைபட்டுக் கிடந்த குட்டிமணியைச் சிறைக்குள் வைத்துச் சிங்களக் காடையர்கள் சித்திரவதை செய்தார்கள். தனது கண்ணால் தமிழீழத்தைக் கண்டபின்பே சாவேன் என்று அவர் கூறியதை வைத்து அவரது கண்ணைத் தோண்டிச் சுவரில் ஒட்டினார்கள். (வேறு சில உணர்ச்சிக் கதைகளைப் பேசிவிட்டு) அந்தக் காடையர்கள் அத்துடன் விட்டார்களா? அவரது மறு கண்ணையும் தோண்டினார்கள் (மீண்டும் வேறுபல விடயங்களைக் கூறிவிட்டு) அந்தக் கயவர்கள் அத்துடன் அடங்கவில்லை. குட்டிமணியின் மறு கண்ணையும் தோண்டினார்கள் என்று பேசியபோதிலும் குட்டிமணிக்கு மூன்று கண்களா இருந்தன? என்று இதைக் கேட்டுக் கொண்டிருந்த யாரும் கேள்வி கேட்கவில்லை என்று குறித்த நபர்களின் பரப்புரை உத்தியைச் சம்பந்தப்படுத்திய ஒரு பேச்சுவழக்கு உண்டு.

1983ஆம் ஆண்டுக் கலவரத்தின்போது ஏராளமான தமிழர்கள் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்டார்கள். அதே நேரம் மனிதாபிமானம் உள்ள சிங்களவர்களால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் காப்பாற்றவும் பட்டார்கள். ஆனால் காப்பாற்றப்பட்ட தமிழர்கள் கூடத் தாம் காப்பாற்றப்பட்டதை முன்வந்து கூறவில்லை.

## இந்தியாவின் அணுகுமுறை

ஈழத்தமிழர் விடயத்தில் இந்திராகாந்தி அம்மையார் ரெலோ அமைப்பை இந்தியாவின் விருப்பத்துக்குரிய ஆயுத அமைப்பாக முதன்மைப் படுத்தியிருந்தார். எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைவருக்கு முதன்மை கொடுத்து அந்த அமைப்புக்குப் பல கோடி ரூபா நன்மைகளும் செய்யப்பட்டது. எம்.ஜி.ஆரின் கொள்கையில் ஊறிப்போன முதலமைச்சர் ஜெயலலிதா அவ்வாறான உதவியையோ ஒத்தாசையையோ தொடரவில்லை.

குறைந்தபட்சம் ஈழத்திலிருந்து அகதிகளாகச் சென்று இந்தியப் பாடவிதானங்களைக் கற்று மருத்துவபீடத்துக்குத் தெரிவாகின்ற மாணவர்களுக்குக் கூட மருத்துவபீட அனுமதியை முதல்வராக இருந்த ஜெயலலிதாவால் வழங்கமுடியவில்லை. மருத்துவத் துறைக்கு பரீட்சைமூலம் தெரிவாகுவதும் பயங்கரவாதமா? 1983 இன் பின்பான காலப்பகுதியில் போர் நெருக்கடியால் இந்தியாவில் தஞ்சம் புகுந்த தமிழருக்கு அங்கு எந்த உரிமையும் கிடைக்கவில்லை. ஆனால் அதே காலப்பகுதியில் இந்தியா தவிர்ந்த நாடுகளுக்குள் கால் பதித்தவர்கள் அந்த நாட்டின் குடியுரிமையையும் பெற்று வேறு பல வசதி வாய்ப்புக்களையும் பெற்றுக்கொண்டனர்.

30 வருடங்கள் கடந்தபின்பும் இந்தியத் தமிழர்களின் தொப்புள்கொடியாக இல்லாமல் இந்தியாவின் இராஜதந்திர பகடைக்காய்களாக மாற்றப்பட்டுள்ளனர். இந்தியாவில் அகதிகளாக இருந்து இனியும் பயனில்லை என்று தாய்மண்ணுக்குக் களவாகக் கடல் மார்க்கமாக கடந்த மாதம் 5ஆம் திகதி வந்த 12பேர் காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர். இதில் வயதான அம்மா ஒருவர் ஒன்பது மாதக் குழந்தை ஒன்றைக் கையில் வைத்திருந்தார். அந்தக் குழந்தையின் தாயார் எங்கே என்று விசாரித்தபோது அவர் சென்னையிலிருந்து வானூர்தி மூலம் முதல் நாள் கொழும்புக்கு வந்துள்ளார். அந்தப் பிள்ளையைத் தன்னுடன் கொண்டு வருவதற்கான ஆவணங்களை இந்திய அரசிடம் பெறுவதில் இருந்த சிக்கல் காரணமாகவே தனது தாயாரிடம் பிள்ளையைக் கொடுத்து கடல் மார்க்கமாகக் கொண்டுவரச் செய்திருக்கிறார். இந்தியாவின் ஈழத் தமிழர் மீதான அணுகுமுறை இப்படியிருக்கிறது.

## பிரபாவை வைத்து அரசியல்

ஈழத்தமிழர் உரிமை விடயத்தில் மனதார ஈடுபட்டவர் பழ நெடுமாறன். அவர் தமிழர்களுக்கு உரிமை கிடைக்கவேண்டும் என்று இன்றுவரை உழைத்து வருபவர். ஆனால் தோய்த்துக் காயவிட்ட வேட்டி காயும்வரை அடுத்த நிகழ்வுக்குச் செல்வது தாமதிக்கின்றது. அவ்வளவுக்கு அவர் வறுமையில் வாடுகிறார். வைகோ, சீமான், தொல் திருமாவளவன் போன்றவர்கள் புலிகளின் தலைவர் பிரபாகரனை வைத்தே தமது அரசியலை ஓட்டிக்கொள்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரை பிரபாகரனுடன் எடுத்த ஒளிப்படம் ஒன்றைப் பல பிரதிகளாக்கி அவற்றைத் தமிழ்நாட்டு மக்களுக்குக் காட்டி அரசியல் செய்கின்றனர்.

ஈழத்தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழ்வதால் அவர்கள் இந்தத் தலைவர்களுக்கான மேடைகளை வெளிநாடுகளில் அமைத்துக் கொடுக்கிறார்கள். ஈழத்தமிழரிடம் கடமைப்பட்ட அவர்கள் பிரபல்யத்தையும் பணத்தையும் பெற்றுக்கொள்ளும் ஒரு மார்க்கமாக ஈழத்தமிழரை ஒரு பேசுபொருளாக ஆக்கிக்கொண்டார்கள்.

கிருபானந்தவாரியார் எவ்வாறெல்லாம் முருகப்பெருமானைப் புகழ்ந்து பாடமுடியுமோ அவ்வாறெல்லாம் உபகதைகளையும், பாடல்களையும் சொல்லிச் சுவையூட்டினார். அதே தன்மையிலேயே வைகோ, சீமான் போன்றவர்கள் உணர்ச்சி கொப்பளிக்க வெளிநாடுகளில் தமிழர் மத்தியில் ஈழத்தமிழரைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் தாங்கள் ஈழத்தமிழருக்கு எதைச் செய்தோம் என்பது பற்றிக் கூறுவதில்லை.

இந்தத் தலைவர்களால் இந்தியத் தேர்தல்களில் ஓர் ஆசனத்தைக்கூட பெறமுடியாது. தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் அவர்கள் ஒரு தலைவராக அங்கீகரிக்கப்படாமாட்டார்கள். ஆனால், ஈழத்தமிழர் உரிமைகளைக் கையில் எடுத்து அதையொட்டியே தமது அரசியல் வாழ்வைக் கழித்துவருகிறார்கள். முள்ளிவாய்க்கால் போர் முடிந்து எட்டு வருடங்களின் பின்புதான் கவிப்பேரரசு வைரமுத்துகூட முள்ளிவாய்க்காலைப் பார்த்து முறுக்கேறிப் பேசினார்.

## தமிழகத் தமிழர்களின் எழுச்சி!

வன்னிக்குள் அகப்பட்ட மக்கள் மட்டும்தான் இறுதிக்காலத்தில் தமிழீழத்துக்காகப் போராடுகிறார்கள் என்ற தோற்றப்பாடு இருந்தது. யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் வவுனியாவிலும் ஏனைய பகுதிகளிலும் இருந்த தமிழர்கள் அச்சுறுத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். கடல் கடந்திருந்த நாட்டுத் தமிழர்களின் நிலை அவ்வாறிருக்கவில்லை. ஜல்லிக்கட்டு எழுச்சிக்கிருந்த அவசியம் அன்றைக்கு இருக்கவில்லை. யாரும் அக்கறைப்படவில்லை. போருக்குள் மாட்டிக்கொண்ட மக்கள் பட்டினி கிடந்தார்கள், காயப்பட்டார்கள், மலம் கழிக்கக்கூட வழியில்லாது தவித்தார்கள். தமது உறவுகளைப் பதுங்குகுழிக்குள்ளேயே

புதைத்துச் சென்றார்கள். திக்கற்றுச் சிதைந்து போனார்கள், அங்கங்கள் இழந்தார்கள், அநாதையானார்கள் தம்மிடம் எஞ்சியிருந்த மாடுகளையும், ஆடுகளையும், கோழிகளையும், நாயையும் கூட இழந்து தவித்தார்கள். இறுதி நிமிடம் வரை அவர்கள் உயிர்பிடித்திருந்தது ஓர் அதிசயம்தான். வீடில்லை, கூரையில்லை, வானமே கூரையென்ற வாழ்க்கையில் உணவுப் பொருள்களுமில்லை, களஞ்சியமுமில்லை. உடல் சேமித்து வைத்திருந்த ஒரு சில கனியுப்புக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வழங்கி உயிர்பிடித்திருந்த சம்பவங்கள் பலருக்குத் தெரிந்திருக்கவில்லை.

முள்ளிவாய்க்காலில் இறுதிவரை நின்றவர்கள் பிரபாகரனும் அவரது குடும்பமும், போராளிகளும், மக்களும்தான். அவ்வாறானவர்களின் சாவை நினைவுகூர்ந்து நினைவாலயம் ஒன்று தமிழ்நாட்டில் கட்டப்படுவதாக இருந்தால், அங்குள்ள 8கோடித் தமிழர்களும் தம்மால் முடிந்தளவு பணத்தைக் கொடுத்து ஒரு நினைவாலயம் கட்டியிருந்தால் அது பெருமையாக இருந்திருக்கும். ஆனால், நிலமை அவ்வாறிருக்கவில்லை.



இந்தச் சம்பவத்தை எந்த ஈழத்தமிழ் அரசியல் தலைவரும் பிழையென்று சுட்டிக்காட்டவில்லை. தமிழ் நாட்டிலுள்ள தமிழர் தொப்புள்கொடி உறவுள்ளவர்கள் என்றால் அவர்கள் ஒரு ரூபா கொடுத்தாலும் மகிமையும், அன்பும், ஆத்மாவும் இருந்திருக்கும். சசிகலாவின் கணவரான நடராஜன் ஒருவர் மட்டுமா ஈழத்தமிழ் மக்களின் தொப்புள்கொடி உறவுள்ளவர்? உண்மையில் ஈழத்தமிழர்களின் அயலவர்கள் யார் என்று பார்த்தால் அது சிங்களவராகவே இருக்கமுடியும். கடல் கடந்த தமிழ்நாட்டு தலைவர்கள் அல்ல என்பது 2009 மே மாதத்தில் தெட்டத்தெளிவாகத் தெரிந்தது. இந்தச் சம்பவம் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் பெரிய நிம்மதியைக் கொடுத்து. இலங்கைத் தமிழரைப் பற்றி தமிழ்நாட்டுத் தமிழனே அக்கறைப்படவில்லை என்ற உண்மை தெரியவந்தது. இதனால் முள்ளிவாய்க்கால் போர் இழப்பு ஆனது 8 கோடித் தமிழகத் தமிழர்களின் கண்முன்னே நடந்தேறியது என்பதும் உண்மைதான்.

தொடர்கதை

கே.எஸ்.ஆனந்தன்



அத்தியாயம் 13

# நின்னைச் சரணடைந்தேன்

காலையில் எழுந்து காரியாலயத்துக்குச் செல்ல ஆயத்தமாக வந்த சுவேதா, ரவி பூஜை அறையில் தியானித்திருப்பதைப் பார்த்துவிட்டு வெளியே மௌனமாய் நின்றிருந்தாள். அவன் வெளியே வந்து "சரி வாரும் சாப்பிடலாம்" என அழைத்தான். உணவருந்தும்போது,

"சுவேதா தேவை ஏற்பட்டால் அறிவிப்பேன். விசாலியை அந்தச் சட்டத் தரணியின் ஒவ்பீசுக்கு அனுப்பிவையும். இனி இறைவன் விட்ட வழி" என்று கூறி அவளை அவளது வாகனம் வரை சென்று அனுப்பி வைத்தான்.

அவன் தன்னுடைய வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமாகி வெளியே வந்தபோது வெளிவாசலில் ஒருவர் நிற்பதைப் பார்த்து "நீங்கள் யாரைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றீர்கள்?" என்றான்.

"மிஸ்ரர் ரவி சங்கர். சுவேதா மேடத்தின் மிஸ்ரர்?"

"ஓம்... என்ன விசயம்?"

"சேர்! என் பெயர் சண்முகம். விசாலியின் கணவன். புறொக்டர்தான் என்னை இங்கே சென்று உங்களைச் சந்திக்கும்படி அனுப்பி வைத்தார்"

"நான் அங்கதான் வெளிக்கிட்டுக்கொண்டிருக்கிறன். பரவாயில்லை. உள்ள வாங்கோ" என்று ஹோலுக்குக் கூட்டி வந்து அமரச் செய்தான்.

"மிஸ்ரர் சண்முகம் உங்களை யார் என்று எனக்குத் தெரியாது. நேற்று உங்கள் வைவ் விசாலி இஞ்ச வந்து சுவேதாவிடம் கதைத்துவிட்டுப் போனா. நான் விசாரிச்சபோது சுவேதா உங்கள் கதையைக் கூறினாள். டிவோசுக்குப் போகும் எவுக்கு உங்களுக்குள் என்ன பிரச்சினை?"

"சேர்! நான் வேலைசெய்த கொம்பனியை மூடிவிட்டார்கள். எனக்கு வேலை இல்லை. விசாலி நல்ல பெண். ஆனா, அம்மாக்காரி? என்னை ஒரு மருமகனாக வேண்டாம்... மனிதனாகக் கூட மதிக்கிறதில்லை. விசாலி, அரச உத்தியோகம் பாக்கிறபெண் எண்டு தெரிஞ்சதும் நான் கல்யாணத்துக்குச் சம்மதிக்கேல்லை. இதே மனிசி என்னிடம் எவ்வளவோ மன்றாடித்தான் சம்மதிச்சன். அதுக்காக நான் செய்தது சரி எண்டு சொல்ல வரயில்லை. அந்த மனிசி எந்த நேரமும் சரிச்சுக்கொட்டினபடி. பொறுமை எல்லை மீறவும் வீட்டுக்குப் போக கூடாது என்ற நினைவில் குடிக்க ஆரம்பிச்சன். விசாலிக்குப் பிடிக்காது என்று தெரிஞ்சும் குடிச்சன். பிரச்சினை மேலும் சிக்கலாய்ப்போட்டுது. மறைமுகமாகத் திட்டிய மாமி நேரடியாகவே பேச ஆரம்பிச்சிட்டா. 'உழைப்புப் பிழைப்பில்லாமலிருந்து மகளின் உழைப்பில் குடிக்க உனக்கு வெட்கம், ரோசம் இல்லையா?' என்று கூடக் கேட்டு விட்டா. விசாலி நல்லவள். யாரைத் திருப்திப்படுத்துவது என்று தெரியாது அழுகிறாள். பாவம் இந்தக் கஷ்டத்தில் அவள் வேறு கர்ப்பமாயிருக்கிறாள். நான் விலகிப் போய் விட்டால் அவளாவது சந்தோசமாயிருக்கட்டுமே என்றுதான்" எனக்கூறி நிறுத்தியவன் விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டான். "சண்முகம்...! எனக்கு உங்கள் பிரச்சினை விளங்குது. உமக்கு நல்லதொரு வேலை கிடைச்சால் விசாலியுடன் குடும்பம் நடத்துவீரா?"

"சேர்! நான் கூலிவேலை செய்யவும் தயாராயிருந்தன். விசாலி தனக்குக் கௌரவம் இல்லை என்று தடுத்துவிட்டாள். ஆனால் தாய்க்காரி அப்பிடியில்லை. விறகு கொத்தக் கூடவா உனக்குத் தெரியாது. எங்காவது போய் அப்பிட உழைத்துக் குடன். என்றெல்லாம் பேசினால் எப்பிட என்னால் அங்கிருக்க முடியும்?"

"உங்களுக்குக் கௌரவமான வேலை கிடைச்சால் விசாலியுடன் இணைந்து வாழமுடியமில்லையா?"

''சேர் உங்களை என்ர சகோதரனா நினைச்சுச் சொல்லுறன். தனது தாயை விசாலி கட்டுப்படுத்தாமல் வாய் மூடிக்கொண்டி ருப்பதால்தான் அவர் கண்டபடி பேசுறா. அதுதான் விசாலி மீது எனக்குக் கோவம். அதனால்தான் தாயுடன் அவள் சந்தோசமாய் இருக்க விரும்பினால் இருக்கட்டுமே என்ற மிரட்ட லுக்காக நோட்டீஸ் அனுப்பினேன். ஆனால் நானும் குடிச்சுச் சீரழிந்து என் குடும்பக் கௌரவத்தை இழக்க விரும்பவில்லை. உண்மையில் விசாலி எதை விரும்புறாளோ. அதை நான் மனப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளுவன். என் தாய் மீது சத்தியம்" அவன் விழிகள் நீரைச் சொரிந்தன.

"இங்கே பாரும் சண்முகம், விசாலியின் விருப்பம் எப்படியோ, விசாரித்து முடிவு செய்வம். எங்களுடைய ரெக்ஸ்ரைல் தெரியும்தானே? அங்கே உங்களுக்கு வேலை தரலாம். வருடா வருடம் சம்பள உயர்வு. போனஸ் என வழங்கப்படும். கௌரவமாய் நீங்களிருக்கலாம். உமது நல் நடத்தை பற்றிச் சுவேதா கூறியதால், உங்கள் மனைவி உங்களைப் பற்றி கூறிய விடயங்கள் யாவும் அறிந்தேன். அதனாலதான் நான் கேட்கிறன். நீர் விரும்பினால் இப்போதே விசாலியை அழைத்துப் பேசலாம்" என்றான். சண்முகம் எழுந்து அவன் கரங்களைப் பற்றி, "இதை உங்கள் கால்களாக நினைத்துப் பற்றுகிறேன். நீங்கள் எடுக்கும் எந்த முடிவுக்கும் நான் கட்டுப்பட்டு நடப்பேன்" என்றான்.

"சண்முகம், இதென்ன... பெரிய வார்த்தைகள் எல்லாம் பேசித் தர்ம சங்கடத்துக்குள்ளாக்குகின்றீர்கள். அமருங்கள். நல்ல மனிதர்களுக்கு உதவுவதில் எந்தத் தவறுமில்லை. என் மனைவியின் ஒவ்பீஸில் வேலை செய்யும் உங்கள் மனைவியின் பிரச்சினை எங்கள் குடும்பப் பிரச்சினையாகிவிட்டது. நீங்கள் நாளைக்கே வேலைக்கு வரலாம். விசாலியை அழைத்து விசாரிப்பம்" என்று கூறி மொபைலில் சுவேதாவை அழைத்து "விசாலியை உங்கள் வீட்டுக்கு அனுப்பி வையும்" என்றான்.

"நீங்கள் புறொக்டர் வீட்டுக்குப் போகவில்லையா? சண்முகம் வரவில்லையா? விசாலியை எங்கள் வீட்டுக்கா?"

"ஓமோம்... மிஸ்ரர் சண்முகம் என்னைத் தேடி வீட்டைடிய வந்திட்டார். எனக்கு முன்னால்தான் இருக்கிறார். அவர் எதற்கும் தயார். விசாலியின் கையில்தான் முடிவு தங்கியுள்ளது'' என்றான்.

"சரி, விசாலியை அனுப்பி வைக்கிறன்" அவள் வருவதற்கிடையில் சிவகாமி, இருவருக்கும் தேனீர் கொடுத்து உபசரித்தாள். பதினைந்து நிமிடத்தில் வீட்டு வாசலில் வந்து நின்ற வண்டியிலிருந்து விசாலியுடன் வந்த பெண்ணைக் கண்டு சண்முகம் திடுக்கிட்டு எழுந்து நின்றான். அவர்களது வண்டியின் பின்னால் வந்து நின்ற மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கியவரைப் பார்த்து ரவி சங்கரும் எழுந்து நின்றுகொண்டான். வந்தவர்களைக் கண்டு ரவிசங்கரும், சண்முகமும் ஒருவரை ஒருவர் திகைப்புடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

0000

முதலில் வந்த வண்டியிலிருந்து தாயும் மகள் விசாலியும் இறங்கியதைப் பார்த்த சண்முகம் வியப்புற்று எழுந்து நின்றான். பின்னால் வந்துநின்ற வண்டியிலிருந்து புறக்டர் சிவநேசன் இறங்கியதைப் பார்த்து ரவிசங்கர் எழுந்து நின்றான்.

"குட்மோனிங் ரவி. உங்கள் வீட்டிலேயே குடும்ப நீதிமன்றம் ஒன்றை ஆரம்பித்து விட்டீர்கள்போலும்" என்று கூறியவாறே விசாலியையும், தாயையும் அழைத்துக்கொண்டு வந்தார் சிவநேசன்.

''வாருங்கள். அமருங்கள். நீங்கள் இவரை அனுப்பி விட்டு எங்காவது போயிருக்கலாம் என்று நினைத்தேன். உங்களை உண்மையில் நான் எதிர்பார்க்கவில்லை" என்றான் ரவி.

"இங்கே பாரும் ரவி, உங்களுக்கு இவர்களை யாரென்றே தெரியாதபோது உங்கள் மனைவிக்காக நீங்கள் இவர்களை ஒன்று சேர்க்கப் பாடுபடுகிறீர்கள். இரவு பூரா யோசிச்சு நானும் ஒரு முடிவுக்கு வந்தேன். மிஸ்ரர் சண்முகம் என்னுடைய கிளைண்ட். அவர் குடும்பமே என்ன பிரச்சினை என்றாலும் என்னிடமே வருவார்கள். சண்முகம் தன் பிரச்சினையைக் கூறி இப்படி மானங்கெட்டு வாழ்வதைவிட சாவதே. மேலென்று அழுதான். நான் புத்திமதி கூறி இப்படி ஓர் அதிரடி நடவடிக்கையை எடுத்தோம்" என்று கூறிச் சிரித்தார்.

"நல்லது சேர். விசாலியின் அம்மாதான் மெயின் சுவிட்சாக இருக்கின்றார்"

"உண்மைதான் ரவி. நான் அதுபற்றி கதைக்கவே அவர்கள் வீட்டுக்கு ப்போய் கலந்து பேசினேன். அவர்கள் மகளுக்காகப் பேசினாலும், சண்முகம் கூறியதை நான் கூறியதும் அழ ஆரம்பித்து விட்டார். சமாதானப்படுத்திக் கூட்டிக்கொண்டு வரக்கிளம்பியபோது விசாலியும் வந்தாள். இருவரையும் வண்டியில் ஏற்றி அனுப்பி விட்டு நானும் வந்தேன்" என்றார்.

"என்னம்மா இவர்கள் சேர்ந்து வாழ்வதை விரும்புகின்றீர்களா? இல்லை...?" என்று ரவி கேட்டான்.

"ஐயா ராசா! பெத்த மனம்பித்து என்பார்கள். என் மகளின் நிலையில் கண்டபடி பேசியது உண்மை. என்னை மன்னித்து வீட்டுக்கு வாதம்பி" என்று சண்முகத்தின் காலில் விழப்போனார் மாமியார்.

"ஐயோ அத்தை. நீங்கள் வயதானவங்கள். என்காலில் விழக்கூடாது. விசாலி எதுவும் பேசாமலிருந்தது தான் எனக்கு ஆத்திரம். என் குடும்பம் எப்படிப்பட்டது என்று உங்களுக்குத் தெரியும். எனக்குக் கண்ட படி பேசத் தெரியாததால் தான் குடித்தேன். பிழைதான். இனி அப்படி எதுவும் நடக்காது. விசாலி இன்னும் எதுவும் பேசவில்லை. அவள் விருப்பம் எதுவோ அப்படிச் செய்ய எனக்குச் சம்மதம்" என்றான்.

"என்னம்மா, எதுவும் பேசாமலிருந்தால் எப்படி?" என்றார் சிவநேசன்.

"நான் யாருக்காகப் பேசுவேன். யாருக்காக அழுவேன். மௌனம் கலகநாசம் என்பார்கள். அப்படி இருந்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்கின்றேன். உங்களுக்குத் தொழில் கிடைத்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி என் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு நல்ல அப்பாவாக இருந்தால் அதுவேபோதும். நான் தவறு செய்திருந்தால் அது என் இயலாமையே தவிர வேணுமென்று செய்ததில்லை. மன்னித்து விடுங்கள்" என்று கணவனின் கரங்களைப் பற்றி அவற்றுள் முகம் புதைத்து அழுதாள்.

"இங்கே பாரம்மா விசாலி. நீ படித்தாலும் புளியங்கொம்பாய்த்தான் பிடிச்சிருக்கிறாய். உங்கள் மேடத்தின் கணவர் உன் கணவருக்கு நல்ல சம்பளத்தில் வேலையும் போட்டுக்கொடுத்திருக்கிறார். இப்படி ஒரு குழப்பம் வந்ததும் ஒரு வகையில் நல்லாய்த்தான் முடிஞ்சிருக்கு. உன் மேடத்துக்குத்தான் நீ நன்றி சொல்லவேணும்" என்று கூறிச் சிரித்தவர் சிவகாமி அம்பாள் கொண்டு வந்த கோப்பியை உறிஞ்சியவாறே. "மிஸ்ரர் ரவி இப்படி ஒவ்வொரு கேசும் போனால் என் பிழைப்பு என்னாவது?" என்று கிண்டலாகச் சிரித்துக்கொண்டே கூறினார்.

"சேர், நீங்கள் கேட்டுப்பெறும் பணம் இங்கேயே செலவாகிவிடும். இப்படியான கேஸ் உங்களுக்குக் கூடவே வரும். இது எவ்வளவு பெரிய புண்ணிய காரியம்" என்றான் ரவி.


''இந்தக் காலத்தில் இதை யாரப்பா நினைக்கிறாங்கள். ஏதோ நாம் செய்யும் நல்லவை, கெட்டவைதான் எம்மோடு கூட வரும். நம்மாலியன்ற நல்லதை, பலனை எதிர்பாராது செய்வம். சரி மகிழ்ச்சிதானே? புறப்படுகிறேன்" என்று கூறி விடைபெற்றார் அவர்.

பின்னர் விசாலியும் தாயும் சண்முகமும் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டனர். இருவரையும் வீட்டில் கொண்டுசென்று விட்டுக் காரியாலயம் நோக்கிச்சென்றாள் விசாலி. விசாலியைக் கண்டதும் காரியாலயத்தில் தனது இருக்கையில் அமர்ந்தவாறே தனது கைபேசிமூலம் சுவேதாவுடன் தொடர்புகொண்டாள்.

"விசாலி நீ ஒவ்பீசுக்கு வந்திட்டியா? சரி இஞ்ச வா?" என்று கூறிவிட்டுத் தான் பார்த்துக்கொண்டிருந்த 'பைலை' மூடி வைத்து விட்டு விசாலியின் வரவை எதிர்பார்த்தாள் சுவேதா...

(தொடரும்)

சிறுகதை



# பரம்பரை

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

> அன்று இரவு சூரியப்பாவின் தகரக் கொட்டகையின் ஓரமாக கனகலிங்கத்தார் குடும்பம் படுத்து, எழும்பியது. விடிந்த பின்னர் தறப்பாள் கொட்டகைபோடும் வேலையும் சமைப்பதற்கான இட ஒதுக்கீடும் நடந்தது. உரப்பையில் கொண்டு வந்த சாமான்களில் அவசியமானவை பகிரப்பட்டன. ஆயிரம் ரூபா என்று கடற்கரையில் போய் மீன் கொண்டு வந்தார் சூரியப்பா. கிட்டத்தட்ட இரண்டு மணிநேரத் தவத்தின் பின்னர்தான் அந்த மீன்கூட அவருக்குக் கிடைத்தது.



அடக்குமுறையாளர்களின் குண்டுத் தாக்குதல்களின் வெம்மையைத் தாங்க முடியவில்லையே என்ற கோபத்துடன் உச்சி வெயில் வறுத்தெடுத்துக் கொண்டிருந்தது. குண்டுப் புகைகளோடு போட்டி போட முடியாத வெங்காற்று குதியாட்டம் போட்டபடி அலைந்தது.

அன்றைய நாள் 2009மே முற்பகுதியாக இருக்கலாம். முல்லைத்தீவு - புதுமாத்தளன் பகுதி. கன்னை கட்டிப் பிரித்ததுபோல ஒரு பக்கம் ஆழக்கடலும் மறுபக்கம் தரவைக் கடலுமாக மிக ஒடுங்கிய அந்தப் பிரதேசம் ஆக்கிரமிப்புக்குத் துணைபோய்க் கொண்டிருந்தது.

தரவைக் கடல் பக்கமாக ஆமிக்காரர் ஸ்பீக்கர் கட்டி ஒலிபெருக்கிக் கொண்டிருந்த வார்த்தைகள் சிலபேருக்கு ஆர்வமாகவும் வேறு சிலருக்கு வெற்று வேட்டாகவும் இருந்தன.

முன் வீட்டில்... மன்னிக்கவும் முன் தறப்பாளின் கீழ் குந்தியிருந்த முத்துமாதவன் வழமைபோல கதையளந்துகொண்டிருந்தான். எப்போதும்போல நாலைந்துபேர் அவர்/அவன் சொன்னதைக் கேட்டு கனவுகளை வளர்த்துக் கொண்டு/அழித்துக் கொண்டிருந்தார்கள்.

“இந்தியப் பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் அது மே 15ஆம் திகதி நடக்க வேண்டும். எங்கட பிரச்சினையல் எல்லாம் தீர்ந்துவிடும். இந்தியா எங்களை ஒருநாளும் கைவிடாது'' என்று முத்து மாதவன் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான்.

போதாக்குறைக்கு ஐ.நா படைகள் வரும் அமெரிக்கா கொண்டு வந்து இறக்கப்போகுது என்ற கதைகள். புனைவுகளா? நிஜங்களா? என்று தெரியாத சூழலில் அவ்வகைக் கதைகளும் அப்போது கடற்கரை மணலில் பரவிப் பறந்தன.

இரணைப் பாலையில் நாலைந்து நாள்



இருப்பு வாழ்க்கை முடிவடைந்து புதுமாத்தளனுக்கு சாமான்களை ஏற்றிக் கொண்டு புறப்படு வதற்கு முதல் நாள் இடம் பார்க்கப் புதுமாத்தளன் வந்தபோது கனகலிங்கத்தார்

முத்துமாதவனைச் சந்தித்தார். அவர் கூடவே அரசியல் விவகாரங்களை அலசும் தமிழ் மகனும் இருந்தார்.

“இப்ப எங்க இருக்கிறியள்...? மகள் பேரப் பிள்ளையள் என்ன மாதிரி?” என முத்து மாதவன் கேட்டார்.

“இரணைப்பாலையில்... எல்லாரும் அங்க தான் இருக்கிறம். வந்து மூண்டு நாளாச்சு”

“இரணைப் பாலையோ...? கொலைக் களத்திலிருக்கிறியள் நாங்கள் இஞ்சதான் இருக்கிறம்” என்றார் கடுந் தொனியில் முத்து மாதவன். கூட நின்ற தமிழ் மகன் ஒரு வகையாகச் சிரித்தார்.

“இப்ப தமிழ்ச்சனம் இருக்கிற எங்கையாவது இடத்தில் கொலைக்களம் இல்லாத இடமிருக்கோ...? செல்லடி துவக்குச் சூடு இல்லாமல் ஒரு இடத்தக் காட்டுங்கோ?” எனக் கனகலிங்கத்தார் கேட்க முன்னர் முத்து மாதவன் புறப்பட்டுப் போய்விட்டார்.

சனங்கள், சாமான்கள், சைக்கிள்கள், வாகனங்கள் என ஒடுங்கிய அந்தத் தெரு புழுத்து, நெளிந்து, ஊர்ந்து கொண்டிருந்தது. தெருக் கரையோரம் தறப்பாள் கொட்டில்கள், உரப்பைத் தட்டிகள் என மணல் வெளி முளைவிட்டிருந்தது. அந்தத் தெருவில் நின்று பார்த்தால், தரவைக் கடலும் ஆழ்கடலின் கரையும் நன்றாகத் தெரியும். வெயில் தலையைப் பதப்படுத்திக் கொண்டிருந்த அந்த வேளையில், சூரியப்பாவைத் தற்செயலாகச் சந்தித்தார் கனகலிங்கத்தார். புதுமாத்தளனுக்குச் சூரியப்பா கொஞ்சம் முன்பே வந்த படியால் தகரக் கொட்டகை போட்டு, மணல் மூட்டைகளைச் சூழ அடித்து, பங்கரும் வெட்டியிருந்தார்.

தனது பங்கரைப் பாவிக்கலாம், தனது தகரக் கொட்டகை ஓரமாகத் தறப்பாள் கொட்டில் போடலாம், கெதியாப் போய் வீட்டுக் காரரைக் கூட்டிக் கொண்டு வாங்கோ... அதுவரை வேறை யாருக்கும் இடங்கொடாமல் பாக்கிறன் என உறுதி தந்தார் சூரியப்பா.

சிங்கள அரசுகளின் வாக்குறுதிபோல அல்லாமல் சூரியப்பாவின் பேச்சு உறுதியாக இருந்தபடியால் அன்றிரவே கனகலிங்கத்தார் குடும்பம் புதுமாத்தளன் போய்ச் சேர்ந்தது.

அநேகமான கொட்டில்களில் சோளர் மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. குண்டுச் சத்தங்கள் கேட்காமல் போகும் ஒரு சில நிமிட இடைவெளிகளில் வானமும் அந்த விளக்குகளும் வெகு அழகாக இருக்கும்.

அன்று இரவு சூரியப்பாவின் தகரக் கொட்டகையின் ஓரமாகக் கனகலிங்கத்தார் குடும்பம் படுத்து, எழும்பியது.

விடிந்த பின்னர் தறப்பாள் கொட்டகைபோடும் வேலையும் சமைப்பதற்கான இட ஒதுக்கீடும் நடந்தன. உரப்பையில் கொண்டு வந்த சாமான்களில் அவசியமானவை பகிரப்பட்டன.

ஆயிரம் ரூபா என்று கடற்கரையில் போய் மீன் கொண்டுவந்தார் சூரியப்பா. கிட்டத்தட்ட இரண்டுமணிநேரத்தவத்தின் பின்னர்தான் அந்த மீன்கூட அவருக்குக் கிடைத்தது.

மீனின் அளவு அப்படி ஒன்றும் ஆகப் பெரிதாக இருக்கவில்லை. குளங்களில் வால் பேத்தையென்று நீந்தித் தெரியுமே? அந்தளவு மீன்தான். ஆனால் அதனைவிடக் கொஞ்சம் பருமனானது. ஐந்து பேருள்ள குடும்பத்துக்கு ஆளுக்கு மூன்று அல்லது நான்கு எடுக்கலாம்.

பச்சையரிசிச் சோத்தோடும் அந்த மீன் அவியல் தண்ணியோடும் கனநாள்களுக்குப் பின்னர் சாப்பாடு நடந்தது. அந்த மீனைப் பார்த்து அப்படி வாங்கலாம் என நினைத்து அடுத்த நாள் கடற்கரைக்குப் போனவர்கள் மண்டை வெயில் காயக் களைத்து வெறுங்கையுடன்திரும்பிவந்தார்கள். வேறுசிலரோ களவாய் வெட்டி விற்ற மாட்டிறைச்சி ஒரு பங்குடன் வந்தார்கள். முத்து மாதவன் சொன்னதுபோல மாத்தளன் ஒன்றும் கொலைக்களம் இல்லாத பூமியாக இருக்கவில்லை. பெரும் பகுதி நேரம் பங்கருக்குள்ளும், மண்மூட்டைத் தடுப்பின் பின்னாலும், நடமாடும்போது குனிந்தும், தவழ்ந்தும், திரியவேண்டியிருந்தது.

நாலைந்து நாள்கள் கழிந்த பின்னர் ஓர் இடத்தில் தேங்காய் விற்பதாகக் கேள்விப்பட்டு ஓடிச் சென்றபோது முட்டுக்காய்த் தேங்காய் ஆயிரத்தி இருநூறு ரூபாவுக்கு வாங்குவதற்குச் சனங்கள் அடிபட்டுக் கொண்டிருந்தார்கள்.

தேங்காய் வாங்க முடியாமல் திரும்பியபோது சனக்கூட்டத்தில் முருகமூர்த்தி தென்பட்டார்.

அப்போதுதான் பேச்சு வாக்கில் முத்துமாதவன் குடும்பம், தமிழ் மகன் குடும்பம் எட்வேர்ட் றஞ்சன் குடும்பம், எட்டு லச்சம் காசு குடுத்துத் தனி போர்ட்டில் யாழ்ப்பாணம் போட்டினமாம் என்ற தகவல் கிடைத்தது.

“மெய்யே...?”

“ஓமோம்... போகேக்க பெறுமதியான சாமனுகள் எல்லாம் கொண்டு போனவையாம்”

“பெறுமதி எண்டு...?”

முருகமூர்த்தி பதில் சொல்லாமல் சிரித்தார்.

“அங்க ஆமிக்காரர் விடுவங்களோ...?” என மீண்டும் கேட்டார் கனகலிங்கம்.

“எதோ செற்றப்பெல்லாம் இருக்காம்” பதில் சொன்னார் முருக மூர்த்தி


0000

1984 - 1985 ஆண்டாக இருக்கவேண்டும். 30, 35இயக்கங்கள் தமிழ் மண்ணில் முளைவிட்டு தமிழன்னையின் அடிமை விலங்கை உடைக்கப்போவதாக அறிக்கையும் விட்டு, அடி தடியும் செய்துகொண்டிருந்தான்.

பரம்பரை அகதியான கனகலிங்கத்தார் குத்தகைக் காணியெடுத்துத் தோட்டம் செய்து கொண்டிருந்தார். குடும்பத்தைக் காப்பாற்ற அந்தத் தோட்ட வருமானம் போதுமானதாக இருக்கவில்லை. சின்னத் தோட்டக்கணி அது.

“பெரிய தோட்டக்காணி. வீடும் இருக்கு வளவுக்காரர் செத்துவிட்டார். இன்னும் ஒருதரும் காணிக்கு உரிமையாளராய் வரயில்லை. அந்தக் காணியப் பராமரித்துப் பாதுகாக்க வேணும். கொஞ்சக் காலம் பிரச்சினையில்லாமல் தோட்டம் செய்து வாழலாம்” என்று உறவினர்கள் கொடுத்த நம்பிக்கையின் அடிப்படையில் கனகலிங்கத்தார் குடும்பம் அந்தப் புதிய வளவில் குடியமர்ந்தது. விரிந்து பரந்த தோட்டக் காணி. இறைக்க இறைக்க ஊறும் கிணறு. நல்லவர்கள் மனம்போல தோட்டம் கனகலிங்கத்தாருக்குப் பயன் தந்தது. புகையிலை, வெங்காயம், மரவள்ளி, மரக்கறி என அவர் கைவைத்த பயிர்கள் எல்லாம்

அவருக்கு ராசியாயிற்று. அவர் மனம் நிறைந்து போனார்.
திடுப்பென ஒரு நாள் அது நடந்தது.
வாழைக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார் அவர். வாய்க்கால் வழியே பாய்ந்து வந்த கிணற்று நீர் பூமியையும் அவரின் பாதங்களையும் நனைத்துக் கொண்டிருந்தது. அதிலுள்ள இதத்தை அனுபவித்தவாறு குலை போட்டுச் சரிந்த வாழையோடு சாய்ந்தபோதுதான் ஏரியாப் பொறுப்பாளரும் இன்னும் இரண்டு பேரும் வந்தார்கள்.
"நீங்கள் தானே கனகலிங்கம்?" என்ற ஏரியாப் பொறுப்பாளரின் குரலில் அதிகாரத்தனம் வெளிப்பட்டது. இடுப்பின் அகலப் பட்டியைத் தடவியபடி அவர் கேட்டார்.
"ஓமோம் தம்பி! நான் என்ன செய்யவேணும்?" தலையசைத்துப் பக்குவமானார் கனகலிங்கத்தார்.
"நீங்கள் ஒண்டும் செய்யவேண்டாம். இந்தக் காணிய விட்டிட்டுப்போனல் சரி" என்றார் உறைப்பாக.
"என்ன தம்பி இப்ப கொஞ்சக் காலம்தான் நான் தோட்டம் செய்யத் தொடங்கி காணிக்காரரும் இல்ல"
"காணிக்காரர் இல்லையோ... இவைதான் காணிக்காரர். காணியை இவையிட்டக் குடுங்கோ... பிரச்சினைப் படுத்தக்கூடாது"
"என்ன தம்பி கதைக்கிறியள்...? இவை காணிக்காரரோ?" என்றபடி அவர்களைப் பார்த்தார் கனகலிங்கம்.
அந்த இரண்டுபேரின் முகங்களும் தெரிந்த முகங்கள்போல இருந்தன. அந்தக் குழப்பமான நேரத்திலும் அவர்களில் ஒருவரை அவர் மனம் அடையாளம் காட்டியது. தின்னவேலிச் சந்தையில் வாழைக்குலைத் தரகராக வேலை செய்யிறவர்.
"தம்பி எனக்குக் காணி தந்தவை வேறை ஆக்கள். இவை ஆரெண்டு எனக்குத் தெரியாது. எனக்குக் காணி தந்த ஆக்களைக் கூட்டிக் கொண்டு வாங்கோ கதைப்பம்" என நொருங்கிச் சரிந்த மனதுடன் கனகலிங்கத்தார் சொன்னார்.
"தேவையில்லாத கதை கதைக்க வேண்டாம். பிறகு சிக்கலுக்க மாட்டுப்பட்டுப்போவியள். தெரியுந்தானே...ம்" என்றார் பொறுப்பாளர்.
"இல்லத் தம்பி எனக்குக் காணி தந்தவை வந்தால்தான் நான் காணிய விட்டிட்டுப் போவன்"
"விசர்க் கதை கதைக்கவேண்டாம். உங்களுக்குச் காணி தந்தவை வரமாட்டினம். இவைதான் காணிக்காரர். இவையிற்றக் காணியக் குடுங்கோ... பிரச்சினைப்பட்டுக் கஸ்ரப்படப்போறியள்"
கனகலிங்கத்தாருக்குக் குளறி அழவேண்டும்போல இருந்தது.
"என்னப்பா... என்னப்பா..." எனக் கலவர




முகங்களுடன் மனைவி, மகள் வந்தார்கள்.
"ஐயா! நீங்கள் வயதுக்கு மூத்த ஆள் எண்டபடியாள் மரியாதையாக் கதைக்கிறம். இல்லாட்டி இஞ்ச நடக்கிதே வேறை. இண்டைக்குத் திங்கள் கிழமை வாற திங்களுக்கு இடையில வீடு, காணி எல்லாத்தையும் விட்டிட்டுப்போயிரவேணும். அப்பிடிப் போகாட்டி... தண்ணி வெண்ணி இல்லாமக் கிடந்துதான் சாவியள்..." என்று பொழிந்து தள்ளிய பொறுப்பாளர் கூட வந்தவர்களைப் பார்த்து, "வாங்கோ போவம் ஐயா எழும்புறாரோ, இல்லையோ எண்டு பாப்பம் அவருக்கு நாங்கள் ஆரெண்டு காட்டத்தானே வேணும்" என்றபடி புறப்பட்டுப்போனார்.
ஒழுங்கை முகப்பில் நின்ற வெள்ளைவானில் வேறு பலரும் இருப்பதை அப்போதுதான் கனகலிங்கத்தார் கண்டார்.
வாய்க்கால் வழியே பாய்ந்து வந்த தண்ணீர் வாழைப்பாத்தியை நிறைத்து அப்பால் பரவிக் கொண்டிருந்தது. கனகலிங்கத்தாரின் கண்ணீரைப்போல.
"என்னப்பா...? என்னவாம்...?" அவர் மனைவி கலங்கித் துடித்தாள்.
"அடியாத்தை எங்களப்போல பாவப்பட்ட கஸ்ரப்பட்ட சனங்களுக்கு எப்பவும் கஸ்ரகாலம்தான்" என்றபடி தரையில் சாய்ந்தார்.
என்ன செய்வது? யாரோடுபோய்க் கதைப்பது? ஆட்சி அதிகாரமெல்லாம் யார் யாரோ கையில் நிற்கும் சூழலில் யாரிடம் நியாயம் கேட்பது?' கனகலிங்கத்தார் மெய்தான் அரும்பி விதிர் விதித்தார்.
அடுத்த திங்கட்கிழமையும் வந்தது. அதற்கிடையில் கனகலிங்கத்தார் எதுவுமே செய்யவில்லை. தெரிந்தவர்கள் உறவினர்கள் பொறுப்பாளரின் மேலிடத்துடன்போய்க் கதைக்கும்படி கூறினார்கள். கனகலிங்கத்தார் ஓர் இடத்துக்கும் போகவில்லை. திங்கட்கிழமையும் எந்தவித நெருக்கடியும் இல்லாமல் கழிந்தது.

கனகலிங்கத்தார் இருந்த வீட்டைச் சுற்றிக் கணிசமான பகுதி வளவுக்காணி அது நிறைய மரங்கள். மரங்கள் என்றால்? ஐந்து மாமரம், மூன்று பிலா மரம், ஜம்பு, நாவல், வேம்பு என்று பயனையும் அழகையும் தருகின்ற மரங்கள்.
செவ்வாய்க்கிழமை அதிகாலை அமளியான சத்தங்கள் கேட்க. வீட்டுக்குள்ளிருந்த கனகலிங்கத்தார் வெளியே வந்தார். கோடாரிகள் கயிறுகள். சகிதம் ஏராளமானோர் வளவில் கனகலிங்கத்தார் நின்று நிதானிப்பதற்கிடையில் மாமரங்கள், பிலா மரங்கள் உயிரிழந்து கொப்புக்களாய்த் தரையில் சரிந்தன. இயல்பிலேயே அப்பிராணியான கனகலிங்கத்தார் குடும்பம், வீட்டுக்குள் பதுங்கிக் கொண்டது. மூன்று நாள்களுக்குள் எல்லா மரங்களும் அடியோடு சுரண்டப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டன. நான்காம் நாள் அதிகாலை ரக்ரர் ஒன்று வந்து வீட்டு வாசலோடு சேர்த்து வீட்டைச் சுற்றி உழுது பிரட்டிப் போட்டது.
வீட்டை விட்டு இறங்கினால், உழுத தரையில்தான் கால் வைக்க வேண்டும். முற்றமோ, புழங்குவதற்கு இடமோ இல்லை. மனைவி, பிள்ளைகள் அழுது புலம்பிக் கொண்டிருந்தனர். புலம்பித் தவித்த கனகலிங்கத்தார் தெளிவாக ஒரு முடிவெடுத்தார். யாரிடம் போய் நியாயம் கேட்பதும், அதற்காகப் போராடுவதும் என்ன பிரயோசனம் தரப்போகிறது...? அந்தக் காணியும் எங்கட காணி இல்லைத்தானே விட்டிட்டுப்போவம். என்று தீர்க்கமாக முடிவெடுத்தார். அன்று மாலையே சாமான்களை ஏற்றிக்கொண்டு புகலிடம்தேடிப் புறப்பட்டுப் போய்விட்டார் கனகலிங்கத்தார். அதோடு முடிந்தது அந்தப் பிரச்சினை.

0000

16.5.2009 காலை எட்டு மணியிருக்கும்
வட்டுவாகல் பாலத்துக்கு மிக அருகில் பனை வடலிக்குக் கீழே தோண்டப்பட்ட சிறு பள்ளமான பகுதியில் ஏனைய குடும்பங்க ளைப்போல கனகலிங்கத்தார் குடும்பமும் இருந்தது. மகள், பேரப்பிள்ளைகள், மனைவி என வயதுபோய் வெளிறிய முகமும் நைந்த உடலுமாகக் கனகலிங்கத்தார் காணப்பட்டார். புதுமாத்தளனில் இருந்து பொக்கணை, வலைஞர் மடம், முள்ளி வாய்க்கால் என நாளுக்கொரு இடமாக மாறி இப்போது சில மணி நேரமாக வட்டுவாகல்.
"அம்மப்பா... வட்டுவாகல் பாலத்தால சனங்கள் போகுதாம். ஆமி ஆக்களை உள்ளுக்கு எடுக்கிறானாம்" என்றபடி வந்தான் பேரன்.
வடலிக்குள் பதுங்கிக் கிடந்த சனங்கள் எல்லாம் சட சடவெனத் தலை நிமிர்ந்து வட்டுவாகல் பாலத்தை நோக்கிச் செல்லும் பாதையூடாகப் புறப்பட்டனர்.
தூக்கக்கூடிய பொருட்களுடன் ஆட்கள் சென்றுகொண்டிருக்க, சூழவும் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.
அதிரடியாய்ப் புறப்பட்ட சனங்களின் நகர்வில் மந்தநிலை ஏற்பட்டது.
"சுடுறாங்களாம்..." என்று யாரோ சத்தம் போடும்போது தலையைத் தடவிக் கொண்டு குண்டுகள் பாய்ந்தன.
சனங்கள் பட்டென்று பதுங்கிக் கொண்டார்கள். அனுபவம் அவர்களுக்குக் கைகொடுத்தது. எல்லோரும் அப்படியே அமர்ந்தனர்.
துப்பாக்கிக் குண்டுகள் தொடர்ச்சியாகப் பாயத் தொடங்கின. முன்னால் சென்றவர்கள் காயம்பட்ட இரண்டுபேரைத் தூக்கிக் கொண்டு திரும்பி வந்தார்கள். சட்டென்று ஏற்பட்ட குழப்பத்தால் சனங்கள் பதுங்கியபடி திரும்பி ஓடினார்கள். துப்பாக்கிச் சத்தங்கள் தொடர்ச்சியாகக் கலைத்துக்கொண்டு வந்தன.
புறப்பட்ட இடத்துக்கே சனங்கள் திரும்ப வந்து மணலில் படுத்தார்கள். நேரம் காலை பத்து மணியாகிவிட்டது.
கனகலிங்கத்தாருக்குப் பசி எடுத்தது. அவரைப்போலவே ஏராளமானவர்கள் தொடர்ச்சியாக இரண்டு, மூன்று நாள்களாகப் பசியோடு அலைந்துகொண்டிருந்தார்கள்.
ஓர் இடத்தில் பனை வடலிக்குள் பாதுகாப்பு நிலையெடுத்துக் குடும்பம் ஒன்று ரொட்டி சுட்டுக் கொண்டிருந்தது. நாங்களும் ரொட்டி சுட்டால் என்ன? என்ற எண்ணம் அவருக்குள் அப்போது ஏற்பட்டது. மகளைப் பார்த்துக் கேட்டார், "பிள்ள கோதுமை மா ஏதும் இருக்கோ?"
"இல்லையப்பா.. கொஞ்ச மா கிடந்ததுதான் மாறி மாறி நிண்டு வந்தாதால அதை எங்கயே கைய விட்டிட்டம்" என்றாள் பரிதாபமாக...
"பரவாயில்லப் பிள்ள பாப்பம்" என்ற கனகலிங்கத்தார் வயிற்றைத் தடவினார்.
நேரம் பிற்பகல் இரண்டு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. துப்பாக்கிச் சத்தங்கள் குறைந்து விட்டன. செல் சத்தங்கள் மாத்திரம் சற்றுத் தூரத்தில் கேட்டன்.
"அம்மப்பா...! சனங்கள் வட்டுவாகல் பாலத்தால போகுதுகளாம்..." என்றான் மீண்டும் பேரன்.
கனகலிங்கத்தார் தலை நிமிர்ந்து பார்த்தார். வட்டு வாகல் பாலத்தை நோக்கிய பாதை வழியே சனங்கள் மீண்டும் போய்க் கொண்டிருந்தர்கள்.
"வாங்கோ போய்ப் பாப்பம்" என்ற பேச்சுக்களுடன் சனங்கள் புறப்பட்டார்கள் "காசு நகையள் கொண்டு வாற ஆக்கள் கவனமா வாங்கோ ஆமிக்காரர் பிரச்சினையாம்" எனக் கனகலிங்கத்தாருக்குப் பக்கத்தில் வந்த ஒருவர் சொன்னார்.
"அது இருக்கிறவைக்குத்தானே பிரச்சினை" என்று சொல்லிச் சிரித்த கனகலிங்கத்தார் அன்றைக்குத் தோட்ட நிலத்தை விட்டுப் புறப்பட்ட மனநிலையுடன் நடையை விரைவு படுத்தினார்.



தொகுப்பு
செ.மகேஷ்

# ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய விளக்குகள் 8

1999ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு, வெளியிட்டு வைக்கப் பட்ட விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.

**வெற்றிக்கு வழிகள்**

நாம் அடையும் வெற்றிகள், 'நம்மால் முடியும்' என்ற நம்பிக்கையை நம்முள் ஏற்படுத்தும். வெற்றி ஏற்படும்போது நமக்கு இன்னும் அதேபோல் நிறைய வெற்றிகளை அடைய வேண்டும் என்ற ஆவல் அதிகமாகிறது. உங்கள் இலட்சியத்தை நோக்கிய சிறுசிறு விஷயங்களை எடுத்துக் கொண்டு சாதியுங்கள். ஒவ்வொரு சிறு வெற்றியும் நம்மை மேலும் செயற்பட உந்துகிறது. நம்முடைய இலட்சியத்துக்கு அருகில் நம்மை எடுத்துச் செல்லுகிறது. குழந்தைகள் வளர்ப்பில் இதைக் கடைப்பிடியுங்கள். பெரியவர்களைப் போல குழந்தைகள்; எல்லாம் செய்வார்கள் என்று எதிர்பார்க்காதீர்கள். அவர்கள் வெற்றியடையக் கூடிய சிறு சிறு கணக்குகள், சிறு சிறு செயல்களைச் செய்யச் சொல்லுங்கள். சிறுசிறு வெற்றிகளே குழந்தைகளுக்குத் தங்களைப் பற்றிய நம்பிக்கையைக் கொடுக்கின்றன.

**ஊக்கம் தரும் வரலாறுகள்**

கடைசியாக நமக்கு வழிகாட்டுபவர்கள் தேவை. ஒரு குரு தேவை. முன்மாதிரியாக இருப்பவர்கள் தேவை. வெற்றியடைந்தவர்களுடன் பேசுங்கள். ஆலோசனை கேளுங்கள். வரலாற்றிலே எத்தனையோ மகான்கள் புத்தர், ஆதிசங்கரர், பதஞ்சலி, திருவள்ளுவர், சிறீராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் என்றுபிறந்திருக்கிறார்கள். எத்தனையோ தலைவர்கள் நெப்போலியன், ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி என்று தோன்றி இருக்கிறார்கள். எத்தனையோ கவிஞர்கள் இளங்கோவிலிருந்து பாரதி வரை வாழ்ந்திருக்கிறார்கள். எத்தனையோ தொழில் அதிபர்கள், காரைக் கண்டுபிடித்த ஹென்றி போர்டிலிருந்து தமிழகத்து ஏ.சி முத்தையாவரை இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் உங்கள் துறைக்கேற்ப முன்மாதிரியாகக் கொள்ளுங்கள். ஊக்கம் தரும் அவர்களது வீர வரலாற்றைப் படியுங்கள். இதன் மூலம் அதே போன்ற வீர எண்ணங்கள் நம் மனதில் மலரும். நம்மால் முடியும் என்கிற நம்பிக்கை பிறக்கும்.

மேலே குறிப்பிட்ட வழிமுறைகளை எண்ணிப் பார்த்தால் இது ஒரு மனப்பயிற்சி என்பது தெரியவரும். எண்ணங்களை ஒரு குறிப்பிட்ட வெற்றிப் பாதையிற் கொண்டு செல்லும் வழிமுறை இங்கே விளக்கப்பட்டுள்ளது. ஆதலால் தான் சுவாமி விவேகானந்தர் "ஒரு கருத்தை எடுத்துக் கொள் அந்த ஒரு கருத்தையே உனது வாழ்க்கை மயமாக்கு. அதையே கனவு காண். அந்த ஒரு கருத்தை ஒட்டியே வாழ்ந்து வா! மூளை, தசைகள், நரம்புகள், உடலில் ஒவ்வொரு பாகத்திலும் "அந்த ஒரு கருத்தே நிறைந்திருக்கட்டும்! அந்த நிலையில் மற்ற எல்லாக் கருத்துக்களையும் தவிர்த்துவிடு! வெற்றிக்கு இதுதான் வழி" என்று சொன்னார்.

0000

நாட்டின் சட்ட திட்டங்களுக்குப் பணிந்து நடக்கும் குடிமக்களை உருவாக்குவது கல்வியின் குறிக் கோள்களில் ஒன்று.

மற்றையோருக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டிய ஓர் அதிபர் தானே சட்டத்தை மீறலாமா? சட்டத்தின் உட்பொருளை நன்கு உணர்ந்து, அதை ஒரு தடவை மீறிய சந்தர்ப்பத்தை நினைவுபடுத்தும் அந்நாள் யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவிருந்த திரு கோ.சி. வேலாயுதத்தால் எழுதப்பட்ட 'சட்டம் ஓர் இருட்டறை' என்ற கட்டுரையை மீள் பதிப்புச் செய்கின்றோம்.

**சட்டம் ஓர் இருட்டறை**

"மாதா பிதா குரு தெய்வம் அவர் மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்" என்ற வரிகள் எனது நினைவுக்கு வருகின்றன. ஆசிரியன் தெய்வத்தின் வரிசையில் வைக்கப்பட்டுப் பேசப்படுவது ஈண்டு புலனாகிறது. வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என வள்ளுவர் கூறியதும் நினைவுக்கு வருகிறது. இந்த நிலையில் ஆசிரியர் வாழ்வாங்கு வாழ்பவனாய் அமைதல் வேண்டும். தான் சார்ந்த சமூகத்தைக் கட்டி எழுப்பும் சிற்பியாக அமைதல் வேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

கல்விப் புலத்தின் கலங்கரை விளக்காக விளங்க வேண்டிய ஆசிரியன் கருணையின் மறுவடிவமாக அமைதலும் வேண்டும். 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்ற பொது மறைக்கு ஒப்ப தியாகப் பணியான ஆசிரிய சேவையைத் தன்மன நிறைவுக்கும்தன்னை நாடிவரும்மாணவச் செல்வங்களின் உயர்ச்சிக்கும் பயன்படுத்தத் தவறக் கூடாது.



கோ.சி.வேலாயுதம்

"அரிது" என்ற பதத்தை ஒருகால் பயன்படுத்த வந்த ஔவை மானிடராதல் அரிது என ஆர்ப்பரித்தாள். அத்தோடு நின்றாளில்லை ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது எனவும் அணி செய்தாள். எனவே கல்வி கேடில் விழுச்செல்வமே என்ற ஆணித்தரமான கருத்தை உளமார ஏற்றுக் கொண்டு எமது மண்ணின் மைந்தர்களை, நாளைய தேச மன்னர்களை நலமாக்கும் நற்பணியை இதயசுத்தியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மானுடம் பொலிவுற வேண்டுமானால் அந்தப் பணி நற்பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களால் இயலக் கூடியதொன்றே என்பதைத் துணிந்து கூறலாம். சான்றோர் பலர் யான் வாழுமூர் என்ப பிசிராந்தையார் பெருமை கொள்ளும்போது சான்றாண்மையின் உயிர்த்துடிப்பு நன்கு புலனாகிறது. சால்புடைய மக்களால் மண் மலிய வேண்டுமானால் ஆசிரியத்துவம் ஆசற்றதாய் ஆற்றல் பொலிந்ததாய் ஏற்றமுற வேண்டும்.

நாற்றிசையும் புகழ் மணக்க வீற்றிருக்கும் பெருநிலங்கள் கற்றவர் மலிந்ததாகக் காசற்ற கடமை வீரர்கள் கண்ணியமாகக் கடமை புரிபவர்களாகப் பெருமளவில் வாழக் காண்கிறோம். எனவே வாழ்வின் உந்து சக்திகளாக உருக்கொண்டு உயரிய பணியை உவந்தேற்கும் ஆசிரியர்களின் நற்சேவையையே நம் இதய நாதமாகக் கொள்ளவேண்டும்.

**ஒரு மாணவியின் கல்வி**

கல்விப் புலத்திலே மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பணியாற்றிவரும் நான் அன்பால் ஆக்கபூர்வமான பணியால், தன்னலமற்ற செயற்பாட்டால் மாணவர் பலரை முன்னணிக்குக் கொண்டுவரலாம் என்பதைக் கண்டிருக்கிறேன்.

1978ஆம் ஆண்டு நான் அதிபர் பதவியை ஏற்றுச் சில மாதங்களே ஆகியிருந்தன. வவுனிக்குளத்திலிருந்து பண்டிதர் ஆசிநாதர் ஒரு மாணவியை என்னுடைய பாடசாலைக்கு அழைத்து வந்தார். பிரபல பாடசாலைகள் எதுவுமே அந்த மாணவிக்கு அனுமதி வழங்க மறுத்து விட்டனவாம்.

நான் அந்த மாணவியைப் பார்த்தேன். படிக்க வேண்டும் என்ற துடிப்பு அவள் முகத்திலே தெரிந்தது. நான் மறுத்துவிடுவேனோ என்ற பயமும் அதில் கலந்திருந்தது. ஆவணங்களைப் பார்வையிட்டேன். அவளுக்கு வயது இருபது. கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர வகுப்புக்கு அனுமதி வேண்டுமாம். முன்னர் ஏன் அவளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது என்பது எனக்குத் தெரிந்து விட்டது.

அந்த மாணவியை மீண்டும் பார்த்தேன். கண்ணீர்க்குளம் ஒன்று உடைப்பெடுக்கத் தயாராக இருந்தது.

நான் சிந்தித்தேன் கல்வி வசதியற்ற வவுனிக்குளத்தில் அதிகம் படித்தறியாத ஏழைப் பெற்றோருக்கு மகளாகப் பிறந்தது அவள் குற்றமா? சட்டத்தைக் காட்டி அவளுடைய கல்வி ஆர்வத்தை வெட்டிப் புதைப்பதா?

கல்விப் பசிக்கு உணவு கொடுக்கவேண்டியது என் கடமை என்பதை உணர்ந்தேன். சட்டத்தை ஒரு பக்கத்தில் ஒதுக்கி விட்டு அவளுக்கு அனுமதி கொடுத்தேன். கிராமச் சூழலில் வாழ்ந்த அந்த மாணவி மூன்று திறமைச் சித்திகள் பெற்றுக் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்ற பத்தொன்பது பேரில் ஒருவரானாள். கதவடைப்புச் செய்த கல்லூரி ஒன்றிலே கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பிலே சேரும் வாய்ப்பையும் எனது பணியாக நினைத்துச் செய்து கொடுத்தேன்.

முதற்தடவையில் 210புள்ளிகளைப் பெற்ற மாணவி பல்கலைப்பிரவேசத்தை இழந்தாள். இரண்டாம் தடைவ 220புள்ளிகளுடன் பல்கலைக் கழகத்துள் புகுந்தாள். இன்று பொருளியல் சிறப்புப் பட்டதாரியாகத் திகழ்கிறாள். இந்த வாய்ப்பைக் காலத்தின் தேவையுணர்ந்து செய்யாது விட்டிருந்தால், இருண்ட வாழ்வில் ஒரு மகப்பேற்று இயந்திரமாக பெண்மையின் ஆற்றல்கள் மழுங்கிய துர்ப்பாக்கியசாலியாக வாழ்வை வீணடித்திருப்பாள்.

இந்த யதார்த்த உண்மையை இங்கு கூறவேண்டியதற்கு இரண்டு முகங்கள் உண்டு. யதார்த்தம் புரியாது சட்டத்தைச் சட்டைப் பைக்குள்வைத்திருக்கும் அதிகாரிகள் எமது மண்ணுக்கு உதவார் என்பது ஒன்று. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என வள்ளுவன் கூறியது போல எல்லாக் குழந்தைகளும் நல்ல குழந்தைகளாகவே மண்ணில் பிறக்கின்றன. நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே தங்கி இருக்கின்றது. இங்கு தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்ட ஆசிரியன் அன்னையாய், தந்தையாய், மாணவ இயல்பறிந்து கொள்ள வேண்டியதும் அவன் உள்வாங்கு சக்தியை உய்த்துணர்ந்து அறிவூட்டுவதும் அவனது பொறுமை சார்ந்த நற்பணியாகும் என்பதை வலியுறுத்துவது மற்றொன்றாகும்.

**நல்லதோர் வீணை**

மாணவனின் உள இயல்பை அறியாது, ஒழுக்க நலன் இல்லாது, பாடப்பரப்பில் ஆழ்ந்த அறிவில்லாது, ஆசிரிய முத்திரையிட்டு நடமாடும் அன்பர்கள் அவஸ்தைப் படுவது கண்கூடு. சுவர்ப் புகழ் இலக்கியங்களுக்கு இலக்காகித் துன்புறுவதும் மாணவர் நன்மதிப்பைப் பெற இயலாது திணறுவதும் அவர்களின் இயல்பாகிவிட்டது. கலாநிதி மு.வரதராசனார் ஒருகால் ஆசிரியன் என்பவன் அரைத் துறவியாக வேனும் இருக்கவேண்டும் என்றார். இதன் உட்பொருளை ஈண்டு கவனிக்க வேண்டும்.

சலனப்படாத சிந்தையோடு, ஆசைகளை வென்று, சதா கற்கும் இயல்பினராய், அறிவைத் தேக்கி, மாணவன் வேண்டும்போது அள்ளிக் கொடுக்கும் அமுதசுரபியாக வேண்டும் என்பதே கலாநிதியின் உள்ளக்கிடக்கை. ஊருணிநீர்போல கல்வித் தாகத்தைப் போக்கப் பேரறிவாளனாகத் திகழ்வதே நல்லாசிரியனின் கடமையாகும்.

'நல்லதோர் வீணை செய்தே நலங்கெடப் புழுதியிலே எறிவதுண்டோ...?' என வினாவெழுப்பிய பாரதி, வையகம் பயனுற வாழ வல்லமை வேண்டினான். நல்லதோர் வீணைகளான மாணவமணிகள் மாண்புடன் சீரியராய் செகந்தனில் திகழ, பயனுறு வாழ்வை அமைத்துக் கொள்ள, ஆசிரியன் என்ற இமயத்தில் தண்ணளி ஊற்றெடுக்க வேண்டும். அகிலத்தில் அறிவாற்பெறும் அழகுக்கு ஊன்றுகோலாய் விளங்கும் ஆசிரியப் பெருமக்கள் இமயம்போல் நிமிர்ந்து நிற்கச் சகல வாய்ப்புக்களும் பெற வேண்டும். அவர்களின் வாண்மை விளக்கு ஒளி கால வேண்டும்.

(தொடரும்...)

# அடையாள சினிமாவுக்கு அடியெடுத்து வைத்தலின் தேவை

**இந்தவாரக் கருத்தாளர்**





**சி.ப.வேந்தன்**
ஈழத்துச் சினிமா ஆர்வலர்

நான் எதனால் படைக்கப்பட்டிருக்கிறேன் என்பதை ஆராயும் ஒரு தேடல், அதிர்வலை அல்லது மெல்லிய கீறல் இவ்விதத்தில் எதுவாகவேனும் கொள்ளக்கூடிய ஏதோவொன்று எல்லோருக்கும் ஒருமுறையேனும் தோன்றியிருக்கும்.
அதற்கான பாதை விஞ்ஞானம், அது அல்லாதது என இரண்டாகப் பிரிக்கப்பட்டாலும் அந்தத்தேடலோடே மனித வாழ்வியம் கடந்து செல்கிறது. நமக்கானது எது என்பதில்தான் முழுமை இருக்கிறது. ருசி இருக்கிறது. இவையெல்லாவற்றையும்விட இருத்தல் என்பது இருக்கிறது.
எமக்கான மொழி எது? எமக்கான அடையாளம் எது? எமக்கான அழகியல் எது? என்பதோடு அறிமுக மாதலிலேயே ஒரு சமூகத்தினதும் சரி தனி மனிதனினதும் சரி மதிப்பு என்பது அளவிடப்படுகிறது.
மற்ற இனங்களைப்போன்றே ஈழத்தமிழினத்துக்கெனவும் ஒவ்வொன்றிலும் தனித்தனியான மதிப்பீடுகளோடான தனிப் பண்புகள் இருக்கின்றன. அதனோடு சார்ந்திருத்தலே நம்முடைய உயர் ஒழுக்கம் என நம்புகிறேன்.
ஆனாலும் நாம் நம் கையிலிருக்கும் நல்லவைகளை அல்லது எமதுகளைத் தொலைத்தும் புறக்கணித்தும் விட்டு மற்றவர்களின் அடையாளங்களை எப்படியாவது எம்மில் பொருத்திவிட முனைந்துகொண்டிருக்கிறோம். அப்படிப் புறக்கணிப்புக்குள்ளாகித் தொலைந்துகொண்டிருக்கிறது எமக்கான சினிமா.

000

ஈழத்தமிழ் சினிமா தன்னுடைய ஆராய்ச்சிக்கான அதிர்வலையை இன்னும் எவரிலேனும் நிகழ்த்திவிடவில்லையா?
அல்லது அத்துணை தகுதிவாய்ந்த திரையாளர்கள் நம்மில் உருவாகவில்லையா? என்பது இன்னும் வினாக்குறியுடனேயே இருக்கிறது.
பல நுற்றாண்டுகளுக்கு முன்னரான வரலாற்றை இயல், இசை, நாடகம் என்ற பண்புகளோடு கொண்ட எமது தமிழ்ப் பண்பாடு இன்றுவரையிலும் எமக்கான அடையாளங்களோடு சரியான திரைவடிவில் கதைசொல்லல் பண்பை உருவாக்கவில்லை. அல்லது கற்றுக்கொள்ளவில்லை என்பது கவனிக்கப்படவேண்டி யது.
இந்தியச் சினிமாவின் பிரதிமையாய் ஆரம்பத்தில் வெளிவந்த சினிமாக்கள் பல போதாமைகளோடு தேங்கிவிட, அடுத்து மேடைநாடகத்தை அப்படியே சினிமாவில் இறக்கிவைத்த பரிதாபம், அடுத்து விடுதலைப்புலிகளின் காலத்தில் அவர்களின் குரலாய் அமைந்த கதைப்படங்கள், அதற்குப் பின்னர் 2009க்குப் பின்னரான தற்போதைய சினிமா முயற்சிகள்.
இப்படி ஈழத் தமிழ் சினிமா காலத்துக்குக் காலம் தன்னுடைய முயற்சிகளை முன்னகர்த்திக் கொண்டிருந்தாலும், இன்றுவரையிலும் அது தவழும் பருவத்திலேயே இருப்பது நமது கலைசார் இருப்பைக் கேள்விக்குறியாக்குகிறது.


000

போர் என்பது எமது வளர்ச்சியின் பின்னடைவுக்கு காரணம் எனச் சப்பைக்கட்டுக் கட்டினாலும் அது எந்தளவு தாக்கம் செலுத்தியிருக்கிறது என்பதிலும் ஆராய இடமிருக்கிறது. அப்படியே இருந்தாலும் குறித்த துறைசார்ந்து மீண்டுவர இத்தனை காலம் போதாதா? எனவும் யோசிக்கத் தோன்றுகிறது.
அடிப்படைகளை ஆராயும்போது எங்கள் சினிமாக்காரர்கள் அனைவரும் சினிமாவில் நுனிப்புல்லை மேய்ந்துவிட்டே களத்தில் இறங்கியிருக்கிறார்கள் எனும் கசப்பான உண்மை புலனாகும்.
அதற்கு இன்றைய நவீன தொழில்நுட்ப வசதியும் பிரபல கவர்ச்சியுமே காரணமாயிருக்கிறது. கடைநிலை சினிமாவைப் பாடமாக எடுத்துக்கொண்டு பாட்டும், சண்டையும், மூன்றாந்தர நகைச்சுவையையும் இணைத்து தென்னிந்தியப் பாணியில் பாடல் இறுவட்டுக்கு ஒருவிழா, பட வெளியீட்டுக்கு ஒரு விழா, அதற்கு தென்னிந்திய மூன்றாந்தரத் தொலைக் காட்சிப் பிரபலங்களின் அழைப்பு என ஐந்து நிமிடக் குறும்படத்துக்கு ஆலவட்டம் போடும் பைத்தியத்தனங்களில் தொலைந்து விடுகிறோம்.
எமக்கான அடையாளங்களைப் பொருத்திக்கொண்டு உருவாகும் சினிமாக்களை தோற்றுவிப்பதில் தவறுகிறோம்.
ஈழத்தமிழ் சினிமாவை மரியாதையான இடத்துக்கு நகர்த்திச் சென்ற விடுதலைப்புலிகளின் காலத்தில் இயங்கிய ஒன்றிரண்டு சினிமாக்காரரும் தற்போது இல்லை. சிலர் சினிமாவை விட்டு ஒதுங்கிவிட்டனர். அதற்குப் பின்னரான சினிமா முயற்சிகளும் சொல்லிக்கொள்ளும் படியாய் இல்லை.
இதுவே இன்றைய ஈழத் தமிழ் சினிமாவின் நிலையாய் இருக்கிறது. ஆனாலும் ஒரு சில படைப்பாளிகளின் செயற்பாடுகள் நமது அடையாளச் சினிமாவுக்கான நம்பிக்கையை ஓரளவேனும் ஊட்டுகின்றன என்பதில் ஆறுதலடையலாம்.

000

வெறும் கற்பனைக் கதாபாத்திரங்களாலும் சோடிக்கப்பட்ட காட்சிகளாலும் அதி புனைவுக் கதையளப்புக்களாலும் நிரப்பப்பட்ட வர்த்தக சினிமாக்களால், பார்வையாளனை பரவசமடையச் செய்யவும், சிரிக்கவும், அழவும், கொந்தளிக்கவும், கற்பனையில் மிதக்கவும் வைக்கவும் முடிகிறதென்றால், பெரும் குருதி ஆறு ஓடிய மண்ணில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக வலி சுமந்துகொண்டிருப்பவர்களின் வாழ்க்கையில் இடம்பெயர்வு, புலம்பெயர்வு எனப் பல இன்னல்களைக் கொண்டவர்கள் மத்தியில் ஏராளம் கதைகள் கிடக்கின்றனவே? சத்தமிட்டுப் பேசுவதற்கும் நியாயம் கேட்பதற்கும் வெப்பியாரத்தை வெளியில் கொட்டுவதற்கும் அழுது தீர்ப்பதற்கும் என ஏராளம் சங்கதிகள் இருக்கின்றனவே?
துரோகங்கள், இழப்புக்கள், தியாகங்கள், நம்பிக்கைகள் என சமூகவெளியில் பரப்ப ஆயிரமாயிரம் விடயங்கள் பரந்து நிற்கின்றனவே? ஏன் இவற்றையெல்லாம் நாம் திரையில் பேசத் துணிவதில்லை. ஏன் இவைகளைச் சினிமா மொழியில் மற்றவரிடம் கடத்த எத்தனிப்பதில்லை. இவைகளைச் செய்தாலே நமக்கான சினிமா தோன்றிவிடுமே? பேச்சுச் சுதந்திரம் இல்லையென்ற தப்பித்தலைக் காரணம் கொண்டாலும் இப்போது பேசமுடியுமானவற்றையாவது பேசலாமே.
போர்க் கலை நடுவே திரைக் கலையையும் நிகழ்த்தியவர்கள் மத்தியில் சத்தமற்ற பெருவெளியில் மௌனமாய் இருப்பது சாதனையாகாதே. ஆக, நாம் நமக்கான இருத்தல் என்பதை நிலைநிறுத்த எமக்கான அடையாளத்தை பொருத்தமுற நிறுவவேண்டியிருக்கிறது. ஒருவனுடைய தலைப்பெயர் எப்படி மற்றவர் மத்தியில் அவனுக்குரிய கர்வத்தையும் கௌரவத்தையும் கொடுக்கிறதோ, அதேபோல் நம்முடைய கலையின் அடையாளம்தான் எமக்கான கர்வமும் கௌரவமும். எதிர்கால வெளியில் எமது திரைக் கலை அடையாளத்துக்காக எல்லோரும் அதிகளவில் உழைக்கவேண்டியிருக்கிறது.

---



கவிதை



மருத்துவர் சி. யமுனாநந்தா



## வைகாசி நீசிக்கு நீதி செலீஇ! செலீஇ! தாசினியே!

வைகாசி நீசி என்றுமெம்
மனக்காட்சி
பசிக்கு மாறாது அதன் மனச் சாட்சி
மாற்றானுக்கு இஃதோர்
கணிக்காட்சி
தமிழ் மக்களின் எழுச்சியே
வைகாசி
காசிக்குச் செல்லுமிவ் மனச்சாட்சி
நம் நீசிக்கு என்றும் புலக்காட்சி
காசி வாசியே வைகாசி நீசிக்கு
நீயே நிவர்த்தி

யோசி வைகாசி வெரீஇ வெரீஇ
கேளிக்கை ஓரீஇ ஓரீஇ வை காசியே
வைகாசி நீசிக்கு நீதி சொலீஇ சொலீஇ
காசினியே
சென்னியிலே வன்னியின் வன்னி
எண்ணியே நன்றே நண்ணுமின்
இதுவே
எம்மாத் மாக்களுக்கான பிரார்த்திப்பு
தழீஇ தழீஇ தமிழ் வீரம்
நிறீஇ நிறீஇ தமிழெலல்.

அறிக்கை


கதிரேசன் காத்தவராயன்

# மாறா வாழ்வு...

## போர்க் காலம் போருக்குப் பிந்தியகாலம்

அரசியல் பக்கமே போகக்கூடாதெண்டு இருந்த கட்சியிலையிருந்தும், தொடக்கின கட்சியிலையிருந்தும் விலகச் சொல்லி, காளியாச்சி சன்னதிமுருகன், வல்லிபுரத்தார் எல்லாரின்ர பேரிலையும் சத்தியம் வாங்கிப் போட்டுதுகள் மனுசியும் பிள்ளையளும். அவையின்ர கூட்டும், தமிழ்த் தேசியக் கூட்டும் ஒண்டுதான். சத்தியம் வாங்கி அடக்கிறதிலை மட்டுந்தான் வெற்றியாய்ச் செயற்பட்டவை. மற்றும்படி புடுங்குப்பாடுதான். அவை பேப்பருகள் பாக்கிறேல்லை எண்டதாலை, இதைச் சொல்ல முடிஞ்சுது. நீங்கள் ஆரும்போய் மூட்டி வைக்காட்டிச் சரி...

அட... நான் சொல்ல வந்தது என்ர கதையையில்லை. சனத்தின்ர கதையை. அதுகும் என்ர கதை மாதிரித்தான். அதைச் சொன்னா இவனுக்குக் கோவம்...இதைச் சொன்னால் அவனுக்குக் கோவம். அட.. எங்கட ஆக்களெண்டு சொல்லி எங்கட பிரச்சனையளைக் கதைக்க ஆக்களேயில்லை. அதையிதைக் கேட்டா சர்வதேசம்.. ராசதந்திரம்.. பொறுத்தார் பூமி ஆள்வர்...எண்டு கதைவிடுகிறதோட சரி.. உருப்படியாய் ஒண்டுமில்லை. இதை அரசியலெண்டு ஆராவது கதைச்சாப் படு கெட்ட கோவம்தான் வரும்க்ண்டியளோ... அப்ப தெரியும் இந்தக் கதிரேசனின்ர வாயும் கோவமும்...

சனத்தின்ர பிரச்சனையெண்டால் என்ன ஒண்டே... ரண்டே... அதுகும் போருக்குள்ள இருந்து உயிர் தப்பிப் பேரிலை மட்டும்வாழுற எங்கட சனத்துக்கெண்டு கிடைச்சது என்ன? ஏமாத்தத்தைவிட வேற ஏதாவது கிடைச்சிருந்தாச் சொல்லுங்கோ பாப்பம்... சண்டையை முடிச்சாச்சு... பயங்கரவாதத்தை இல்லாமலாக்கியாச்சு... அது இதுவெண்டு எவ்வளவு கதையள், அறிக்கையள், ஆர்ப்பாட்டங்கள்.. கணக்குப்பாக்க முடியுதே? சனத்துக்கு என்ன கிடைச்சிருக்கு?

முந்தின அரசாங்கமும் சரி, இப்பத்தைய நல்லிணக்கமெண்டு சொல்லுற அரசாங்கமும் சரி.. அவைக்கு எடுபிடியளாயிருக்கிற, முண்டு குடுத்து நிமித்தி வைச்சிருக்கிறவையும் சரி.. சனத்தின்ர என்ன பிரச்சனையைத் தீத்தவை? சண்டை முடிஞ்சு ஒன்பது வருசமாச்சு... காணாமல் ஆக்கப்பட்டவன் ஆக்கப்பட்டவன்தான்...சண்டையைக் காரணமாக் காட்டிச் சிறையிலை உள்ளவனும் உள்ளையேதான்... விசாரணையும் இல்லை, தீர்ப்புமில்லை... வாழிடப் பிரச்சனை, மீள்குடியேற்றம் எல்லாம் கூட அப்பிடியேதானே இருக்கு... ஆமி விட்ட இடத்திலை சனத்தின்ரபாடு என்ன எண்டு பாக்க ரெண்டு மாதமா நேரமில்லாத மாகாணத் தலைவர்... அப்பப்ப வந்து வாக்குக் குடுத்துப்போட்டுப் போகிற நாட்டின்ர தலைவர்... இவையிவையைக் காவித்திரியிற ஆக்கள்.... கோவமெண்டாப் பொத்துக்கொண்டு வருகுது.

000

வன்னியிலை போய்ப் பாருங்கோ... மெயின் றோட்டுகளைத் தவிர மற்ற எல்லாம் இப்பவும் கோடையில புழுதிக் கும்பி, மாரியிலை சேத்துக்குழி எண்ட நிலைதான். வீடு வாசல் கூட வெளிநாட்டு உதவியளும் சிலசில திட்டமும் கிடைச்சுக் கட்டினதுகள் போக மிச்சம் மீதிச் சனம் படுகிறபாடு... சண்டைக்காலத்தை மறக்க முடியாத வசதியள்தான். கரன்ற் எண்ட ஒண்டுதான் நிவாரணமெண்டு ஆகிப்போகிடுமோ? சண்டை முடிஞ்சுது இனி அபிவிருத்திதான் எண்டு கண்ட கனவுகளெல்லாம் காணாமலாகிப்போச்சு..





காணாமலாக்கப்பட்டதுகளின்ர குடும்பங்களின்ர நிலை..? ஒராள் இருக்கோ இல்லையோ எண்டு தெரியாமல் உறவுகள் வாழுற நிலைமையைக் கற்பனை செய்யவே தலையை விறைக்குதல்லோ? அந்தக் குடும்பங்களின்ர நிலை இண்டுவரைக்கும் ஒரு முடிவு மில்லாமத்தானே போய்க்கொண்டிருக்கு. போர்க்குற்ற விசாரணை, பன்னாட்டு விசாரணை... அதுஇதுவெண்டு அங்கலாய்க்கிறதிலை பயனிருக்கெண்டு நினைக்கிறியளே? உந்த அமெரிக்கா... வியட்னாமிலையும் ஈராக்கிலையும் ஆப்கானிஸ்தானிலையும் செய்யாததையே... ஏன் இந்தியா தன்ர நாட்டிலையோ, காஷ்மீரிலையோ செய்யாததையே மகிந்த அரசாங்கம் இங்க செய்தது. இதுகளை விட்டாலும் எங்கட தனிப் பிரதிநிதியள் கண்துடைப்பு விசாரணைக்குக்கூட காலஎல்லையை பெருமனசோடயல்லே குடுத்தவை... வருகுது வாயிலை.... இதுகளிப்பிடியிருக்கிற அடிப்படை அதிகார அலகெண்டு அடிச்சுப் பிடிச்சு ஆளுக்காள் சேறடிச்சு, ஊராவீட்டு மதிலுகளை நாறடிச்சு காலிலை விழுந்து கக்கூசைக் கழுவி ச்சீய்... உந்தச் சபையளுக்காய்ப் போட்ட கூத்துகள்... அங்க போயுமென்ன ஆளையாள் பிடிச்சு விழுங்கிற வேலையைவிட வேறயென்னசெய்யினம்...?மாகாண சபையைப் பற்றிக் கதைக்கிறதிலை ஒண்டுமேயில்லை... உருப்படியா ஒண்டாயிருந்து... உருப்படி



யாச் செய்த ஒரு வேலை சொல்லுங்கோ பாப்பம்?

000

முள்ளிவாய்க்காலிலை நிரந்தரமா ஒரு நினைவாலயம் அமைக்க வக்கில்லாதவை, மே18 வந்ததும் அங்கை வந்து கொடுக்கிழுக்கிறதை என்னண்டு சொல்ல? மாவீரர் நாளிலை மாவீரர் துயிலுமில்லங்களிலை பிரதான சுடரேத்திறதிலையிருந்து அரசியல் வாதியளைத் தூரவைச்சமாதிரி, முள்ளிவாய்க்கால் நினைவிலையும் செய்யவேணும் கண்டியளோ? அதுக்குள்ள அவர் வரக்கூடாது இவர் வரக்கூடாதெண்டு சண்டைவேற... ஆருக்குத் தகுதியிருக்கு.. சனம் அணுஅணுவாச் சாகேக்குள்ள ஏ.சீ ரூமுகளுக்குள்ள ரெலிபோனுகளை ஓவ் பண்ணிப் போட்டிருந்தது தெரியாதே? எங்கடை சனங்களும் அப்பிடித்தானே! எங்கடை வாழ்க்கையை நல்லவிதமாக மாத்திறதைப்பற்றி முள்ளிவாய்க்காலிலை முடிவெடுத்துச் சத்தியம்பண்ணிச் சாதிக்கிறவனுக்குத்தான் எங்கட வோட்டெண்டு நாமெல்லாம் கூடிச் சத்தியம் பண்ண வேண்டியது அவசியமெண்டுதான் சொல்லுறன்... நீங்கள் என்ன நினைக்கிறியள்?

கவிதைகள்

## குருதி நிலத்துக் குரல்கள்


வல்வைக் கமல்

குருதி நிறத்தில்
சிவந்து கிடக்கிறது
எம் பூர்வீக பூமி

காக்கை வன்னியனும்
பண்டார வன்னியனும்
பரந்து ஆண்ட பூமி
பார்ப்பதற்குப்
பரிதாபமாய்க் கிடக்கிறது

பசுமையாய்
இருந்த தேசம்
இன்றுபற்றைக் காடாய்
பாலைவனமாய்
கிடக்கிறது.

நீர் ஆறு ஓடிய தேசத்தில்
கந்தக ஆறும்
நெருப்பாறும் ஓடி
இன்று
குருதி ஆறு ஓடி
ஓய்ந்திருக்கிறது.

கந்தக மழையில்
எம் கால்களையும்
கைகளையும்
ஏனை அவயங்களையும்
இழந்தது மட்டுமன்றி
எம் உயிர்கள்
பலவற்றையும்
இழந்துவிட்டோம்
இப்போது
கண்ணீர் ஆறு
ஓடிக்கொண்டிருக்கிறது.

கலைபண்பாட்டுடன்
கல்வியும் இனிய
கலாசாரமும்
இணைந்து
விளங்கிய
தேசத்தில்இன்று
கள்வரும் கயவரும்
கலந்துவிட்டனர்.

எம் தேசம்களையிழந்து
போயிருக்கிறது.

இருந்த அனைத்தையும்
இழந்தவர்களாய்
எதுவும் இல்லாதவர்களாய்
நாம் இருப்பதைப்போல
எம் தேசமும்...

## புதைகுழி வேட்டை



மீண்டும்
தோண்டும் படலம்
ஆரம்பமாயிற்று.
ஆலயச்சூழலிலும்
புதைகுழி
மனிதப் புதைகுழி

காணாமல் ஆக்கப்பட்டவர்கள்
ஒருவேளை
இங்கு இருக்கலாமோ..?

நேற்றும் இரண்டு
எலும்புக்கூடுகள்
கிடைத்தனவாம்.
காணாமல் ஆக்கப்பட்டவர்கள்
இவர்களோ..?

எலும்புக்கூடுகளை
எவ்வாறு இனங்காண முடியும்?
யார் தான்
உரிமை கோரமுடியும்..?

மேலும் மேலும்
தோண்டப்படுகிறது
எத்தனை எலும்புக்கூடுகள்
இன்னும் வெளிவர
இருக்கின்றனவோ..?

புதைத்தவருக்குத்தான் வெளிச்சம்...

கவிதை

# ஓம்

கந்தையா ஸ்ரீ கணேசன்



இனியும் எம்மால் தொடர
எங்கள் ஆட்டம் முடிந்துவிட்டதுவோ
எங்கள் உயிர்ப்பு ஓய்ந்துவிட்டதுவோ

அழகு கொழிக்கும் வதனம்
ஆனந்தம் இசைக்கும் வயது
ஒளி உமிழும் எழில் விக்கிரகங்களாக
என்றும் எழுச்சி காணும் நினைவுகள்!
எத்திசையும் ஏர் பிடிக்கும்
உழவரைப்போல.
முத்திரை பதிக்கும் உணர்வுகளுடன்
எழுச்சி கண்ட உள்ளங்கள் எங்கே?

வயதுகள் ஏறிவிட்டனவோ
ஆண்டுகள் கூடி விட்டனவோ
பயந்து பயந்து இனிமை சுவைத்த
இயந்திரத் தன்மை அற்ற காலங்கள் எங்கே?
நாள்தோறும் நயந்திட்ட நினைவுகள்
வேளை தோறும் வெற்றி கொண்ட
காட்சிகள்
வயல்வெளி எங்கும் ஆடிப்பாடிய காலங்கள்
செயல்படு வீரராய் ஒளி கூட்டிய கோலங்கள்
என்றும் நித்தியமாய் துலங்கி
நிற்கின்றனவே!
பூ தந்த பூவதனம் – காட்சி மாறவில்லையே!
பா பாடிய பல்வரிசை தேயவில்லையே!
ஆவின் பால் தரும் சுவை குறையவில்
லையே!
பாவின் மொழியும் பக்குவமும்
நிறைந்திருக்கிறதே!
ஆம் இனியும் எம்மால் தொடர முடியும்
ஓம் எனும் வார்த்தை ஒன்று தான் முக்கியம்

அறிந்த மிருகம் அறியாத கதை

# பீதி கிளப்பும் பிணந்தின்னிக் கழுகுகள்-2



கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்

அதிக உயரத்தில் பறந்து கொண்டே. தரையில் நகரும் சிறு எலிகளைக் கூட இவை தவறவிடுவதில்லை, கடுகதி வேகத்தில் கீழிறங்கி. வளைந்த நகங்கள் கொண்ட கால்களால் இரையைக் கவ்விக் கொண்டு போய்விடும், இரையைக் கொன்ற பின்னரே அதை உண்ணும்,

**கழுக்குன்றத்துக்கு வரும் கழுகுகள்**

இந்தியாவில் மிகப் பிரபல்யமான திருக்கழுக்குன்றக் கழுகு பற்றி இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகளாக இந்த ஒரு ஜோடிக் கழுகுகள் இந்தக் கற்பாங்கான இடத்துக்கு வந்து பொங்கல் உண்று செல்வதாகச் சொல்லப்படுகின்றது. எகிப்திய பிணந் தின்னிக் கழுகுகள் அல்லது வெள்ளைக் கழுகுகள் என்று அழைக்கப்படும் இனக் கழுகுகள் தான் இவை! 1957ஆம் ஆண்டில் பகல் பூஜை முடிந்ததும், பூசாரி சர்க்கரைப் பொங்கலைக் கல்லின் மேல் படைப்பதையும், இரண்டு வெள்ளைக் கழுகுகள் வந்து அதை உண்பதையும் நேரில் பார்த்த பதிவுகள் இருக்கின்றன. ஒளிப்படமும் எடுத்துள்ளார்கள். இந்த வெண் கழுகுகள் மனித மலத்தையும் தின்பவை என்பதால் சர்க்கரைப் பொங்கலை அவை விரும்பிச் சாப்பிடலாம். சில நாள்கள் ஒரே நேரத்தில் பொங்கலை அளித்து வந்தால் அவை தினமும் அதே நேரத்துக்கு அங்கு வரலாம். ஆனால் எனக்குப் புரியாத புதிர் ஒரு ஜோடிக் கழுகுகள் இறந்தால் அடுத்த ஜோடியைப் பழக்குவது யார்? என்று இந்தியாவின் பட்சி ஆய்வாளர் ஒருவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**ஆத்ம விடுதலை தரும் கழுகுகள்**

முன்பெல்லாம் பார்சி இனமக்கள் இறந்தவரின் உடலை அமைதிக் கோபுரத்தின் உச்சியில் வைத்து விடுவார்கள். அங்கு காத்திருக்கும் பிணந் தின்னிக் கழுகுக் கூட்டம் அந்த உடலைத் தின்று இறந்தவரின் ஆத்மாவுக்கு விடுதலை கொடுக்கிறது என நம்பினார்கள். காலமாற்றத்தாலும் கழுகுகளின் எண்ணிக்கை குறைந்ததாலும் இந்த முறை தற்போது நடைமுறையில் இல்லை. இதேபோல. திபெத்தில் குறிப்பிட்ட பிரிவினர் இறந்தவர்களின் உடல்களைப் பிணந்தின்னிக் கழுகுகளுக்கு இரையாக மலை உச்சியில், திறந்த வெளியில் வைத்து விடுவது தற்போதும் வழக்கத்தில் உள்ளது. இதை ஆகாய் ஈமக்கிரியை என்கின்றனர்.

**அபாரமான பார்வைத் திறன்**

சிங்கம் மிருகங்களின் ராஜா என்றால், கழுகுதான் பறவைகளின் ராஜா. கொழுத்த உடல், வளைந்த அலகு, கூர்ந்த பார்வை, வளைநகக் கால்கள், விரிந்த பரந்த இறக்கைகள், தேர்ந்த வேட்டை யுக்தி இத்தனை குணாம்சங்கள் கொண்ட கம்பீரமான பட்சிதான் கழுகு.
கூர்ந்த பார்வை என்று இரண்டு சொற்களில் இதன் கண் பார்வையை விவரித்தால் போதாது. அபாரமான பார்வைத் திறன் கொண்ட இந்தப் பறவைகள் ஆகாயத்தில், வெகு உயரத்தில் வட்டமிட்டுக்கொண்டே தனது இரையைத் துல்லியமாகக் கண்டுகொள்கின்றன.
மனிதனை விட 2இலட்சம் மடங்கு துல்லியமான பார்வைத் திறன் இவற்றுக்குண்டு என்று கூறும்போது, உங்களால் கழுகுகளின் பார்வைத் திறனை ஊகித்துக் கொள்ள முடியும். அதிக உயரத்தில் பறந்து கொண்டே, தரையில் நகரும் சிறு எலிகளைக் கூட இவை தவறவிடுவதில்லை. கடுகதி வேகத்தில் கீழிறங்கி, வளைந்த நகங்கள் கொண்ட கால்களால் இரையைக் கவ்விக் கொண்டு போய்விடும். இரையைக் கொன்ற பின்னரே அதை உண்ணும்.

**குஞ்சுகளைப் பலசாலியாக மாற்றும் தாய்ப்பறவை**



கழுகள் வலிமை வாய்ந்த, தந்திரமான பறவைகள் என்று வர்ணிக்கப்பட்டாலும், பிறப்பால் இவை அப்படி இருப்பதில்லை என்றே அவதானிகள் கருதுகிறார்கள். தாய்க் கழுகு தனது மேற்பார்வையில், குஞ்சுகளுக்கு அளிக்கும் கடுமையான 'இராணுவப் பயிற்சிகளே' கழுகுகளைப் பலம் வாய்ந்த வலிமை மிக்க பறவைகளாக வளரச் செய்கின்றன.
குஞ்சுகளாக இருக்கும்போது பாதுகாப்பளித்து உணவளித்து பராமரிக்கும் தாய்ப்பறவை. அவை பறக்க வேண்டிய காலம் வரும்போது. மெத்தென இருக்கும் படுக்கையைக் கலைக்கிறது. அதைக் கரடுமுரடாக்கின்றது. கூட்டைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியிருந்த குச்சிகளின் கூர்மையான பகுதிகளைக் கூட்டில் துருத்திக் கொண்டிருக்கும் வகையில் மாற்றி அமைக்கின்றது. முடிந்த அளவு குஞ்சுகளுக்கு அசௌகர்யத்தை ஏற்படுத்துகின்றது. போ போ என்று குஞ்சுகளை விரட்டுகிறது தாய்ப்பறவை. கீழே விரிந்து கிடக்கும் பரந்த உலகைக் கண்டு, கூட்டின் விளிம்பில் நிற்கும் குஞ்சு மிரளுவதை இலட்சியம் செய்யாமல், தாய்ப்பறவை, குஞ்சைக் கூட்டிலிருந்து வெளியே தள்ளிவிடுகிறது. தள்ளிவிடப்படும் குஞ்சு பறக்கச் சிரமப்பட்டால், தாய்ப்பறவை அதைப் பிடித்து, மீண்டும் கூட்டுக்குள் விடுகின்றது. ஆனால் இம்சை தொடரும். தானாகப் பறக்கப் பழகும் வரை இந்தத் தொல்லை தொடரும். வெளியே இருந்து பார்ப்பவருக்கு, இது கொடுமைக்காரப் பறவை போல் தோற்றம் தரலாம். ஆனால் வெளியே விரியும் சவால்களுக்கு முகம் கொடுக்க, தனது குஞ்சுகளைப் பழக்கும்போது, தாய்ப்பறவை கண்டிப்பாகவே நடந்து கொள்கின்றது.

**கால்களுக்கிடையில் சிறுநீர் கழிப்பது ஏன்?**

அழுகிய, கிருமிகள் கொண்ட மிருக உடல்களை உண்கிறதே. இதற்கு வயிற்றுக் கோளாறு வராதா என்ற கேள்வி எழுவது நியாயமான ஒன்றே. இதன் வயிற்றிலுள்ள அமிலத் தன்மை கொண்ட திரவம், அதற்கு இடம் கொடாது. உண்ணுவது எதுவாயிருந்தாலும் சமிபாட்டுக்கு ஏதுவாக, கிருமிகளைக் கொன்று உணவை ஜீரணிக்க வைத்து விடுகின்றது. இந்தக் கழுகுகளுக்கு இன்னொரு பழக்கம் இருக்கின்றது. அதாவது அவை தமது கால்களுக்கு இடையில் சிறுநீரகம் கழிக்கின்றன. இறந்த பக்டீரியாக்கள் நிறைந்த உடல்களின் மீது நடக்கும் இவற்றின் காற்பகுதிகளில் உள்ள பக்டீரியாக்களை, இந்தச் சிறுநீரகம் அழித்து விடுகின்றது. உணவை உண்ட பின்பு வாந்தி எடுக்கும் பழக்கமும் கழுகுகளுக்கு இருக்கிறது.
இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று பறப்பதற்கு முன்பாகத் தனது உடலை இலேசாக்கிக்கொள்ளவது..இரண்டாவது தன்னைத் தாக்க வரும் மிருகங்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்குக் கையாளும் ஒரு யுக்தியாக இந்தச் செயல் நோக்கப்படுகின்றது.
அரிதாகிவரும் இவற்றைப் பாதுகாத்து. எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் ஆண்டுதோறும் செப்டம்பர் 3ஆம் திகதியைப் பன்னாட்டுப் பிணந்தின்னிக் கழுகுகள் விழிப்புணர்வு நாளாகக் கடைபிடிக்கிறார்கள். இந்த ராஜகம்பீரமான பறவைகளின் பல இனங்கள் அழிவின் விளிம்பில் தள்ளப்பட்டிருப்பது, கவலைக்குரிய விடயந்தான். மனிதனின் பேராசை எதைத்தான் விட்டுவைக்கின்றது?

அரட்டை

மேரிகிறேஸ் வரதராஜன்





## மண்டபத்துக்குள் குடை பிடித்த கொடுமை...!

மழைக்குக் குடை பிடிப்பதைப் பார்த்திருக்கிறோம்.
வெயிலுக்குக் குடை பிடிப்பதையும் பார்த்திருக்கிறோம். ஆனால் மண்டபத்துக்குள் குடை பிடிப்பதை முதன் முதலாக இப்போதுதான் பார்க்கிறோம். அமெரிக்க அரச தலைவர் தனக்குத்தானே குடை பிடிக்கிறார். இங்கிலாந்து ராணியும் அப்படித்தான். ஆனால் வளராத எமது நாட்டில். அதிலும் எமது தமிழ்த் தலைவர்கள் தமது கையால் தமக்குக் குடைபிடிப்பதில்லை. அவர்களுக்குக்குடைபிடிக்கவென்று தனியாக ஒருவரை வைத்திருக்கின்றனர். அந்தக் குடை பிடிக்கும் ஆளுக்கும் மக்களின் வரிப்பணத்தில் இருந்து தானே சம்பளம் கொடுப்பார்கள்...? மண்டபத்துக்குள் இருக்கும் வட்மாகாணசபை உறுப்பினர் ஒருவருக்கு வேலையாள் ஒருவர் குடை பிடிக்கிறார். அது குறித்து உறுப்பினரும் கரிசனை காட்டவில்லை.



## சபாஷ்! சரியான கேள்வி...!

## இழுபடுகிறது ஊழல்...

கடந்த வருடம் மாகாணசபையில் ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான அமைச்சர்கள் மீது முதலமைச்சர் விக்கினேஸ்வரன் நடவடிக்கை எடுத்திருந்தார். முதலமைச்சரின் இந்த நடவடிக்கைக்குத் தமிழ் மக்கள் ஆமோக ஆதரவை வழங்கியிருந்தனர்.
ஆனால் தற்போது குற்றச்சாட்டுக்குள்ளான அமைச்சர்கள் மீது முதலமைச்சர் நடவடிக்கை எடுக்காதது மக்களுக்கு ஆச்சரியத்தையும் விசனத்தையும் கொடுத்துள்ளது.
இதனால் அமைச்சர்களின் ஊழல் மற்றும் மோசடிகளுக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் உடந்தையாக இருக்கிறாரோ? என்ற சந்தேகம் தோன்றியுள்ளது.
அமைச்சர்கள் சர்வேஸ்வரன் மற்றும் அனந்தி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்த அறிக்கை ஆளுநரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.
•இவ்விரு அமைச்சர்களும் தங்களுக்குரிய ஆளணியாக நியமித்தவர்களுடன் கூட்டு வங்கிக் கணக்கு வைத்துச் சம்பளத்தைப் பெற்றுள்ளனர்.
•இவர்களால் ஆளணியில் நியமிக்கப்பட்டவர்களில் சிலர் உரிய தகுதிகளைக் கொண்டிருக்கவில்லை
•இவர்களால் ஆளணியில் நியமிக்கப்பட்ட சிலர் ஒருபோதும் அலுவலகப் பணிக்கு வரவில்லை.
•பிக்கப் வாகனம் பயன்படுத்தாமலே அதற்குரிய எரிபொருள் கணக்காக மாதம் 75ஆயிரம் ரூபாவைப் பெற்று வந்துள்ளனர்.
இவ்வாறு ஒவ்வொரு மாதமும் பல இலட்சம்ரூபா பணத்தை இந்த இரண்டு அமைச்சர்களும் சுருட்டி வந்துள்ளனர்.
பட்டதாரிகள் வேலையின்றி அலைந்து திரிகின்றனர். ஆனால் இந்த அமைச்சர்கள் தங்களுக்குரிய ஆளணிகள் விடயத்தில் மோசடி செய்துள்ளனர்.
அனைத்துத்தலைவர்களும் இதை அறிந்தும் இது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விடயம் இழுபடுகிறது.



## மோசடிகளும்! வியப்பும்!

வடமாகாணசபையில் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள சர்வேஸ்வரன் மீது மோசடிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.
பதவியேற்று ஒருசில மாதங்களுக்குள்ளேயே சர்வேஸ்வரன் மற்றும் அனந்தி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து மக்கள் வியப்பு அடைந்துள்ளனர்.
இந்நிலையில் பாடசாலைகளில் இருக்கும் சிற்றுண்டிச்சாலைகளை பாடசாலை நிர்வாகம் நடத்தக்கூடாது எனக் கல்விஅமைச்சர் உத்தரவிட்டுள்ளார். சிற்றுண்டிசாலைகளை நடத்தி அதன்மூலம் வரும் பணத்தில் இருந்து பாடசாலைச் செலவுகளைச் செய்து வந்த பாடசாலைகள் இதனால் பாதிப்படைந்தன. குறிப்பாகச் சில பாடசாலைகள் இந்தச் சிற்றுண்டிசாலை மூலம் பெறப்படும் பணத்தில் இருந்தே கல்லூரி விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றன. வடமாகாண கல்வி அமைச்சரின் உத்தரவையடுத்து சிற்றுண்டிச் சாலையை நடத்தும் பொறுப்பு மாகாணசபை உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளதாம்?
மாகாணசபை உறுப்பினர் ஒருவருக்கு எப்படி இந்தப் பொறுப்பை வழங்கினார்கள் என்று தெரியவில்லை?
ஆனால் ஒன்றுமட்டும் உறுதியாகத் தெரிகின்றது. இந்த வடமாகாண சபை இருக்கும்வரை யாழ். மாவட்டம் மீண்டும் கல்வியில் சிறந்த இடத்துக்கு வருவது சந்தேகமே!

## சின்னதா ஓர் அரட்டை நூதனம்?

தபால் அலுவலகத்துக்குப்போக வழி தெரியாத ஒரு பாதிரியாருக்கு சிறுவன் ஒருவன் வழி காட்டினான். சிறுவனுக்கு நன்றி கூறிய பாதிரியார் அவனிடம் சொன்னார் "உனக்குச் சொர்க்கம் போகும் வழியைக் காட்டுகிறேன். என் திருச்சபைக்கு வா" என்று.
அதற்கு அந்தச் சிறுவன் கூறினான் "பக்கத்தில் இருக்கும் தபால் அலுவலகத்துக்குப்போக வழி தெரியாத நீங்களா எனக்குச் சொர்க்கத்துக்கு வழிகாட்டப் போகிறீர்கள்?" என்று.
இதைத்தான் 'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போகப் போறானாம்' என்ற பழமொழியால் கூறுவது.
கிட்டத்தட்ட இப்படியொரு கதைதான் எங்களுக்கு அரசியல் கைதிகள் விடயத்திலும் நடக்கிறது.
அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி. கோரியுள்ளது. அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் அரச தலைவர் தாமதம் செய்கிறார் என்று சுமந்திரன் கூறியுள்ளார்.
ஆனால், அரச தலைவரோ அரசியல்கைதிகள் எவரும் சிறையில் இல்லை என்று கூறியுள்ளார்.
சிறையில் இருப்பவர்கள் அரசியல்கைதிகள்தான் என்பதைக்கூட எமது தலைவர்கள் இதுவரை அரசதலைவரிடம் வலியுறுத்தவில்லை என்பதை அறியும்போது ஆச்சரியமாக இருக்கிறது.
தான் அரச தலைவருடன் பேசியதாகவும், அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்வதாக அவர் தனக்கு வாக்குறுதியளித்ததாகவும் சுமந்திரன் கடந்த மாதம் கூறியிருந்தார். ஆனால் இப்போது அரசியல் கைதிகள் எவரும் சிறையில் இல்லை என்று அரசதலைவர் கூறுவதைப் பார்க்கும்போது இவர்கள் யாருமே இதுவரையில் அரச தலைவருடன் இது பற்றிப் பேசவில்லை என்றே கருத வேண்டியுள்ளது.
தலைமை அமைச்சர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போதுகூட இது பற்றி அரசுடன் பேச ஒரு நல்ல வாய்ப்பு எமது தலைவர்களுக்கு கிடைத்திருந்தது. ஆனால், 'அப்போதும் இவர்கள் தமிழ் மக்களுக்காக எதையும் கேட்கவில்லை. ஆனால், காணாமலாக்கப்பட்டவர்கள் என்று யாருமே இல்லை என்று தலைமை அமைச்சர் மற்றும் அரசதலைவர் ஆகியோர் மாறி மாறிக்கூறிவர. அப்படியானால் எதற்கு அவர்களைக் கண்டறிவதற்கு விசாரணைகளையும், விசாரணைக்குழுக்களையும் அமைத்தீர்கள் என ஒரு தாய் கேள்வி கேட்டுள்ளார். எமது தலைவர்களுக்கு இந்தக் கேள்விஞானமாவது பிறந்திருக்க வேண்டாமா?



## கிளிநொச்சியும்

கசிப்பு மற்றும் களவாகத் தயாரிக்கப்படும் சாராயத்தை ஒழிப்பதற்காகச் சாராயக் கடைகளைத் திறக்க வேண்டும் என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். யாழ்ப்பாணத்தில் 64 சாராயக்கடைகள் உள்ளன என்றும் கிளிநொச்சியில் ஒரு சாராயக்கடைகூட இல்லை என்றும் அவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.
மக்களின் நலனுக்கு எதிரான மதுவை ஒழிக்க வேண்டும் என்று கூறுபவர்களைத்தான் இதுவரை பார்த்திருக்கிறோம். மக்கள் நலனுக்கு எதிரான சாராயக்கடைகளைத் திறக்க வேண்டும் என்று கோரும் ஒருவரை முதன் முதலாக இப்போதுதான் பார்க்கிறோம். இத்தனைக்கு இவர் முன்னர் ஆசிரியராக இருந்தவர் என்று வேறு சொல்கிறார்கள்.
கல்வியில் முதல் மாவட்டமாக சிறந்து விளங்கிய யாழ். மாவட்டம் இன்று மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. போர் நடந்த காலத்தில்கூட இந்தளவு தூரம் யாழ் மாவட்டம் கல்வியில் பின்தங்கியிருக்கவில்லை. மாறாக இலங்கையில் அதிகளவு சாராயம் விற்ற மாவட்டமாக யாழ் மாவட்டம் முதன்மை இடத்தை பெற்றுள்ளது. பாடசாலை வாசலிலேயே கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றன.
இதுகுறித்து தலைவர்கள் எவருமே கவலைப்படவில்லை. இவற்றைத் தடுப்பது குறித்து அக்கறை கொள்ளவும் இல்லை. இப்போது கிளிநொச்சியிலும் சாராயக்கடைகளைத் திறக்க வேண்டும் என்கிறார்கள். இனிக் கிளிநொச்சியும் சர்வ நாசம்தான்.




## முள்ளிவாய்க்கால் அவலம்!

"தமிழின விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டபோது தமது உயிர்களைப் பறிகொடுத்த சக உறவுகளின் 9ஆவது ஆண்டு நினைவுநாள் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் எத்தகைய பேதங்களுமின்றி சகலரும் இணைந்த, ஒருமித்த, உணர்வுபூர்வ நிகழ்வாக நடைபெற வேண்டும்."

தேசிய அரசபொது ஊழியர் சங்கத்தின் அம்பாறை மாவட்டத்தினுடைய கிளை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் அந்தக் கிளை சார்பில் கிளைச்செயலாளர் ந.சத்தியமோகன் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"எமது உறவுகளுக்கான இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அரசியல் பேதங்களுக்கப்பால் மனித நேயத்துடன் சகல தரப்பினரும் இணைந்ததாக நடைபெறுவதுடன் எமது மக்களுக்காகவும் அஞ்சலிப்போம்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*"ஒன்றித்துக் கடைப்பிடிப்போம்.*
*ஒற்றுமையே அவசியம்"*

## பிளாஸ்ரிக் அரிக்கும் இயந்திரம்



கல்முனை மாநகர சபைப்பிரிவில் திண்மக் கழிவகற்றலை இலகுபடுத்தும் பொருட்டு மாநாகரசபையின் மீள்சுழற்சி நிலையத்துக்குப் பிளாஸ்ரிக் அரிக்கும் இயந்திரம் ஒன்று கிழக்கு மாகாண சபை உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள இந்த இயந்திரத்தின் பயன்பாட்டால் கல்முனை மாநாகரசபை எதிர்நோக்கிவரும் திண்மக்கழிவகற்றல் பிரச்சினையை ஓரளவுக்காவது குறைக்கமுடியும் எனச் சபையின் ஆணையாளர் ஜே. வியாகத் அலி தெரிவித்தார்.

இந்த இயந்திரத்தை மீள்சுழற்சி நிலையத்துக்குக் கையளித்து அறிமுகப்படுத்தும் நிகழ்வு மாநகர மேயர் சட்டத்தரணி ஏ.எம். றகீப், ஆணையாளர் ஜே. வியாகத் அலி ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

## துண்டுப் பத்திரிகைகள்...!




'நோயாளிகளின் உயிர்கள் ஆபத்தில்' எனும் தலைப்புடன் கூடிய துண்டுப் பத்திரிகைகள் கல்முனைப் பிரதேசத்திலுள்ள அரச வைத்தியசாலைகளை அண்மித்த பகுதிகளில் பெருமளவில் ஒட்டப்பட்டுக் காணப்படுகின்றன.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இந்தத் துண்டுப் பத்திரிகைகளில் 'நோயாளிகளின் உயிர்கள் ஆபத்தில், கொத்தலாவல சயிட்டம் கூட்டுக்கட்டளைச் சட்டத்தைத் தோற்கடிப்போம்" என்ற வாசகம் காணப்படுகின்றது.

தலைப்பைப் பார்க்கும் நோயாளிகளின் மனநிலை எப்படி இருக்கும்?

## தொல்லை நீங்குமா?



கல்முனை மாநகரின் பொதுச் சந்தை உட்பட மாநகர வீதிகளில் அலையும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை ஒழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாநாகர மேயர் சட்டத்தரணி ஏ.எம் றகீப் இது விடயமாக முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் காரணமாக, கட்டாக்காலி மாடுகள், ஆடுகளைக் கைப்பற்றும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென செயலணி ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## கொதிநிலையில் ஆசிரியர் சங்கம்!

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று 13 ஆம் திகதி ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தவிருக்கின்றது.

பல்கலைக்கழக, நிர்வாகம், மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் தமது ஆசிரிய சங்கத்தின் சிறப்புப் பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தும் நோக்கில் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக ஆசிரிய சங்கத்தலைவர் எம். அப்துல் ஜப்பர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்துக்குள் இருந்தே புதிய உபவேந்தர் தெரிவு செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை, உட்பட பல்கலைக்கழக நிர்வாக ஊழல்கள், முறைகேடுகள் தொடர்பிலும் சங்கம் நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் தொடர்பில் இந்த ஊடக மாநாட்டில் விளக்கம் அளிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

*"அனல் பறக்குமோ?"*



## களைகட்டும் வியாபாரம்

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாகப் புதிய வியாபார முறைமை ஒன்று களைகட்டி வருகின்றது.

ஆம், நுவரெலியா போன்ற குளிர்ப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்படும் வண்ண வண்ணப்பூக்களுடனான, பூங்கன்றுகளின் விற்பனையே இவ்வாறு களைகட்டி வருகின்றது. இந்த மாவட்டத்தின் முக்கிய முதன்மை வீதிகளின் மருங்குகளில் மட்டுமன்றி கிராமங்களின் முக்கிய இடங்களிலும் இந்தப் பூமரக்கன்றுகள் அடுக்கி வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. குறித்த விற்பனை இடங்கள் நுவரெலியா, ஹக்கல பூந்தோட்டங்களை நினைவுக்குக் கொண்டு வராமலில்லை!

*'ஜோரான வியாபாரம்தான்!'*



## நலன்புரிச்சபை!

"நிந்தவூர் நலன்புரிச்சபையின் சமூக நலச் செயற்பாடுகள் ஆக்கப்பூர்வமானவை. அந்தவகையில் நிந்தவூரின் கல்வி மேம்பாட்டுக்கான திட்டங்களும் பெரு வரவேற்புக்குரியவை"

இவ்வாறு, கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். அப்துல் ஜலீல் பாராட்டுத் தெரிவித்தார். நிந்தவூர் நலன்புரிச் சபையின் கல்வி, சமூக சேவைப்பிரிவு நடத்திய சாதனையாளர் பாராட்டு விழாவில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சீ.ஈ சாதாரணதரப்பரீட்சையில் 9ஏ சித்திகளைப் பெற்ற நிந்தவூர்ப்பிரதேச மாணவ, மாணவியர்கள் விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

## ஊடக அமர்வு!

உலக மலேரியா நோய் தினத்தை முன்னிட்டு மலேரியா விழிப்புணர்வு ஊடக அமர்வு ஒன்று நாளை 14ஆம் திகதி கல்முனையில் நடைபெற விருக்கின்றது.

கல்முனைப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் அனுசரணையுடன், கல்முனை மலேரியா தடுப்பு இயக்க அலுவலகம் இந்த மலேரியா நோய் தெளிவூட்டல் தொடர்பான விழிப்புணர்வு ஊடக அமர்வை நடத்தவிருக்கின்றது.

கல்முனை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்த ஊடக அமர்வின் ஆரம்பத்தில் உலக மலேரியா தின விழிப்புணர்வு நடைபவனி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

*'ஊடகர்களே! ஒழிப்போம் மலேரியாவை!'*

கட்டுரை

# உணவுக்குக் கையேந்தி நிற்க உயிரைப் பறித்த கொடூரங்கள்



ந.லோகதயாளன்

இறுதிப் போர் அவலம் நிகழ்ந்து 9ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. அதன்போது இடம் பெற்ற அவலங்களை ஒருதடவையில் கூறிமுடித்துவிட முடியாது. அவை நீண்டுகொண்டே செல்கின்றன. அதற்குள் சிக்கிய மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான தீர்வுகளும் காலத்துடன் நீள்கின்றன. குறிப்பாகக் கொத்துக்குண்டு, இரசாயனக் குண்டு, பல்குழல் பீரங்கித் தாக்குதல்களால் ஏற்பட்ட அவலங்களை அனுபவித்தவர்களும் அவற்றால் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளிக்க முடியாது திணறிப் போய்ப்பெரும் சவாலை எதிர்நோக்கிய வைத்திய சமூகமும் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை வெளி உலகுக்கு ஆதாரங்களுடன் எடுத்துக் கூறின. அவை அநீதியாளர்களுக்கு இன்றுவரை பெரும் தலையிடியாக உள்ளன. காலத்தின் நீட்சியால் அவற்றை மழுங்கடிக்கும் உத்தி தொடர்ந்து கொண்டிருக்கிறது. அந்த அவலங்கள் அவற்றை அனுபவித்த தலைமுறையோடு மறந்துவிட முடியாதவை.

இறுதிக்கட்டப் போர் உச்சமாகவிருந்தபோது போர் வலயத்தில் இன்னுமொரு வகையான ஆயுதமும் இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டது. அதன் மூலமே போராடிக் கொண்டிருந்த புலிகளை மாத்திரமன்றி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்த மக்களையும் சோர்வடையச் செய்ய முடிந்தது. மாத்தளன் முதல் முள்ளிவாய்க்கால் வரை மிக நெருக்கமாக வாழ்ந்த 3இலட்சத்து 50ஆயிரம் வரையான மக்கள் மீது 'பசி' எனும் ஆயுதத்தைப் பாய்ச்சி, அங்கு பட்டினியைக் கோரத் தாண்டவம் ஆடச் செய்தது. சமநேரத்தில் ஆயுதங்கள் கொண்டு குண்டுமாரி பொழிந்தது. மருத்துவ நெருக்குதல்களையும் அளவுகணக்கின்றி ஏவிவிட்டது இராணுவம்.



### சாமளிப்பும் சாட்டுப்போக்கும்...

மனிதநேயத்தை நசுக்கி இராணுவம் நடத்திக் கொண்டிருந்த கொடூரங்கள் வெளித்தெரிய எத்தனித்ததும் பன்னாடுகளிடமிருந்து எழுகின்ற கேள்விகளைச் சமாளிக்கவேண்டிய தந்திரோபாயத்தை அரசு கையிலெடுக்கத் தொடங்கியது. முதலில் சில பாரஊர்திகளில் (லொறிகள்) போர் வலயங்களை நோக்கி உணவுகள் அனுப்பப்பட்டன. அதன் பின்பு கப்பல்களில் உணவுகளை அனுப்புவதாகக் காட்டிக்கொண்டது. உணவு அனுப்பும் கப்பல்கள் ஒன்றும் பெரிய கப்பல்கள் கிடையாது. மிகச் சிறிய கப்பல்களே. உணவு அனுப்பப்படும் ஒரு கப்பலில், போர் வலயத்தில் காயப்பட்டிருந்த 150பேரை மாத்திரமே ஏற்ற முடிந்ததென்றால், அதில் ஏற்றியிறக்கக்கூடிய உணவுப் பொருள்களின் அளவு எவ்வளவாகவிருக்கும்...? அந்தப் பகுதியில் அடைபட்டுக்கிடந்த அவ்வளவு தொகை மக்களுக்கும் அதில் வந்த உணவுகள் போதுமானதாக இருக்குமா?

### உணவு பரிமாறிய இடத்தில் உயிரெடுப்பு!

மிகச் சொற்ப உணவுப் பொருள்களை மட்டுமே போர் வலயத்துக்குள் அனுமதித்த இராணுவம் அவ்வாறு அனுப்பப்படும் உணவுப் பொருள்கள் எங்கு வைத்துப் பகிர்ந்தளிக்கப்படுகின்றனவோ அந்த இடங்களையும்; தேடித் தேடி இலக்கு வைத்துத் தாக்கியது. இந்தத் தாக்குதல் முறைமையில் முதல் தடவையாக இலக்கு வைக்கப்பட்ட இடம் முல்லைத்தீவு மாவட்டத்தின் சுதந்திரபுரம் சந்தியில் அமைந்திருக்கின்ற விளையாட்டு மைதானம். குறிப்பாகச் சுட்டினால், பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியிலிருக்கின்ற சுதந்திரபுரம் சந்தி. அந்த இடம் வெட்டை வெளி. எந்தவொரு கட்டட வசதியும் இல்லை. உலக உணவுத் திட்ட அதிகாரிகள் ஐ.நாவின் கொடியை ஏற்றி நிவாரணத்தை வழங்கிக் கொண்டிருந்தனர். அந்த இடத்தைத் துல்லியமாக இலக்கு வைத்து 26.1.2009 அன்று இரவு பகலாகத் தொடர் எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. செஞ்சிலுவை அதிகாரிகளின் [illegible]வலகமும் தாக்கப்பட்டது. ஒரே நாள[illegible] 250க்கும் மேற்பட்ட மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஆயிரத்து[illegible]ம் மே[illegible]ற்பட்டவர்கள் படுகாயமடை[illegible]ந்தனர். [illegible]ப்போது இயங்கிக் கொண்டிருந்த உடை[illegible]ர்கட்டு மருத்துமனை இந்தச் சம்பவத்தால் பின[illegible]கவே மாறியது. [illegible]தில் இறந்தவர்கள், தமது குடு[illegible]றவுக[illegible]ள் பசியைப் போக்க [illegible]ணவைப் பெறுவ[illegible] நீ[illegible]சயில் காத்திருந்தவர்களே. தாக்குதலில் கொல்லப்பட்ட, முழுமையாக இருந்த உடலங்கள் தவிர்ந்த, சிதறி உருக்குலைந்த கிட்டத்தட்ட 40க்கும் மேற்பட்ட உடல்கள் அந்த மைதானத்திலேயே குவிக்கப்பட்டு தகனம் செய்யப்பட்டன. உணவுக்குப்போன இடத்தில் உயிரைப் பறித்த இந்தச் சம்பவம் அனைவரின் நெஞ்சங்களையும் உறையவைத்தது. இந்தச் சம்பவத்தின் பெரும் பகுதியை ஒரு சில ஐ.நா அதிகாரிகளும், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் பதுங்கு குழிகளுக்குள் பதுங்கியவாறு கண்ணுற்றனர். அத்துடன் அவர்களும் வெளியேறினர்.

### சுதந்திரபுரத்திலும் தாக்குதல்!

சுதந்திரபுரம் சந்தியில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தின் பின்னர் அனைத்து ப.நோ.கூ.சங்கம் உள்ளிட்ட உணவுக் களஞ்சியங்களும் கிட்டத்தட்ட ஐந்து கிலோமீற்றர்களுக்கு அப்பால், சுதந்திரபுரத்துக்குள் நகர்த்தப்பட்டன. அவ்வாறு மாற்றப்பட்ட களஞ்சியங்கள் எவற்றுக்குமே கட்டடம் கிடையாது. தகரக் கொட்டகையும், பரல் தகரங்கள் கொண்டு அமைக்கப்பட்ட களஞ்சியங்களாகவே காணப்பட்டன. பரந்தன்-புதுக்குடியிருப்பு வீதி, மற்றும் புதுக்குடியிருப்பை இலக்கு வைத்து முன்னேறிய இராணுவம் திடீரெனச் சுண்டிக்குளம் பகுதிகளுக்கு ஊடாக சுதந்திரபுரத்தையும் இருட்டு மடுவையும் முற்றுகையிட்டது. சம காலத்தில் கொண்டுவரப்பட்ட சொற்ப உணவுப் பொருள்களை மழையில் இருந்து பாதுகாப்பதற்காகக் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டன. 7வரையான ப.நோ.கூ.சங்கங்கள் தற்காலிகமாக இயங்க ஆரம்பித்தன. மக்களுக்கான நிவாரணப்பணி தடைப்பட்டு விடக்கூடாது என்பதிலும் அதேநேரம் போர்க்களம் தொடர்பிலும் புலிகள் கவனம் செலுத்தினர். அங்கு தினமும் காலை 6மணியளவில் நிவராணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. விமான முற்றுகைகள் இல்லையானால் இரவு 8மணியைத் தாண்டியும் உணவு வழக்கும் பணிகள் இடம்பெற்றன. இரவு நேரங்களிலும் பணி தொடர்வதால், வெளிச்சத்துக்காகப் 'பெற்றோல்மாக்ஸ்' பயன்படுத்தப்பட்டது. ஒரு நாள் இரவு கிபிர் விமானங்கள் வந்து விட்டன. அங்கே நிவாரணத்துக்காகக் காத்திருந்தவர்களின் அவலக்குரல்கள் வான்பிளக்க ஒலித்தன. உடனடியாகப் பெற்றோல் மாக்ஸ்சைத் தணிக்க முயன்று, பதற்றத்தில் அது முடியாமல்போக, அருகில் இருந்த தண்ணீர் வாளியைத் தூக்கி அதன்மேல் ஊற்றித் தணித்த அவலங்களும் நடந்தன. மிகக் குறுகிய நாள்களிலேயே அங்கிருந்த அனைத்துப் பொருள்களையும் கைவிட்டு நகரும்படியாக இராணுவத் தாக்குதல்கள் அதிகரித்தன.

### புதுக்குடியிருப்பை நோக்கிய நகர்வு...

அந்த நெருக்கடியின் மத்தியிலும் செல் மழையிலும் 3 ப.நோ.கூ.சங்கங்களின் உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்ட 5பார ஊர்திகள் புதுக்குடியிருப்பை நோக்கி நகர்கின்றன. இந்த நேரம் அவற்றின் சாரதிகள் கடும் செல் தாக்குதல் காரணமாகப் பாரவூர்தியைவிட்டுச் சிதறி ஓடுகின்றனர். ஒரு சில பணியாளர்கள் குடும்ப உறவுகளையும் பிரிந்து, இதன் பிறகு எதிர்கொள்ளவுள்ள உணவு நெருக்கடியை எண்ணி, இருப்பதையேனும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் எனப் போராடுகின்றனர். ஏனெனில் உணவுப் பொருள் நெருக்கடிகள் பலவற்றை எதிர்கொண்ட பட்டறிவின் பயன் அது. முதன் முதலாக மக்களதும் நிறுவனங்களினதும் அதிக வாகனங்களை அவ்விடத்திலேயே கைவிட்டு நகர்ந்த இடப்பெயர்வாக அது அமைந்தது.

### ஆவணங்கள் பலவும் அழிவு...

இதேநேரம் இறுதிப்போரிலே வன்னிப் பகுதியைச் சொந்த இடமாக கொண்ட மக்களுடன் 35ஆயிரத்துக்கும் மேற்பட்ட யாழ்ப்பாண, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மக்களும் இருந்தனர். இதில் பலர் எழுத்தாளர்கள், ஊடகவியல[illegible]ளர்கள், ஆய்வா[illegible]ளும் அடங்குவர். அவர்கள் 30, 40 ஆண்டுகளாகத் தமது உயிரிலும் மேலாகப் பாதுகாத்து வந்த பல வரலாற்று ஆவ[illegible]ணங்களைத் தம்மோடே கொண்டு ஓடிக் கொண்டிருநதனர். நாள்தோறும் பல இடங்களுக்கு இடம்பெயரும்போதும் கைநழுவ விடாது அவற்றைப் பாதுகாத்துக் கொண்டனர். அதற்காக அதிக செலவு செய்தும் விட்டிருந்தனர். புலிகளும் இத்தகைய காப்புக்களைச் செய்யத் தவறவில்லை. அவை அனைத்தும் இந்த நாளாந்த இடப்பெயர்வால் கைவிடப்பட்டன.

### இன்னமும் தொடர்ந்த அழிப்பு...

இப்போது சுதந்திரபுரத்தில் இருந்து பொருள்களை வேகமாக நகர்த்தும் பணியில் கூட்டுறவாளர்கள், நிர்வாக சேவைப் பணியாளர்கள் மட்டுமன்றி போராளிகள், முன்னாள் போராளிகளும் எனப் பலரும் ஈடுபடுத்தப்பட்டனர். மக்கள் மரங்களின் கீழும், வீதிகளிலும், வாகனங்களின் கீழும் சற்று மூச்சு விட அமர்ந்தனர். அது நிலைக்கவில்லை. உடனடியாகவே முள்ளி வாய்க்காலை நோக்கி இடம்பெயரவேண்டிய இக்கட்டும் வந்தது. இப்போது மாத்தளன் முதல் முள்ளிவாய்க்கால் வரையில் இருந்த சில ப.நோ.கூ.சங்கக் கட்டமைப்புக்கள் மூலம் இருந்த சொற்ப பொருள்களையும் பகிர்ந்தளிப்பது தொடர்ந்தது.

இப்படியாக விநியோகம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் எந்த உணவுப் பொருளும் கையிருப்பில் இல்லை என்ற நிலையை அடைந்தபோது மக்கள் பதறினர். இவை பன்னாடுகளின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. படுகாயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளிக்க எந்த வைத்திய வசதியும் இருக்கவில்லை. இவை இரண்டையும் நிவர்த்தி செய்யுமாறு கோரிக்கைகள் விடப்பட்டன. இதன்போதே இதற்காகச் சிறிய கப்பல்கள் தயார் செய்யப்பட்டு அதிலே உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டன. இது பெரிய விடயமாகப் பன்னாடுகளுக்குக் காட்டப்பட்டது. இந்தக் கப்பல்கள் இரண்டு தடவைகள் மாத்தளன் பகுதிக்கும் இரண்டு தடவைகள் முள்ளிவாய்க்காலுக்கும் வந்தன. அவற்றில் ஒரு தடவையில் 10 பார ஊர்திகளில் கொள்ளத்தக்க பொருள்களே எடுத்து வரப்பட்டது. ஆணைப்பசியோடு இருந்த மக்கள் தொகைக்குச் சோளப்பொரியாக அவற்றைப் பகிர்ந்தளிக்க வேண்டியதாயிற்று. இதேநேரம் மாத்தளன் பகுதியில் கப்பலில் இறக்கிய பொருள்களை மாத்தளனில் வசிக்கும் மக்களுக்கு மாத்தளன் பிள்ளையார் ஆலயத்தில் வைத்துப் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2009.4.13 அன்று அவ்விடம் நோக்கி இராணுவத்தினர் செலுத்திய எறிகணைகளில் சிக்கி நிவார ணத்துக்கு நின்ற 4 பேர் உயிரிழக்க 7பேர் படுகாயமடைந்தனர். இதேபோன்று இரட்டை வாய்க்காலில் அல்லல்படும் மக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தினமும் கஞ்சி வழங்கியது. அதைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் நின்ற மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பல்குழல் தாக்குதலில் சுமார் 70க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இவை அனைத்தையும் தாண்டி நெஞ்சைப் பதற வைத்த செயல் இரட்டை வாய்க்கால் பிரதேசத்தில் இடம்பெற்றது. குழந்தைகள் உள்ள குடும்பம் ஒன்றுக்கு ஒரு பக்கெட் பால்மா வழங்கப்பட்டது. குழந்தைகள் தமது குடும்பத்தில் உள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் எந்த ஆவணங்களையும் இந்த இக்கட்டான சூழலில் தாய்மார் கைவசம் வைத்திருக்கவில்லை. அவர்கள் தமது பிள்ளைகள் சகிதம் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். விநியோகமும் மிக வேகமாகவே இடம்பெற்றது. சுமார் இரண்டு மணிநேர விநியோகம் இடம்பெற்றிருந்த சமயம்பார்த்து பால்மாவுக்கு வரிசையில் நின்றவர்களும் இலக்கு வைக்கப்பட்டனர். இதன்போது 29வரையான குழந்தைகளும் 40வரையான தாய்மாரும் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இறுதிப் போரின்போது பசியுடன் அல்லல்பட்டு நின்ற மக்களைக் கொன்று பசியாறிய இராணுவ எறிகணைகளையும் குண்டுவீச்சுக்களையும் அவர்தம் கொடூரங்களையும் நினைவுகூரும் ஒன்பதாவது ஆண்டும் தீர்வின்றிக் கடக்கிறது.

குறும்படப்பார்வை



சி.ப.வேந்தன்

# 'வீரத்தமிழன்'



## தெளிவற்ற கேலிக்கூத்து

"சினிமா ஒரு பொழுதுபோக்கு என்ற நிலை மாறி பொழுதைப்போக்குவது என்றால் அதன் பொருளே சினிமாதான் என்று மாறியிருக்கும் போது ஒரு திரைப்படத்தைக் கருத்தியல் தளத்தில் நின்று பார்ப்பது, சிந்திப்பது, விவாதிப்பதனூடாகத்தான் காட்சிக்கலையின் உணர்ச்சிக் கவர்ச்சியிலிருந்து நாம் சொந்த விழிப் புணர்வு வழியாக விடுதலை பெற முடியும்."
இளநம்பி(புதிய கலாச்சாரம் 2006)

**பொதுப்பொறுப்பு**

பொழுதுபோக்கு, கருத்தியல் தளத்தில் நின்று பார்ப்பது, சிந்திப்பது, விவாதிப்பது என்பவைகளுக்கு அப்பால் சினிமாவைப் பொறுத்தவரையில் படைப்பாளிக்கும் பார்வையாளனுக்குமிடையில் நேர்மையான உறவு இருத்தல் அவசியம். அதுவே இருவருக்குமிடையிலான பொறுப்பை உணர்த்தும்.

வெறும் உணர்சிக்குவியல்களையும், பரிதாபங்களையும் தனக்குத்தெரிந்த அல்லது தன்னுடைய பாணியில் பேசினால் அதைப் பார்வையாளன் கொண்டாடுவான் எனும் அசட்டுத்துணிச்சல்களைப் படைப்பாளன் விட்டெறிய வேண்டும். அதற்கான முன்முனைப்பை அவனுக்குப் பார்வையாளன் கொடுக்க வேண்டும். அல்லாது விட்டால் விடமேறித்தான் பாம்பு இறந்தது எனும் கதையளப்புக்களைக் கைதட்டி இரசிக்கும் கடைநிலைக்குப் பார்வையாளன் ஆளாக நேரிடும்.

ஈழத்தமிழரில் இருக்கும் நிஜமான அக்கறை அல்லது எப்படியாவது அவர்களது கதைகளைப் படைப்பில் பேசிவிட வேண்டும் எனும் அவா அதுவுமில்லையேல் எம்மூர் அரசியல்வாதிகளையும் ஊடகங்களையும்போன்று எதைப்பேசினால் தம்மை நோக்கிய கவனத்தைத் திருப்பலாம் எனும் யுக்திபோல ஏதாவதொன்றின் புள்ளியிலிருந்து உருவாகியிருக்கிறது சிறீராமின் 'வீரத்தமிழன்' குறுந்திரைப்படம். எஸ்.சுரேந்திரன் ஒளிப்பதிவு, எடிட்டிங் லிவி, இசை சுவாமி. இந்தியக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப்படம் இலங்கையில் நடந்து முடிந்த போரைப்பற்றிப் பேசுகிறது.

சரியான விடயத்தைத் தவறாகப் படமாக்கியிருப்பதில் இந்தக் குறும்படத்தையும் உள்ளடக்கலாம். இதை அணுகும் வழிமுறை ஈழத்துப் பார்வையாளனுக்குக் கொஞ்சம் குழப்பமாகத்தான் இருக்கும்.

**உள்வீட்டின் சாரம்**

இலங்கையில் தமிழர் பகுதியில் உள்ள கடற்கரையோரம். ஓர் இளைஞனும் இரண்டு சிறுவர்களும் நடந்து வந்துகொண்டிருக்கிறார்கள். அப்போது, "சித்தப்பா நண்டு" எனச் சிறுவனில் ஒருவன் கூற "அதையெல்லாம் பிடிக்கா தேங்கோ" எனக் கூறிவிட்டுச் சித்தப்பா இரண்டு பேரையும் கூட்டிக்கொண்டு செல்கிறார். அப்போது வெடிச்சத்தம் கேட்கிறது. "அவர்கள் வந்துவிட்டார்கள் ஓடுங்கள்" எனக் கத்தியபடிமூன்று பேரும் தலை தெறிக்க ஓடும்போது சித்தப்பா கீழே விழுந்துவிடுகிறார். வந்தவர்கள் நெருங்கச் சித்தப்பா எழுந்து கைகளை மேலே தூக்கியவாறு நிற்க, இரண்டு சிறுவர்களும் ஓடிவிடுகிறார்கள். நெருங்கி வந்த இராணுவத்தினரில் ஒருவனைச் சித்தப்பா தள்ளி விழுத்த அவன் சுதாரித்துக்கொண்டவாறு எழுந்து சித்தப்பாவைத் துப்பாக்கி முனையில் கைது செய்கிறான். மற்ற இராணுவத்தினன் ஓடிய சிறுவர்களை நோக்கிச் செல்கிறான்.



●●●

காட்டில் இராணுவக்கொட்டகைக்கு முன்பாக நான்கைந்து தமிழ் இளைஞர்கள் கைகள் கட்டியவாறு முழங்கால்களில் இருத்திவைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உடலெங்கும் குருதி வழிந்துகொண்டிருக்கிறது. சற்றுத் தள்ளி சித்தப்பாவும் கைகள் கட்டப்பட்டவாறு குருதிச் சகதியில் கிடக்கிறார். ஒரு இராணுவத்தினன் எல்லோரையும் பொல்லுகளால் மீண்டும் தாக்குகிறான். பின்பு சித்தப்பாவுக்கு முன்னால் இரண்டு சிறுவர்களின் உடையைத் தூக்கிப்போடுகிறான். கொல்லப்பட்டதை உணர்ந்த சித்தப்பா அதை எடுத்துவைத்துக் கதறி அழுகிறார். பின்னர் அவர்கள் எல்லோரையும் அவர்கள் வரிசையாய்ச் சுட்டுக்கொல்கிறார்கள். சித்தப்பாவின் தலையில் துப்பாக்கியை வைத்தவாறு "கடைசியாக எதையும் சொல்ல விரும்புகிறாயா?" என இராணுவத்தினன் கேட்கிறான். அதற்குச் சித்தப்பா "தமிழனாய் பிறந்ததற்கு பெருமைப்படுகிறேன்" தமிழனாய்ப்ப பிறப்பதற்கும் பெருமைப்படுகிறேன்' எனக் கூறுகிறார். அதைக்கேட்ட சிப்பாய் சித்தப்பாவின் தலையைத் துப்பாக்கியால் சிதறடிக்கிறான். கிழே விழுந்து கிடக்கும் சித்தப்பாவின் தலையிலிருந்து வெளிவந்த மூளை அவருடைய பையிலிருந்து விழுந்த நூறு ரூபாய்த்தா ளின் மேல் அப்பிக் கிடக்கிறது. பணத்தாளில் இருக்கும் விகாரையின் ஓவியத்தில் குருதிச் சிதறல்கள் பரவுகின்றன. இத்தனையையும் கனவில் கண்டு தூக்கத்தில் இருந்து எழும்பும் சித்தப்பா தனது பையிலிருந்து ரூபாத்தாளை எடுத்துப் பார்க்கிறார். அப்போது பின்னணியில் "இந்தியத் தமிழனுக்கு இது வெறும் கனவு ஆனால் ஈழத்தமிழனுக்கு இது நிஜம்" எனும் வாசகம் ஒலிக்கிறது. பின்னணியில் முள்ளிவாய்க்காலில் நடந்த படுகொலைக் காட்சிகள் காட்டப்படுகின்றன. சுவரில் சாத்தப்பட்டிருக்கும் பாரதியின் படத்தை உற்றுப்பார்க்கிறார் சித்தப்பா "ராஜபக்சே கொல்வது தமிழர்களை மட்டுமல்ல புத்தரையும் அவர் கொள்கைகளையும்தான். புத்தரும் ஓர் இந்தியர்தான்" எனும் குரல் ஒலிப்பதோடு படம் முடிகின்றது.

**தெளிவற்ற முயற்சி**

குருடன் எப்படி யானையை விவரிப்பானோ அப்படி விவரிக்கப்பட்டிருக்கிறது நாம் சார்ந்த கதை. ஆனாலும் எமது கதையை எப்படியாவது பேசி விடவேண்டும் என்ற மனித உணர்வு வரவேற்கத்தக்கது மதிக்கத்தக்கது. எப்படி இதுவரையிலும் தென்னிந்தியாவிலிருந்து வெளிவந்த முழு நீளத்திரைப்படங்கள் ஈழமக்களது அல்லது ஈழப் போராட்டத்தினது பிரச்சினைகளை, கதையை, முழுமையாகப் புரிந்து, உணர்ந்து ஓரளவேனும் அவற்றைச் சரியாகப் பேசவில்லையோ அப்படியே இந்தக் குறும்படமும் எடுக்கப்பட்டிருக்கிறது.

தென்னிந்திய திரையுலகின் ஜாம்பவான்கள் எனப்படும் மணிரத்னம்(கன்னத்தில் முத்தமிட்டால்) சந்தோஸ்சிவன்(ரெறறிஸ்ற்) போன்ற பல இயக்குநர்கள் ஈழத் தமிழரின் பிரச்சினைகளைத் தமது படைப்பின் மூலம் சரியாகவும் தெளிவாகவும் அணுகத் தவறி இருக்கும்போது தற்போது கலைத்தாகத்துடன் உள்ளே வரும் புதியவர்களின் பார்வை விசாலித்திருக்கும் (சிலர் விதிவிலக்காய் இருக்கலாம்) என எதிர்பார்க்க முடியாதுதான்.

விடுதலைப்புலிகளால் அழைக்கப்பட்டு, ஈழத்திலேயே அவர்கள் காலத்திலேயே படமாக்கப்பட்ட ஆணிவேர்(ஜான்) மற்றும் எள்ளாளன் திரைப்படங்கள் போன்றவைகூட ஒரு முழுமையான ஈழத்திரைப்படத்துக்கான பெறுமதியை இழந்து சாதாரண படமாகிப்போனதுதான் இறந்தகால வரலாறு. இதன் எச்சங்களே இப்பொழும் வந்துகொண்டிருக்கின்ற ஈழம் தொடர்பிலான இந்தியத் திரைப்படங்கள்.

**ஈழத்தமிழ் சினிமாவுக்கான எதிர்காலம்**

ஈழத்தமிழ் சினிமா என்பது அல்லது ஈழவாழ்வியலை, ஈழப்போரை மையப்படுத்தி எடுக்கப்படும் சினிமா என்பது ஈழத்துச் சம்பவங்களோடும் ஈழத்து வாழ்வியலோடும் இரண்டற, நீக்கமறக் கலந்திருந்த, இருக்கின்ற ஒருவரால்தான் படைக்கப்படமுடியும். (சிலரின் பிரயத்தன முயற்சிகள் வெற்றியடைந்தால் மகிழ்ச்சி) இதைச் சாத்தியப்படுத்த இந்த மண்ணோடு கலந்த ஒரு படைப்பாளியால்தான் முடியும் என்பது நிதர்சனம்.

போராட்ட காலத்தில் ஈழத்தில் வந்து திரைப்படப் பயிற்சிகளை வழங்கிய சீமான், மகேந்திரன், தங்கர்பச்சான் போன்ற திரை ஜாம்பவான்கள் கூட ஈழம் தொடர்பிலான கருத்துக்களை அல்லது கதைகளை இதுவரையிலும் பேசவில்லை. புறக்கார ணிகள் எதுவாயிருந்தாலும் தம்மால் இன்னும் ஈழம் தொடர்பிலான ஒரு முழுமையான திரைப்படத்தை வழங்கமுடியும் எனும் திடத்தை அவர்கள் இன்னும் பெறவில்லையோ எனவும் எண்ணத்தோன்றுகிறது. அது நியாயமாகவும் கூட இருக்கலாம். ஏனெனில் ஒரு முழுமையான படைப்பாளி தன்னுடைய படைப்பில் நேர்மை இருக்கவேண்டும் என எண்ணம் கொள்கின்றபோது குறை நிரப்பிகளை செயற்படுத்த உத்தேசிக்கமாட்டான். போருக்குப்பின்னரான சினிமாவின் போக்கில் ஈழத்தமிழ் கலைஞர்கள் தமக்கு முன் தாமே ஒரு கோட்டை வரித்துக்கொண்டு சினிமாவை அணுகுகிறார்கள். சிலர் சுய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தென்னிந்தியக் குப்பைகளை மீள் பதிப்புச் செய்கிறார்கள். சிலர் தமது வயதுகளின்(95 களுக்குப் பின்னர் பிறந்தவர்கள்) அடிப்படையில் தமக்குத்தெரிந்த வரலாற்றை வைத்துக்கொண்டு இதுதான் ஈழம் எனத் தமக்குள் வரித்துக்கொண்டு புதிய நவீனம் படைக்கிறார்கள், சில முன்னால் படைப்பாளிகள் படைப்பை விட்டு ஒதுங்கியும் சிலர் தம்முடைய திறமையின் வறட்சியால் குழப்பிக்கொண்டிருக்க, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் மாத்திரமே கோடுகளைத் தாண்டி நேர்மையான படைப்புக்களை ஈழத்துக்கான அடையாளங்களோடு படைக்க முயற்சிக்கி றார்கள். ஆக ஈழத்தமிழ் சினிமாவின் பொரிய வெற்றிடம் இன்னும் நிரப்பப்படாமலேயே கிடக்கிறது. எமக்கான சினிமாவை நாம் உலகப் பந்தியில் படைக்காதவரையிலும் எம்முடைய கதைகள் அடுத்தவர்களின் கற்பனை வண்ணாங்களோடு கேலிக்கூத்துகளாக வெளிவந்து கொண்டே இருக்கும். ■

கட்டுரை

ஸ்டோ ஸ்வாமி


# பொன்சேகா மறந்து போகக்கூடாது!

அரசியல் புகுத்தப்பட்ட மே தினத்தைக் கொண்டாடுவது இலங்கையில் வாடிக்கையாகிவிட்டது. மே தினம் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுகிறதோ இல்லையோ, அன்றைய நாளில் பேரணிகளில், கூட்டங்களில் அரசியல்வாதிகள் பேசுவது பேசுபொருளாகி விடுவது வழமை. இந்த ஆண்டு இலங்கையில் பின்னகர்த்தப்பட்ட மே தின நிகழ்வுகள் கடந்த 6ஆம் மற்றும் 7ஆம் திகதிகளில் கொண்டாடப்பட்டிருக்கின்றன. அந்த மே தின அரங்குகளில் வெளிவந்திருந்த இருவரின் கருத்துக்கள் கடந்தவாரத்தில் அரசியல் பரப்பில் ஓர் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தன. அதில் ஒன்று, அரசதலைவரின் கருத்து.

**“நான் ஓய்வடைய மாட்டேன்...”**

மட்டக்களப்பில் நடந்த மேதின மேடையில் வைத்து அது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. “2020ஆம் ஆண்டில் நான் ஓய்வடைய மாட்டேன். ஏனெனில் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள் பல இருக்கின்றன” என்றிருக்கிறார் அரச தலைவர்.

மாவடிவேம்பு மைதானத்தில் ஆற்றிய உரையில் அரச தலைவர் இவ்வாறு சொல்லியிருக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின மேடையில் பீல்ட் மார்ஷல் பொன்சேகா அதற்கு மறுதலையான கருத்தொன்றை வெளியிட்டிருக்கிறார். 2015ஆம் ஆண்டு அரச தலைவருக்கான தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவைப் பொது எதிரணிகளின் வேட்பாளராக நியமித்தது மடைத்தனம் என்றிருக்கிறார் இவர். “ரணில் விக்கிரமசிங்கவை அந்தத் தேர்தலில் போட்டியிடுமாறு நான் வலியுறுத்தியிருந்தேன். எனினும், மைத்திரிபாலவே பொது எதிரணி வேட்பாளராகப் போட்டியிட்டிருந்தார். அது ஒரு பெரிய தவறாகும். அவர் எதுவுமே செய்யவில்லை. மாறாக, எங்களுடைய பாதையில் தடைகளையே இடுகிறார். 2020ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி, ரணில் விக்கிரம சிங்கவையே தனதுசார்பில் அரசதலைவர் வேட்பாளராக முன்நிறுத்த வேண்டும். தன்னுடைய வேட்பாளரை வெற்றிகொள்ள வைக்கும் இயலுமையுடன் தான் ஐ.தே.க. இருக்கிறது. அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்” இவ்வாறு கூறியிருக்கிறார் பீல்ட் மார்ஷல்.



நிலையான அபிவிருத்தி மற்றும் பிரதேச அபிவிருத்தி வனஜீவராசிகள் அமைச்சராக விளங்கும் பொன்சேகா, இந்த மாதத்துக்குள் அரச தலைவரைக் குறிவைத்துக் கருத்து வெளியிட்டிருக்கும் மற்றொரு தருணமாக இதைக் கொள்ள முடியும். அண்மையில் தனது அமைச்சில் ஊடகர்களைச் சந்தித்த நேரத்திலும் அரச தலைவர் தொடர்பில் நெருடலான தகவலையே அவர் பகிர்ந்திருந்தார்.

**தோல்வியடைந்த அரசதலைவர் தேர்தல் போட்டியாளர்!**

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசதலைவருக்கான தேர்தலில் மகிந்தவை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வி கண்டிருந்தவர் பொன்சேகா. அப்போதும் ஐ.தே.கவால் முன்நிறுத்தப்பட்ட பொது வேட்பாளராகவே அவர் விளங்கியிருந்தார். மைத்திரிபால சிறிசேன பயன்படுத்தியிருந்த அன்னப்பறவைச் சின்னத்தையே அவரும் பயன்படுத்தியிருந்தார். அல்லது பொன்சேகா பாவித்துத் தோல்வி கண்ட சின்னத்தையே சிறிசேன பயன்படுத்தினார். ஆனால், சிறிசேன வெற்றி கண்டார்.

பொன்சேகா போட்டியிட்ட தேர்தலில் 57வீதமான வாக்குகளை மகிந்த ஈட்டிய அதே நேரத்தில் 40வீத வாக்குகளையே பொன்சேகாவால் பெற முடிந்தது. அந்தத் தேர்தல் தோல்விக்குப் பின் அவருக்கு நிகழ்ந்தவைகள் அவருக்கு மாத்திரம் வெளிச்சமானவை அன்று. முழு உலகுக்கும் தெரியவே அவை நிகழ்ந்தன.

**இழந்த சிறப்புக்களைச் சிறிசேனவிடம் மீளப்பெற்ற பொன்சேகா!**

மகிந்தவுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த மைத்திரிபால, தான் சிக்கு வந்தபின் முதல் மாதத்துக்குள்ளேயே முழுமையான மன்னிப்பைப் பொன்சேகாவுக்கு வழங்கியிருந்தார். மகிந்தவின் காலத்தில் களையப்பட்ட குடியுரிமை மற்றும் வாக்குரிமை உள்ளிட்ட ஏனையசில பொன்சேகாவின் ‘சிறப்புக்களையும்’ உத்தியோகபூர்வமாக மீள வழங்கியிருந்தார். இது அவருடைய தேர்தல் வாக்குறுதியாகவும் இருந்தது. அது மாத்திரமல்லாமல் இலங்கைத் தரைப்படையின் முதலாவது பீல்ட் மார்ஷல் என்னும் மதிப்பளிப்பும் அவருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

முன்னாள் இராணுவத் தளபதியான பொன்சேகா, சிறைவாழ்க்கைக்குப் பின் தீப்பந்தத்தைச் சின்னமாகக் கொண்ட புதிய கட்சி ஒன்றைத் தொடங்கியிருந்தார். 2013ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்சி பின்னர் ஐ.தே.க.வுடன் சங்கமம் ஆகியது. தெற்கு அரசியலில் மூன்றாவது சக்தியாக இடம்பிடிக்கலாம் என எதிர்வுகூறப்பட்ட போதிலும், 2015 இல் நடந்த பொதுத் தேர்தலில் அவருடைய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்றில் ஓர் ஆசனத்தையேனும் தக்கவைக்கத் தவறியிருந்தது. பின்னர், ஐ.தே.க.வின் தேசியப் பட்டியல் ஊடாகவே, பொன்சேகா நாடாளுமன்றுக்குள் நுழைந்திருந்தார்

**தோன்றி மறைந்த ஜனநாயகக் கட்சி!**

முன்னாள் இராணுவத் தளபதியான பொன்சேகா, சிறைவாழ்க்கைக்குப் பின் தீப்பந்தத்தைச் சின்னமாகக் கொண்ட புதிய கட்சி ஒன்றைத் தொடங்கியிருந்தார். 2013ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்சி பின்னர் ஐ.தே.க.வுடன் சங்கமம் ஆகியது. தெற்கு அரசியலில் மூன்றாவது சக்தியாக இடம்பிடிக்கலாம் என எதிர்வுகூறப்பட்ட போதிலும், 2015 இல் நடந்த பொதுத் தேர்தலில் அவருடைய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்றில் ஓர் ஆசனத்தையேனும் தக்கவைக்கத் தவறியிருந்தது. பின்னர், ஐ.தே.க.வின் தேசியப் பட்டியல் ஊடாகவே, பொன்சேகா நாடாளுமன்றுக்குள் நுழைந்திருந்தார்.

**அண்மைய முரண்பாடுகள்!**

கூட்டரசின் சட்டம் ஒழுங்கு அமைச்சராக விளங்கிய சாகல ரத்னாயக்கவின் வழிகாட்டலின் கீழ் குறித்த அமைச்சு நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப் படவில்லை என்ற குற்றச்சாட்டை அடுத்து அதை வேறொருவரிடம் கொடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆட்சியில் அடிபட்ட பாம்பாகவே பொன்சேகா இருப்பதால் குறித்த அமைச்சைப் பீல்ட் மார்ஷல் பொன்சேகாவிடம் வழங்கினால் அதனுடைய பெறுபேறுகள் சிறப்பாகவும் விரைவாகவும் இருக்கும் எனக் கருதி, அதைப் பொன்சேகாவுக்கு வழங்க ஐ.தே.க. தரப்பால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், குறித்த தெரிவு தொடர்பான தீர்மானத்தை மைத்திரிபால நிராகரித்திருந்தார். பொன்சேகாவின் இராணுவப் பின்புலத்தைக் காரணம் காட்டியும், தேரர்கள் மற்றும் சில பொலிஸ் உயர் அதிகாரிகளின் எதிர்ப்பைக் கருத்தில் கொண்டும் மைத்திரிபால குறித்த பிரேரிப்பை மறுத்திருந்தார். இதைவிடச் சில வெளிநாடுகளுக்குச் சென்று வருவதற்கான நுழைவிசைவு பெறுவதில் பொன்சேகா தடங்கல்களை எதிர்கொள்வார் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. பொன்சேகாவிடமும் குறித்த அமைச்சுப் பதவியை வகிப்பதற்கான ஆர்வம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அது கடைசி வரை அவருக்குக் கொடுபட்டிருக்கவில்லை. குறித்த சம்பவம் தொடர்பில் அதிருப்தியான மனநிலையையே பொன்சேகா கொண்டிருந்தார்.

**மன்னிப்பும் கோரியிருக்கிறாராம் பொன்சேகா!**

அரச தலைவர் தொடர்பில் தான் ஏவிய அண்மைய கணைகள் தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அரச தலைவரைச் சந்தித்து மன்னிப்புக் கோரியதாகத் தற்போது தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. கடந்த புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தின் பின் அரசதலைவரைப் பொன்சேகா தலைமையிலான குழுவினர் சந்தித்த நேரத்தில் இந்த மன்னிப்புக் கோரல் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தனது சிறப்புக்களைப் பறிகொடுத்த நிலையில் இருந்து வந்த பொன்சேகா, மகிந்தவின் நடவடிக்கைகளை யாரும் தட்டிக்கேட்காத நிலையில் மைத்திரிபால ஏற்படுத்திய திருப்பத்தை அடுத்தே தனது, நிலைகளைச் செழிப்புற அமைத்திருந்தார்.



இப்போது சாகவாசமாக மைத்திரியைத் தெரிவு செய்தது மடைத்தனம் என்றிருக்கிறார். பத்திரிகையாளர் லசந்த விக்கிரமசிங்கவின் கொலை விவகாரத்தில் பொன்சேகாவின் கைகள் சுத்தமானவையாக இருக்கின்றனவா? என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

இந்தப் பின்னணியில் ரணிலை நம்பி மைத்திரியை விமர்சித்தாலும், தமது உள்வீட்டுக் குத்துச்சண்டைகளால் மகிந்தவுக்கு மக்களிடம் மதிப்பை ஏற்படுத்தும் காரியங்களில் பொன்சேகா ஈடுபடவே கூடாது. அது அவருக்கும் பாதகமான பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம். அதை அவர் சரிவரப் புரிந்து கொள்வாரா...?

கட்டுரை



சந்திரசேகர ஆசாத்



முள்ளிவாய்க்கால் பேரவலம் ஒரு பெரும் பன்னாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட இன அழிப்பு என்பதை வெளிப்படுத்தும் ஒப்புதல் வாக்கு மூலமாகவே நாம் இதைக் கருதமுடியும். எனவே முள்ளிவாய்க்கால் நினைவு நாள் என்பது எமது போராட்டத்தை மட்டுமன்றி எமது இனத்தின் மூலவேரையும் பிடுங்கியெறிந்த பெரும் மனிதகுல விரோத நடவடிக்கையை நினைவுகூரவேண்டிய ஓர் இன எழுச்சி நாளாகும்.

# முள்ளிவாய்க்கால் நாள் உரிமையாளர்கள் யார்?

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாகத் தமது சுயநிர்ணய உரிமைகள் கிடைக்கவேண்டும் எனத் தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளின் தலைமையில் நடத்திய தொடர் போராட்டத்தில் தமிழ் மக்களால் கொடுக்கப்பட்ட விலை அளவு கணக்கற்றது. உயிரிழப்புக்கள், ஊனமுறல்கள், சொத்திழப்புகள், இடப்பெயர்வுகள், வறுமை, பசி என எத்தனை துயரங்கள் உண்டோ அத்தனையையும் தமிழ் மக்கள் அனுபவித்தனர். அவ்வளவு இன்னல்களுக்கும், இழப்புகளுக்கும் முகம் கொடுத்தபோதிலும் தமிழ் மக்கள் தமது விடுதலை இலட்சியத்தில் தளர்வடைந்துவிடாமல் நம்பிக்கையுடன் பயணித்தனர். அவர்களுடைய விடுதலைப் போரின் இறுதிக் கட்டமாகப் பன்னாடுகளின் சதியுடன் முள்ளிவாய்க்கால் பேரவலம் இலங்கை, இந்திய அரசுகளால் அரங்கேற்றப்பட்டது.

**முள்ளிவாய்க்கால் ஓர் எழுச்சிமிக்க நாள்!**

2002ஆம் ஆண்டு தொட்டு 2004ஆம் ஆண்டுவரை விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் அந்திலாந்திக் பேரவையின் தென்னாசிய நிலையத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், "பன்னாடுகளின் பரந்துபட்ட அர்ப்பணிப்பின் மூலமே இலங்கையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் நீடித்த போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இறுதிப் போரில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் வாழ்வை இழந்துள்ளனர். நாற்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் தனித்துவமான தலைமைத்துவம் பற்றித் தெரிந்துகொள்ள எமக்குப் பெரும் அணி தேவைப்பட்டது. பன்னாட்டுச் செயற்பாட்டாளர்களின் பரந்துபட்ட கூட்டணியில் இதைச் செய்ய முடிந்தது. இலங்கையின் நவீன வரலாற்றில் நாம் மிகவும் நம்பிக்கையளிக்கும் தருணத்தில் உள்ளோம். முன்னெப்போதும் இப்படியான சிறப்பான வாய்ப்பு எமக்குக் கிடைக்கவில்லை" எனப் பெருமைப்பட்டுக் கொண்டார்.

முள்ளிவாய்க்கால் பேரவலம் ஒரு பெரும் பன்னாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட இன அழிப்பு என்பதை வெளிப்படுத்தும் ஒப்புதல் வாக்கு மூலமாகவே நாம் இதைக் கருதமுடியும். எனவே முள்ளிவாய்க்கால் நினைவு நாள் என்பது எமது போராட்டத்தை மட்டுமன்றி எமது இனத்தின் மூலவேரையும் பிடுங்கியெறிந்த பெரும் மனிதகுல விரோத நடவடிக்கையை நினைவுகூரவேண்டிய ஓர் இன எழுச்சி நாளாகும்.

இதைவெறும் ஒப்பாரி வைக்கும் நாளாகவோ, இழக்கப்பட்ட உயிர்களுக்கு ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும் ஒரு 'பிதிர்க்கடன்' நாளாகவோ மட்டுப்படுத்திவிடக்கூடாது.

**உரிமையும் போட்டியும் தேவையற்றது**

எங்கள் ஒப்பாரிகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் பொங்கித் தகிக்கும் விடுதலை வீச்சுடன் மேலெழுந்து இலங்கை அரசை மட்டுமல்ல, இந்தியா உட்பட பன்னாடுகளையும் நோக்கிப் பாய வேண்டும். எத்தனை மாபெரும் சக்திகள் இணைந்து எம்மை அழித்தாலும், நாம் ஒன்றிணைந்து விடுதலைக் குரலெழுப்புவோம் என்ற செய்தியை நாம் உலகுக்கு உணர்த்த வேண்டிய நாள் இது. இழந்த ஆயிரமாயிரம் உயிர்களுக்காக ஆற்றவேண்டிய பணி முன்னாலிருக்க இன்று எம்மில் பலர் முள்ளி வாய்க்கால் நாளுக்கு உரிமை கோருவதில் ஒருவருடன் ஒருவர் போட்டியிடுகின்றனர். ஒரு சிலர் தங்களைவிட வேறு யாருக்கும் உரிமையில்லையென்கின்றனர். இன்னும் ஒரு சிலரோ தங்களின் தலைமையில் கொண்டாடப் பிறரும் தங்களுடன் இணைய வேண்டுமெனக் கோருகின்றனர். இன்னும் சிலரோ இந்த முள்ளிவாய்க்கால் நினைவுநாள் நிகழ்வுகளில் அரசியல் கலக்கக்கூடாது என்கின்றனர். இவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவு நாளுக்கான உரிமை கோரும் போட்டா போட்டியில் இழக்கப்பட்ட உயிர்களும், அவற்றின் காரணமாகப் பின்னின்று செயற்பட்ட வல்லாதிக்க சக்திகளும் மறக்கப்பட்டு விடுவார்களோ? என்ற அச்சம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

**மாகாணசபையில் தீபம்!**

2012ஆம் ஆண்டில் சில மாகாணசபை உறுப்பினர்கள் உட்படச் சிலர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் மாகாணசபை வளாகத்தில் தீபமேற்ற முயன்றனர். அப்போது மாகாணசபையின் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் வெளிக் கதவுகளை இழுத்து மூடும்படி கட்டளையிட்டுவிட்டுப் பறந்துவிட்டார். எனினும் அந்தக் குழுவினர் மாகாண சபையின் முன்பாக வீதியிலேயே தீபமேற்றினர்.

சாவகச்சேரிப் பொலிஸார் அங்கு உடனடியாக வந்ததும், தீபத்தைக் காலால் மிதித்து அணைத்ததும், மாகாணசபை உறுப்பினர்கள் அவர்களுடன் முரண்பட்டு வீதியிலேயே குந்தியிருந்ததும் மறந்துவிடமுடியாத சம்பவங்கள்.

ஆனால், மாகாண சபைத் தவிசாளர் மார்ட்டீன் வீதியிலுள்ள தமிழ் அரசுக் கட்சிக் காரியாலயத்தில் நினைவேந்தல் செய்ததாகப் பின்னர் தெரிவித்தார். வேறு சிலர் நல்லூரில் வழிபாடு செய்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடத்தினார்கள். அன்று மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த ஒத்துழைப்பு வழங்காதது மட்டுமின்றி, இடையூறாகவுமிருந்த மாகாணசபையின் தலைமை இன்று தாங்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களெனவும், தாங்களே நினைவேந்தல் நிகழ்வுகளைக் கொண்டாட உரிமையுள்ளவர்கள் எனவும் ஏனையோர் தங்களுடன் இணைந்து கொள்வர் எனவும் தெரிவிக்கின்றனர். 2013ஆம் ஆண்டில் வராத அக்கறை இப்போது கொழுந்து விட்டெரிகிறது.


**துக்க நாள் அல்ல இனவெழுச்சி நாள்!**

அதேவேளையில் மே 18ஆம் நாளைத் துக்கதினமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென மாகாணசபை தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது. அப்படியானால் இந்த நாள் கண்ணீர் வடிப்பதுடன் மட்டுப்படுத்தப்பட வேண்டுமா? நிச்சயமாக அப்படியிருக்க முடியாது. அந்த மண்ணில் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் வலி என்றுமே ஆறாதவை. எவராலும் ஆற்றுப்படுத்த முடியாதவையாகும். அவற்றின் விலை வெறும் கண்ணீரல்ல. எமது துயரங்களுக்கு எதிரான கோபம், துயரத்தை ஏற்படுத்தியவர்களின் மீதான கோபம் என்றும் அணையாத பெரு நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது. அந்த நெருப்பின் வெம்மை உலகெங்கும் படரவேண்டும். பொறுப்பாளிகளின் மனச் சாட்சியைச் சுட்டெரிக்க வேண்டும். வெறும் அறிக்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும் அடங்கிப் போயிருக்கும் உலகநாடுகளை எமது குரல் செயலில் இறங்கவைக்க வேண்டும். எனவே இது ஒரு துக்க நாளல்ல! ஓர் இன எழுச்சிநாள்! எந்த உரிமைகளுக்காக இழக்கக் கூடாதவற்றையெல்லாம் இழந்தோமோ அந்த உரிமைகளை பெறுமட்டும் ஓயமாட்டோம் என்பதை நாம் உலகத்துக்கு உணரவைக்க வேண்டும்.

**அரசியல் இல்லாமல் நினைவேந்தல் இருக்கமுடியாது**

தற்போது பல்கலைக்கழக மாணவர் அமைப்பு நினைவேந்தல் நிகழ்வுகளைத் தாங்கள் கொண்டாடப் போவதாகவும் அனைவரும் தங்களுக்கு ஒத்துழைக்க வேண்டுமெனவும் கோரியுள்ளது. அப்படிக் கோர அவர்களுக்கு உரிமையுண்டு. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நாள் என எமது போராட்டத்தின் முக்கிய நாள்களை மாணவர்கள் பலவித நெருக்கடிகள் மத்தியிலும், ஒடுக்குமுறைகள் மத்தியிலும் கடைப்பிடித்து வருகின்றனர். அதன் காரணமாக அவர்கள் பலவித துன்பங்களுக்கு முகம் கொடுத்ததுமுண்டு. அதைவிட எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கும் அடுத்த தலைமுறை அவர்கள்தான்! ஆனால் நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் கலக்கக்கூடாது என்ற அவர்களின் நிபந்தனை ஏற்றுக்கொள்ளமுடியாதது. ஏனெனில் முள்ளிவாய்க்கால் சம்பவங்களே அரசியல்தான். அவை ஒடுக்குமுறையின் ஒரு கொடூர அரசியல் வடிவங்கள். அவற்றுக்கு எதிரான எமது நடவடிக்கைகளும் ஓர் அரசியல்தான். அது ஒடுக்குமுறைக்கு எதிரான அரசியல். எனவே அரசியல் இல்லாமல் நினைவேந்தல் நிகழ்வுகள் இருக்கமுடியாது.

இந்த நினைவேந்தல் நிகழ்வு சிங்கள பௌத்த பேரினவாத அரசியலுக்கு, இந்திய மேலாதிக்க அரசியலுக்கு, பன்னாட்டு ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிரான அரசியலுக்கு, அரச படைகளுடன் இணைந்து செயற்பட்டு எமது மக்களைக் கொன்று குவித்த அரசியலுக்கு எதிரானதாக அமைவது இயல்பாகிறது.



**அரசியல் மேடை ஆகாது...!**

அத்துடன் தேர்தல் அரசியல் மேடையாக இந்த நாளைப் பயன்படுத்தும், கடைகெட்ட மூன்றாம்தர அரசியலின் மேடையாக இந்த நிகழ்வுகள் அமைவதை அனுமதிக்கமுடியாது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மாணவர்கள் மட்டும்தான் கொண்டாடவேண்டுமெனவும் அவர்களின் பின்னால் மற்றவர்கள் அணிதிரளவேண்டுமெனவும் கேட்டுக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளமுடியாத விடயமாகும். அப்படிக் கேட்பதற்குப் பின்னால்கூட கட்டாயம் அரசியல் இருக்கும்.

அது சில சமயங்களில் சில தீய சக்திகளுக்குக்கூடச் சாதகமாக அமைந்துவிடக்கூடும். எந்தத் தமிழ் மக்களின் ஐக்கியம் கோரப்படுகிறதோ அதையே சிதைத்துவிடும் அபாயம் இத்தகைய அரசியலுக்கு உண்டு. முள்ளிவாய்க்கால் பேரவலம் என்பது ஒரு மேடைப் பேச்சாகவோ, பத்திரிகை அறிக்கையாகவோ, தொலைக்காட்சி விவாதமாகவோ, ஊடகச் சந்திப்புக்களாகவோ குறுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுவதைச் சாதனை என்று கருதிவிடக்கூடாது. அது உயிர்கள் விலைகொடுக்கப்பட்ட ஒரு விடுதலைப் போரின் இறுதிக் கட்டம். ஆறாக ஓடிய குருதி நிறைந்த நாள்கள். சாவுக்கும் வாழ்வுக்குமான வினாடிகளுக்கூடாகக் கடக்கப்பட்ட பயணம்.


எனவே இந்த நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எந்தவொரு தனிநபரோ, எந்தவொரு நிறுவனமோ, எந்தவொரு அமைப்போ உரிமை கொண்டாடமுடியாது. இன்னொருபுறம் அடுத்த சகாப்தம் புதிய வடிவத்திலும் புதிய வீச்சுடனும் எழுச்சிபெறுவதற்குக் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். எனவே விடுதலையை விரும்பும் தமிழ் மக்கள் அத்தனைபேரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு உரிமையாளர்களே! அனைவரும் ஒன்றிணைந்து இதை ஒரு புரட்சிகரமான நினைவேந்தல் நிகழ்ச்சியாகக் கடைப்பிடிப்போம்.


# மரம் வளர்ப்போம் பயன் பெறுவோம்



காவியா பத்து வயதுச் சிறுமி. அவள் தன்னுடைய பக்கத்து வீட்டுத் தாத்தாவோடு அதிக நேரங்களைச் செலழிப்பாள். தாத்தா தன்னுடைய ஒவ்வொரு பிறந்த நாள் நினைவாகவும் ஒவ்வொரு மரங்களை நடும் வழக்கமுடையவர். இப்போது பல மரங்கள் அவருடைய வீட்டைச் சூழ்ந்து பசுமைபோர்த்தியுள்ளன. தென்னை, வாழை, பலா, மா என பலதரப்பட்டவையாக இருந்தன. அதை விட அவர் வீட்டில் ஏற்கனவே வயது முதிர்ந்த மரங்கள் பல உள்ளன. அவற்றை அவர் பிள்ளைகளை விட அதிகம் நேசிக்கிறார். தாத்தாவின் பிள்ளைகள் அவரைக் கைவிட்டுவிட தாத்தா தனி ஆளாக மரங்களைப் பேணி வருகிறார்.
ஒரு நாள் காவியா வழமைபோல தாத்தாவின் வீட்டுக்குச் சென்றாள். அங்கு தாத்தா மரங்களோடு பேசிக்கொண்டிருப்பதை அவதானித்தவள் சிரிக்க ஆரம்பித்தாள். "தாத்தா நீங்கள் பேசுவது மரங்களுக்குக் கேட்கிறதா? அவை வாய் திறந்து பேசமாட்டாதே. ஏன் அவற்றோடு கதைக்கிறீர்கள்?" என ஆவலாகக் கேட்டாள்.
"மரங்கள் பேசவோ. கேட்கவோ மாட்டாதவை தான். ஆனால் அவைகளுக்கு உயிர் இருக்கின்றது. மனிதன் பல வழிகளிலும் மரங்களை அழிக்கின்றான். அவற்றைத் துன்புறுத்துகின்றான். ஆனால் மரங்களோ எமக்கு உணவைத் தருகின்றன. நிழலைத் தருகின்றன. காற்றைத் தருகின்றன. அழகையும் ரம்மிய உணர்வையும் தருகின்றன. இப்படியாகப் பலதை எமக்கு வாரி வழங்குகின்றன. மாறாக நாம் அதற்கு எதை வழங்குகிறோம். துணி துவைத்த நீரையும், பாத்திரங்கள் கழுவிய நீரையும் தானே அவற்றுக்கு இலவசமாக வழங்குகின்றோம்" என்றார்.
"அப்படியாயின் ஏன் தாத்தா மரங்களை மனிதர் அழிக்கிறார்கள்?" கேட்டாள் காவியா
"மனிதர்களின் பெருக்கத்தால் தேவைகளும் அதிகரிக்கின்றன புள்ளை! அதனால் மரங்களை பணத்துக்காகவும் தேவை கருதியும் வெட்டுகிறார்கள். இப்படி ஒவ்வொரு தேவை கருதியும் மரங்களை வெட்டுவதால் பூமித் தாய் கோபமடைந்து நெருப்பாக எமக்கு அதிக வெப்பத்தைக் கொட்டுகிறாள்"
''சரியான வெக்கையா இருக்கு நித்திரைகொள்ளவே முடியேல்ல. இப்பவெல்லாம் சரியான வெயில் இதற்கு எல்லாம் எங்களப்போல சிறுவர்கள் காரணம் இல்ல. உங்களப்போல பெரியவர்களின் செயல்களே காரணம்'' என்றாள் காவியா. தாத்தாவும் அதை ஆமோதித்துச் சிரித்தபடி தலையாட்டினார்.
"தாத்தா நான் இன்று முதல் உங்களைப் போல என் வீட்டில் ஒவ்வொருவரது பிறந்த நாளுக்கும் மரம் நாட்டுவேன். பிறர் மரங்களை வெட்டுவதைக் கண்டால் முடிந்தவரைத் தடுப்பேன். என்னைப் போன்ற சிறுவர்களால் முடியாத காரியம் எதுவுமில்லைத் தாத்தா. இப்போது நான் வரும்போது எனது அம்மா, அப்பாவிடம் கூறிக்கொண்டிருந்தார். இந்த வேப்ப மரத்தைவெட்டுங்கள். தினமும் இலைகளைக் கொட்டுகிறது. அடிக்கடி என்னால் முற்றத்தைக் கூட்ட முடியவில்லை" என்று. மரங்களைப் பாதுகாப்பதை எனது வீட்டிலிருந்தே நான் ஆரம்பிக்கப்போகிறேன் என்று கூறியபடி தனது வீட்டை நோக்கி ஓடினாள் காவியா.
***சிறுவர்களே காவியாவைப்போன்று நாமும் மரங்களை வளர்த்துப் பயன்களைப் பெறுவோமாக.***

## வழிகாட்டுவோம்





ஆர்.சிபேன்,
தரம் - 5 பி,
சென்.ஜோன்ஸ் கல்லூரி.



அ.மிருசன்,
தரம் - 8,
SOSசிறுவர் இல்லம்.



## ஒழுக்கம்

அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

பலவும் படித்து நீங்கள்
பட்ட பெற்ற போதும்
உலகத்தோடும் ஒத்தே
ஒழுகிக் கொள்ள வேண்டும்

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமம் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்

*மெ.அன்ரனி,*
*தரம் - 6,*
*யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ*
*விக்னோஸ்வார வித்தியாலயம்.*

## ஈழத்துப் படைப்பாளர் வரிசையில்...

# குறமகள்



குறமகள் என்ற பெயரில் எழுதி வந்தவர் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் ஆவார். இவர் 1933ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி காங்கேசன்துறையில் பிறந்தார். சிறுகதைத் துறையில் தனக்கெனத் தனியான ஓரிடத்தைப் பெற்ற இவர், ஈழத்து மூத்த பெண் எழுத்தாளர் ஆவார்.
காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும், இளவாலை 'கொன்வென்ற்'ரிலும் கல்வி கற்ற இவர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நாடகவியலிலும், கல்வியலிலும் டிப்ளோமா பட்டம் பெற்றார். 27ஆண்டுகள் வரை பாடசாலை ஆசிரியராகவும், எட்டு ஆண்டுகள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்.
1955ஆம் ஆண்டளவில் இவரது முதலாவது சிறுகதையான 'போலிக் கௌரவம்' ஈழகேசரியில் பதிப்பானது. இவரது கதைகள் 'ஈழகேசரி', 'சுதந்திரன்', 'வீரகேசரி', 'தினகரன்', 'கலைச்செல்வி', 'ஆனந்தவிகடன்' ஆகியவற்றில் வெளிவந்துள்ளன. இவரது 'குறமகள் கதைகள்', 'உள்ளக் கமலமடி' ஆகிய நூல்கள் மித்ர வெளியீடாக வந்துள்ளன.
பெண்களின் சமூக விடுதலைக்கான கருத்துக்களை மையமாகக் கொண்டு கதைகளை எழுதியவர். 'வாழ்வைத்தேடு', 'பிரிவும் இன்பம் தரும்', 'ஆளுமைகள் அழிகின்றன', 'ஒரு படம் பூரணத்துவம் பெறுகின்றது', 'அவள் கொடுத்த விலை', 'வாழ்க்கையின் திருப்பங்களும் வானத்துக் குழந்கைளும்' ஆகியன இவருடைய முக்கியமான சிறுகதைகளில் சில.
சிறுகதைகள் மட்டுமன்றி, கட்டுரைகள், கவிதைகள் என்பனவற்றிலும் தனது ஆளுமையைக் காட்டியுள்ளார். ஐவருடன் சேர்ந்து 'மத்தாப்பு' என்ற குறுநாவலில் மஞ்சள் வர்ணத்தை வைத்து ஓர் அத்தியாயத்தை எழுதியுள்ளார். மாணிக்கம் இதழில் பிரபல எழுத்தாளர்கள் சிலருடன் சேர்ந்து 'கடல் தாரகை' என்ற குறுநாவலை எழுதியுள்ளார். அத்துடன் இவர் சிறந்த சொற்பொழிவாளருமாவார்.
'இராமபாணம்'(கட்டுரைகள்), 'ஈழத்து றோஜா', 'குருமோகன்'(பாலர் பாடல்கள்), 'மாலை சூட்டும் நாள்' (கவிதைகள்) என்பன இவர் வெளியிட்ட சில நூல்களாகும். இடம்பெயர்ந்து கனடாவில் வசித்து வந்த இவர், கடந்த 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதியன்று இறையெய்தினார்.




# திருடனாக மாறிய விஜய் அன்ரனி

இசையமைப்பாளராக இருந்து 'நான்' படம் மூலம் கதாநாயகனாக மாறியவர் விஜய் அன்ரனி. 'நான்', 'சலீம்', 'பிச்சைக்காரன்' என்று வரிசையாகவெற்றிப்படங்களாககொடுத்ததைத்தொடர்ந்துமுன்னணிநடிகர் ஆனார். எதிர்மறை தலைப்புகளையே தொடர்ந்து தனது படங்களுக்கு வைத்தார்.

இந்தியா-பாகிஸ்தான், எமன், சைத்தான் என்று வரிசை நீண்டது. அவரது நடிப்பில் காளி படம் வருகிற 18 ஆம்திகதிதிரைக்குவருகிறது. அவர் தற்போது 'திமிரு பிடிச்சவன்' என்ற படத்திலும் 'கொலைகாரன்' என்ற படத்திலும்நடித்துவருகிறார்.

அடுத்து 'திருடன்' என்ற படத்தில் நடிக்க இருக்கிறார். இந்த படத்தை 'வாய்மை' படத்தை இயக்கிய அ.செந்தில்குமார் இயக்கவிருக்கிறார்.







## இன்றைய நாள்

**மேடம்:** சுற்றத்தினரிடம் இணக்கம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவர். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும்.

**இடபம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:** அவசியமில்லாமல் கடன் பெற வேண்டாம். தொழில், வியாபாரத்தில் புதிய மாற்றம் செய்வது அவசியம். இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** எதிரியிடம் விலகி இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவது அவசியம். இலாபம் சுமார். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படலாம்.

**சிங்கம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களின் உதவி கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்று செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்திகரமாக இருக்கும். சுப நிகழ்வில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** சஞ்சலம் நீங்க இஷ்ட தெய்வ வழிபாடு தேவை. தொழில், வியாபாரத்தின் இடையூறுகளை உடனே சரி செய்வது நல்லது. மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** முக்கிய பணி நிறைவேற கூடுதல் உழைப்பு அவசியம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாரான அளவில் கிடைக்கும்.

**தனுசு:** பொதுநலனில் அக்கறை காட்டுவீர்கள். சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் பணவரவு திருப்திகரமாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** நண்பருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர்.

**கும்பம்:** அவமதித்தவரிடமும் அன்புடன் பழகுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** மனக்குழப்பம் தீர இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. குடும்பத்தினரின் செயல்பாடு ஆறுதல் தரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும்.

## பேஸ்புக் கவிதை

தொடர்பில் இல்லாத உறவினர்
அடிக்கடி கனவில் வருகிறார்
கனவில் கடனா கேட்க முடியும்?

கோவிலை விட்டு
வெளியே வந்தால்
செருப்பைக் காணோம்
திருடியவன் கண்ணை
சாமி குத்தட்டும்.

டி.வியில் பார்த்த
கார்ட்டூன் கதையை
குட்டிப் பையன்
அழகாய்த்தான்
சொல்கிறான்
ஆனால், எனக்கு
வேலை இருக்கிறது.

எம்முடைய முட்கிரீடம்
அடுத்தவனுக்குப்
பறவைக் கூடு.

யாரோ செத்ததாகக்
கேள்விப்பட்டேன்
வருந்துவதற்கில்லை
யார் மனங்களிலாவது
வாழ்ந்துகொண்டிருப்பார்.

## அயமொழி

பல நாள் திருடன் ஒரு நாள் பதவியிழப்பான்...



## நண்பேன்டா...

கஷ்டம் வரும்போது கடவுளை நினைச்சவங்கள விட, கடன் வாங்க நண்பனை நினைச்சவங்கதான் அதிகம்.

ஆனா, நண்பன் கடன் கொடுத்து கஷ்டம் தீர்க்கிறப்ப, நண்பனுக்கு நன்றி சொன்னவங்கள விட கடவுளுக்கு நன்றி சொன்னவங்கதான் அதிகம்.

ஒண்ணும் பிரச்சினையில்ல, கடவுளும் நண்பனும் வேற வேறயா என்ன?

## சமூகப் பிரச்சினைகள்


இந்த சமூகத்தையும் அதன் பிரச்சினைகளையும் நினைத்தால், என்னமோபோல் இருக்கிறது. சிலசமயம் பீதியாகவும் சிலசமயம் கூச்சமாகவும் இருக்கிறது. கடவுள் அப்படி ஒருவர் இருந்தால் சமூகத்தை அப்படித் தான் படைத்திருக்கிறார் போலும். மொத்தப் பிரச்சினைகளையும் அகர வரிசைப்படி பட்டியலிட்டுப் பார்த்தால் ஆம்புலன்ஸ் விளக்காகத் தலை சுற்றுமோ? பொருளாதாரம், வன்முறை, போர், பஞ்சம், மாற்றான் தாண்டவம் என்று நாம் தான் பிரச்சினைகளுக்கு வெவ்வேறு பெயர் சூட்டி அழகு பார்க்கிறோம். உண்மையில் சமூகம் என்பது வேறொன்றுமில்லை, விதிதான். இல்லை என்றால் அதை மாற்றிவிடலாம்.



## இது புதுசு

ஆண்களுக்கான செருப்பு வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரத்து 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# கர்ப்பகால நெஞ்செரிச்சலைத் தவிர்க்கும் வழிகள்



கர்ப்ப காலத்தில் 16அவது வாரத்திலிருந்து கருப்பையின் அளவு அதிகரிப்பதால் வயிற்றின் சுற்றளவும் அதிகரிக்க ஆரம்பிக்கும். கருப்பையின் பெருக்கம் வயிற்றை அழுத்துவதால், இரைப்பையிலுள்ள அமிலம் தொண்டைக்குழாயை நோக்கி வெளியே தள்ளப்படுவதால் அஜீரணம், நெஞ்சு கரிப்பது போன்ற உணர்வுகள் தோன்றும், மஞ்சள் காமாலை இருக்கிறதா என்பதையும் இந்த நேரத்தில் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம். இயல்பாக விரும்பி சாப்பிடக்கூடிய உணவுகூட கர்ப்பக் காலத்தில் அஜீரணத்தை உண்டாக்கும்.

இதைத் தவிர்க்க பிரச்சினைக்கு காரணமான உணவுகளைத் தவிர்த்து விடுவதே சரியானது. அதே நேரம், பிற உணவுகளில் சரிவிகித ஊட்டச்சத்துகள் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரேயடியாகச் சாப்பிடாமல் கொஞ்சம் கொஞ்சமாக பிரித்துச் சாப்பிடுங்கள். சாப்பிடும்போது நிமிர்ந்து உட்காருவது உங்கள் வயிற்றிலுள்ள அழுத்தத்தை அகற்றும்.

இரைப்பைக்கும், உணவுக் குழாய்க்கும் இடையிலுள்ள வால்வில் அளவுக்கதிகமாக ஏற்படும் தளர்வினால் கடுமையான, எரிவது போன்ற வலி மார்பில் ஏற்படுகிறது. இந்த நிலையில் இரைப்பையிலுள்ள அமிலம், உணவுக் குழாய்க்கு வரும் சூழ்நிலை ஏற்படுகிறது. 50 சதவிதத்துக்கும் அதிகமான கர்ப்பிணிகள் நெஞ்செரிச்சலால் பாதிக்கப்படுகிறார்கள். வளரும் குழந்தை இரைப்பையை முன்னோக்கித் தள்ளுவது ஒரு காரணம்.

அதிகமாக சாப்பிடுவது அல்லது மல்லாந்து படுப்பதாலேயே அவ்வப்போது நெஞ்செரிச்சல் வருகிறது.

எனவே, ஒரேயடியாக சாப்பிடாமல் சின்னச்சின்ன இடைவெளிகளில் சிறுகச் சிறுக சாப்பிட்டு, பிரச்சினை வராமல் தவிர்க்கலாம்.

இரவில் நெஞ்செரிச்சல் வந்து சிலருக்கு விழிப்பு வரும். அப்படி வருபவர்கள் தங்கள் பக்கத்தில் தயாராக ஒரு டம்ளர் பாலை வைத்துக் கொள்வது நல்லது. நெஞ்செரிச்சலுக்குத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தும் மாத்திரைகளைத் தவிர்த்துவிட வேண்டும். இவையெல்லாம் பாதுகாப்பற்றவை.

சாப்பிட்ட பிறகு கால்களை நீட்டிப் படுப்பதையும், உடனே குனிந்து உட்காருவதையும் தவிர்க்க வேண்டும். வசதியாக நிமிர்ந்த நிலையில் உட்கார்ந்து கொள்ள வேண்டும். இதனால் சாப்பிட்ட உணவு சிறுகுடலுக்குள் சிரமமின்றி செல்லும். தலைப்பகுதி உயரமாக உள்ள படுக்கையில் படுத்தால் நல்ல உறக்கம் வரும்.

# ஞாபக மறதியை தடுக்கும் நெல்லிக்காய்



உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதில் உணவுப் பொருள்களும், பழக்கவழக்கங்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

சற்று துவர்ப்புடன் இருக்கும் நெல்லிக்காயை எடுத்து கொண்டால், அதன் உண்மையான பயனை நிச்சயம் உணர்வது அவசியம். நீண்ட நாள்கள் ஆரோக்கியமாகவும், இளமையுடனும் வாழ இந்தக்கனி உதவுகிறது.

1. ஒரு சிறு துண்டு இஞ்சி, 2 நெல்லிக்காய், இரண்டையும் தண்ணீர் சேர்த்து அரைக்கவும். பிறகு, இதில் இரண்டு தேக்கரண்டி சர்க்கரை அல்லது தேன் சேர்த்து குடிக்க சிறுநீரகக் கற்களை கரைத்துவிடும்.
2. இலைகள், பட்டை, வேர், மலர்கள் மற்றும் அனைத்தும் மருத்துவப் பயனுள்ள பகுதியாகும். சிறுநீரகக் கோளாறு, குருதிச் சோகை, மஞ்சள் காமாலை மற்றும் அஜீரண நோய்களுக்கு நன்மருந்தாகிறது. சர்க்கரை நோயாளியின் கணையத்தை வலுவேற்ற உதவும். மூப்பினை ஏற்படுத்தும் தொல்லைகளைப் போக்கி, உடல் உறுப்புகளை நல்ல நிலையில் வைக்கும் திறன் படைத்தது.
3. நெல்லிக்காய் சாற்றை தினமும் காலையில் எழுந்து வெறும் வயிற்றில் குடித்தால், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புக்கள் கரைந்து உடல் எடையானது குறையும்.
4. பாலுடன் கலந்து தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் நரை இருந்தாலும் கருக்கத் தொடங்கி விடும். இது இதயத்திற்கு வலிமையை வழங்குகிறது. மற்றும் குடற்புண், குருதிப் பெருக்கு, நீரிழிவு, கண் நோய் ஆகியவற்றைக் குணமாக்கும்.
5. உடல் அசதி மற்றும் அஜிரணக் கோளாறுகளுக்கு இது கைகண்ட மருந்தாகும். அத்துடன் வாயுத் தொல்லைகளைப் போக்கக்கூடிய குணம் இதற்கு உண்டு. குருதி உறைவினால் உண்டாகும் பல நோய்களைப் போக்கும் ஆற்றலும் முக்கியமாக பித்தத் தொடர்பான வியாதிகளுக்கு நல்ல மருந்தாக விளங்குகிறது.
6. ஞாபக மறதியைத் தடுக்க, தினமும் நெல்லிக்காய் சாற்றை குடித்தால், குருதிச் சிவப்பணுக்களின் எண்ணிக்கை அதிகமாகி, ஞாபக சக்தியும் அதிகரிக்கும்.
7. தலையில் ஒரு கரண்டி எண்ணெயை நன்றாக அழுத்தி தேய்த்து குளித்து வந்தால் முடி உதிர்வது தவிர்க்கப்படுவதோடு, முடி கருமையாகவும், எந்தவித தொல்லையுமின்றி, மூளையைக் குளிர்ச்சியாக வைத்து அனைத்து வகைகளிலும் சுகமளிக்கக்கூடியதாகும்.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 900 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 500 | 600 | 500 | 400 |
| கணவாய் | 800 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 1000 |
| சுறா | 800 | 700 | 1000 | – |
| சீலா | 350 | 450 | 500 | 600 |
| விளை | 400 | 500 | 500 | 700 |
| முரல் | 400 | 400 | 500 | 600 |
| கும்பிளா | 450 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | – |
| ஓரா | 400 | 400 | 500 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 250 | 300 | 200 |
| சூடை | 200 | 200 | 200 | 200 |
| ஒட்டி | 200 | 200 | 300 | – |
| திருக்கை | 300 | 300 | 400 | 400 |
| மதனம் | 300 | 300 | 300 | – |
| கொய் | 100 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 400 | 300 |
| வாளை | 250 | 300 | 400 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 50 | 60 | 60 | 60 | 60 |
| முள்ளங்கி | 50 | 50 | 80 | 80 | 60 |
| மரவள்ளி | 50 | 40 | 30 | 40 | 30 |
| பயிற்றை | 100 | 120 | 120 | 120 | 140 |
| பாகல் | 100 | 200 | 120 | 100 | 100 |
| க.கிழங்கு | 80 | 60 | 60 | 80 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 140 | 90 | 80 | 80 |
| சி.வெங்காயம் | 160 | 150 | 120 | 160 | 140 |
| பூசணி | 40 | 50 | 40 | 40 | 40 |
| தக்காளி | 100 | 50 | 110 | 100 | 100 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 | 40 | 60 |
| கீரை | 30 | 30 | 40 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 35 | 20 |
| ப.மிளகாய் | 50 | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 60 | 70 | 80 | 100 | 80 |
| கோவா | 60 | 60 | 60 | 60 | 50 |
| வெண்டி | 60 | 100 | 60 | 60 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 180 | 80 |
| லீக்ஸ் | 200 | 200 | 180 | 200 | 180 |
| தேங்காய் | 65 | 85 | 80 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 240 | 240 |
| வல்லாரை | 20 | 20 | 35 | 20 | 15 |
| கறிமிளகாய் | 80 | 120 | 80 | 100 | 100 |
| கரட் | 100 | 100 | 90 | 120 | 90 |
| முருங்கைக்காய் | 150 | - | 180 | 120 | 300 |

# வாழ்க்கையின் பாடம்

கவிதை

ரே.த.எட்வின்



விழுந்திடுவேன் என்று பயந்திடும்போது
நடந்திட முடியாது – தான்
நடந்திடும்போது விழுந்திடுவேன் என்று
பயந்திடில் முடியாது
எழுந்திடும் போது நடந்திடுவேன் என்ற
துணிவின்றி நேராது – நீ
துணிந்திடு எதையும் செய்திடும் முன்னே
தோல்வியே வாராது

எட்டாத பழம் கைக்குக் கிட்டாது என்று
விட்டாலும் கூடாதே – எதைத்
தொட்டாலும் உடனே சயமாகும் என ஆசைப்
பட்டாலும் கூடாதே
கட்டாகப் பணம்சும்மா கொட்டாதோ என்று
முட்டாளாய் அலையாதே – கஷ்டப்
பட்டாலே அன்றி கிட்டாது பணம், வழி
பட்டாலும் நிலையாதே

நிலைமைக்கு மிஞ்சிய நினைப்புகள் இருந்தால்
நிம்மதி ஓடிவிடும் – தன்
தகமைக்கு மேலாய் தகுதியும் வாய்த்தால்
தற்பெருமை கூடிவிடும்

அளவுக்கு அதிகமாய் ஆசை இருந்தால்
ஆபத்துத் தேடிவரும் – இல்ல
வழமைக்கு மீறிப்பெண் வலுக்கொண்டால் குடும்ப
வாழ்க்கையே ஆடிவிடும்

தீண்டாத வரைக்கும் தீண்டாது சர்ப்பமும்
தீண்டிட எண்ணாதே – உன்

வேண்டாத செயலால் விசனத்தை பிறர்க்கு
உண்டு நீ பண்ணாதே
தூண்டாத தீபம் ஒளிதரா என்றாலும்
சீண்டி நீ அணையாதே – நீ
மாண்டாலும் பாவங்கள் மறையாது தீயதை
மனத்தாலும் நினையாதே

கோபத்தினால் கொடும் பாவத்தைச் செய்து பிறர்
சாபத்தில் மூழ்காதே – விரக
தாபத்தால் மற்றவர் வாழ்வினைக் கெடுத்துமனஸ்
தாபத்தில் இயங்காதே
இலாபத்திற் காய்ப்பிறர்க் காபத்தை விளைத்துசல்
லாபத்தில் மயங்காதே – உயிர்
ஆபத்து வரினும் உண்மையாய் வாழ்ந்திட
ஒருபோதும் தயங்காதே

ஊரென்ன சொன்னாலும் உன்மனச் சாட்சிக்கு
மட்டுமே நீ அடங்கு – இந்த
பாரென்ன பாதகரை மட்டுமே இரட்சிக்கும்
பாவத்தின் சாக்கிடங்கு
யாரென்ன சொல்லினும் உன்னெண்ணப்படி எதையும்
துணிவுடனே நீ தொடங்கு – அது
ஆறென்ன நூறென்ன அனைத்துமுன் மனம் போல
பலன்தரும் பன்மடங்கு



# சிலை எதற்கு

கவிதை

உடுவிலூர் கலா

சாலையோரமெங்கும் சிலைகளுண்டு
அவை சொல்லிடும் கதைகள் பலவுண்டு
நீர்க்குமிழியாய் முளைத்திடும் புத்தர் சிலைகள்
சொல்லிடும் கதையோ ஒன்றேதான்

இனப்பரம்பல் ஒன்றே கருத்தாகி
எங்குமே சிலைகள் முளைக்கின்றன
ஏற்க முடியா இச்சதியால் மனம்
உடைகின்றார் எம்மவர்கள்

கல்வி சார் இடங்களில் புத்தர்சிலை
நாவற்குழி நிலத்திலும் புத்தர்சிலை
தெருவோர அரசுகள் கீழ் புத்தர்சிலை
விடுவிக்கா காணிகளிலும் புத்தர்சிலை

மகிழ் ஊற்று, மகிழ்சக்தி உலக சக்தி
அன்பேதான் என்றுரைத்தார் புத்தரன்று
சிலை அடியில் அழிகிறது புத்தரின் தத்துவம்
இதை அறியாதது யார் குற்றம்?

## சொற்சிலம்பம் போட்டி இல: 522

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | 6 |
| 7 | | | | | 8 | | |
| 9 | | | 10 | 11 | | | |
| | | 12 | | | | | 13 |
| 14 | 15 | | | | | 16 | |
| | 17 | | | | | | |
| 18 | | | | | | 19 | 20 |
| 21 | | | | | 22 | | |

அனுப்புபவர் பெயர்:.........................................

முழுமையான தபால் விலாசம்: .........................

.........................................................................

கையொப்பம்:...................................................

### இடமிருந்து வலம்

1. தோழமை கொள்ளல்
5. இந்திய ஆத்மிக தலைவராயிருந்தவரை இவ்விதம் சுருக்கமாக அழைப்பர்
7. மட்டுப்படுத்தும் சொல்
8. நீரில் மிதப்பது
9. தானை
10. பூமி
12. தங்குதடையின்றி
14. கல்யாணம்
16. மரம்
17. தில்லை
18. மிகப்பெரிய
19. சாப்பிடு
21. உருவத்தில் மிகமிகச் சிறியது
22. எடை அளக்கும் கருவி

### மேலிருந்து கீழ்

1. சாதி மத பேதங்களின்றி ஒன்றாக இருந்து உணவு அருந்துவது
2. உயரத்தால் குறைந்தது
3. வதங்கு
4. முழுமை
5. படிப்பு
6. நீர்த்தன்மைக்கும் திரவத்தன்மைக்கும் இடைப்பட்டது.
8. வலு
11. குழப்பநிலை
12. நேரான தரை
13. இரும்பில் காணலாம்
15. சுவை
16. ஒரு வாத்தியம்
18. பெண்
20. குழந்தை

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பிவருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 520 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) நிம்மதி (4)அமைதி (6)குறத்தி (7) வாதாடல் (9)காதம் (11)கிராம் (12)வரம்பு (13) அடம் (14)அம்பலம் (16)அல் (17)கும் (18)வரி (19)புவி (20)புள்ளிமான்

**மேலிருந்து கீழ்**
(1)நிர்வாகி (2)மகுடம் (3)திறல் (4)அதிகாரம் (5)திரும்புதல் (8)தாராளம் (10)தம் (12)வடம் (13)அலம்பு (14)அம்பு (15)பகு (16)அரிமா (18) வளி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 520 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
கு.ஜெனகன்,
4ஆம் கட்டை, மன்னார் வீதி,
பூநகரி.

**2 ஆம் பரிசு**
திருமதி. க.இரவீந்திரன்,
கல்லூரி வீதி,
மானிப்பாய்.

**3 ஆம் பரிசு**
சி.சிவரங்கன்,
பயிரிக்கூடல்,
காரைநகர்

**4 ஆம் பரிசு**
விஜிதன் பிருத்திகா,
6ஆம் வட்டாரம்,
குமுளமுனை,
முள்ளியவளை.

**5 ஆம் பரிசு**
ம.சற்குணதேவி,
எஸ்.எம்.கேணியடி,
புதுவீதி, காரைநகர்.

**பாராட்டுப் பெறுவோர்**

கோ.அஜந்தா,
அம்பிகாபதி லேன்,
சங்கானை.

அ.ஸ்ரீஸ்கந்தராஜா,
இல.15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

சி.சம்பூரணி,
அரசடி ஒழுங்கை,
வட்டு.தெற்கு,
வட்டுக்கோட்டை.

**சொற்சிலம்பம் போட்டி இல.522**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (23.05.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.522 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 27.05.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 520 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**13.05.2018 முதல் 19.05.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*





## மேடம்

ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மை கிடைக்கும். திட்டமிட்ட முயற்சியில் ஈடுபட்டு வளர்ச்சி காண்பீர்கள். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்தால் ஓரளவு நன்மை உண்டாகும். புத்திரர்கள் படிப்பு, வேலைவாய்ப்பில் தாமதம் உண்டாகலாம். பூர்வீகச் சொத்து பராமரிப்பில் நம்பகமானவர்களை பணியமர்த்தவும். மனைவி உங்களின் கருத்துக்களை ஏற்று குடும்பநலன் பாதுகாத்திடுவார். விருந்து, விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரிசெய்யவும். இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் கடன் வாங்குவதை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.



## இடபம்

குரு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். எதிர்பாராத அளவில்; முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். பணியில் திறமையை வெளிப்படுத்தி நற்பெயர் பெறுவீர்கள். வாகனப்பயணத்தில் பாதுகாப்பு நடைமுறையை தவறாமல் பின்பற்றவும். புத்திரரின் நற்செயல் பெற்றோர்க்கு பெருமை சேர்க்கும். எதிரி மறைமுகமாக தொந்தரவு தருவர். மனைவி கருத்து இணக்கமுடன் நடந்து கொள்வார். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி வளரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் இலாபமும் சீராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல் ஏற்பதால் சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம்



## மிதுனம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். சமயோசித செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தாயின் அன்பும் ஆசியும் நல்வழி நடத்தும். வெளியூர் பயணங்களில் இனிய அனுபவம் கிடைக்கும். புத்திரர் உங்கள் சொல்லை ஏற்று திறமையை வளர்த்துக் கொள்வர். வழக்கு, விவகாரங்களில் இதமான அணுகுமுறையை பின்பற்றுவது நல்லது. நேரத்திற்கு உணவு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி அன்பு பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி இலக்கு நிறைவேற்றி சலுகை பெறுவர். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருட்களை வாங்குவர்.


## கடகம்

சூரியன், புதன், சுக்கிரன், சனீஸ்வரர் அதிக அளவில் நற்பலன் தருவர். சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாத்துக் கொள்வீர்கள். தாய்வழி உறவினர்களின் உதவி மனநெகிழ்ச்சியைத் தரும். புத்திரரின் செயல்களை ஒழுங்கு செய்வதால் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். மருத்துவ சிகிச்சையால் நோய் தொந்தரவு குறையும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்ளலாம். தொழில் வளர்ச்சிக்காக விண்ணப்பித்த அரசு உதவி கிடைக்கும். பணியாளர்கள் அதிக வேலைவாய்ப்பு மூலம் வருமானம் காண்பர். பெண்கள் குடும்பநலன்களை அக்கறையுடன் பேணுவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.



## சிங்கம்

செவ்வாய், கேது, சந்திரனால் நன்மை உண்டாகும். பழகுபவர்களின் மனம் உணர்ந்து பேசுவது நல்லது. புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர் உங்கள் அறிவுரையை உணர்ந்து செயல்படுவர். குடும்பத்தில் ஒற்றுமை சீராக இருக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு, விவகாரங்களில் அனுகூலத்தீர்வு கிடைக்கும். மனைவி வழிசார்ந்த உறவினர் செயல்களை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து பணிசெய்வது நல்லது. பெண்கள் நகை, பணம் யாருக்கும் இரவல் கொடுக்க கூடாது.



## கன்னி

குரு, சுக்கிரன், ராகு வியத்தகு நற்பலன் வழங்குவர். உங்களின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். தம்பி தங்கையின் தேவைக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையை மேற்கொள்ளவும். புத்திரரின் செயல்குறையை சரி செய்து வளர்ச்சிக்கு வழிவகுப்பீர்கள். உற்சாகமுடன் அவர்களும் படித்து முன்னேற்றம் காண்பர். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். வழக்கு விவகாரத்தில் தீர்வு கிடைக்க தாமதமாகலாம். மனைவியின் அன்பு நிறைந்த பாசத்தில் மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டியை சமயோசிதமாக சரிசெய்வீர்கள். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்பட்டுச் சலுகை பெறுவர்.




## துலாம்

சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரன் அளப்பரிய நற்பலன் தருவர். நண்பரின் ஆலோசனை மனதில் நம்பிக்கையை தரும். புதிய திட்டங்களை தீட்டி செயல்படுத்துவீர்கள். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் தாராள பணச்செலவில் வாங்கித் தருவீர்கள். எதிரியிடம் சமயோசிதமாக விலகுவீர்கள். குடும்பத்தின் எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். மனைவி உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிவர். சலுகைகளும் வந்து சேரும்.



## தனுசு

குரு சந்திரனால் நற்பலன் கிடைக்கும். சமூக நிகழ்வுகள் அதிருப்தி தரலாம். தாமதமான பணி புதிய முயற்சியால் நிறைவேறும். வாகனத்தின் பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். புத்திரர் அறிவு, செயல்திறனில் மேம்பட ஊக்கம் வழங்குவீர்கள். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். நேரத்திற்கு உணவு உண்பதால் ஆரோக்கியம் சீராகும். விஷப்பிராணிகளிடம் விலகுவது நல்லது. மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மறைமுக போட்டியால் இலாபம் குறையலாம். பணியாளர்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். பெண்கள் குடும்பநலனில் ஆர்வம் கொள்வர்.



## விருச்சிகம்

சூரியன், புதன், செவ்வாய், கேது தாராள நற்பலன் வழங்குவர். உங்களின் சிறு பணியும் நேர்த்தியாக அமையும். தாய்வழி உறவினர்கள் மதித்து சொந்தம் பாராட்டுவர். புத்திரர்களின் விருப்பம் அறிந்து செயல்படுவது நல்லது. குடும்ப செலவுக்கான பணம் தாராளமாக கிடைக்கும் .எதிர்ப்பாளர் சொந்த சிரமங்களால் விலகுவர் .உடல் ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் ஆர்வம் மிகுந்த செயல் குளறுபடியாகலாம். வீட்டில் ஒற்றுமையை பேணுவதில் அக்கறை தேவை. தொழில், வியாபாரத்தில் இடையூறு நீங்கி வளர்ச்சி அதிகரிக்கும். சேமிப்பு கூடும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர்.



## மகரம்

சந்திரன், புதன், சுக்கிரனால் நன்மை கூடும். மனஉறுதியுடன் அன்றாடப்பணிகளில் ஈடுபடுவீர்கள். புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி வருமானத்தை பெருக்குவீர்கள். உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து கூடும். புத்திரர் நல்ல செயல்களால் பெற்றோர்க்கு பெருமை சேர்ப்பர். எதிர்ப்பாளர் சொந்த பணிகளில் கவனம் கொள்வர். மனைவி குடும்ப ஒற்றுமையை பாதுகாப்பார். தொழிலில் உற்பத்தி விற்பனை செழித்து வளரும். லாபம் பன்மடங்கு கூடும். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பங்களை விருப்பமுடன் கற்பர். பெண்கள் செலவு செய்வதில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்புடன் நாட்டுநடப்பிலும் கவனம் செலுத்துவர்.



## மீனம்

செவ்வாய், சுக்கிரன், கேது தாராள நற்பலன் தருவர். மனதில் புத்துணர்வு பிறக்கும். திட்டமிட்ட பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். நண்பர் உங்களின் நற்செயல்களை பாராட்டிப் பேசுவார். புத்திரரின் தகுதி, திறமை வளர உதவுவீர்கள். பூர்வ புண்ணிய நற்பலன் வளர்ச்சிக்கு துணை நிற்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கருத்திணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படுவர். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறை பின்பற்றவும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் பொழுதுபோக்கு விளையாட்டுகளில் ஈடுபடுவர்.



## கும்பம்

பெரும்பான்மை கிரகங்கள் வியத்தகு அளவில் நற்பலன் வழங்குவர். குடும்பத்துக்கான பணத்தேவை திருப்திகர அளவில் கிடைக்கும். தம்பி தங்கை சொந்த பணிகளில் கவனம் கொள்வர். வீட்டில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். புத்திரரிடம் அதிருப்தி எண்ணங்கள் விலகி பாசம் மேலோங்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு உண்டாகும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். சுற்றுலா சென்றுவர திட்டமிடுவீர்கள். மனைவியின் கருத்துக்களில் உள்ள நியாயங்களை மதித்து ஏற்றுக் கொள்வீர்கள். தொழிலில் உள்ள அனுகூலங்களை பாதுகாப்பது நல்லது. பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பறவும். பெண்கள் தாய் வீட்டுக்கு தேவையான உதவி செய்வர்.

கவிதை



எஸ்.பி.தீபகன்

# வாருங்கள் என் தேசம் காட்டுகிறேன்...!



கண்டம் கடந்து என் தேசம் காண
வந்தவர்களே!
வாருங்கள்! எரியுண்ட என் தேசம்
காட்டுகிறேன்

ஐரோப்பாவில் இருந்து நீங்கள்
ஐ போனில் தானே அவலம் கண்டீர்?

வாருங்கள் வவுனியா தாண்டி
வடக்கே செல்வோம்...!
நாடக மேடை போலிருப்பது
நாடகங்கள் நடந்து முடிந்த ஓமந்தை
தானிது
மாங்குளம் தான் இந்த இடம் நீங்கள்
மாதவனின் படத்தில்
பார்த்திருப்பீர்கள்!
அடர்ந்த காடுகள் சில தாண்டி
அடுத்து வந்தது முருகண்டி
அப்பனே பிள்ளையாரே!
கட்டடங்கள் கடைகள் கண்ணுக்குத்
தெரிகிறதா...?
இதுதான் எம் தலைநகர்.
கந்தசாமியைக் கும்பிட்டுக்

கடைக்கண்ணால் பார்த்தீர்களா?
கணவனை, மகனைக்
காணவில்லை என்று
காணாமலாக்கப்பட்டவர்களின்
உறவுகள்

பார்த்துச் சலித்து விட்டதால்
பகிடியாகிப்போய்விட்டது பலருக்கு
நீங்களும் ஒரு தடைவ பார்த்துவிட்டு
வாருங்கள்
அரசியல்வாதிகளும் மறந்து
விட்டார்கள் இவர்களின்
இருப்பிடம் இதுதான் என்றெண்ணி
எட்டிக் கடக்கிறார்கள்

பரந்தன் தாண்டிப் பக்குவமாய்ச்
செல்வோம் பல கதைகள்
இனித்தான்...

தர்மபுரம், விசுவமடு தாண்டி
வந்துவிட்டோம்
இதுதான் முள்ளிவாய்க்கால்
முனகல் சத்தம் கேட்கின்றதா?

மூச்சிழுத்து விடாதீர்கள்
உங்கள் நுரையீரல் செல்களுக்குள்
கந்தகம் கலந்த காற்றுப் புகுந்துவிடும்

இவ்விடம் தான் இரக்கமின்றி
எம்மவரைக் கொன்ற இடம்
இங்கிருந்த கொட்டகைகளில்தான்
சமையல் சத்தம் ஸ்தம்பித்து
சாவு ஓலம் தலைவிரித்தாடியது

கசாப்புக் கடைகளைவிட மலிவாய்
கண்ட இடங்களில் எல்லாம்
பிணக்குவியல் கொண்ட இடம்
கட்டிய கணவன் கண்முன்னே சிதையுண்ட
கைங்காரியம் நிகழ்ந்த இடம்
கட்டியணைத்துக் கதறியழக்கூட
கையில்லாமல் போன இடம்

மிதித்து நடவாதீர் புதைந்த
என் தங்கையின் என்பு முறிந்துவிடக்கூடும்

புதினமாகப் பார்க்காதீர் புத்தகப்பையுடன்
என் தம்பி புதையுண்ட இடத்தை

எலும்புக் கூடுகட்கும் ஏரிகட்கும் எத்தனை
கதை தெரியும்?

இதயம் கனந்தாலும் இருந்து விடாதீர்கள்
என்புகள் குத்தும்

இங்கு தான்... இவ்விடம் தான்
இறந்த தாயில் பால் குடித்தது குழந்தை
இணையத்தில் பார்க்கவில்லையா?

முச்சக்கர வண்டி ஒன்று மூன்று தேங்காய்க்காக
இங்கு தான் பண்டப் பரிவர்த்தனையானது

கஞ்சிக்கு அழுது கையை நீட்டிய குழந்தைகளின்
கழுத்துப் போனது இவ்விடத்தில்தான்
ஓலமிட்ட உறவுகட்கு உதவி செய்யப்போய்ப்பலர்
உயிரற்றுக் கிடந்தது... அதோ அவ்விடம்

எல்லைகள் குறுக
எங்கென்று தெரியாமல் ஓடினோம்
பார்வைகள் பசியால் வற்றின
கால்கள் தடுமாறின
தறிக்கப்பட்டன

எங்களுக்காய்க் குரல் கொடுங்கள்
என்று அழுதோம் காப்பாற்றுங்கள்
என்று சொல்லிக் கதறினோம்...

யாருக்கும் கேட்கவில்லை
நம் சென்னீரும் உங்கள் கண்ணீரும்
தனக்கு வந்தால்தானே தெரியும் தலையிடியும்
காய்ச்சலும்

இறைவனை நம்புகிறவர்கள்
ஒரு கணம் வேண்டுங்கள்
இன்னொரு முறை
இப்படி நடக்கக்கூடாதென்று

குமரிக்கண்டத்தின் மிச்சமாயிருந்து
குடியோடு புதைக்கப்பட்ட தேசமிது...

கவிதை



நேதாமோகன்

# குமுதினி




ஒரு கிராமத்தின் கனவுகளை
சமுத்திரத்துக்குள் புதைத்த நாள்

நெடுந்தீவே
அழுத நாள்

சிறகுகள் இழந்த
விட்டில்களாகவும்
குரல்வளை நெரிக்கப்பட்ட
கோழிக்குஞ்சுகளாகவும்
பதைபதைத்தோம்

இங்குதான் புத்தனே...
உன் பக்தர்கள் ஆனந்தப்
பரவசத்தை
பயணிகள் மீது ஆடினார்கள்

கத்தினோம், கதறினோம்
திசைகள் உடைந்தன
வானம் கிளிந்தது
விட்டுப்போகவில்லையே....
எல்லோரையும் வெட்டித்தான்
போனார்கள்

சமுத்திரம் தாண்டி
நகரம் புறப்பட்ட மக்களை

கற்களும் கண்ணீர்
சிந்திய நாள் அது...
அன்று நடுக்கடலில்
வைத்து
குருதியும், சதையுமாக
தின்று தீர்த்தனர்
இந்நாட்டின் வீரர்கள்

சிங்கம் குட்டி ஈன்றாலும்
குட்டி குடிக்கக் குருதி
கொடுப்பதில்லை
இந்தச் சிங்களங்கள் எம்
குருதி குடித்துக்
குதூகலித்தனர்

புறாவின் நிறைக்குச்
சமமாக
தன் தசைகொடுத்த
சிபியின்
வம்சமல்லாவா தமிழன்
ஏராளமாய்க்
கொடுத்தோம்
மனிதமாமிசம்
உண்ணும்
இந்த நாட்டு
மன்னர்களுக்கு

கற்களுக்குள் குடியிருக்கும்
உயிர்கள்
கலைந்துவிடுமென்றெண்ணி
கற்களைக்கூடப் புரட்டாதவர்கள்
இந்தக் கிராமத்து மனிதர்கள்

கனவுகளோடு போன
பயணிகளையும், படகையும்
குருதிச் சேற்றுக்குள்
புதைத்து விட்டார்களே....
மறக்கவில்லை இந்த நாடு

ஒவ்வொரு மனக்கண்ணும்
நகக்கண்களும்கூட
கண்ணீர்விடும் நாள்

உறவுகளே
உங்களுக்காக
அழுவதற்கும்,
உங்களைத்
தொழுவதற்குமான
சுதந்திரத்துக்கு விலங்கு

போடப்பட்டுள்ளது

அந்தக் கறுத்துப்போன
வைகறையில்
சிந்தப்பட்ட
கண்ணீருக்கும்
சிதறப்பட்ட குருதிக்கும்
ஒரேயொரு நிமிடம்
எங்கள் கண்கள்
மூடட்டும்.

கவிதை



சி.சிவசேகரன்

# காணாமலாக்கப்பட்ட கதை

கதை - 2

என்னை யாரோதேடிக்
கொண்டிருக்கிறார்கள்.. என்
அடையாளங்களையும்
நினைவுகளையும் ஏந்தியபடியே
அவர்கள் என்னைத்
தேடிக்கொண்டிருக்கலாம்...
தலையாட்டிசொன்ன பொய்க்கு
இரையாகிப்போனவன் நான்..
மறுவார்த்தை பேசக்கூட அனுமதியில்லை
எனக்கு.. என் அம்மையை..
என் அப்பனை.. என்
அக்காளை.. எல்லோரையும்
இனி நான் எப்பிறப்பில்
காண்பேனென்று
ஏங்கிக்கொண்டிருக்க



என் அடையாளங்களை
அவர்கள் சங்கேத மொழியில்
பங்கிட்டுக்கொண்டிருக்கிறார்கள்...

நிணம் ஊறி நாறி மணக்கும் சாக்கொன்று
என் முகத்தை மூட
எட்டி மிதித்த சப்பாத்துக்காலின் வலியை
வாங்கிக்கொண்டு
எங்கோ போகிறேன்... எங்கோ...

கண்திறந்துகொண்டே
உண்மை சொல்லாத தேசத்தில்
கறுப்பால் மூடிய தலையாட்டி என்ன சொல்வான்
பாவம் அவன்.. இன்னோரு தலையாட்டுக்காய்த்
தயாராகிக்கொண்டிருக்கிறான்.

கட்டுரை



ப.குமுதன்



# போருமில்லை...! அமைதியுமில்லை..

மே - 18. விடுதலைப் போராட்டமும் விடுதலையை விரும்பிய மக்களின் விருப்புகளும் முள்ளி வாய்க்கால் எனும் தேசத்தில் குருதி தோய்ந்து மண்ணுடன் புதையுண்ட நாள். மிகப்பெரும் மனிதப் பேரவலம் அரங்கேறிய நாள். 50 வருடங்களுக்கு மேலாக அரசியல் ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய தமிழ் மக்களின் போராட்டங்கள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்ட நாள். பச்சிளம் குழந்தைகள் முதல் வயது வேறுபாடின்றி வகை தொகையாகக் கொன்றொழிக்கப்பட்டதும், உடற்பாகங்கள் பறிக்கப்பட்டதும், காணாமலாக்கப்பட்டதுமான கொடூரங்கள் அரங்கேறி இன்றைக்கு 9வருடங்கள் கடந்து விட்டன. வடக்குக் கிழக்கு மண் எங்கும் இப்போது குண்டுச் சத்தங்கள் கேட்பதில்லை ஆனால், அமைதி பிறக்கவில்லை?

தமிழ்ச் சமூகம் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வளர வேண்டிய தேவையை ஒவ்வொரு ஆண்டுகளும் எடுத்தியம்புகின்றன. நாம் அழிவுகளை விரும்பா விட்டாலும் அவை எம்மீது திணிக்கப்பட்டவை. சமத்துவமும் சமஉரிமையும் கிடைக்க வேண்டி அறவழியிலும், அது முடியாமல்போக ஆயுத வழியிலும் போராடியதைத் தவிரத் தமிழர்கள் வேறெந்தத் தவறும் செய்யவில்லையே...?

**போர்ச் சூழலும் அழிவும்**

கழுகுகளின் வேட்டை முள்ளி வாய்க்காலில் முற்றுப் பெற்றது. யாருமே எண்ணிப்பார்க்க முடியாத, வார்த்தைகளால் வர்ணிக்கப்பட முடியாத, உக்கிரமான தாக்குதல்களால் முள்ளிவாய்க்கால் அதிர்ந்து பிளந்ததை அகப்பட்டவர்களால் ஒருபோதும் மறக்க முடியாது. பன்னாட்டு மனிதாபிமான நிறுவனங்களை வெளியே அகற்றி விட்டு இலட்சக்கணக்கான மக்களைச் சிறிய பகுதிக்குள் ஒதுக்கிக் கடுமையாகத் தாக்கினார்கள். உணவு, மருந்து, இருக்க இடம் இல்லாமல் அலைந்து திரிந்ததைத் கை, கட்டி வேடிக்கை பார்த்திருந்தன பன்னாடுகளும்,பிராந்திய சக்திகளும்.வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் சுடப்பட்டார்கள், தடைசெய்யப்பட்ட ஆயுதங்களும், வெடி பொருள்களும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன பெண்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.பாதுகாப்பு வலயங்கள் என்று அரசால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் போர் வெறி கோரத் தாண்டவம் ஆடியது. ஆயிரக்கணக்கில் அப்பாவிகள் கொல்லபட்டார்கள் பலர் அங்கவீனர்களாக்கப்பட்டார்கள். உயிர்களையும் உடமைகளையும் இழந்து நடைபிணமாக நின்றிருந்த ஏதிலிகளை முட்கம்பிகளுக்குள்ளே அடைத்து வைத்து மனிதாபிமானத்துக்கு சபால் விடுக்கும் செயலை மீண்டும் அரங்கேற்றியது இலங்கை அரசு. வருகிற வழியில் ஓமந்தை சோதனை சாவடியில் வைத்து புலிகளில் இருந்தவர்களைப் புறம்பாக அழைத்து பேருந்துகளில் ஏற்றி சென்றது டன் அவர்களில் பலர் இன்றுவரை மீண்டு வராத நிலைமைகளையும் போர்ச்சூழல் தந்து விட்டு சென்றிருக்கிறது.

**போருக்குப் பிந்திய அமைதி ...?**

அழிவுகள் அனைத்தும் அரங்கேறி ஆண்டுகள் கடந்து விட்டாலும் போருக்குப் பின்னரான அமைதி என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. காணாமல் ஆக்கப்பட்டோர் கண்டறியப்படவில்லை. அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. காணிகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. மீள் குடியேற்றம், உட்கட்டுமானம் எனப் பட்டியல்களின் எண்ணிக்கை நீண்டு கொண்டே செல்கிறது. இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட தமது உறவுகளைத் தேடி இன்றும் வீதி ஓரங்களில் ஓர் ஆண்டுக்கும் மேலாகப் போராட்டம் மேற்கொண்டு வரும் மக்களின் உள்ளக் குமுறல்களை ஏறெடுத்து பார்க்க அரசு தவறிவிட்டது. இவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை எந்தத் தரப்பினரும் மேற்கொள்ளாமல் இருப்பது மிகப்பெரிய மனித உரிமை மீறலாகவே கருத வேண்டியுள்ளது. அதுபோலவே அரசியல் கைதிகள் விடயமும், பல ஆண்டு காலமாகச் சிறைகளுக்குள்ளே முடங்கிக் கிடக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது தொடர்கதையாகவே காணப்படுகிறது. வாழ்க்கையின் பெரும்பகுதியைச் சிறைகளுக்குள்ளே கழித்து விட்டார்கள். பல வருடங்களாக வழக்குகள் தாக்கல் செய்யப்படாமல் அவர்கள் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் இருப்பது நாட்டினுடைய சட்ட ஆட்சிக்குச் சவால் விடுக்கும் விடயமே.இலங்கையில் சட்டம் என்பது வெறும் புத்தக வடிவிலேயே இருக்கிறது என்பதை இது எடுத்து காட்டுகிறது. மேலும் தமது பூர்விகக் காணிகளை மீட்கும் முகமாக கேப்பாபிலவு, இரணைதீவு போன்றபல இடங்களில் மக்கள் போராடி வருகிறார்கள். அத்துடன் இடம்பெயர்ந்த மக்களுடைய மீள் குடியேற்றத்தில் முன்னேற்றம் இல்லை. மேலே கூறிய பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. போருக்குப் பின்னரான அமைதி நிலையை இப்போது பாதிக்கப்பட்டவர்களின் குரல்களால் ஆக்கிரமித்துநிற்கின்றன. ஆக, போர் ஓய்ந்திருக்கிறதே தவிர அமைதி இன்னமும் கிட்ட வில்லை.

> கழுகுகளின் வேட்டை முள்ளி வாய்க்காலில் முற்றுப் பெற்றது. யாருமே எண்ணிப் பார்க்க முடியாத, வார்த்தைகளால் வர்ணிக்கப் பட முடியாத, உக்கிரமான தாக்குதல்களால் முள்ளிவாய்க்கால் அதிர்ந்து பிளந்ததை அகப்பட்டவர்களால் ஒருபோதம் மறக்க முடியாது. பன்னாட்டு மனிதாபிமான நிறுவனங்களை வெளியே அகற்றி விட்டு இலட்சக் கணக்கான மக்களைச் சிறிய பகுதிக்குள் ஒதுக்கிக் கடுமையாகத் தாக்கினார்கள்.

**பாதிக்கப்பட்டவர்களுக்கு விடிவு கிட்டவில்லை**

முன்னாள் போராளி ஒருவர் கூறும்பொழுது எனது தாய், தந்தையர் இறுதிப்போரின்போது கொல்லப்பட்டு விட்டனர். இரண்டு அண்ணாவும் ஓர் அக்காவும் விடுதலைப் புலிகளில் இருந்து மாவீரர்களானவர்கள். போருக்குப் பின்னர் என்னைப் பூசா தடுப்பு முகாமுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு என்னைப் பலவாறாக சித்திரவதை செய்தனர். உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் கடுமையாக பாதிக்கப்பட்டு இருந்தேன். 2017ஆம் ஆண்டளவில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டேன். இப்பொழுது தன்னிச்சையாக நடக்க முடியாமல் இருக்கும் ஒரு மாற்றுத் திறனாளியாக ஆக்கிவிட்டார்கள். அத்துடன் எனது 86வயது அம்மம்மா மற்றும் அம்மப்பாவையும் நானே கவனித்துக்கொள்ள வேண்டியுள்ளது. அதனால் பொருளாதார ரீதியாகப் பல பிரச்சினைகளைச் சந்திக்கின்றேன் முல்லைத்தீவு வற்றாப்பளையில் உள்ள எனது 4ஏக்கர் காணியை இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ளதுடன் என்னிடம் தர மறுக்கின்றது. என்னைப்போன்ற பலர் இன்று ஒரு நாள் உணவைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத அவல நிலையிலிருக்கிறார்கள் என்று ஆதங்கப்படுகிறார். இவருடைய நிலை, போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் விடிவு கிட்டவில்லை என்பதற்கு ஓர் உதாரணம்.

**அரசின் மெத்தனப்போக்கு**

போர் நிறைவுற்ற பின்னர் இலங்கை அரசு நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றே அனைவரும் எதிர்பார்த்தார்கள், ஆனால் நிலைமையோ தலைகீழ் ஆகி விட்டது. வடக்கில் கட்டடங்கள் உயர்ந்த அளவுக்கு மக்களின் வாழ்வு உயரவில்லை. இன ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டிய அரசு தமிழர் விரோத செயற்பாடுகளை முடுக்கி விட்டது. அதன் முதல் பகுதியாகத் தமிழர் பகுதிகளான மணலாறு, கொக்குத்தொடுவாய், நெடுங்கேணி போன்ற இடங்களில் சிங்களக் குடியேற்றங்களைப் பரவலாக்கியது. அதிமான இராணுவத்தை வடக்கில் நிலை நிறுத்தி விட்டு மக்களின் அன்றாட விடயங்களில் தலையிடுவதுடன் ஆங்காங்கே பௌத்த கோவில்களையும் இராணுவப் பாதுகாப்புடன் அமைத்து வருகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. போரால் விதவைகளாக்கப்பட்ட 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மீது கரிசனை காட்டவில்லை. மீள் கட்டுமானம் புனர்வாழ்வு போன்ற விடயங்களில் அரசு இதய சுத்தியுடன் நடந்து கொள்ளவில்லை. கொடிய போரை நடத்திய மகிந்த ஆட்சிக்காலத்திலும் சரி 'நல்லாட்சி' அரசு என்று கூறிக்கொள்ளும் மைத்திரி ரணில், ஆட்சியிலும் சரி நிலைமை ஒன்றாகத் தான் இருக்கிறது. அப்போது சத்தங்கள் கேட்ட போராக இருந்தது. இப்போது சத்தம் இல்லாத போராகிவிட்டது. இது செயற்பாட்டு மாற்றத்தை விரும்பிய மக்களுக்கு ஏமாற்றமாகவே மாறியுள்ளது.

ஆயுதப் போர் முடிவுற்றாலும் மக்களுடைய வாழ்கதலுக்கான போர் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வடக்கைப் பொறுத்தவரை இன்று பல்வேறு சமூகப் பிரச்சனைகள் தலையெடுத்திருக்கின்றன. தற்கொலைகள், வறுமை அனைத்துக்கும் காரணமாக இருப்பது போரே. புலிகள் காலத்தில் சுதந்திரமாகத் தொழில் செய்து வாழ்ந்த மக்கள் இன்று அனைத்துக்கும் இன்னொருவரை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையிலும் வர இருக்கின்ற ஒன்பதாவது வருடத்துக்குரிய 'மே 18' நினைவேந்தல் நிகழ்வை யார் நடாத்துவது என்ற வார்த்தைப் போரையும் ஆரம்பித்து விட்டோம். இத்தனை அழிவுகள், படிப்பினைகளுக்கு மத்தியிலும் நாம் ஒன்றுபடத் தயாரில்லை. 30வருடகாலப் போர் முற்றுப்பெற்று விட்டது, ஆனால் அமைதி...? இன்னமும் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது.



# அரசின் வீண் செலவுகளை ஈடுசெய்யவே எரிபொருள் விலை அதிகரிப்பு

## மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு,மே13 எரிபொருள்களுக்கு விதிக்கும் வரியைக் குறைத்து மக்களுக்கு உதவி வழங்குவதை விடுத்து, அரசு எரிபொருள்களின் விலைகளை அதிகரித்தமை அநீதியானது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

அரசு அரசமைப்பை மீறி கூடுதலான அமைச்சர்களைக்கொண்டுள்ளது. இதற்கான செலவுகளைக் குறைக்காமல் மக்கள் மீது வரிகளைச் சுமத்தியும் வருகிறது.

பெற்றோல் லீற்றருக்கு அரசு 45 ரூபா வரி அறவிடுகிறது. டீசல் லீற்றருக்கு 24 ரூபா வீதம் வரி அறவிடப்படுகிறது. இவ்வாறு அறவிடப்படும் வரிகளைக் குறைத்து மக்களுக்கு உதவிகளை வழங்க முடியும்.

உலகசந்தையில் எரிபொருளின் விலை உயர்ந்துள்ளது என்ற காரணங்களைக் காண்பித்தே எரிபொருள்களின் விலைகளை அரசு அதிகரித்துள்ளது.

எனினும், எரிபொருள்களுக்கு அரசு விதிக்கும் அதிக வரி குறித்து எதுவும் கூறுவதில்லை. பெற்றோல் லீற்றருக்கு 45 ரூபா வரி விதிக்கப்படுகிறது. இந்த வரியை 35 ரூபாவாகக் குறைப்பதால் திறைசேரி ஒன்றும் இழப்பைச் சந்தித்து விடாது- என்றார். (5)












அசுர சக்தி
- 4SPCR 3.0L BS-IV எஞ்சின்
- 85 HP குதிரை வலு 250Nm Torque

அதிக சௌகரியம்
- தரை மட்டத்திலிருந்து 210mm உயரம்
- பவர் ஸ்டியரிங்

அசுர பலம்
- 30% ஏற்றம் ஏறும் திறன்
- 16" ரேடியல் டயர்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

dimo TECHNOLOGY
DIESEL & MOTOR ENGINEERING PLC
www.dimolanka.com/vehicle/tata
www.facebook.com/TataMotorsSriLanka
0779 117 154




மே 1 முதல் ஜூலை 31 வரை எல் பீ தங்கக் கடன்
சேவையுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் சகலருக்கும்
தங்க நாணயங்கள் 120 ஐ வெல்லும் வாய்ப்பு

L B FINANCE தங்கக் கடன்

பவுண் ஒன்றுக்கு ரூ.50,000/-
உயர் முற்பணம்

சுதர்சன் - 0774 361 833
ரதன் - 0773 067 619
தர்மி - 0776 889 108
விமல் - 0773 242 567

WP/GT/5042

உடனடி அழைப்புகள் 0112 200 200
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. www.lbfinance.com
L B FINANCE

# மட்ரிட் தரும் அதிர்ச்சிகள்!



ஸ்பெய்னின் மட்ரிட் நகரில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடர் ஒன்று மாறி மற்றொன்றாக கடும் அதிர்ச்சிகளை வழங்கி வருகிறது.

இந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான முன்னாயத் தொடர்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது ஸ்பெய்னின் மட்ரிட் நகரில் நடைபெற்றுவரும் தொடர். முன்னணி வீரர்கள், வீராங்கனைகள், ரென்னிஸ் ஆர்வலர்கள் என்று அனைத்துத் தரப்பினருக்கும் பெரும் அதிர்ச்சியைத் தரும்வகையிலேயே இந்தத் தொடர் அமைந்துள்ளது.

மட்ரிட் தொடரில் நேர் செற் வெற்றிகளுடன் காலிறுதிக்குத் தகுதி பெற்றிருந்தார் ரஷ்ய வீராங்கனை செரபோவா. இதனால் அவர் இந்தத் தொடரில் பெரியளவில் சாதிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அவர் காலிறுதி ஆட்டத்துடன் வெளியேற்றப்பட்டார். அதிலும் தரவரிசையில் முதல் 50 இடங்களுக்குள் இல்லாத வீராங்கனையிடத்தில் தோல்வியடைந்து வெளியேறினார் அவர். ஊக்கமருந்துச் சோதனையில் சிக்கி தடை பெற்ற பின்னர் மீண்டும் களமிறங்கியுள்ள செரபோவா, இன்னும் ஒரு முக்கியத் தொடரையேனும் கைப்பற்றவில்லை. இதனால் அவர் மட்ரிட் தொடரையாவது கைப்பற்றுவாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. எனினும் மீண்டும் ஏமாற்றியுள்ளார் செரபோவா.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவர் நடால். முன்னதாக முடிவடைந்த களிமண் தரைத் தொடரான பார்சிலோனா தொடரில் நடால் சம்பியனானார். மட்ரிட் தொடரும் களிமண் தரைத் தொடர். எனவே இந்தத் தொடரிலும் நடாலின் ஆதிக்கம் நீண்டு நிலைபெறும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. எனினும் காலிறுதியின் டொமினிக் திய்மிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார் நடால்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான கேலப்பும் தொடரில் இருந்து வெளியேறியுள்ளார். மட்ரிட் தொடர் ஆரம்பமாகும் முன்னர் கிண்ணம் வெல்லும் நம்பிக்கையை மிகையாக வெளிப்படுத்தியிருந்தவரான கேலப்பின் வெளியேற்றமும் பெரும் அதிர்ச்சியே.

கடந்த வருடத்தின் மத்திய பகுதியில் இருந்து தொடர்ச்சியாக சறுக்கலைச் சந்தித்து வருபவரான ஜோகோவிக்கும் மட்ரிட் தொடரில் ஏமாற்றியுள்ளார். மீண்டும் முதலிட சிம்மாசனத்தை அவர் வலுவாகவே இலக்கு வைக்கிறார். ஆன போதிலும் அவர் அடுத்தடுத்து சறுக்கவே செய்கிறார். இதனால் முதலிடம் என்பது ஜோகோவிக்குக்கு நெடுந்தூரத்தில் உள்ளது.

# கப்டன் 'ஹொட்'

பிரகாஸ்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் டோனியின் ஆட்டம் நம்பமுடியாத வகையில் மெருகேறியுள்ளது. ஒவ்வொரு ஆட்டத்திலும் தவறாது துடுப்பாட்டத்தில் தன்னை நிரூபித்துவரும் அவர் தலைமைத்துவம் என்று பார்க்கையில் கடந்த பத்து வருடங்களாக இருந்த 'கூலை' தற்போது இழந்து வருகிறாரா என்று எண்ணத் தோன்றுகிறது.

'கப்டன் கூல்' என்று பெயரெடுத்துள்ள டோனி இந்த வருட ஐ.பி.எல். தொடரில் அடிக்கடி உணர்ச்சிவசப்படுகிறார், கோபம் கொள்கிறார், பந்தைத் தூக்கி எறிகிறார், வீரர்களைப் பார்த்து மொறைக்கிறார், எந்த வீரரிலாவது தனக்கு அதிருப்தி ஏற்பட்டால்



மைதானத்திலேயே தனது அதிருப்தியைத் தெரிவித்து விடுகிறார். துடுப்பாட்ட வரிசையை பிற்போக்குத் தனமாக மாற்றுகிறார், பந்துவீச்சு வரிசையில் குழம்புகிறார், தலைமைத்துவத்திவலும் சில தவறுகளைச் செய்துவிடுகிறார். தலைமைத்துவத்தில் கோக்லி டோனியைப் பின்பற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் இருக்க டோனி, கோக்லியைப் பின்பற்றி விட்டாரா என்ற எண்ணம் எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற ஐ.பி.எல். ஆட்டத்தில் சென்னை அணி 176 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் ஒரு பந்து மீதமிருக்க வெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களைச் சேர்த்து ஒரு வீரராக தன்னை நிரூபித்த டோனி தலைமைத்துவத்தில் தோல்வியடைந்தார். அதுவும் படுதோல்வி. சென்னை அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது 13ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தில் ஆட்டமிழந்தார் ரெய்னா. 7 பந்துப்பரிமாற்றங்கள் எஞ்சியிருந்தன. பிரவோ தற்போது ஆகச் சிறந்த திறனில் உள்ளார். ஆனால் அவரைக் களமிறக்காமல் பில்லிங்ஸைக் களமிறக்கினார் டோனி. கடந்த இரண்டு ஆட்டங்களில் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இடம்பிடிக்காத பில்லிங்ஸுக்கு வாய்ப்பளித்து பிராவோவைப் புறக்கணித்திருக்கக்கூடாது. பிராவோ முதலில் இறங்கி ஆட்டமிழந்திருந்தாலும் பில்லிங்ஸ், ஜடேயா வில்லி என ஏனைய மூவரும் ஆட்டத்தை சிறப்பாக முடித்திருப்பார்கள். ஆனால் பில்லிங்ஸ் 22 பந்துகளில் 27 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். ஆக, இது டோனியின் முதலாவது தவறு.

ராஜஸ்தான் ஆடுகளம் சுழலுக்குச் சாதகமானதாக இருக்கையில், அனுபவ வீரராக தாகிரைப் புறக்கணித்து கரண் சர்மாவை டோனி விளையாடும் பதினொருவரில் கொண்டுவந்தது டோனி செய்த இரண்டாவது தவறு. அதிலும் கரண் சர்மாவுக்கு ஒரு பந்துப்பரிமாற்றத்தை மட்டும் வீசக்கொடுத்து, வேகப்பந்து வீச்சாளர் வில்லிக்கு 4 பந்துப்பரிமாற்றங்களைக் கொடுத்து அவர் மூலமாக 47 ஓட்டங்களை வாரி வழங்கிமை அபத்தம்.




ஆரம்ப வீரராகக் களமிறங்பிய பட்லர் ஒரு முனையில் நெருப்பாட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கையில், முதல் 15 பந்துப்பரிமாற்றங்கள் வரையில் அனுபவ வீரர் வற்சனை பட்லருக்கு எதிராகப் பயன்படுத்தாமை டோனி செய்த மூன்றாவது தவறு. அது இமாலயத் தவறும்கூட.

அதேபோல் இறுதி இரண்டு பந்துப்பரிமாற்றங் களில் 28 ஓட்டங்கள் ராஜஸ்தானின் வெற்றிக்குத் தேவை என்ற நிலையில், தான் வீசிய முதல் மூன்று பந்துப்பரிமாற்றங்களில் ஓட்டங்களை வாரிவழங்கியவரான வில்லியிடம் 19ஆவது பந்துப் பரிமாற்றத்தை ஒப்படைத்தமை டோனியின் நான்காவது தவறு.

இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 12 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பிராவோ பந்துவீச அழைக்கப்பட்டார். பிராவே மாற்றுவேகப் பந்துகளை வீசுவதில் வல்லவர். மாற்றுவேகப் பந்துவீச்சுக்கள் தவறாகக் கணிக்கப்பட்டால் அது மேலெழும்பும். இவ்வாறான நிலையில் டோனி 'பவர் பிளே' வட்டத்தில் இரண்டு களத்தடுப்பாளர்களையாவது நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. இதனால் பட்லரை வீழ்த்தும் வாய்ப்பும் சென்னைக்கு இல்லாமல் போனது. பட்லரின் பிடியெடுப்பு ஒன்றையும் டோனி தவறவிட்டிருந்தார். ஆக, சென்னை தோற்கடிக்கப்படவில்லை. அது தானாகத் தோற்றது. தனது தலையில் தானே மண்ணைப் போடும் வித்தயை சென்னையும் கற்று வைத்துள்ளது. அப்படியே பெங்களூரைப்போன்று.

அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்கையில் ஒரு கேள்வி எழுவது இயல்பானதாகிறது. 'டோனி தற்போதும் கப்டன் கூல்தானா?' என்பதே அது.



# அம்மா...

கட்டுரை

ஈழத்தமிழ்மணி

அன்னையர் தினமென்பது பத்துமாதம்சுமந்துபெற்ற தாயை ஒவ்வொருவரும் மதிப்பளித்து அகமகிழவும் மரியாதை செலுத்தி மதிப்புறுத்தும் நாளாக அமைய வேண்டும். அன்னையின் அன்புக்கு ஈடிணை இந்த உலகில் எதுவுமே இல்லை. அன்பு, கருணை,பாசம்என்றுஅனைத்தின் உறைவிடமே அன்னைதானே. எனினும்அகிலத்தில்ஒருபகுதியினர் அன்னையின் தியாகங்கள் பற்றிச் சிந்திப்பதாக இல்லை.

**அமெரிக்காவே உருவாக்கியது**

உலகளாவிய ரீதியில் அன்னையைப் போற்றுகின்ற வகையில் கொண்டாடப்படுகின்றநாளைஅமெரிக்காவேஉருவாக்கியது.அனாஜார்விஸ் என்ற பெண் சமூக சேவகி அமெரிக்காவின்மேற்குவெஜினியா மாநிலத்தில் கிரப்டன் என்ற கிராமத்தில் வாழ்ந்தவர். அங்கு இடம்பெற்ற போரில்அமெரிக்கச்சிப்பாய்கள்சிலர் சாவடைந்தனர். சாவடைந்தவர்களின்குடும்பங்கள்சீரழிந்துபோயின அவர்கள் வெவ்வேறு இடங்களில் தஞ்சமடைந்தனர். அப்படி பிரிந்து சென்ற குடும்பங்களையெல்லாம் ஒன்று சேர்ப்பதற்காக இரவு பகலாகப் போராடியதடன் அவர்களது ஒற்றுமையைப் பேணவும் சமாதானத்துக்காகவும் கடுமையாக உழைத்த சமூக சேவகியான அனா ஜார்விஸ். தனதுபார்வையற்றமகளுடன்வாழ்நாள் முழுவதும்சமூகசேவகியாகவேவாழ்ந்து1904ஆம் ஆண்டு உயிரிழந்தார்.

பார்வையிழந்த அந்த மகள், தனது தாயாரின் நினைவாக அவர்களது ஊரில் அமைந்த நினைவிடத்தில் 1908ஆம் ஆண்டு மே மாததத்தின் சிறப்பு வழிபாடுஒன்றைநடத்தினார். தனதுதாயார்விட்டுச் சென்ற சமூக சேவையைத் தொடர முடிவெடுத்தார். தனது சொந்த இடத்திலிருந்து வெளியேறி 1913ஆம் ஆண்டு பென்சில் வேனியா மாநிலத்தில் குடியேறினார். சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டார். அனைவரும்தத்தமதுஅன்னையரைமதிப்புறுத்தவேண்டும் என்றகோரிக்கையைவைத்தார். மாநிலஅரசானது அவருடைய கோரிக்கையைப் பரிசீலித்ததுடன் 1913ஆம் ஆண்டிலிருந்து அன்னையர் தினத்தை ஏற்றுக்கொள்வதாகஅறிவித்தது.இதையடுத்துஅமெரிக்க அதிபர் வில்சன் ஒவ்வொரு வருடமும் இரண்டாவது ஞாயிறு தினத்தில் அன்னையர் தினம் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவித்தார்.

**வர்த்தகத் தினமானது**

அமெரிக்காவைத் தொடர்ந்து கனடா அன்னையர்களுக்கான அங்கீகாரத்தை வழங்கியது. பின்னர் அடுத்தடுத்து 46 நாடுகள் அன்னையர் தினத்தை ஏற்றுக்கொண்டன. பின்னர் அன்னையர் தினம் என்பது வணிகத்துக்குரிய ஒரு தினமாக மாற்றம் பெறத் தொடங்கியது. எனினும் சமூக ஆர்வலர்களினது ஒன்றுபட்ட குரலால் அந்தத் தினம் ஓரளவு புனிதத் தன்மையுடன் இன்றும் பேணப்படுகிறது.

> அன்னைக்கு எங்களது சமூகம் எந்தளவு பெறுமதியைக்கொடுக்கிறது.இன்றையநவீனஉலகில் அன்னைக்கு கிடைக்கின்ற மதிப்புத்தான் என்ன? இன்றைய இளம் சமுதாயத்தின் மத்தியில் அன்னைக்குரிய மதிப்பு உயர்ந்து காணப்படுகின்றதா? இந்தக் கேள்விக்குரிய பதிலைத் தொலைத்தவர்களாக நாம் உள்ளோம். அதன் ஆத்மார்த்தத்தைஅடையத்தவிப்பவர்களாகவும் நாம் உள்ளோம். பத்து மாதம் கருவிலே தாங்கி, தாங்க முடியாத வேதனைகளையும், சோதனைகளையும் எதிர்கொண்டு கண்ணின் மணி போன்று காத்து வருகின்ற அன்னையானவள் தான் பெற்ற பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி சமூகத்தில், நாட்டில்நல்லதொருநற்பிரசையாக உருவாக்குவதில் அளப்பெரும் தியாகங்களை ஆற்றுகிறாள்.

**என்ன செய்கிறோம் நாம்?**

அன்னைக்கு எங்களது சமூகம் எந்தளவு பெறுமதியைக்கொடுக்கிறது. இன்றைய நவீன உலகில் அன்னைக்கு கிடைக்கின்ற மதிப்புத்தான் என்ன? இன்றையஇளம்சமுதாயத்தின்மத்தியில் அன்னைக்குரிய மதிப்பு உயர்ந்து காணப்படுகின்றதா? இந்தக் கேள்விக்குரிய பதிலைத் தொலைத்தவர்களாக நாம் உள்ளோம். அதன் ஆத்மார்த்தத்தை அடையத் தவிப்பவர்களாகவும் நாம் உள்ளோம். பத்து மாதம் கருவிலே தாங்கி, தாங்க முடியாதவேதனைகளையும், சோதனைகளையும் எதிர்கொண்டு கண்ணின் மணி போன்று காத்து வருகின்ற அன்னையானவள் தான் பெற்ற பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கிசமூகத்தில்,நாட்டில்நல்லதொருநற்பிரசையாக உருவாக்குவதில்அளப்பெரும்தியாகங்களை ஆற்றுகிறாள்.

ஆனால்,பத்துமாதம்சுமந்துபெற்ற அன்னை, அவர்களுக்கு இன்று பெரும் சுமையாகிவிடுகின்றாள். பெண் பிள்ளைகளும் அன்னையைப்புரிந்துகொள்ளுகின்றநிலையில்லை. அவர்களும் தமக்கென்றொரு வாழ்வு கிடைத்ததும் அன்னையானவளை இரண்டாம்பட்சமாகிவிடுகின்றனர். நம்மவர்மத்தியில் அன்னையானவள் ஏதாவது ஒரு பிள்ளையினது தயவில் வாழ வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றாள். மனப்பூர்வமான அன்புடன் அன்னையைப் பராமரிப்பதில்லை. வேண்டா வெறுப்பாக ஒதுக்கி விடுகின்றனர். பெற்ற அன்னையோ, தந்தையோ வேண்டாமெனக்கூறிவிட்டுசிலபிள்ளைகள் திருமணம் புரிந்ததுடன் நாட்டை விட்டுப் பறந்து விடுகின்றனர்.

**விதவைகளின் நிலை**

கணவனை இழந்த பல அன்னையர்கள்தாங்கள்பெற்றபிள்ளைகள் இறுதிவரை காப்பாற்றுவார்கள் என்றுநினைத்துகனவில்மிநத்திருக்கையில், அவளைப் பெருஞ்சுமையாக எண்ணி முதியோர் இல்லங்களில் சேர்த்த கொடூரங்களும் நிகழாமல் இல்லை. பெற்ற பிள்ளைகளில் பலர் முதியவர்களான நிலையில் தங்களை வயோதிப இல்லத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்கள் என்ற ஏக்கப் பெருமூச்சோடு பல அன்னையர்கள் மனவுழைச்சல்களுடன் தமது அன்றாடத்தைச் செலவிட்டு வருகின்றனர்.

இப்படிப்பட்ட நிலையில் பல பிள்ளைகள் இருந்தாலும் ஒரு பிரிவினர் அன்புகாட்டி உபசரித்து அன்னையின் தியாகத்தையுணர்ந்து அரவணைத்துகாக்கின்றவர்களாகவும்இருக்கவே செய்கின்றனர். சில முதியோர் இல்லங்களில் பிள்ளைகளால் பராமரிக்க முடியாத அன்னைமார்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தங்களுடையஉள்ளக்குமுறல்களைமனதுக்குள் அடக்கிவைத்துக்கொண்டுபெற்றபிள்ளைகள் இப்படிச் செய்துவிட்டனரே என்று தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கின்றனர் இப்படிப்பட்ட மனோ நிலை எங்கள் சமூகத்தில் மாற வேண்டும். அன்னையை மதிக்காவிட்டால் ஏற்றமில்லை என்கிற எண்ணவோட்டம் வர வேண்டும்.

அன்னையைப் போற்றுவதும், உயர்ந்திடுவதும் பிள்ளைகளுக்கு என்றுமே உயர்வைத்தரும். அன்னையின் கருணையும், ஆசியும் இறையருளுக்கு ஒப்பானது என்பதை யாவரும் புரிந்துகொண்டு இன்றைய அன்னையர் தினத்தைகொண்டாடி அன்னையர்களை மதிப்புறுத்தி நாமும் உயர்ந்திடுவோம்.







# இருத்தலுக்கு ஏங்கும் இதயம்...

நீர்த்துப்போன வாழ்க்கை
காய்ந்த தரையாய்ப் பிளந்து கிடக்கிறது
வெடிப்பின் ஊடாக
அக்கினிப் பெருமூச்சு
கொள்ளிவாய்ப் பிசாசாய்க் கொக்கரிக்க
அச்சத்தில் உறைந்த மனது
விட்டத்தில் இடம் தேடுகிறது...
இருப்பை முடிப்பதற்கு.

இருப்பதில் என்ன இலாபம்
நக்கலும் நையாண்டிகளும்
நரித்தனங்களும்
எரிக்கும் விழிகளும்
நொருக்கும் வார்த்தைகளும் ....
வேண்டாம்
சமூகச் சுவர் தாண்டிக் குதிக்கலாம்.

புத்தரைப்போல்
மூன்று காட்சிகள் தேவையா...?
முந்நூறு காட்சிகளுக்குள்
நான் மூழ்கிக் கிடக்கிறேன்.
பறவைக்குக் காட்டும் பரிவு கூட எனக்
கில்லை
மாதந்தோறும் நாடுவிட்டு நாடுவந்து
தீவு வெளிகளில் அவை திரிகின்றன
வதைத்தல் அவற்றுக்கில்லை
அவை இங்கு மீன்களை
வதைக்கின்றன.
நானும் ஒரு மீன்தான்.
ஒரே தாவலில் வெளியேறிவிடுவேன்
பெருவெளிக்கு அங்கு
எல்லையில்லை
என்னை யாரும் அசைக்க முடியாது
ஆனால் இங்கு நான் இருக்கிறேன்
எனவே யோசிக்கிறேன்.
பிறகு என்ன செய்வேன்.......!



கவிதை
நா.நவராஜ்

கட்டுரை
அ.அஜந்தன்

# சிறுவர்களுக்கு தீங்கு விளைவித்தலும் விளைவுகளும்

18 வயதுக்கு உட்பட்ட ஒவ்வொரு நபரையும் சிறுவர் என்கின்றோம். அத்துடன் இவர்கள் தங்களைத் தாங்களே கவனிக்க முடியாத வர்களும், உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் உள்ள பலவீனம் காரணமாகப் பிறரால் தவறாக வழிநடத்தப்படக்கூடிய, கையாளக்கூடியவர்களாகவும், அல்லது சுரண்டல் என்பவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.

குறிப்பாகச் சொல்லப்போனால் பெற்றோரிடம் அல்லது பெரியவர்களிடம் தங்கி வாழ்பவர்கள். பிள்ளைகள் யாவரும் தனி நபர்கள் என்ற முறையில் உரித்துடைய மனித உரிமைகள் சிறுவர் உரிமைகள் எனப்படுகிறது.; 1989 நவம்பர் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டு 1990 செப்டம்பர் 2 ஆம் திகதி நடைமுறைக்கு வந்த சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் சிறுவர்களின் 4 அடிப்படை உரிமைகள் தொடர்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

**1. உயிர்வாழும் உரிமை:** சிறுவர்கள் உயிர்வாழ்வதற்கும், அடிப்படைத்தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை.

**2. பாதுகாப்பு உரிமை:** சிறுவர்கள் அனைத்துவகையான புறக்கணிப்பு, தவறான கையாளுகை மற்றும் சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமை.

**3. மேம்பாட்டுக்கான உரிமை:** சிறுவர்கள் மேம்பாட்டுக்கான திறனை அடைவதற்கான உரிமை.

**4. பங்குபற்றும் உரிமை:** கருத்து வெளிப்பாட்டுக்கும், சிறுவரைப் பாதிக்கும் விடயங்களுக்கு எதிராகப் பங்குபற்றுவதற்கும், தகவல் பெறுவதற்கும் சிறுவர் ஒருங்கமைப்புக்கும் இணைந்து கொள்வதற்கான உரிமை.

அதே சமயம் சிறுவர்களைப் பாதிக்கின்ற அல்லது தீங்கு விளைவிக்கின்ற விடயங்களைச் சிறுவர்களுக்குத் தீங்கு விளைவிப்பவை என்று கூறுகின்றோம். இவற்றை 5 வகைகளாகப் பிரிக்கலாம்.

**1. உடல் ரீதியான துன்புறுத்தல்கள்:** அடித்தல், உடற் தண்டனைகள், எரிகாயம் ஏற்படுத்தல் அல்லது சூடுவைத்தல், உடலில் பாதிப்பு வருமாறு தூக்கி எறிதல், குலுக்குதல், நீரில் மூழ்கடித்தல், அபாயமான வேலைகளைச் செய்வித்தல் போன்றவற்றை உடல் ரீதியான துன்புத்தல்கள் எனலாம்.

**2. உணர்வு ரீதியான துன்புறுத்தல்கள்.** பாகுபாடு காட்டுதல், வெறுத்தல், கூச்சலிட்டுப் பேசுதல், கடுமையான வார்த்தைப் பயன்பாடுகள், பிள்ளைகள் முன் சண்டையிடல், எதிர்மறையான பின்னூட்டல்கள், பிரயோசனமில்லாத பிள்ளையெனக்கணித்தல் போன்றவற்றை உணர்வு ரீதியான துன்புறுத்தல் கள் எனலாம்.

**3. சுரண்டல்:** பிள்ளைகளைப் பயன்படுத்திப் போதைப்பொருள் கடத்தல், சிறுவர் ஊழியம், உணவுக்காகப் பாலியலில் ஈடுபடுத்தல், விளம்பரத்துக்குப் பயன்படுத்தல், ஆள்கடத்தல் போன்றவற்றை சுரண்டல்கள் எனலாம்

**4. புறக்கணிப்பினாலான துன்புறுத்தல்:** தேவைகளை நிறைவேற்றாமல் விடுதல், அடிப்படைத் தேவைகளை மறுத்தல், அன்பு மற்றும் அரவணைப்பைக் காட்டாமை, கைவிடப்படல், அலட்சியப்படுத்தல், நலனில் அக்கறையின்மை, பாராமுகம் போன்றவற்றைக் புறக்கணிப்பாகப் பார்க்கலாம்.

**5. பாலியல் ரீதியான துன்புறுத்தல்:** பாலியல் தொந்தரவு, தழுவுதல், ஆபாசப்படங்களைக் காண்பித்தல், ஆபசப்படங்களை எடுத்தல், பாலியல் இன்பத்துக்குக் கட்டாயப்படுத்தல், வன்புணர்வு, விபச்சாரத்துக்குப் பயன்படுத்தல், பாலியல் தூண்டல்களை ஏற்படுத்தும் வகையில் கதைத்தல், நடந்துகொள்ளல் போன்றவற்றைப் பாலியல் துன்புறுத்தல்கள் எனலாம்.



**விளைவுகள்**

மேற்குறிப்பிட்டவாறு சிறுவர்களைத் துன்புறுத்துவதால் ஏற்படும் விளைவுகளை 3 வகைகளில் அடக்கலாம்.

1. உடலியல் விளைவு: இறப்பு, காயம் அல்லது வெட்டுக்கள், மூளையில் அதிர்வுகள் ஏற்படல், மூளை விரத்தியல் பாதிப்பு எற்படல், நாளாந்தச் செயற்பாட்டில் சிரமம்
(நடக்க, இருக்க) இனப்பெருக்க உறுப்பில் வலி, குருதிப்போக்கு, பால்வினை நோய்கள், உடல் ஆரோக்கியத்தில் பின்னடைவு, நெடுங்கால ஆரோக்கியப் பிரச்சினை போன்றவற்றை உடலியல் விளைவுகளாகக் காணலாம்.

2. மனவெளுச்சி விளைவுகள்: கவலையுடன் இருப்பர், மன அழுத்தம், குறைவான சுயகணிப்பு அதாவது தன்னைப்பற்றிய தாழ்வான கணிப்பைக் கொண்டிருப்பர். ஒதுங்கி இருப்பர் அல்லது அதிதீவிரமாகச் செயற்படுவர், உணவருந்துவதில் ஒழுங்கின்மை, சிலருடன் அதிகமாக இணைந்துகொள்வர் அல்லது சிலரை விட்டு விலகுவர், ஆளுமையில் ஒழுங்கின்மை, உறவுச் சிக்கல்கள், அதீதவிழிப்புடன் இருத்தல், தொடர்ச்சியான அச்சம் போன்ற மனவெளுச்சி விளைவுகளைப் பாதிக்கப்பட்ட சிறுவர்களிடத்தில காணலாம்.

3. நடத்தைசார் விளைவுகள்: தனக்குத் தானே தீங்கு செய்தல் அல்லது தற்கொலை முயற்சி, உணர்வுச் சீர்குலைவு, மது அல்லது போதைக்கு அடிமையாதல், இளவயதுக் கர்ப்பம், சிரற்ற தூக்கம், சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடல், மூர்க்கத்தனமான நடத்தைகள், பாடசாலைச் செயற்பாட்டில் பின்னடைவு, பெண்கள் பிள்ளைகளைத் தவறான கையாளுகைக்கு உட்படுத்த முயலுதல் போன்றன நடத்தைசார் விளைவுகளாகக் காணலாம்.




**சிறுவர்கள் எம்மிடம் எதிர்பார்ப்பவை**

அன்பு, கருணை, பாதுகாப்பு, தவறுகளைத் திருத்தல், கற்கைப் பணிகளுக்கு உதவிகள், நல்ல புத்திமதிகள், மகிழ்ச்சியாக இருத்தல், நல்லவழிகாட்டல், சிநேகிதம் கொள்ளல், நன்னடத்தை.

**சிறுவர்கள் எம்மிடம் வெறுப்பவை:**

அடித்தல் அல்லது ஏசுதல், செவிமடுக்காமை, பாடசாலைக்கு, அனுப்பாமை, பாரபட்சம் காட்டாமை, ஏளனம், பரிகாசம், கோபம், விவாக முன்மொழிவு, விரும்பாதவற்றைச் செய்தல், குட்டுதல் அல்லது முட்டுக்காலில் விடுதல், கடுமையான சட்டம். இவை எல்லாவற்றையும் கவனத்தில்கொண்டு, சிறுவர்களைச் சரிவரப்பேணி நல்லதொரு எதிர்காலத்தைக் கட்டியமைப்போம்.



# யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஆண்டகையை 70ஆவது அகவையில் வாழ்த்துவோம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை 70ஆவது அகவையில் கால் பதிக்கும் இன்றைய நாளில், அவரைப் பற்றி மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவல் பர்ணான்டோ ஆண்டகை, யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார், முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி ஆறு திருமுருகன், தென்னிந்திய திருச்சபை ஓய்வு நிலை ஆயர் கலாநிதி ஜெப நேசன் ஆண்டகை ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.

**மன்னார் ஆயரின் வாழ்த்துச் செய்தி**



யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் 70ஆவது பிறந்த தினத்தில் இறையா சீர் மிக்க வாழ்த்துக்களை எமது பெயராலும் மன்னார் மறைமாவட்ட குருக்கள் துறவிகள் இறைமக்கள் பெயராலும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். நாம் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தை தாய் மறைமாவட்டமாக என்றும் அன்புடனும் நன்றியுடனும் நோக்குகிறோம். அதன் ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தூர நோக்குமிக்க பணிகளையும் மறைமாவட்டத்தை சிறப்பாக வழி நடத்தும் முறையினையும் பார்த்து மகிழ்ந்து பாராட்டுகிறோம். நீண்டகால பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாண மறை மாவட்டம் அவரின் ஆளுமை மிக்க நெறிப் படுத்தலில் மிகச்சிறந்த தமிழ் மறைமாவட்ட மாக தொடர்ந்து வளரும் என்பதில் எந்த ஐயமு மில்லை. தமிழ் மக்க ளுக்காக அவர் எழுப்பும் குரல் என்றும் பாரட்டத் தக்கது. அந்தப் பணி யினை தமிழ் மக்களுக் காக தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்றே அன்பு வேண்டுகோள் விடுக்கி றோம். ஆயர் பணியில் மூன்று ஆண்டுகளை நிறைவு செய்யும் ஆயரை வளமுடன் நீடுழி வாழ்க என வாழ்த்துகிறோம்.

**குருமுதல்வரின் வாழ்த்து**



தனது எழுபதாவது அகவையில் இறைவனுக்கு நன்றி கூறும் எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆயர் ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகையோடு இணைந்து நாமும் இறைவனைப் போற்றிப் புகழ்கின்றோம். இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக எமது ஆயர் எமது மறைமாவட்டத்தில் ஆற்றிவருகின்ற மேய்ப்புப்பணியில் அவர் திரு அவையின் படிப்பினைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது மேலோங்கி நிற்கிறது எனலாம். பல்வேறு காரணங்களால் எமது மறைமாவட்டத்தில் இதுவரைகாலமும் உதாசீனம் செய்யப்பட்ட அல்லது கடைப்பிடிக்கப்படாமல் இருந்துவந்த திரு அவையின் பல முக்கியமான படிப்பினைகளை அல்லது ஒழுங்கு முறைகளை ஆயர் குறுகிய பணிக்காலத்தில் துணிச்சலோடு முன்னெடுத்து நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டுள்ளார் என்பதை நாம் பெருமையோடு கூறமுடியும். எதிர்ப்புக்களையும் சவால்களையும் கண்டு அஞ்சாதவராக திடமனத்துடன் அவர் ஆற்றிவரும் பணிகளால் எமது மறைமாவட்டம் இப்போது எழுச்சிகண்டு வருவதைக் காணமுடிகிறது.




இதுமட்டுமன்றி ஆயர் எமது மறைமாவட்டத்திற்கும் அப்பால் சென்று இலங்கையின் ஏனைய தமிழ் மறைமாவட்டங்களின் ஆயர்களோடு இணைந்து இலங்கையின் தமிழ் திருஅவையை அடையாளப்படுத்தி ஒன்றுபட்ட ஒருவருக்கொருவர் பரஸ்பர உறுதுணைவழங்கக்கூடிய வழிமுறைகளிலும் ஈடுபட்டிருப்பது எதிர்காலத்தில் இலங்கையில் ஒரு தமிழ் மேல்மறைமாவட்டம் உருவாகி தமிழ் இறைமக்களின் நலன்கள் அதிகரிக்க வழிசமைக்கும் என்பதையும் மகிழ்ச்சியோடு இவ்வேளையில் நினைத்து எமது ஆயருக்கு எமது வாழ்த்துக்களையும் ஒத்துழைப்பையும் தெரிவித்து நிற்கிறோம். ஆயரை அபிசேகம் செய்த தூய ஆவியார் தொடர்ந்தும் அவரை தனது அருளால் நிறைத்து எமது மறைமாவட்டத்திலும் இலங்கைத் தமிழ் திரு அவையிலும் இறைவனின் திருவுளம் நிறைவேற அவரை பயன்படுத்தவேண்டுமென்று இறை ஆசீர் வேண்டுகின்றோம். யாழ்ப்பாண மறைமாவட்டக் குருக்கள் துறவறத்தார் பொதுநிலை இறைமக்கள் அனைவர் சார்பாகவும் எமது பிறந்தநாள் நல்வாழ்த்துக்களையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறோம்.

**துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளையின் வாழ்த்து**



யாழ்ப்பாண உரோமன் கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அகவை எழுபதில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகிறேன். ஆயர் நீண்ட காலமாக அருட்பணி கல்விப்பணிகளில் ஈடுபட்டதுடன் மக்கள் மகிழ்ச்சியாகவும் சாந்தி சமாதானத்துடனும் தற்சார்புப் பொருளாதாரம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்தை முன்னெடுத்து அதற்கு செயல் வடிவம் கொடுப்பவர். மேலும் துன்பப்பட்ட அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட புறந்தள்ளப்பட்ட மக்களுக்காகவும் குறிப்பாக பெண்கள் குழந்தைகள் வயோதிபர்களுக்காகவும் துணிந்து குரல் கொடுப்பவர். துமிழ் மக்கள் உரிமைக்காக தொடர்ந்து போராடி வருபவர். புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராக அவர்களைத் தயாகத்துடனான உறவுகளை வலுப்படுத்துபவர். இளைஞர்கள் கல்வியிலும் பலதுறைதிறன் விருத்தியிலும் ஆன்மீகத்திலும் ஈடுபாடு கொள்ள வைப்பதில் கடினமாக உழைத்து வருபவர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் இணைந்து இலங்கை நாட்டில் இன்னுமொரு கத்தோலிக்க ஆயர் பேரவை ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகையின் காலத்தில் உருவாக ஆவன செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கிறேன். தென்னிலங்கை மறைமாவட்டங்களில் வாழும் தமிழ் கத்தோலிக் சகோதரர்கள் தங்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப வசதிகள் சேவைகள் மற்றும் வளங்களைப்பெற ஆயர் உதவ வேண்டும். மக்களின் நல்வாழ்வுக்காக பல்வேறு பணிகளை மேற்கொண்டுவரும் ஆயருக்கு இறைவன் நல்ல தேக ஆரோக்கியத்தையும் உற்சாகத்தையும் கொடுப்பாராக. ஆயரின் அருட்பணி மக்கள் பணி மேலும் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

**தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் ஜெபநேசன் ஆண்டகையின் வாழ்த்து**



**ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகள் போல் இறக்கை விரித்து உயரே செல்வா. அவர்கள் ஓடுவர் களைப்படையார். நடந்து செல்வர் சோர்வடையார் (எசாயா 40:31).**

ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசத்தின் மனத் திடனும் உடல் உறுதியும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. பல தளங்களில் பணியாற்றியபின் இன்று பலருக்கு நிழல் கொடுக்கும் ஓங்கிய ஆலமரமாக வளர்ந்துள்ளார். இன்று தமிழ் மக்கள் இலங்கையில் பலவிதமான பிரச்சினைகளுக்கும் உள்ளூர் காழ்புணர்வுகளுக்கும் முகம்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆயர் ஜஸ்ரின் பிரச்சினைகளை மிகுந்த தெளிவுடனும் தொலை நோக்குடனும் அணுகி வருகின்றார். ஞானமுள்ளவர் பகுத்துணரும் ஆற்றல் பெற்றவர் என்று கொள்ளப்படுவர். இனிமையாகப் பேசினால் சொல்வதை எவரும் ஏற்பர் என்கிறது புனித வேதாகமம்.

ஆயர் ஜஸ்ரின் சிறந்த கல்விமான். புனித ஹென்றி யரசர் கல்லூரியில் அவர் அதிபராக விருந்த பொழுது நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் அதிபாரகவிருந்தேன். பின்னர் இருவரும் சில வருடங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களாகவிருந்தோம். அப்போது ஆயர்ஜஸ்ரின்ஒவ்வொரு விடயத்தையும் ஆழ்தகன்று சிந்தித்து உயர்ந்த ஆங்கில சொற்களில் விளக்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் அவருடைய ஆற்றலையும் நெஞ்சத்து கோடாமையையுங்கண்டு முக்கியமான விசாரணைகளையும் பிரச்சினைகளையும் அவரிடத்தில் ஒப்படைத்தது. அவருடைய தீர்ப்பு நியாயமா னதென்றே பேரவை உறுப்பினர் கருதினர். ஆயர் ஜஸ்ரின் கல்வித்துறையில் நீண்டகாலம் பணியாற்றிய அனுபவம் உள்ளவர். இதனால் பல சமயத்தவருடன் நெருங்கிப் பழகவும் அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும் அவருக்கு வாய்ப்புக் கிட்டியது. இன்று கத்தோலிக்க திருச்சபையின் தலைமையை ஏற்றிருக்கும் ஆயர் ஜஸ்ரின் அனைத்துக் கிறிஸ்தவர்களையும் அரவணைத்துச் செல்லும் பண்பாளர். இதற்கு புரட்டஸ்தாந்து சபைகளைப் பற்றி அவர் இங்கிலாந்தில் மேற்கொண்ட ஆய்வுகள் உந்து சக்தியாக விளங்குகின்றன. புரட்டஸ்தாந்து சபைகளைப்பற்றி அவர் பேசும் பொழுது இந்த விடயங்கள் எல்லாம் இவருக்கு எப்படித் தெரிகின்றன என்று நான் அதிசயப்பட்டதுண்டு. இறைவன் காலத்திற்கேற்ற தலைவர்களைத் தந்து கொண்டேயிருக்கிறார். ஆயர் ஜஸ்ரின் இறைவன் எமக்களித்த அருங் கொடை. இறையருள் எப்பொழுதும் அவருடன் இருப்பதாக.

**கலாநிதி ஆறு திருமுருகனின் வாழ்த்துச் செய்தியில் இருந்து**



யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அகவை எழுபது நிறைவு குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். அறிவும் ஆற்றலும் அன்பும் நிறைந்த ஆன்மிகத்தலைவராக விளங்கும் ஆண்டகையை பல வருடங்களாக நான் அறிவேன். ஆசிரியராக அதிபராக ஆயராக தன் பணி தொடரும் சேவையாளர். நீண்ட நலத்துடன் தன்பணி தொடர இதயபூர்வமாக வாழ்த்துகிறேன். எம் மண்ணில் நல்ல சூழல் ஏற்படுவதற்கு ஆன்மிக ரீதியில் குரல் கொடுப்பவர்களில் ஒருவராக விளங்கும் பெரியாரின் தொண்டு பாராட்டுதற்குரியது. நிதானமாக தன் கருத்துக்களை வெளியிடும் ஆயரின் பணி சிறக்க வாழ்த்தி அன்னாரின் ஆன்மிக வாழ்வு மேலும் சிறக்க இறையருள் வேண்டி எனது வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறேன்.

**ஆயருக்கு இறையாசீர் நிறையவே கிடைக்க உதயன் பத்திரிகையின் கிறிஸ்தவ ஞாயிறு பகுதி வாசக அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாரட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.**

## ஆங்கில மொழி தனிப்பட்ட வகுப்புக்கள்

**தரம் - 6 தொடங்கி G.C.E (O/L) வரை**

கொழும்பு ஆங்கில ஆசிரியையினால் தனிப்பட்ட முறையில் மிகச்சிறப்பாக ஆங்கில மொழி கற்பிக்கப்படும். யாழ்.நகரில் தொடர்பு - **076 8025 878**

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 3029 திகதி: 2018.05.12 சனிக்கிழமை பச்சை

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 10 18 25 63 I — போனஸ் இலக்கம்: 72

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 42,029,290/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 248 வர்ணம் : இளஞ்சிவப்பு சீட்டிழுப்பு திகதி: 2018.05.12

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 64,508,445/-

வெற்றி இலக்கங்கள்: 09 28 36 53 — ஆங்கில எழுத்து: R

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune

சீட்டிழுப்பு வாரம் 142 சீட்டிழுப்பு திகதி 12.05.2018 இளஞ்சிவப்பு

வெற்றி இலக்கங்கள்: 14 19 24 57 — சுப்பர் இலக்கம்: 01 — அதிர்ஷ்ட மாதம்: மே

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 12,786,352/= | ரூ. 3,951,473/= | ரூ. 2,159,238/= |

2018.05.17 ஆம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 . 01 . 1987

உதிர்வு 23 . 05 . 2017

### அமரர் கணபதிப்பிள்ளை முரளிதரன் (குட்டி)

திதி : 13.05.2018

*கண்ணிமைத்த நொடியில் காற்றாய்*
*கரைந்துவிட்ட ஓராண்டு கூட - எம்*
*மனப்பாரத்தை கொஞ்சமும் குறைக்கவில்லை*
*ஆண்டுகள் ஆயிரம் ஓடி மறைந்தாலும்*
*எம் ஞாபகத்தில் பூத்திருக்கும் உன் நினைவுகள்*
*மறையாது என்றும் மறக்காது.......*

கச்சாய் வீதி,
அத்தியடி ஒழுங்கை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(ACH 370) (14.17)

## வாள்வெட்டில்...

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நீர்வேலியில் கோயிலில் கடந்த திங்கட்கிழமை வாள்வெட்டு இடம்பெற்றது. மறுநாள் வாள், மோட்டார் சைக்கிளுடன் 3 பேர் கைது செய்யப்பட்டனர். 5 பேர் தேடப்படுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் வைத்து யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் பொலிஸ் பிரிவினர் 2 பேரை நேற்றுக் கைது செய்தனர். சாவகச்சேரியைச் சேர்ந்த அவர்கள் 21,28 வயதுடையவர்கள். விசாரணைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4,26)

## ரூ. ஒன்றரைக்கோடி...

மறைத்து எடுத்துச் செல்லப்பட்டபோது அது மீட்கப்பட்டது. அதைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல் 9 மணியளவில் நொச்சிமோட்டை பாலத்தடியில் கடமையில் இருந்த வவுனியா போதை தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் சுபசிங்கே தலைமையிலான பொலிஸ் சார்ஜன்ட்களான, அனுராதிசாநாயக, குணதிலக, குமார, கொத்தலாவல, மிதுஷன், கீர்த்தி, பண்டார, ரூபவங்க ஆகியோர் அடங்கிய குழுவினரே சோதனையில் ஈடுபட்டனர். அதன் போதே வலம்புரிச் சங்கு மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி, மன்னார் பகுதிகளைச் சேர்ந்த 21, 24 வயதுடைய இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர். அவர்கள் பயணித்த கார் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

'கிளிநொச்சியில் உள்ள எமது காணியைத் துப்புரவு செய்யும்போதே குறித்த சங்கு கிடைத்தது. அதனை நாம் கடந்த 3 வருடங்களாக வீட்டில் வைத்து வழிபட்டு வந்தோம். எமது மகன் எமக்குத் தெரியாமேலேயே குறித்த சங்கை விற்பனைக்கு எடுத்துச் சென்றுள்ளான்' என்று கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரின் தந்தை தெரிவித்தார். (4,எ,110)

## கிழக்கு...

ளையும் பங்கேற்பதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் அழைப்பு விடுக்கவுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கும், வடக்கு மாகாணசபையினருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, முதலமைச்சர் மேற்படி விடயத்தை தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணத்தின் அனைத்துத் தரப்பினரையும் நினைவேந்தலில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கவுள்ளோம். அதே போன்று கிழக்கு மாகாணத்தின் சிவில் அமைப்புக்கள், மாணவர்கள், அரசியல் தரப்பினர் என்று சகலரையும் நினைவேந்தலில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கவுள்ளோம் என்று முதலமைச்சர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். (5)

## நினைவேந்தல் தொடக்க நிகழ்வு முள்ளியவளையில் இடம்பெற்றது

முல்லைத்தீவு, மே 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தொடக்கநாள் நேற்று. முள்ளியவளையில் நேற்று இவ்வாறான நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. வன்னிக்குறோஸ் நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் அவர்களது மாவட்ட அலுவலகத்தில் இது நடைபெற்றது. பொதுச்சுடரை மாவீரர் பசிலனின் தாயார் ஏற்றிவைக்க தொடர்ந்து பொது திருவுருவப்படத்துக்கு மலர் மாலைகளை முள்ளிவாய்க் கால் போரில் பெற்றோரை இழந்த சிறுவர்கள் ஏற்றிவைத்தார்கள். வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், மாவட்டச் செயலக தலைமைக் கணக்காளர் யே.றெஜினோல்ட், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் மலர் வணக்கம் செலுத்தினர். (4,ரி3)

## மாகாண சபை...

ரும் தத்தமது நிகழ்சி நிரல்களின் அடிப்படையில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்துள்ளனர். இதனால், முள்ளிவாய்க்கால் மண்ணில் இன்று காலை 10 மணிக்கு மீண்டும் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கடந்த மூன்று ஆண்டுகளாக வடக்கு மாகாண சபை முன்னெடுத்து வந்த நிலையில், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தாம் அதனை முன்னெடுக்கப் போவதாக அறிவித்திருந்தனர். இதனால் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நேற்று மாலை 5 மணியிலிருந்து 7 மணி வரை சந்திப்பு நடைபெற்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் தாம் தயாரித்துள்ள நிகழ்சி நிரலை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து இறுதி வரையில் கூட்டத்தில் வற்புறுத்தியுள்ளனர். வடக்கு மாகாண முதலமைச்சர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு செயற்படுவது, தங்களின் நிகழ்சி நிரலில் நாங்கள் செயற்பட வேண்டும் என்பதைப் போல் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். வடக்கு மாகாண சபை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக குழு அமைத்துள்ளதுடன், அது ஒரு நிகழ்சி நிரலையும் தயாரித்துள்ளது. அதனடிப்படையிலேயே நினைவேந்தல் இடம்பெறும் என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் இரண்டு தரப்பினர் இடையேயும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. நாளை (இன்று) முள்ளிவாய்க்கால் மண்ணில், வடக்கு மாகாண சபையின் நினைவேந்தல் குழுவின் கூட்டம் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டத்தில் நினைவேந்தலை நடத்துவதற்குரிய பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இந்தக் கூட்டத்தில் பங்கேற்று பொறுப்புக்களை ஏற்குமாறு முதலமைச்சர், மாணவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். இதேவேளை இந்தச் சந்திப்பில் இணக்கப்பாடு ஏற்பட்டதாக ஊடகங்களுக்குத் தெரிவிக்குமாறு, மாணவர்கள் வடக்கு மாகாண சபையினரிடம் கோரியுள்ளனர். இருப்பினும் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படாமலேயே கூட்டம் முடிவடைந்துள்ளது. (5,8)


### தேங்காய் மட்டை தேவை

தேங்காய் மட்டை (பொச்சு மட்டை) தேவை. உங்கள் இடத்திற்கே வந்து கொள்முதல் செய்யப்படும். தொடர்பு - 077 6544 428

### வாடகைக்கு

யாழ். கே.கே.எஸ். வீதியில் யாழ். இந்துக் கல்லூரிக்கு முன்பாக சகல வசதிகளுடன்கூடிய வீடு வாடகைக்கு உண்டு. - 077 723 2535

### கடைகள் வாடகைக்கு

யாழ். நகரை அண்மித்த இடத்தில் நான்கு தொடர் கடைகள் வாடகைக்கு உண்டு. அலுவலக பாவனை, களஞ்சிய வசதிக்கு உகந்தது.

தொடர்பு - 077 559 4179

### வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல காட்சியறைக்கு அனுபவமிக்க ஆண்கள் தேவை.

தொடர்பு - 077 3515980, 077 532 3522


## மரண அறிவித்தல்

### பூபாலசுந்தரம் மகாலக்சுமி



பிறப்பு 25.12.1925 இறப்பு 11.05.2018

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வட்டுவடக்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசுந்தரம் மகாலக்சுமி கடந்த (11.05.2018) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது வதிவிடத்தில் [அருமைநாயகம் (ராசாத்தி)] இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுவடக்கு, வட்டுக்கோட்டை.
077 5410134, 021 225 0894

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லையா கிருஸ்ணபிள்ளை



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கிருஸ்ணபிள்ளை நேற்று (12.05.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணி தேவியின் அன்புக் கணவரும் கோமதி, காலஞ்சென்றவர்களான சுமதி, யோகலிங்கம் மற்றும் கிருஸ்ணலிங்கம், கிருஸ்ணரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நாகலிங்கம், நடராசா, நாகேஸ்வரி மற்றும் ராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்ரன் தேவதயாளன், ஆனந்தரூபி ஆகியோரின் அன்பு மாமனும் தேனுஜனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## முள்ளிவாய்க்கால்...

யாழ்ப்பாணம், மே 13

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதலாம் நாளான நேற்று செம்மணியைத் தொடர்ந்து, மிருசுவிலில் நினைவேந்தல் இடம்பெற்றது.

மிருசுவில் கிராமத்தில் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் திகதி இராணுவத்தினரால் குழந்தைகள் உட்பட 8 பேர் படுகொலை செய்யப்பட்டு மலசல கூடக் குழிக்குள் போடப்பட்டிருந்தனர். அதன்போது கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்ந்து நேற்று நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. மிருசுவில் புனித நிக்கலஸ் தேவாலயத்துக்கு முன்பாக முற்பகல் 11.30 அளவில் நிகழ்வு இடம்பெற்றது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் க.வாமதேவன், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் அதில் கலந்துகொண்டிருந்தனர். நேற்று முதலாவது நிகழ்வு செம்மணியில் இடம்பெற்றது. (4,8)

## தலைவர்கள்...

இந்தப் பணியகம். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி எழுப்பினர்.

மன்னார் மாவட்டத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தினர் நேற்று வருகை தந்தனர். மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை அவர்கள் சந்தித்தனர். இந்தச் சந்திப்பு நடைபெறும் மண்டபத்துக்கு வெளியே, வவுனியா மாவட்டத்திலிருந்து வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம் நடத்தினர். அவர்களே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினர்.

இதேவேளை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஆராய்வதற்காக எத்தனை குழுக்கள் நியமிக்கப்பட்டாலும், எத்தனை பணியகங்கள் திறந்தாலும் அவற்றின் மீது எமக்கு நம்பிக்கையில்லை. இவ்வாறு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் அமைக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை பணியக ஆணையாளர் மற்றும் உறுப்பினர்கள் நேற்று நேரில் சந்தித்தனர். மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு காலை 9.30 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரை மூன்று கட்டங்களாக இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடனான சந்திப்பு, சிவில் சமூகத்தினருடனான சந்திப்பு, செய்தியாளர்களுடனான சந்திப்பு என்று இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடனான சந்திப்பின்போது அவர்கள் மேலும் கூறியதாவது.

**பயனில்லை**

எமது உறவுகள் தொடர்பாக நாங்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தோம். அவர்களைக் கண்டறிய அரசுக்கு நாம் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுத்து வந்தோம். ஆனால் எந்தப் பயனுமில்லை. எமது உறவுகளைத் தேடி தினம் தினம் அலைந்து திரிகின்றோம். பல்வேறு முகாம்களுக்கும் செல்கின்றோம். எமது வீடுகளுக்கு வந்து புலனாய்வாளர்கள் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர்.

**முடிவு தெரியவில்லை**

எமது உறவுகள் வீடுகளிலும், வீதிகளிலும் வைத்தும் கடத்தப்பட்டார்கள். பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே நடந்தது. இது தொடர்பில் பல இடங்களில் முறையிட்டும் எமக்கு எந்த முடிவும் கிடைக்கவில்லை.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை என்று அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்துள்ளார். எமது பிள்ளைகளையும், உறவுகளையும் வெளிநாட்டில் இருந்து வந்தவர்களா கடத்திச் சென்றார்களா?

**நம்பிக்கையில்லை**

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகம் தொடர்பில் எமக்கு நம்பிக்கையில்லை. ஆனாலும் இந்தப் பணியகம் ஊடாக என்ன நடக்கப்போகின்றது என்பதைப் பார்ப்போம் என்று குறிப்பிட்டனர். (5,56,105,110)

## காணாமல்...

வர்று கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பணியகம் நிரந்தரமானது. இந்த ஆணையாளர்கள் 3 ஆண்டுகள்தான் இருப்பார்கள். அந்த மூன்று ஆண்டுகளுக்கு இடையில் எவற்றை எம்மால் செய்ய முடியுமோ அவற்றை நிச்சயம் செய்வோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அனுபவித்து வருகின்ற துன்ப துயரங்களை நேரடியாக உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்த மக்கள் பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள்- என்றார்.

இதன் பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் ஆணையாளர் சாலிய பீரிஸிடம், தென்னாபிரிக்காவில் பெரும்பான்மை இனத்துக்கு எதிராக செயற்பட்ட சிறுபான்மை இனத்தை பெரும்பான்மை இனமே விசாரணை மேற்கொண்டதில் வெற்றியளித்தது. ஆனால் இங்கு சிறுபான்மை இனத்துக்கு எதிராக பெரும்பான்மை இனம் விசாரணை மேற்கொள்கின்றது. இங்கு வெற்றியளிக்கப்படும் என்று கருதுகின்றீர்களா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

'நாம் இனத்தை, மதத்தைக் கொண்டு இங்கு செயற்படவில்லை. நாம் அனைவரும் இலங்கையர் என்ற எண்ணத்துடனே செயற்படுகின்றோம். ஆரம்பத்திலிருந்து ஆணைக்குழுவை நோக்கினால் உங்களுக்குப் புரியும். குறுகிய நோக்கம் கொண்டு செயற்படவில்லை. எங்களுக்கு சட்டத்திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. அதற்கமையவே நாங்கள் செயற்படுவோம். நாங்கள் பக்கச் சார்பாகவோ அல்லது இனம் மதம் பார்த்தோ செயற்பட போவதில்லை.

1987ஆம் ஆண்டிலிருந்து 1989ஆம் ஆண்டு வரை பல்லாயிரக்கணக்கான மக்கள் காணாமற் போயிருக்கின்றார்கள். அது ஒரு இனமாக கருதப்பட்டாலும் நாங்கள் அதை ஒரு இனம் என்று பார்க்காது இது ஒரு தேசியப் பிரச்சினை என்றுதான் பார்க்கின்றோம். எதிர்காலத்திலும் நாங்கள் இப்படியான கண்ணோட்டத்தில்தான் செயற்படுவோம். எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடு நடவாதிருக்கும் முகமாக நாம் இலங்கையர் என்ற நிலையிலே செயற்படுவோம்' என்று பதிலளித்தார். (5,56,60,105)

## ஓரணியில்...

ஆயிரமாயிரம் வேங்கைகளும் தமிழ் மக்களும் தங்களின் உயிர்களை ஆகுதியாக்கிய மண்.

மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் தமிழினம் ஓரணியில் திரளவேண்டும். முள்ளிவாய்க்கால் நினைவாலயத்தில் வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வில் தமிழ் மக்கள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்று அனைத்துத் தரப்பும் ஒற்றுமையுடன் ஒன்று திரண்டு உயிர்நீத்த எமது உறவுகளை சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தி நினைவுகூரவேண்டும். இவ்வாறு கேட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

ஈழத் தமிழர் வாழ்நாளில் கறுப்பு நாளான செங்குருதி தோய்ந்த மிகப்பெரிய துயர்படிந்த நாளான மாபெரும் மனிதப் படுகொலை நடந்த நாளான மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவாலயத்தில் நினைவேந்தல் நிகழ்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வடக்கு மாகாண சபை நடத்தவுள்ளது. இந்த நிலையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதிப் போரில் அரச படைகளின் பலவிதமான தாக்குதல்களினால் எமது உறவுகள் பலர் சாகடிக்கப்பட்டனர். சாட்சியங்கள் எதுவுமின்றி பன்னாட்டு போர்விதிகளுக்கு முரணாக இறுதிப் போர் நடைபெற்றது.

மகிந்த ஆட்சியில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் திட்டமிட்ட கொடூரத் தாக்குதல்கள் தொடர்பில் அப்போது நான் நாடாளுமன்றில் பல உரைகளை ஆற்றியிருந்தேன். போரை உடன் நிறுத்தும்படியும் ஆட்சியில் இருந்த அரசைக் கேட்டிருந்தேன். ஆனால், தமிழ் மக்களுக்குப் பெரிய இழப்புகளைக் கொடுத்துத்தான் அரசு போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

இதனால் பெருந்தொகையான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். எமது மக்களின் சொந்த வீடுகள், சொத்துகள் அழிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தருமாறு பன்னாட்டுச் சமூகத்தை இன்று நாம் கோரி நிற்கின்றோம்.

தமிழின அழிப்பு தினமாகவும், தமிழ்த் தேசிய துக்க நாளாகவும் மே 18ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவாலயத்தில் நடைபெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வில் தமிழ் மக்கள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்று அனைத்துத் தரப்பும் ஒற்றுமையுடன் ஓரணியில் திரண்டு பங்கேற்க வேண்டும். இறுதிப் போரில் இழந்த எமது உறவுகளை சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தி நினைவுகூர வேண்டும். இவ்வாறு நாம் செய்வதன் ஊடாக போரின் போது உயிரிழந்த எமது உறவுகளின் ஆத்மா சாந்தியடையும் - என்றார். (5)

## புலனாய்வாளர்கள்...

முறைப்பாடுகளைத் தெரிவிக்கும்போது, புலனாய்வாளர்கள் இந்த மண்டபத்தில் இருப்பதாகவும் அவர்களால் தமக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்றும் குறிப்பிட்டனர்.

இதேவேளை இது தொடர்பில் பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் ஊடகவியலாளர்களிடம் பேசும்போது, பெருந்தொகை ஆள்கள் உள்ள கூட்டத்தில் இவர்தான் உளவாளி என்று இனம் கண்டு கொள்ள முடியாது. நாங்கள் அப்படித்தான் பொது அறிவுறுத்தல் வழங்கினாலும் நான்தான் உளவாளி என்று வெளியேறப் போவதில்லை - என்றார். (5,60)

## இனப்...

இராணுவத்தில் சேர வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி கூறியிருந்தார். அது தொடர்பில் அவரிடம் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது இலங்கை இராணுவம் சிங்கள இராணுவம் போல உள்ளது. முதலில் இனவிகிதாசார அடிப்படையில் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். படையினருடன் துணைப்படை போல தமிழ் இளையோர் இணைந்து கொள்வது என்பது, எமது விடுதலைப் போராட்டத்துக்கும், அதற்காக உயிர்துறந்தவர்களுக்கும் நாங்கள் செய்யும் துரோகமாகவே அமையும். எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு எமது மண்ணிலே நாங்களே எங்களை ஆள்வதற்குத் தீர்வு எட்டப்பட்ட பின்னர், சிங்களப் படை என்பது இலங்கைப் படை என்று மாற்றப்பட்ட பின்னர் இனவிகிதாசார அடிப்படை ஏற்றுக்கொள்ளப்பட்டால் அதன்பின்னர் படையில் இணைந்துகொள்ள முடியுமே தவிர, இராணுவத் தளபதியுடைய அல்லது எவருடைய ஆசை வார்த்தைகளையும் நம்பி அதில் இணையக்கூடாது.

எமது கௌரவம் துணைப்படையில் இணைந்தால் பாதிக்காது என்று உறுதிப்படுத்தப்படும்போதுதான் இணையவேண்டும். அவசரப்பட்டு குழிகளிலே விழவேண்டாம் - என்றார். (4.26)

## கூட்டரசிலிருந்து...

விக்கின்றன. ஈரானுக்குப் பயணம் மேற்கொள்ள முன்னர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களுடன் மனந்திறந்து கலந்துரையாடியிருக்கின்றார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு சு.கவின் 16 பேர் ஆதரவாக வாக்களித்தனர். அது தோற்றதால் அவர்கள் கூட்டரசிலிருந்து வெளியேறியுள்ளனர். கடந்த தேர்தலில் சுதந்திரக் கட்சி கடும் பின்னடைவைச் சந்தித்த நிலையில் கூட்டரசுடன் தொடர்ந்தும் பயணிப்பது மேலும் பின்னடைவையே தரும் என்று சுதந்திரக் கட்சியின் இந்த உறுப்பினர்கள் மைத்திரியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கூட்டரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறுவது கூட்டு எதிர்க்கட்சிக்கு ஆதரவளிப்பதாக அமைந்து விடக் கூடாது என்று குறித்த மூத்த உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ள அரசதலைவர், தான் நாடு திரும்பிய பின்னர் இந்த விடயத்தில் இறுதியும் உறுதியுமான முடிவை எடுப்பதாகக் குறிப்பிட்டுள்ளார் என்று அவரது தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## போரால்...

பாடு கள் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போருக்குப் பின்னரான சூழலில் பெண்கள் வலுவூட்டலும் தலைமைத்துவமும் என்ற தொனிப்பொருளில் இந்த மாநாடு வடிவமைக்கப்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைக் குடும்பங்கள், கணவனை, பிள்ளைகளை இழந்தவர்களின் வாழ்வாதார நிலமைகளை ஆழமாக ஆய்வு செய்து அவர்களை மேலும் வலுவூட்டுவதற்கான முன்மொழிவுகளை ஆய்வாளர்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

வடக்கில் இராணுவ மயப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் இன்றுவரை பெண்களின் நிலமை தொடர்பில் உண்மையான தகவல்களைத் திரட்ட முடியவில்லை. இந்த மாநாட்டின் ஊடாக எவ்வாறு உண்மையான தகவல்களைத் திரட்டுவது என்று சிந்திக்கிறோம். அவற்றைப் பதிவு செய்யவுள்ளோம். இதன் ஊடாக பன்னாடுகளின் கவனத்துக்கு உண்மையான தகவல்களைக் கொண்டு செல்லவுள்ளோம் - என்றார்.

குறித்த மாநாடு யாழ்ப்பாண பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் ஜூலை மாதம் 21,22 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4.8)

## ரூ.20 லட்சம்...

தண்ணீர்ப் பிரச்சினை மிகத் தீவிரமாக எழுந்த காலகட்டத்தில், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள நிலத்தடி நீரில் கலந்துள்ள எண்ணெய் மாசை மிகத் துல்லியமாகக் கண்டறிவதற்கு, ப்றொக் 4000 கருவி கொண்டு வரப்பட்டது.

அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தமிழ்ச் சங்கத்தினரும் ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் சிலரும் இணைந்து 20 லட்சம் ரூபா நிதிப்பங்களிப்புடன் இந்த ஆய்வுக் கருவியை அனுப்பி வைத்தனர். அப்போதைய விவசாய அமைச்சராக இருந்த பொ.ஐங்கரநேசன், இந்தக் கருவியை, சுன்னாகம் குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவிடம் 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி கையளித்திருந்தார்.

இந்தக் கருவியின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் அடிப்படையில், சுன்னாகத்தைச் சுற்றியுள்ள நிலத்தடி நீரில் பாரதூரமான எண்ணெய் மாசுக்கள் எதுவும் இருக்கவில்லை என்று நிபுணர் குழுவும், அப்போதைய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் அறிவித்திருந்தனர்.

இந்தக் கருவி தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக, வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. அதற்கு தகவல் அலுவலர் எந்திரி த.ராஜகோபு பதில் வழங்கியுள்ளார்.

இந்தக் கருவி வழங்கப்பட்டதிலிருந்து இதுவரை 303 குடிதண்ணீர் மாதிரிகளே பரிசோதிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

'இந்தக் கருவி தற்போது இயங்கு நிலையில் இருப்பின் குடிதண்ணீர் பரிசோதனையை இப்போதும் இலவசமாக முன்னெடுக்க முடியுமா?' என்ற கேள்விக்கு,

'இதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க இடர்ப்பாடுகள் காணப்படுகின்றன. இதற்குப் பாவிக்கப்படும் இரசாயனப் பொருள் காலாவதியாகிவிட்டது. அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்தப் பொருள் வெளிநாட்டிலிருந்தே பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

பரிசோதனையைச் செய்வதற்கு பல்கலைக் கழகத்தில் இந்தத் துறையில் கல்வி கற்ற ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் அனுமதித்திருந்தோம். தற்போது குறித்த உத்தியோகத்தர் சுய விருப்பின் பிரகாரம் பதவியிலிருந்து விலகியதால் இந்தக் கடமையை ஆற்றுவதற்கு தற்போது எவரும் இல்லை என்பதால் தொடர்ந்து ஒருவரை புதிதாக நியமித்தல் வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன' என்று வழங்கிய பதிலில் கூறப்பட்டுள்ளது. (5)

## 8 வருடங்களின்....

யடிக்கப்பட்டவரிடம் மாட்டினார். அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சம்பவம் கோப்பாயிலுள்ள தேநீர்க் கடை ஒன்றில் நேற்று இடம்பெற்றது.

கோப்பாயில் 8 வருடங்களுக்கு முன்னர் கொள்ளை இடம்பெற்றது. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. சந்தேகநபர் பிடிபடவில்லை. சங்கிலியைப் பறிகொடுத்தவர் குறித்த கடைக்குச் சென்றிருந்தபோது சந்தேகநபரைக் கண்டுவிட்டார். அவரை அந்த இடத்திலேயே பிடித்து வைத்திருந்தார். மேலும் சிலரது உதவியுடன் கொள்ளைச் சந்தேகநபரை அவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று ஒப்படைத்தார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (4.8.26)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம் மே 13

**கே.ஸி.ஸி.ஸியின் இறுதியாட்டம்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்டக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில், சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட துடுப்பாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**பாடும்மீன் அணியின் கால்பந்துத் தொடர்**

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23-422)

# சோமஸ்கந்தா அணி கரப்பந்தில் சம்பியன்




யாழ்ப்பாணம், மே 13

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் சம்பியனாகியது புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் 18 வயது ஆண்கள் அணி.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்றன. 18 வயது ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயமும் மோதின.

மூன்று செற்களைக்கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:16, 29:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி. இந்தப் பிரிவில் மூன்றாம் இடத்தை புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் பெற்றது.

(ம-108)

## ஐ.பி.எல். தொடரின் 2 முக்கிய ஆட்டங்கள்

ஐ.பி.எல். தொடரில் இன்று இரண்டு ஆட்டங்கள் இடம் பெறவுள்ளன. இந்த இரண்டு ஆட்டங்களும் மிகவும் முக்கியத்துவம் மிக்கவையாக அமைகின்றன.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஹைதராபாத் அணியை எதிர்த்து சென்னை அணி மோதுகிறது. ஹைதராபாத் அணி பிளே ஆப் சுற்றுக்கு ஏற்கனவே தகுதி பெற்றுவிட்ட நிலையில், சென்னை அணி இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்கிற நெருக்கடி இருக்கவே செய்கிறது. புனேயில் ஆட்டம் இடம்பெறுவது சென்னைக்குக் கூடுதல் சாதகம்.




இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மும்பை மற்றும் ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன. இரண்டும் கத்திமேல் நடைபோட்டுக் கொண்டிருக்கும் அணிகள். இந்த ஆட்டத்தில் தோல்வியடையும் அணி பிளே ஆவ் வாய்ப்பை இழக்கும்.

(ம)

# அலன் போர்டர் என்னைக் கேட்டிருந்தால் நிச்சயம் பந்தைச் சேதப்படுத்தியிருப்பேன்

### *ஆஸி. தலைமைப் பயிற்சியாளர் ஜஸ்ரின் லாங்கர் வெளிப்படை*

"பந்தைச் சேதப்படுத்த வேண்டும் என்று அலன் போர்டர் என்னைக் கேட்டிருந்தால் நிச்சயம் செய்திருப்பேன்" என்று கருத்துத் தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஜஸ்ரின் லாங்கர்.

ஆஸ்திரேலிய அணி அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்தத் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் திட்டமிட்டு பந்தைச் சேதப்படுத்தி பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டனர் ஆஸ்திரேலியாவின் அப்போதைய அணித் தலைவர் சிமித், உப தலைவர் வோர்ணர் மற்றும் பான்குரொப்ட். சிமித், வோர்ணருக்கு தலா ஓர் ஆண்டுத் தடையும், பான்குரொப்டுக்கு 9 மாதங்கள் தடையும் விதிக்கப்பட்டது. முன்னணி வீரர்களுக்கு இந்த விவகாரத்தில் தொடர்பு இருந்ததால் ஆஸதிரேலியாவின் அப்போதைய பயிற்சியாளர் லீமனும் இந்தத் திட்டம் குறித்து அறிந்திருப்பார் என்று வெளிப்படையாகவே விமார்சிக்கப்பட்டது. இதையடுத்து பதவியில் இருந்து விலகினார் லீமன். புதிய தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார் லாங்கர். இதையடுத்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே லாங்கர் இவ்வாறு தெரிவித்தர்.




"மூத்த வீரர்கள் சொல்லியே பான்குரொப்ட் பந்தைச் சேதப்படுத்தியிருக்க வேண்டும். நான் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக அடிலெய்டில் கடந்த 1993ஆம் ஆண்டு அறிமுகமானேன். அப்போது அணித்தலைவர் அலன் போர்டர் பந்தைச் சேதப்படுத்தும்படி என்னைக் கேட்டிருந்தால் நிச்சயம் செய்திருப்பேன்" என்று லாங்கர் மேலும் தெரிவித்தார்.

(ம)

## கழகங்களில் விளையாட சிமித், வோர்ணர் அனுமதி



சிமித்



வோர்ணர்

பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஒரு வருடம் தடை விதிக்கப்பட்டுள்ளவர்களான ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உப தலைவர் வோர்ணர் இருவரும் கழகங்களுக்காக விளையாட அனுமதிக்கப்பட்டனர்.

தென்னாபிரிக்காவில் அண்மையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது ஆஸ்திரேலிய அணி. இந்தத் தொடரின் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர்களான சிமித், வோர்ணர், பான்குரொப்ட் மூவரும் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் சிக்கிக் கொண்டனர். சிமித், வோர்ணர் இருவருக்கும் தலா ஓர் ஆண்டுத் தடையும் பான்குரொப்டுக்கு 9 மாதங்கள் தடையும் விதிக்கப்பட்டது. இவர்கள் மூவரினதும் தண்டனை குறைக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தது ஆஸ்திரெலிய கிரிக்கெட் வீரர்களின் சங்கம். இதையடுத்தே கழகங்களுக்கு இடையிலான தொடரில் இவர்கள் மூவரும் விளையாட அனுமதி கொடுக்கப்பட்டது. ஒரு வருடத் தடைக் காலத்தைக் குறைக்கவும் பரிசீலித்து வரப்படுகிறது என்றும் தகவல்கள் வந்துள்ளன.

(ம)

## இங்கிலாந்து கழகத்துக்காக அஸ்வினும் ஒப்பந்தமாகிறார்


இங்கிலாந்துக் கழகமொன்றுக் காக அஸ்வினும் ஒப்பந்தமாக வுள்ளார் என்று தகவல்கள் வந்துள்ளன.

இங்கிலாந்துக் கழகங்களுக் காக இந்திய வீரர்கள் விளையா டும் கலாசாரம் தற்போது அதிக ரித்துள்ளது. இந்திய அணியின்



தலைவர் கோக்லி, இசாந் சர்மா, புஜாரா உள்ளிட்ட வீரர் கள் இவ்வாறு விளையாடி வரு கின்றனர். இந்த நிலையில் அஸ்வினும் அவ்வாறு ஒப்பந்த மாகியுள்ளார் என்று அறியவரு கிறது. (ம)


## பந்துவீச்சாளர்களில் டோனி அதிருப்தி



ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ராஜஸ் தானுக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை அணி தோல்விய டைந்தமைக்கு பந்துவீச்சாளர் களில் அதிருப்தியைத் தெரிவித் தார் சென்னை அணியின் தலைவர் டோனி.

ஆட்டம் முடிந்த பின்னர் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பி லேயே தனது அதிருப்தியைத் தெரிவித்தார் டோனி.

"176 ஓட்டங்கள் என்பது நல்ல இலக்குத்தான். பந்து வீச்சா ளர் களால் தோல்வி ஏற்பட்டது. நேர்த்தியாக பந்து வீசுவதுபற்றி பந்துவீச்சாளர்களுக்கு ஆலோ சனை வழங்கப்பட்டது. எப்படி பந்து வீச வேண்டும் என்பது பற்றியும் அறிவுரை வழங்கப் பட்டது. ஆனால் அவர்கள் திட் டத்தை சரியாக செயல்படுத்த வில்லை. மோசமான பந்து வீச்சால் ஏராளமான பவுண்டரி களை விட்டுக் கொடுத்தோம். இனிவரும் ஆட்டங்களில் பந்து வீச்சு சிறப்பாக இருக்க வேண் டியது அவசியமாகும். தற் போது விளையாடும் அணியே சிறந்த லெவனாக இருக்கிறது. களத்தடுப்பும் நன்றாக இருக்கி றது" என டோனி மேலும் தெரி வித்தார். (ம)




## பஞ்சாப்பை பஞ்சராக்கியது கொல்கத்தா நைட்ரைடர்ஸ்

ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பை வீழ்த்தியது கொல்கத்தா. இந்த வெற்றியை அடுத்து பிளே ஆப் சுற்றுக்கான வாய்ப்பை தொடர்ந்தும் தக்கவைத்துள்ளது அந்த அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ் சாப் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. கொல்கத்தாவின் ஆரம்ப வீரர்களாக கிறிஸ் லின் மற்றும் நரைன். இலக்குகள் எதையும் இழக்காமல் 5.1 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்க ளைத் தொட்டது கொல்கத்தா. அணி 53 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் லின். உத்தப்பா ஒரு முனையில் நிலைக்க மறுமுனையில் பவுண்டரி வேட்டையை ஆரம்பித்தார் நரைன். பந்துப்பரிமாற்றத்துக்கு 12 என் றவாறாக அதிகரித்துச் சென்றது சராசரி. 26 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் நரைன். 9 பவுண்டரிகள் 4 சிக்சர்கள் அடங்கலாக அவர் 36 பந்துகளில்75 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந் தார். ரசல், டினேஸ் கார்த்திக் மத்திய வரிசையில் விளாசித்தள்ளினர். 200க்கும் அதிகமான 'ஸ்ரைக் ரேட்டை' இருவரும் வைத்திருந்தனர். 31 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார் ரசல். 23 பந் துகளில் 50 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் டினேஸ் கார்த்திக். முடிவில் 6 இலக்குகளை இழந்து 246 ஓட்டங்க ளைக் குவித்தது கொல்கத்தா.

பந்துவீச்சில் டை 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப்புக்கு நம்பிக்கையான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர் லோகேஸ் ராகுல் மற்றும் கெய்ல். அணி 57 ஓட் டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் கெய்ல். அடுத்த பந்தி லேயே அகர்வாலும் ஆட்டமிழந்தார். நாயர் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார். பஞ்சாப்பின் திடீர் எழுச்சி திடீர் சரிவு கண்டது. ஒரு முனையில் போராடிக் கொண்டிருந்த ராகுலை 66 ஓட்டங்களு டன் வீழ்த்தினார் நரைன். பின்ஞ், அக் சர் பட்டேல் முறையே 34, 19 ஓட்டங்க ளைக் குவித்தாலும் இலக்கை எட்டும்ப டியான சராசரியில் அது அமைய வில்லை. அஸ்வின் 22 பந்துகளில் 45 ஓட்டங்களைச் சேர்த்தார். எனினும் பஞ்சாப்பால் 214 ஓட்டங்களையே பெற முடிந்தது. முடிவில் 31 ஓட்டங்களால் வென்றது கொல்கத்தா. (ம)

## ராஜஸ்தானுக்கு வாழ்த்து மழை



ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் 'பிங்' வர்ண உடை அணிந்து விளையா டியது ராஜஸ்தான் அணி. புற்றுநோய் விழிப்புணர் வுக்காகவே இந்த நிறத்திலான ஜெர்சியை ராஜஸ் தான் அணிந்திருந்தது. அந்த அணியின் இந்த விழிப் புணர்வு முயற்சிக்கு ஆர்வலர்கள் பலரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர்.

ஐ.பி.எல். தொடரில் இதுவரை காலமும் பசுமை விழிப்புணர்வை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் மேற்கொண்டு வந்தது. இயற்கையின் அவசியத்தை வலியுறுத்தி அந்த அணி தொடரில் ஏதாவது ஓர் ஆட் டத்தில் பச்சை வர்ண ஜெர்சியில் விளையாடும். எனி னும் புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வை எந்த அணியும் இதுவரை முன்னெடுக்கவில்லை. அது பெரும் குறையாக இருந்த நிலையில் ராஜஸ்தான் அதற்கு செயல்வடிவம் கொடுத்தது. (ம)

## யங்ஹென்றிஸ் – மேரிஸ் இறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், மே 13

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப் பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று இடம்பெறவுள்ளது. நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத் தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது. முன்னதாக மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் அணி மோதவுள்ளது. (ம-23)

## நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியன்

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் ஒட்டு மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் நல்லூர் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

அந்த அணி 108 புள்ளிகளைப் பெற்றது தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 75 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், பருத்தித்துறை பிரதேச செயலக அணி, யாழ்ப்பாண பிரதேச செயலக அணி என்பன தலா 65 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், கரவெட்டி பிரதேச செயலக அணி, சண்டிலிப்பாய் பிரதேசசெயலக அணி என்பன 51 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், கோப்பாய் பிரதேச செயலக அணி 48 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும், சங்கானை பிரதேச செயலக அணி




44 புள்ளிகளைப்பெற்று ஆறாம் இடத்தையும், உடுவில் பிரதேச செயலக அணி, சாவகச்சேரி பிரதேச செயலக அணி என்பன 27 புள்ளிகளைப்பெற்று ஏழாம் இடத்தையும் பெற்றன. (ம-23)

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அங்கீகாரம் உள்ள இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவகம் - SLIIT - Jaffna

**Sri Lanka Institute of Information Technology**

### Application for June intake

**B.Sc(Hons)**
- Information Technology
- Software Engineering
- Interactive Media
- Cyber Security
- Information Systems Engineering
- Network Engineering
- Data Science

**B.Sc(Hons)**

A/L 1 'S'
சித்தியுள்ளவர்கள் இப் பயிற்சி நெறியில் இணைய முடியும்.

இறுதிச் சந்தர்ப்பம் 25.05.2018

**Foundation for Degree**

O/L
பெறுபேற்றுடன் நீங்கள் பட்டப்படிப்பின் அடிப்படைக் கற்கை யூடாக உங்கள் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்ய முடியும்.

**B.Sc, BBA**

**BBA (Hons)**
- Human Capital Management
- Accounting & Finance
- Marketing Management
- Business Analytics
- Logistic & Supply ChainManagement

**வெளிநாட்டுக் கல்வி**

எமது நிறுவனத்தில் பட்டப்படிப்பின் 2 வருடங்களைப் பூர்த்தி செய்தவர்கள் UK, USA, CANADA, AUSTRALIA போன்ற நாடுகளிலுள்ள முன்னணிப் பல்கலைக்கழகங்களுக்கு இலகுவான முறையில் குறைந்த செலவில் கற்க முடியும்.

53, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

**www.sliit.lk** 021 720 4204 021 720 0406

(IN6684)(11.17)

---

## காணி விற்பனை

புத்தூர், சாவகச்சேரி பிரதான வீதியில் (மட்டுவில்) 16 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு
யாழ்ப்பாணம் 077 918 9480
சுவிஸ் +41 799 403 989

(CS 16893)(17/17)

---

## வேலை வாய்ப்பு

பிரபல்ய தனியார் ஆங்கில கல்வி நிறுவனத்திற்கு.

- இணைப்பாளர் - பெண்
  A/L சித்தி, ஆங்கிலம் மற்றும் கணினி அறிவு கட்டாயமானது.
- சந்தைப்படுத்தல் பிரதிநிதி - ஆண்/பெண் (இருபாலரும் விரும்பத்தக்கது)
  O/L சித்தி

20.05.2018 ஆம் திகதிக்கு முன் உங்கள் சுயவிவரக் கோவையை jaffnabwea@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(IN 6725) (14.17)

15, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
தொடர்பு :076 765 9415
jaffnabwea@gmail.com

---

## பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கு வாடகைக்குண்டு.



C J Promoters
முன்பதிவுகளிற்கு - 077 254 6511

---

## IELTS

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

IELTS Life skills UK

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

ஆலோசனைகளுக்கு 777173517 யாழ்ப்பாணம் 0212224403

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 021226 2470 | 021227 0775 | 021224 1970 | 021228 5655 |

www.itdmi.com/english

---

## வேலையாள் தேவை

1) அரிசி ஆலைக்கு ஆண் / பெண் வேலையாள்கள் தேவை.
2) முன் அனுபவம் உள்ள பெண் கணக்காளர் தேவை.

தொடர்பு - 077 8228 753

---

## JCB இயக்குநர் தேவை

முன் அனுபவம் உள்ள JCB இயந்திர இயக்குநர்கள் தேவை.
(யாழ். மற்றும் கிளிநொச்சி)

தொடர்பு - 077 344 1042

---

## முகாமையாளர் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள AKR HOTEL இற்கு கணினி அறிவும் ஹோட்டல் அனுபவமும் மும்மொழியிலும் சரளமாகப் பேசக்கூடிய 50 வயதுக்கு உட்பட்டவர் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு: 077 802 5879

---

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS

---

**SAMSUNG**

**Galaxy S9 | S9+**



# Trade up and save

Upgrade your old Samsung smartphone and get up to Rs. 70,000 OFF* on your new Samsung Galaxy S9/S9 Plus.

Available at: Dialog The Future.Today.

Go to your nearest Dialog Customer Care Centers:
Iconic | Mega | WTC | Kandy | Crescat | Negombo

Applicable models: Galaxy S6 and above.

SIMPLY DIAL 011 SAMSUNG 7267864

SamsungLankaOfficial
SamsungLankaOfficial

*Terms and conditions apply. Monthly installment plans at 0% interest available with leading credit cards at their sole discretion. Offer valid till 31st May 2018 at selected Dialog Customer Care Centers. Prices and offer are subjected to change without prior notice. For more details dial 1777. Product images, features and specifications shown are for visual representation purposes only, the actual product may vary.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.